# நல்லிசைப் புலவர்கள்

# நல்லிசைப் புலவர்கள்

ஆ. கார்மேகக்கோனார்.

# ANCIENT FAMOUS TAMIL POETS

## Part — I

By

**A. KARMEGA KONE**

*(Prof. of Tamil and Head of the Dept. of Indian Languages, American College, Madurai — Retd.)*

PUBLISHED
BY

**Messrs. A. KARMEGA KONE**

Tallakulam, P. O. Madurai.

*Rights Reserved*] [*Price* **Rs. 2-0-0**

*6th Edition: 1951*

PRINTED AT
THE PREMIER ART PRESS
PURASAWALKAM, MADRAS — 7

# முகவுரை

---

நான் எழுதி வெளியிட்டுவரும் இப்புத்தகம் இப்போது ஆறும் பதிப்பாக வெளிவருகிறது.

இப்புத்தகத்தின் முன்னைய பதிப்புகள் சென்னைப் பல்கலைக் கழகம் (*Madras University*) அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருவாங்கூர்ப் பல்கலைக் கழகம், மைசூர் பல்கலைக் கழகம் ஆகியவற்றுள் இண்டர்மீடியேட் தேர்வுக்குப் பாடமாக வைத்து ஆதரிக்கப்பெற்றன.

இப்போது வெளிவரும் இப்பதிப்பினையும் தமிழ் அறிஞர்கள் கண்ணுற்று ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

25—2—51
மதுரை.

ஆ. கார்மேகக் கோன்

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பெருந்தலைச் சாத்தனார் ... | 1 |
| 2. | உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ... | 35 |
| 3. | கோவூர் கிழார் ... ... | 62 |
| 4. | பெருஞ்சித்திரனார் ... ... | 86 |
| 5. | பிசிராந்தையார் ... ... | 120 |
| 6. | ஔவையார் ... ... | 141 |

ஸ்ரீ:

# நல்லிசைப் புலவர்கள்

---

## 1. பெருந்தலைச் சாத்தனார்

நெடிய குடகமலையின்கண் பிறந்து, வான் பெய்யாது பொய்ப்பினுந் தான் பொய்யாது, பன்னிறப் பூக்களாகிய போர்வையையணிந்து, இரு கரை மருங்கிலும் திரையாகிய கரங்களால் வாரிப் பொன்னையும் மணியையுங் கொழித்துப் புனல் பெருகி வரும் காவிரி பாய்தலால், வேலி நிலம் ஆயிரம் கலம் விளையுளை விளைத்து வளத்தால் மிக்கு விளங்குவது, சேனாடுகளினும் தன் பெயர் நிறுவிய சோணாடென்பது.

இச்சோணாட்டின்கண் காவிரிக்கரை மருங்கிலே விளங்குவது, காவளம் மிகுந்த ஆலூர் என்னும் அழகிய ஓரூர். இவ்வூர்ப்புறமெல்லாம் காவிரியின் தெள்ளிய நீம்புனல் பரந்து பாய்தலால், தெங்கு, மா, பலா, வாழை, கமுகு முதலிய பயன் மிக்க மரங்கள் பருவத்தாலன்றியும் பழுத்து, உருவத்தால் ஓங்கித் திகழும். விளைவுறுத கழனிகளில் செந்நெற்பயிர்கள், கன்னல் போலப் பணைத்து வளர்ந்து, தோகை விரிந்து, சூல் கொண்ட பச்சிளம்பாம்பு போலப் பொதிகொண்டிருந்து, வெளிப் போந்து, கீழ் மக்களது செல்வம் போலத் தலையை நேர் நிறுவி நின்று, தேர்ந்த நூற்கல்வி சேர்ந்த மாந்தர் போல உள்ளீடு கொண்டு, தலை வணங்கி, முதிர்ந்து படிந்து கிடக்கும். அவற்றை, இரப்போர் சுற்றத்தையும், புரப்போர் கொற்றத்தையும் தங்கள் உழவு சாலில் விளைப்

போராகிய உழவர் அரிந்து, கட்டுகளாகக் கொண்டு போய்க் களத்திலிட்டுக் கடா விட்டு, அதரி திரித்து, நெல் மணிகளைக் குவை செய்வர்; பின்பு அரசர்க்கு ஆறில் ஒன்று நல்கி, ஏர்க்களம் பாடும் பொருநர் முதலியோர்க்கு முகந்து கொடுத்து, எஞ்சியவற்றை வண்டிகளில் உய்த்து, அகஞ்சேர்த்து, வந்த விருந்தோம்பி, வரு விருந்திற்கு எதிர் நோக்கி நிற்பர். இத்தகைய தாளாண்மை மிக்க வேளாண் குடியினர் பலர், இவ்வூரின்கண் குழுமி வாழ்க்கை புரிந்து வருவாராயினர்.

இவ்வூரின்கண், வேளாண் மரபிலே, இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர், மூலங்கிழார் என்னும் புலவர் பெருந்தகையார் ஒருவர், தமிழ் உலகு உய்யத்தோன்றினர். இவர் தண்டமிழ் மொழியில் வழங்கிய இலக்கண இலக்கிய நூல் துறைகளிலும், சமயச் சார்பான சாரமிக்க ஆகம அளவை முதலிய ஏனைய கலைகளிலும் மிகுந்த புலமை வாய்ந்து, அக்காலத்துத் தமிழ் நாட்டு முடியுடை வேந்தராலும், சிற்றரசர் பெருஞ்செல்வர் பலராலும் நன்கு மதிக்கப்பெற்றுப் பெரும்புலவராய் விளங்கினர்.

இவர் தம் இல்லக் கிழத்தியாரோடு இல்லறவொழுக்கினை முட்டின்றி இனிதாய் நடாத்தி வருங்கால், இவர்தம் மனைவியார் ஓர் அருமந்த ஆண் மகவைக் கருவுயிர்த்தார். புலவர் அக்குழவிக்குச் சாத்தன் என்னும் தம் குல தெய்வப் பெயரைச் சார்த்திப் பொன்னே போலப் போற்றி வளர்த்தனர். குழந்தையும் இனிதாய்ப் பிறைமதி போல நாடொறும் வளர்ந்து விளங்கிக் குப்புற்றுத் தவழ்ந்து, குறுநடை நடந்து, தனது பூங்கையால் பெற்றோர் உண்ணும் உணவினை அளைந்தும் துழாவியும், இட்டுந்தொட்டும், யாழினுமினிய மழலை மொழி

களை மொழிந்தும், தன் தாய் தந்தையரைக் களிப்புறச் செய்தது. குழந்தை தன் உடலளவிற்குச் சிறிது பெரிய தலையையுடையதாயிருந்தது பற்றி, அது கண்ட பெரியாரெல்லாம், பெருந்தலைச் சாத்தன் என வழங்கி, "பிற்காலத்து இவன் புலமை சான்று வீறி விளங்குவன்," என்று கூறி வியந்தனர்.

இங்ஙனம் வளர்ந்து வந்த பெருந்தலைச் சாத்தனார், ஐந்தாண்டு நிறைந்து விளங்கினர். பின்னர்த் தந்தையார் பிள்ளைக்கு நன் முழுத்தத்தில் எழுத்தறிவித்து, அவரை ஒரு கணக்காயர் பள்ளியிற்சேர்த்தனர். சாத்தனாரும் கணக்காயரிடம் நெடுங்கணக்குக் கற்றுச் சொற்றொடர்களை வாசிக்கும் பயிற்சியடைந்து, இயலிசைநாடக இலக்கணங்களின் சூத்திரங்களையும் இலக்கிய மூலங்களையும் நெட்டுருச்செய்து முடித்தனர். இங்ஙனம் இளமையிற் செய்ய வேண்டிய பயிற்சியில் சிலவாண்டுகள் கழிந்த பின்னர்ச் சாத்தனார், புலமை மிக்க தம் தந்தையாரிடத்துக் கற்க வேண்டிய தமிழ் மொழியிலுள்ள பேரிலக்கண இலக்கிய நூற்பொருள்களையெல்லாம் சிலையில் எழுத்துப்போல மனத்திற் பதியக் கற்று, நோக்கமைந்த பாக்களை விரைவில் யாக்கும் வலிமை பெற்றுத் தம் தந்தையார் மூலங்கிழார் போலத் தமிழகம் புகழும் ஆன்ற புலமையிற்சான்று, நிறைமொழி வாய்ந்த பெருமையுடையராய் விளங்கினர். புலவரிடம் அறிஞரெல்லாம் நன்மதிப்புடன் ஒழுகி, அவரைச் சாத்தனார் என உயர்வு தோன்ற வழங்கினர்.

இங்ஙனம் சீரிய புலமை மிக்க பெருந்தலைச் சாத்தனார் மணப்பருவத்தை அடைந்ததைக் கண்ட இவர் தம் தந்தையார், இவர்க்குப் பெண்மை நலங் கனிந்தொழுகும் ஒரு குலமங்கையைத் தேடி அடைந்து, மணவினையை

முடித்தனர். சாத்தனாரும் தம் மனைவியிடத்துக் காதற் கிழமை மிகுந்து, மகிழ்வுற்று, இல்லறச் சகடத்தை இனி தாகச் செலுத்தினர்.

இங்ஙனம் சிலவாண்டுகள் கழிந்த பின்னர், புலவர் களை அணுகிப் புடமிட்டு அவர்களது பொங்கொளியை எங்கும் பரப்பும் வறுமையென்னும் பெருந்தீ, இச்செந் தமிழ்ச் செல்வரையுந் தீண்டிற்று. இத்தன்மைத்தான வறுமை மிக்க காலத்தும், புலவர் தமது செம்மையிற் குன்றாதும், குன்று போலத் துளங்காதும் நின்றனர். நாளுக்கு நாள் நல்குரவு மிகுதலால், புலவரது தமிழகம் உண்டற்குரிய பண்டங்கள் இலதாகி, அடுப்புச் சமைத் தல் தொழிலை மறந்து, காளான் பூக்கத் தொடங்கிற்று. மனைவியும் மக்களும் சொல்லவொண்ணாத் துன்பத்துட் சுழன்றார்கள்.

புலவர் இவற்றையெல்லாங் கண்டு கவன்று, "கல் விச் செல்வம் பொன் மலரையொக்கும்; பொருட்செல் வம் அதன் நறிய வாசனையையொக்கும்; ஆகையால், கல்வியுடைமையோடு பொருளுடைமையும் இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாததன்றோ? அதனிடத்து நாம் கருத்துச் செலுத்தாமையானன்றோ, இங்ஙனம் நம்மை இன்மைப் பிணி இறுகப் பிணித்தது?" என்று தப்முள் எண்ணி, அப்பொருளைப் பெறுவதற்குச் செல் வர்க்கே ஈந்து சிறப்புச் செய்யும் மாந்தரிடம் செல்லாது, புலவர் பெருமக்களது கல்வியறிவின் மீக்கூர்வை உணர்ந்து அவர்களை மதிக்கும் ஒண்மையும் வண்மையு முடைய அரசர்கள், செல்வர்கள், 'வள்ளல்கள்பாற் சென்று, அவர்தம் உண்மைக் குணங்களை உள்ளபடி தீந் தமிழ்ச் செய்யுளாற்பாடிப் பெறும் பரிசில் வாழ்க்கை யையே கைக்கொள்ளக் கருத்துக் கொண்டார்.

புலவர் காலத்தில் சோழ நாட்டு அரசியல் உரிமை பற்றி நடந்த போரில் நெடுங்கிள்ளி என்னும் சோழன் காரியாற்றில் துஞ்சிய பிறகு, அவன் மகன் கோப்பெரு நற்கிள்ளி உறையூரில் முடிசூட முயல, அதுபற்றிப் புகார்ச் சோழர்க்கும் உறையூர்ச் சோழர்க்கும் பெரும் போர்கள் பல முறை நடந்து, சோழநாடு குழப்பத்துட் பட்டிருந்தது. அதனால், புலவர் தம் நாட்டு அவ்வரசர்களிடம் செல்லுதற்கியலாது, சேரநாட்டின் ஒரு பகுதியான கொங்கு நாடு நோக்கிப் பரிசில் காரணமாகப் புறப்பட்டு வருவாராயினர். வரும்வழியில் இவரைப்போல வறுமையால் வருந்திப் பின்னர் முதிரமலைத் தலைவனும் பெருங் கொடையாளனுமாகிய குமணன் என்னும் அரசனை அடைந்து பாடி அவனாற்கொடுக்கப்பட்ட களிற்றின் மீதேறிப் பெருஞ்செல்வத்துடன் வரும் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் எதிர்ப்பட்டனர். எதிர்ப்பட்ட பெருஞ்சித்திரனாரைப் புலவர் நன்கறிந்தவராதலின், உவகையுடன் உற்று நோக்கி நின்றார். பெருஞ்சித்திரனாரும் சாத்தனாரைக் கண்ட அளவில் யானையினின்றும் இறங்கிப் புலவரை அணுகி, இரு கரங்களையும் பற்றிக் கொண்டு, "உழுவலன்புடைய புலவீர், நும் நலிவிற்குக் காரணம் யாதோ?" என வினவப் புலவர் தமது இன்மைத் துன்பத்தையெல்லாம் கூறினர். பின்பு பெருஞ்சித்திரனார், 'நண்பீர், கவலற்க! முதிரமலைக்குரியவன் முதிர்ந்த கல்வியுடையவன்; பாவாணர் மிடிக்குப் பகைவன்; புலவர்க்குப் பொன்னும் களிறும் வரையாதளிக்கும் வள்ளல்; குமணன் என்னும் பெயருடையான். அவன்பாற் செல்லுமின். இன்னே நும் வறுமை நோய் களையப்பெறுவீர். யான் பெற்ற இப்பெருஞ்செல்வமெல்லாம் அவன் மனமுவந்தளித்தவையாம்," என்று தாம்

பெற்ற பெருவளங்களை அறிவுறுத்திப் புலவரைக் குமணன் என்பவனிடத்து ஆற்றுப்படுத்தினர். அதனைக் கேட்ட சாத்தனார், வழுக்கலுடையவழி ஊன்றுகோல் பெற்றவர்போல மனந்தேறிப் பெருஞ்சித்திரனாரிடம் விடை பெற்று, ஆங்காங்குத் தங்கி, வழிக்கொண்டு, குமணனது நாடு நோக்கி விரைந்து வந்தடைந்தனர்.

புலவர் ஈண்டு வருவதற்குச் சின்னாள் முன்னர், குமணனுக்கு இளையோனாகிய இளங்குமணன் என்பான், தன் தமையனுக்கு அவனது மாரியனைய வரையா வள்ளன்மையாற் பெரும்புகழ் பெருகுவதையும், அரச செல்வம் அனைத்திற்கும் அவனே உரியவனாய் விளங்குவதையுங் கண்டு, அழுக்காறு கொண்டு, பல நஞ்சனைய வஞ்சனைச் செயல்களால் அவனைக் கொல்ல வழி தேடினான். அதனையறிந்த குமணன், "அழியும் தன்மைத்தாகிய இச்செல்வங் காரணமாகவன்றோ எம்பி இத்தகைய தீச்செயலை என்பாற்செய்யத் துணிந்தனன் ?" எனத் தன்னுள்ளத்தில் நினைந்து, அரச செல்வத்தில் வெறுப்புற்றுச் செல்வமனைத்தையும் தம்பிக்கே உரிமையாக்குவதன்பொருட்டுத் தான் நகரத்தை விட்டுச் சென்று, காடு சேர்ந்து கரந்துறைந்தனன்.

இளங்குமணன், செல்வமெல்லாவற்றையும் தானே கவர்ந்துகொண்டதனோடமையாது, "குமணன் ஓடியொளித்த காட்டினுட்சென்று அவனது தலையைத் துணித்துக் கொணர்வார்க்கு விலையாகச் செம்பொன் கோடி நல்குவேன்," என்று பறையறையவும் செய்தனன். குமணன் நாடடைந்தபுலவர், இச்செய்திகளையெல்லாஞ் செவியுற்று, வருந்தி, வன்கண்ணனாகிய இளங்குமணனிடம் செல்லுதற்கு ஒருப்படாது, காடு பற்றியிருந்த அருங்குணச் செம்மலாகிய குமணனையே காணுதற்கு

விரும்பிக் காடு நோக்கிச்சென்றனர். சென்ற புலவர், அலைந்து வருந்தாது திருவருள் கொண்டுய்த்தமையால், எளிதிலேயே குமணனைக் காட்டிடைக் கண்டார். காண லும், களிப்புற்று, அவனை அணுகி, "சூழ் புலவோர் பசி தொலைக்கும் மன்னவ, வாழிய! வாழிய!" என்று வாழ்த்தினர். வாழ்த்தொலி கேட்ட குமணன், புலவரைக் கண்ணுற்று, "செந்தமிழ்ச் செல்வீர், வருக! வருக! நும் வரவு நல்வரவாகுக! நீவிர் அரிய கானக வாழ்க்கையு டைய என்னிடம் வருவதற்கு யான் முன்னம் பண்ணிய புண்ணியம் என்னையோ!" என அன்பு கனிய முகமனு ரைத்துப் புலவரைத் தழுவி, அமரச்செய்தான்.

புலவர் குமணனை நோக்கி, "குணக் குன்றே, எட்டி அகத்தருகில் பழுத்திருப்பினும், அதனைக் கிட்டுவா ரெவர்? சுவை கெழுமிய தேன் சேய்மைக்கண்ணுள்ள கானகத்தில் உயர்ந்தோங்கிய கொம்பிலிருப்பினும், அதனையே நாடிப் பெறற்கு விரும்புவர் உலகோர்," என்று கூறிவிட்டுப் பின்னர்த் தாம் வந்த கருத்தை உணர்த்த நினைந்து, "சமைத்தல் தொழிலையொழிந்த மையால் தேய்வின்றிப் பக்கம் உயர்ந்து தோன்றும் அடுப்பின்கண் காளான் பூத்துக் கிடக்க, உடம்பு மெலி யும் பசியால் வருந்திப் பாலின்மையால் தோலாந் தன் மையுடனே திரங்கிப் பாலூறும் துளை தூர்ந்த தனது வறண்ட மார்பைச் சுவைக்குந்தோறும் பால் வாராமை யால் அழுகின்ற பிள்ளையது முகத்தைப் பார்த்து அவல நீர் ததும்புங் கண்ணையுடைய என் மனைவியது வருத்தத் தைக் கண்டு, இந்த வருத்தந் தீர்த்தற்குத் தக்கவன் நீயென நினைந்து, நின்பால் வந்தேன். நல்ல போர் செய் யுங் குமண, எனது வறுமை நிலையை நீ உள்ளவாறே அறிந்தாயாயின், நீ நல்ல யாழையும் மத்தளத்தையு

முடைய கூத்தரது மிடியைக் கெடுக்கும் குடியின்கண் பிறந்தனை ஆதலால், உனது வறுமையுற்ற இந்நிலைமைக்கண்ணும் பரிசில் கொள்ளாதுவிடேன்,' என்னுங் கருத்தமைத்து,

'ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா மார்பினை [நோக்கி
சுவைத்தொறும் அழூஉந்தன் மகத்துமுகம்
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண் என்
மனையாள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண!
என்னிலை யறிந்தனை யாயின், இந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே!'

என்று தமது வறுமைத்துன்பத்தைச் சித்திரத்து வரைந்து காட்டியது போலக் காட்டிக் கல்லும் மரனும் உருகப் பாடி நின்றார்.

இதனைக் கேட்ட குமணன், "அந்தோ! என் செய்வது! இப்புலவர் துன்பம், நாடிழந்த அதனினும் பெரியதாயிருக்கின்றதே! இப்புலவர் பெருந்தகையின் வறுமை நோய் களையும் வலிமையின்றி, நான் அவமே உடற்பொறை சுமந்திருப்பது பேரிழிவன்றோ?" என்று பலபல தன்னுட்கூறி வருந்தி,

'சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈத லியையாக் கடை.'

என்ற தேவர் திருவாக்கின்படி வறியார்க்கு ஒன்று ஈய முடியாவிடத்து இறப்பதே மிகவும் இனியதாகும்."

என ஆழ்ந்து சூழ்ந்து நிற்குங்கால், தன் இளவல் தன் தலைகொணர்வார்க்கு விலையாகப் பொன் கோடி தருவதாய்ப் பறை அறைவித்திருக்கும் செய்தி தன் நினைவிற்கு வரலும், வறியோர் புதை பொருள் கண்டது போலக் களிப்பெனுங்கடலுள் ஆழ்ந்து, "இத்தகைய எளிவந்த நிலைமைக்கண்ணும் யான், 'இலன்,' என்னும் எவ்வம் உரையாத பெரும்பேறு பெறுமாறு செய்த எம்பியினும் இனியார் இனி யார் இவ்வுலகத்தில்?" என்று கூறித் தலையைப் புலவர்க்கு நல்குதலில் முனைந்து நின்று, புலவர் பெருமானாகிய சாத்தனாரை நோக்கி,

'அந்தநாள் வந்திலீர் அருந்தமிழ்ப் புலவீர்!
இந்தநாள் வந்துநீர் நொந்தனி ரடைந்தீர்!
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத் [தந்தன்
விலைதனைப் பெற்றும் வறுமைநோய் களைமின்.'

என்று கூறித் 'தலையைக் கொய்துகொள்மின்,' என்று புலவர் கரத்தில் தன் வாளைக் கொடுத்தனன்.

இந்நிலையிற் புலவர் என் செய்வார்! நிலையில்லாது செல்லும் செல்வத்தின்பொருட்டுத் தலையைப் பெற்று, என்றும் அழியாப் பழியையெய்த ஒருப்படுவரோ? உடனே துணுக்குற்றார்; துடிதுடித்தார்; வேர்த்தார்; வெருண்டார்; 'வாளை வாங்கத் தாழ்ப்பின், தானே துணிந்து தலையைத் துணித்தாலும் துணிப்பான்,' என்று கருதி, விரைந்து அதனை வாங்கிக்கொண்டு, குமணனை நோக்கி, "தலைக்கொடையாளியே, இவ்வமயம் நீ உன் தலை கொடுத்தலால் உனக்குப் பெரும்புகழும், அதனைப் பெறுதலால் எனக்கு அழியாப் பழியுமன்றோ உண்டாகும்?

'பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.'

என்பது தமிழ் மறையின் முறையன்றோ? செல்வமோ, இன்றொருவரிடமும், நாளை வேறொருவரிடமும் நிலையின்றி மாறிமாறிச் சகடக்கால்போலச் சுழன்று வரும் தன்மையுடையது; இது பற்றி உலகமுள்ளளவும் நீங்கா வசையை யான் அடைதல் தகவுடையதாமோ? உன் தலை பெறுதல் எனக்கு இன்றியமையாததாயின், யான் அதனை வேண்டும்போது தெரிவிப்பேன்; அவ்வமயம் தருவாயாக; அந்நாள்காறும் அதனை நீ குறிக்கொண்டு காத்தல் வேண்டும்; இங்ஙனம் அதனைக் காத்திடுவதற்கு ஒருப்படுவையாயின், அதுவே நின்பால் யான் பெற்ற பெரும்பரிசிலாகும்,'' என்று கூறிப் பின்னரும் அவனை நோக்கி, "இரந்தோர்க்குக் கரவாது தம் கைப்பொருள் களைச் சால ஈத்துவந்த கடையெழு வள்ளல்கள் இப்போது இறவாதிருப்பரேல், அவர் புகழெல்லாம் நின் புகழ்முன் இரவிமுன் மின்மினியாகுமன்றோ? தன்னை வந்தடைந்தோரது இன்னலை நீக்குதற்குத் தன்னையே நல்கிடத்துணிந்த நினது அருளின் திறத்தை நோக்கின், தேவர்கோனுக்கு அன்புடன் தன் என்பினை ஈந்த ததீசி முனிவரன்றி, உன்னையொப்பார் வேறு யாவருளர்?'' என்று அவனது ஒப்பற்ற உயிர்க்கொடையை வாயார மனமாரப் புகழ்ந்து கூறிவிட்டு, "இவ்வாளோடு சென்று, குமணன் பெருங்குணங்களை இளங்குமண னுக்கு எடுத்துக் காட்டி, எவ்வாற்றாலேனும் இருவரையும் நட்பாக்குவித்துக் குமணனை முன்னைய அரசு நிலையில் நிறுவுவேன்!'' எனத் தம்முள் அறுதியிட்டுத் தமது வறுமைத்துன்பத்தையும் அறவே மறந்து, இவ் வரும்பெருங்காரியத்தை முடிப்பதற்கு முனைந்தெழுந்து, குமணனை நோக்கி, "அரசே, சின்னாட்களுக்குள் நின்னை யான் வந்து காண்பேன்,'' என்று கூறி, விடை பெற்றுக்

கொண்டு, இளங்குமணன் அவைக்களம் நோக்கி, வாளுங் கையுமாய் விரைந்து வந்தார்.

இளங்குமணனோ, செல்வக் களியாட்டயர்ந்து, இறுமாந்து, குமணன் தலை கொணர்வார் ஒருவரையும் காணப் பெறாததால் கவன்று, அமைச்சர் புடை சூழக் கொலு மன்றத்து அரியணையில் வீற்றிருந்தான். புலவர் அந்நாளோலக்க மண்டப வாயிலைக் குறுகி, அரசனுக்குத் தம் வருகையைத் தெரிவிக்குமாறு காவலாளரை வேண்டலும், காவலாளர் சென்று, "வாளுங்கையுமாய் ஒருவர் வாயிலின்கண் வந்துளார்," என இளங்குமணனிடம் தெரிவித்தனர். இளங்குமணன் மகிழ்ந்து, "அவரை இன்னே வர விடுதிர்," என்று பணித்தலும், வாயிலோர் புலவரை மன்றத்துள் புக விட்டனர். புலவரும் உட்புகுந்து, அநீதியெல்லாம் ஓருருவெடுத்து வீற்றிருப்பது போல இருந்த இளங்குமணனைக் கண்டார். இளங்குமணன் புலவர்க்கு இருக்க ஆசனமளித்து, அவரது வாயிலிருந்து வரும் சொற்களை எதிர் பார்க்கும் குறிப்போடிருந்தான். புலவர் அவனை நோக்கி, "எப்பொருளும் நிலையாத இயற்கையையுடைய இவ்வுலகத்தின்கண் நிலைபெறுதலை விரும்பினோர், தம்முடைய கொடையாற் புகழை இப்பூமியினிடத்தே என்றும் நின்று நிலவும்படி நிறுத்திவிட்டுத் தாம் இறந்தார்; அடைதற்கரிய பெருஞ்செல்வராயிருந்தும், சிலர் வறுமையால் இரப்போர்க்கு ஒன்றுங் கொடாமையினாலே, பழைய கொடையுடையார் போலப் பின்னும் தம் பெயரை நிறுத்தி, உலகத்தோடு இடையறாது தொடர்ந்து என்றும் விளங்குதலை அறியாது போயினர். ஆகவே, உலகத்தில் என்றும் நிலை பெறுதலை விரும்புவோர் புகழை நிறுத்துதலும், புகழை நிறுத்தாதோர்

நிலை பெருந்தோராதலும் இயல்பாதலான், சிறந்த யானை களைப் பரிசிலர்க்கு மிகுதியாகக் கொடுக்கும் அழிவில்லா நற்புகழையுடையவனும், உனது அன்பிற்குரிமை பூண்ட அண்ணலுமான குமண வள்ளலைக் காட் டிடத்தே தேடிக் கண்டு பாடி நின்றேனாக, அவன், 'பெருமைபெற்ற பரிசிலன் பரிசிலனாய் வாளா வாடின னாகத் திருப்பிப் போதல் நான் என் நாட்டை இழந்ததி னும் மிக இன்னாது!' என நினைந்து, அவ்வமயத்துத் தன்னிற்சிறந்த பொருள் வேறொன்றும் இல்லாமை யால், தன் தலையை உன்னிடம் காட்டிக் கோடிபொன் நான் பெறுமாறு, 'தலையை அரிந்துகொண்மின்,' என்று தன் வாளை என் கையிற்கொடுத்தான். ஆதலால், அவ் வாளுடன் வென்றி மிகுந்த உவகையோடு வந்தேன்," என்று கூறுவார், அதனை,

'மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே.
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க் கீஇ யாமையின்
தொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே.
தாள்தாழ் படுமணி யிரட்டும் பூ நுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் 'கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினும் நனியின் னா'தென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின் ;
ஆடுமலி யுவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.'

என்ற பாடலால் அவன் உள்ளம் இளகும் வகை கூறிப் பின்னரும் அவர், "இத்தகைய அருட்பெருங்கடலாகிய உன் முன்னவனுடன் நீ செற்றம் கொள்வதற்கு உன் மனம் எங்ஙனம் துணிந்தது? உடற்பிறப்பென்னும் பாசத்தை எவ்விதம் களைந்தாய்? வையமும், அரசும், வாழ்வும் வாங்குதல் உனது கருத்தாயின், அதனை நீ சிறிது தெரிவித்திருப்பின், பிறரது இடுக்கண் களையத் தன் உடலையும் உயிரையுமே கொடுக்கும் வள்ளியோனாகிய குமணன் உனக்கு அவற்றைக் கொடுக்கச் சிறிதும் மறுத்துரைப்பனோ? நிலைபேறில்லா இச்சிறிய செல்வத்தின்பொருட்டே, அமரர்க்கும் அரிதாகிய அன்பின் செல்வத்தை அழித்தாய்! அந்தோ! 'உடற்பிறப்பில்லா உடம்பு பாழ்,' என்பது நீ அறியாததோ? நீயும் அவனும் நேய நெறி தவறாது வாழ்வீர்களாயின், பகையரசரெல்லாம் பணிந்து நிற்கப் புகழும் வாழ்வும் உங்கட்கு வளருமன்றோ? பரதன், தன் தாயாகிய கைகேயி இராமனைக் காட்டுக்கோட்டி அயோத்தியின் அரசியலைத் தனக்காக்கியதை அறிந்து, தன் அன்னையை, "கைகயன் மகள் கைகயன் மகளேயாயினை!" எனப் பலவாறு வெறுத்துக் கூறிவிட்டு, "இராமனை அயோத்தி நகர்க்கு அழைத்து வருதலின்றி அயோத்தியில் யான் அடியிடுவதுமில்லை," எனச் சூளுறவு செய்து, இராமபிரான் சென்ற திசைநோக்கித் தொழுதோடி, "முடிசூட வருக," என்று குறையிரந்து, கடைசியாகப் "பாதுகையேனும் தருக," என்று வேண்டிப் பெற்று, முடிமீது அணிந்து வந்து, அயோத்திபுகாது, நந்திக்கிராமம் புகுந்து இராமன் வருவதாகக் குறித்த கால எல்லையை எதிர்பார்த்து, அதில் ஒரு கணமேனும் குறைவுபடின் தீப்பாயத் துணிந்து நின்றனன். அவனும் ஒரு தம்பியன்றோ?

வானரர் தலைவனாகிய சுக்கிரீவன், தன் உரிமை மனைவி உருமையைக் கவர்ந்துகொண்டு தன்னை ஓட்டிவிட்ட தன் தமையனும் வாலியைத் தாசரதி அம்பால் எய்து வீழ்த்திய காலத்து மனைவியைக் கவர்ந்த வஞ்சகனென்பதையும் நெஞ்சத்திற்கொள்ளாது அவனது உடலைத் தழுவிப் புரண்டு ஓலமிட்டழுததை அறியாதார் யார்? ஈருடலும் ஓருயிருமாக இருத்தற்குரிய நீங்கள், இங்ஙனம் உள்ளம் பிளவு பட்டிருப்பீர்களாயின், அது பிறரால் எள்ளி நகையாடற்கேதுவாகுமன்றோ?" என்று இவ்வுறுதிப் பொருளாகிய தெள்ளமுதத்தைத் தீஞ்சுவையொழுகும் சொற்குழூஉவாகிய வலம்புரி சங்கால் எடுத்துப் புகட்டினார்.

இவ்வமிழ்தம் இளங்குமரனது செவிவாய்ச் சென்று உள்ளத்திற்சேர்தலும், அங்குக் குடிகொண்டிருந்த வஞ்சமென்னும் நஞ்சமகன்று, சகோதர வாஞ்சையென்னும் வெள்ளம் ததும்பிற்று. உடனே இளங்குமரன் தன் தமையனுக்குத் தான் இழைத்த தீங்கையெல்லாம் நினைந்து நினைந்து இரங்கி, "அந்தோ! என் செய்தேன் பாவியேன்!" என்று பலவாறு புலம்பி, நாவீறு படைத்த நாவலர் பெருமானை நோக்கி, "பாவப் படுகுழியில் வீழ்ந்த பதடியைக் கைதூக்கி உய்விக்க வந்த கருணை வாரிதியே, என் அண்ணலை அழைத்து வந்து, அரியணையிலமர்ந்து மறுபடியும் செங்கோலோச்சுமாறு புரிவது நும் கடமையாகும்! நுஞ்சரணையே செஞ்சரணாகக் கொண்டேன்!" என வேண்டி நின்றான். தம் அறிவின் மாட்சியானும், சொல் வன்மையானும் உலக இயற்கையையே ஒரு கணத்தில் மாற்றத்தக்க ஆற்றல் படைத்த பெரியோர் முனைந்து நின்று செய்யப் புகுந்த இப்பெற்றியவான கருமங்கள் இடைமுரிந்து வீழ்ந்துபடுதலுமுண்டோ?

புலவர் தம் எண்ணம் முற்றியதுபற்றி உள்ளம் மகிழ்ந்து, இளங்குமணனைத் தேற்றி, அங்ஙனமே செய்வதாகக் கூறி, அவனைக் குமணனிருக்கும் காட்டிற்கு அழைத்துச் சென்றனர். அமைச்சரும் நகர மாந்தரும் உடன் சென்றனர். புலவருடன் சென்ற இளங்குமணன் குமணனைக் கண்டதும் விரைந்தோடி, அவனது அடிப்போதை முடிக்கணிந்து, இரு கரத்தாலும் பற்றிக் கொண்டு, "அண்ணலே, தெரியாது சிறியேன் செய்த தீமைகளையெல்லாம் பொறுத்தருளி, ஒளியாரும் மணி முடி சூடி, உலகைப் புரந்தருளி, அடியேங்கள் உயிர் வாழக் கடைக்கணித்தருளல் வேண்டும்; பெருந்தகையோர், சிறியோர் செய்த பிழையனைத்தையும் பொறுத்தருளுதல் அவர் தம் பெருந்தகைமைக்கியற்கையன்றோ? நீ இருந்தாண்ட அரியணையில் யானிருந்தாளுதல், அரிமா இருந்த பூந்தவிசில் நரிமாவிருப்பதையொக்கும். உன்னைக் கொல்லுதற்கு நினைந்த தன்மையை நினைக்குந்தோறும் என் மனமே என்னைக் கொல்லுகின்றது! இனித் தாழ்க்காது நீ நாட்டிற்கெழுந்தருளி முடி சூடாவிடின், உன் அடிக்கீழ் வீழ்ந்து உயிர் துறப்பன்!" என்று கழிவிரக்கங்கொண்டு, கதறி வேண்டி நின்றனன்.

குமணன் தன் தம்பியையும் புலவரையும் இனிமையுடன் நோக்கி, "எனக்குக் காடுறை வாழ்க்கையே நாடுறை வாழ்க்கையினும் சால நலம் பயப்பதாயுளது. இதனை நுகர்ந்த என் மனம், இனி அதனை விரும்புமோ! அமிர்தமுண்டார் கடுவுண்ணக் கருதுதலும் உண்டோ? எம்பி, நீயே உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் வைக அரசுரிமை தாங்கி ஆள்வாயக. இதுகாறும் நீ எனக்கு ஒரு சிறிதும் இன்னல் விளைத்ததாக என் மனம் எண்ணியதில்லையே! அங்ஙனமாகவும், நீஎன்னைப் பிழை பொறுத்

தருள வேண்டுமென்பது எற்றுக்கு? இப்போது நீ என்னை நாட்டிற்களைப்பதே பெருந்துன்பம் தரும் செயலாய் இருக்கின்றது," என்று கூறினான்.

அது கேட்ட இளங்குமணனும் நமர மாந்தரும் புலவரது திருமுகத்தை ஒரு முகமாய் நோக்கி நின்றனர். புலவர் குமணனைப் பார்த்து, "தலைக்கொடையாளியே, உனக்கு இத்தலையில் யாது உரிமையுளது? இது என் தலை. இதில் முடி புனைய நான் நினைத்தால், அதற்கு யாது தடையுளது?" என்று குமணன் மறுக்கலாகா வகை திறம்படவுரைத்துத் தம் கருத்தை வெளிப்படுத்தினார்.

குமணன் புலவர் திருவாக்கை மறுத்தற்கஞ்சி, "தோன்றாத் துணையாய் நின்றியக்கும் இறைவன் திருவிளையாடல் இருந்தவாறென்னே!" என உன்னி, இருவர்தம் வேண்டுகோட்கும் இணங்கினான். கவியரசர் அரசரிருவருடன் காட்டினின்றும் போந்து, நகரத்துட் புகுந்து, குமணனை அரசு கட்டிலில் அமரச் செய்து, தமது திருக்கரத்தால் மணி முடியை எடுத்தணிந்தார். ஊரினர் யாவரும் உவகைக் கடலுள் மூழ்கித் திளைத்தனர். இளங்குமணன் குமணனது குறிப்பின் வழி நின்று, அவனிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு ஒழுகுவதே தனக்குப் பெரும்பேறாகக் கொண்டான். நாடு பண்டுபோல வசி வளஞ்சிறந்து, பசிப்பிணி இன்றி வளமுற்றுத் திகழ்ந்தது.

பின்னர்க் குமணன் புலவரது அளக்கலாகாத அறிவாற்றலுக்கும், அருட்பெருங்குணத்துக்கும் வியந்து மகிழ்ந்து, அவர்தம் கரங்களை அன்புடன் பற்றி அழைத்துச்சென்று, நிதிச் சாலையைக் காண்பித்து, "புலவரே, இவையனைத்தும் உமவேயாகும்; ஆகையால், வேண்டுவன வேண்டுவன நீவிர் எடுத்தருள்க," என்று கூறினான்.

புலவர், "அரசே, நின் பொற்கரத்தால் கொடுப்பது எதுவோ, அதுவே எனக்குச் சாலும்," என்றுரைக்கக் குமணன், புலவர் 'போதும்! போதும்!' என்று மறுக்கும்படி பொன்னும், மணியும், மதமாவும், பரிமாவும் வழங்கித் தன்னாட்டிற்சிறந்த விளைபுலங்கள் பலவற்றையும் முற்றூட்டாக அளித்தனன்.

புலவர் அவற்றையெல்லாம் பெற்று மகிழ்ந்து, தமது ஊருக்குச் செல்லும் விருப்பைக் குறிப்பித்து, அரசனிடம் விடை வேண்டினார். அவன் புலவர் பிரிவுக்கு வருந்தி, அரிதில் உடன்பட்டுப் புலவரை நோக்கி, "புலவீர், அடிக்கடி எனது நாளோலக்கம் நுமது திருமுகக் காட்சியைப் பெறுமாறு அருள் புரிய வேண்டும்!" என வேண்டி, ஏழடி பின் நடந்து விடையீந்தான். புலவர் பொற்குவியலோடும், ஏனைய வரிசைகளோடும் சிவிகை ஊர்ந்து, தமதூரை அடைந்து, மனைவி மக்களைக்கண்டு, மகிழ்வு பூத்து, வறுமைப் பிணி நீங்கி, இன்புற்று வாழ்ந்திருந்தார்.

இங்ஙனம் தம் பதியில் இன்புற்று வாழ்ந்திருந்த சாத்தனார், சின்னாட்கழிந்த பின்னர், பழுதில் கேள்வி வழூஇயராஞேர் தமது பழவிறல் மூதூராகிய மதுரையம்பதியில் வழி வழி நிறுவிப் புரந்து வரும் தமிழ்ச் சங்கத்தில் கனமாப் பலகைமீதமர்ந்து செந்தமிழாராய்ச்சி செய்து வரும் தண்டமிழ்ப் புலவர்களைக் கண்டு களிப்பதற்கு விருப்புற்று, அம்மதுரை மாநகரையடைந்து, அத்தமிழ்ப் பேரவையைக் குறுகினார். குறுகலும், அத்தமிழ்ப் பேரவையிற் சிறந்து விளங்கும் கூலவாணிகஞ் சாத்தனார், நக்கீரர் முதலிய புலவர் பெருமக்கள் இப்புலவரது புலமையையும் இவர்தம் தந்தையார்மூலங்கிழாரது பெருமையையும் நன்கறிந்தவராகலின், இவரது வரு

கைக்கு உவந்து எதிர்சென்றழைத்துச் சங்கப் பலகையில் அமரச்செய்து, அன்பு ததும்பும் இன்மொழிகள் வழங்கி உபசரித்தார்கள். புலவர்களோடு இவர்க்குண்டான நட்பின்பம்,

'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.'

எனக் கூறியாங்கு. செந்தமிழ் நூலின் சுவை போல விஞ்சியது. புலவர், புலவர் குழுவில் தாமும் ஒருவராயமர்ந்து, பொருள் நலங்கனிந்தொழுகும் பாக்கள் பல யாத்தும், செந்தமிழாராய்ச்சி செய்தும், பன்னாள் வதிந்திருந்தனர்.

இங்ஙனம் சங்கத்துச் சான்றோரிடை வதிந்து இன்புற்றிருந்த புலவர், சின்னாட்கழிந்ததும் தமது பதிக்குச் சென்றுவரக்கருதி, சங்கப்புலவரிடத்தும் சங்கம்புரக்கும் துங்கனாகிய பாண்டியனிடத்தும் விடைவேண்டிப் பெற்றுச் சோழநாடு நோக்கிப் புறப்பட்டு வழிக்கொண்டார்.

இங்ஙனம் மதுரைமாநகரைக் கடந்து வருகின்ற புலவர், பாண்டியன் படைத் தலைவனும் வேட்டுவர் குலத்தவனும் கோடைமலைக்குரியவனுமான கடிய நெடுவேட்டுவன் என்பான், தன்னை அடைந்தவர்களைப் புரக்கும் உபகார குணமுடையவனாய் விளங்குகின்றானென்பதைக் கேள்வியுற்று, அவனது கோடைமலையை அடைந்து, அவனைக் கண்டு, பரிசில்வேண்டினார். அவன் எக்காரணத்தாலோ, புலவர்க்கு விரைந்து பரிசில் கொடாது, கால நீட்டிப்புச் செய்தான். புலவர் அது கண்டு பொறாது வெகுண்டு, வேட்டுவனை நோக்கி, "உன்னோடு போர் செய்தற்கு அஞ்சி வந்தடைந்தோர்க்குப் புகலிடமாய், அஞ்சாது எதிர்ப்பாரது வலியை அழிக்கின்ற வாட்போரின் மிக்க படையை உடையவனே, முல்லைக்கொடிகளை வேலியாகக் கொண்ட கோடைமலைக்குத் தலைவனே, மான் கூட்டங்களைத் தப்பாது

தொலைக்கும் சினமிக்க நாய்களையும் வில்லையும் உடைய வனே, செல்வத்தாற்சிறந்த சேர சோழ பாண்டியரே எனினும், அவர் எம்மை விரும்பி உபசரித்து அளித்தாலன்றி, அப்பொருளை ஒரு பொருளாக மதித்துப் பெறுதற்கு விரும்போம். உலகத்தில் புது மழையைப் பெய்ய வேண்டி நீர் முகப்பதற்குக் கடலுள் திரண்டிறங்கிய மேகம் நீர் முகவாது மீளாதவாறுபோலப் பரிசிலரது சுற்றம் அரசர்களிடம் தேரும் களிறும் பெறுதலின்றி வாளா மீள்வதில்லை. உன்னைப் பாடி வந்த யாமோ, அவை பெறேமாய் வறிதே போகின்றேம்; வேட்டுவனே, நீ நோயின்றி வாழ்வாயாக!" என்னுங் கருத்துத் தோன்ற,

'முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே;
விறற்சினம் தணிந்த விரைபரிப் புரவி
உறுவர் செல்சார் வாகிச் செறுவர்
தாளுளம் தபுத்த வாள்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருந!
சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ! நோயிலை யாகுக!
ஆர்கலி யாணர்த் தரீஇயகால் வீழ்த்துக்
கடல்வயின் குழீஇய அண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா ஆங்குத் தேரொடு
ஒளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே.'

என்ற செய்யுளைக் கூறி வெறுத்துரைத்துவிட்டு, அவ்விடம் விட்டகன்றார். வேட்டுவன், புலவர் "நோயிலை யாகுக!" எனக் குறிப்பு மொழியால் தன்னைச் சபித்துச்

செல்கின்றாரென்று தெரிந்து அச்சமுற்று, "தொல்லாணை நல்லாசிரியர் திறத்தில் என் செய்தோம்!" என்று தன் பிழைக்கு வருந்தி, அது பொறுக்குமாறு புலவரைத் தொடர்ந்து சென்று வேண்டி அழைத்து வந்து, அவர்க்குப் பொற்குவியலும் யானைச் செல்வமும் மிகக் கொடுத்து உபசரித்தான். உடனே புலவர் அவனது கொடையை வியந்து, அவனது தெய்வ சிந்தனையும், வலியும், தெறலும், அளியும், வண்மையும், செல்வமும் எல்லாந் தோன்ற ஓர் அகப்பொருட்செய்யுளில்[1] உவமை முகத்தான் வைத்துப் பாராட்டிக் கூறினார். பின்னர் விடைபெற்று, அவணின்று நீங்கிப் புறப்பட்டுப் பாண்டி நாடு கடந்து, சோணாடு புகுந்து, தம்மூராகிய ஆவூரை அடைந்து, ஆங்குள்ள சான்றோருக்குத் தாம் சென்ற சென்ற இடந்தோறும் கண்ட கண்ட வனப்பினையும் விசேடச் செய்திகளையும் சங்கத்துச் சான்றோரது துங்க மிகுந்த குணநலங்களையும் கூறி அமர்ந்திருந்தார்.

பின்னர் ஒரு நாள், புலவர் கடையெழு வள்ளல்களுள் ஒருவனும் தோட்டிமலைக்குரியவனும் பரிசிலர்க்கு யானைக்கொடை வழங்குபவனுமான கண்டீரக்கோப்பெருநள்ளியின் தம்பி இளங்கண்டீரக்கோ என்பவனைக் காணுதற்கு அவணிடத்துச் சென்றார். அவ்வமயம் அவ்விடத்து நன்னன் என்னும் வேளிர்குலத் தலைவன் வழித்தோன்றலாகிய இளவிச்சிக்கோ என்பவனும் வந்து, ஒருங்கு அமர்ந்திருந்தான். சென்ற புலவர் இளங்கண்டீரக்கோவை மாத்திரம் தழுவி மகிழ்ந்து அளவளாவிவிட்டு, இளவிச்சிக்கோவைத் தழுவாதிருந்தனர். இதனைக்கண்ட இளவிச்சிக்கோ நாணமடைந்து, புலவரை நோக்கி, "புலவர் பெருமானீர், நீவிர் என்னை மட்டும்

1. அகம். 13.

தழுவாமைக்குக் காரணம் யாதோ ?" என வினவினன். அதற்குப் புலவர், " இவனை யான் தழுவியதற்கும், உன்னைத் தழுவாமைக்குங் காரணம் யாதெனிற் கூறுவேன்: தொன்றுதொட்டே பெரிய மலைப்பக்கத்துள்ள நெடுந்தூரமான இடங்களுக்குத் தம் கணவர் சென்றிருந்தாலும் பாடும் புலவர்கள் வரின், பெண்டிரும் தம் கணவர் தரத்திலே நின்று அவர்களுக்கு நல் அணிகலன்களை அணிந்து, புல்லிய தலையினையுடைய மெல்லிய பிடியானைகளைப் பரிசிலாகக் கொடுக்கும் கண்டீரக்கோன் தம்பி இவனாதலால், தழுவினேன் ; நீயோ, பரிசிலர்க்கு யானைக் கொடையளிக்கும் நன்னன் என்பானது குலத்துதித்த பெருமையும் இயற்கை நற்குணங்களும் உடையையாயினும், உன் குலத்தவனாகிய அந்நன்னன், முற்காலத்துத் தனது சோலையிலுள்ள மரத்தின் பசுங்காய் ஒன்று அருகிலோடும் நீரில் மிதந்து சென்றதை நீராடவந்த ஒரு பார்ப்பனச் சிறுமி எடுத்துண்ட தவற்றிற்காக அவளைக் கொலை செய்வதற்கு முற்பட, அச்சிறுமியின் தந்தை அது தெரிந்து, அத்தவற்றுக்காக எண்பத்தொருயானைகளும், அவள் நிறையளவு பொன்னாற்செய்த பாவை ஒன்றும் தருவதாகக் கூறிப் பலவாறு இரங்கி வேண்டியும், சிறிதுங் கண்ணோட்டமின்றி அப்பெண்ணைக் கொன்றான். அதன்றியும், உன் முன்னோருள் ஒருவன், பாடிவரும் புலவரைக் கண்டால் உலோபகுணமிகுந்து, வாயிற்கதவுகளை அடைக்குங் கொடுஞ்செயலையும் புரிந்து வந்தான். இங்ஙனம் உன் முன்னோர் செய்ததான இத்தீச்செய்கை மறக்கப்படாத வசையுடையதாய் இருந்ததுபற்றியே,

' புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்(கு)
ஒன்பதிற் றொன்பது களிற்றொ டவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்

பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ'

எனப் பரணரும்,

'இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே!
குருடேயு மன்றுநின் குற்றம்;—மருள்தீர்ந்த
பாட்டு முறையும் பயிலா தனவிரண்(டு)
ஓட்டைச் செவியு முள.'

என ஔவையாரும், முனிந்து பாடியுள்ளார்கள். ஆகையால், அந்நாள் முதலாக உங்கள் மலையை எம்மவரான பெரும்புலவர் பாடுதல் ஒழிந்தனர்; இதுவே உன்னை யான் தழுவாதொழிந்ததற்குக் காரணம்," என்று பெருமிதத்துடன் விடை பகர்ந்தார். பின்னர் இளங்கண்டீரக்கோ, புலவர்க்கு வரிசைகள் பல நல்கினன். புலவர் அவற்றை மகிழ்ந்து பெற்றுக்கொண்டு, தம் பதி வந்து தங்கினர்.

பின்பொருமுறை மூவன் என்னும் சிற்றரசனிடம் புலவர் பரிசில் கடாவிச் சென்றிருந்தனர். அவன் புலவர்க்கு உபசரித்துப் பரிசில் கொடாது காலந் தாழ்த்தனன். அது கண்டு புலவர் முனிந்து, அவனுக்கு நல்லறிவு கொளுத்தக் கருதி, "பொய்கைக்கண் மேய்ந்த நாரை நெற்போரின்கண்ணே உறங்கும் நெய்தற் பூக்களையுடைய வயலின்கண் விளைந்த நெல்லை அறுக்கும் உழவர்கள், ஆம்பல் இலையில் கள்ளை வார்த்து உண்டுவிட்டு, அருகிலுள்ள கடலின் அலையொலியையே தாளமாகக் கொண்டு ஆடுகின்ற நல்ல நீர் வளம் பொருந்திய ஊர்களையுடைய நாட்டுக்கு வேந்தே, பல பழங்களையும் உண்ணுதற்கு விருப்பி, ஆகாயத்தின்கண்ணே உயரப்பறந்து, மலைக்குகைகள் எதிரொலி முழங்கச் சென்று, அவ்விடத்துப் பழமுடைய பெரியமரம்பழுத்து ஒய்ந்ததாகஅதனை அறிந்து வருந்திப் பழம் பெறுதே மீளும் பறவைகளைப் போலப் பிறரால் விரும்புதற்குரிய உன் நற்குணங்கள்

என்னை அழைத்துக்கொண்டு வர வந்து, உன் புகழைப் பாடிய புலவனாகிய யான், வெறுங்கையோடு மீளக்கட வேனோ? வாட்போரில் சிறந்தவனே, நீ ஒன்றைக் கொடுத்திலையாயினும், நான் அதற்கு வருந்துவேனல் லேன்; நீ செய்த இத்தீங்கால் நோயுறுவையே என்பது பற்றித்தான் கவல்கின்றேன்! நீஎன்மாட்டுச் செய்த இந்த அன்பின்மையை உனது நாளோலக்கமன்றிப் பிறர் அறியாதொழிவாராக!" என்று இசையும் வசையுந் தோன்ற முனிந்து பாடி, அவனைவிட்டகன்றார். சின்னாட் களுக்குப் பின்னர் அருளிக் கூறினும் வெகுண்டு கூறி னும் அவ்வப்பயனைத் தவறாது பயக்கும் நிறைமொழி யுடைய புலவரது முனிவுக்கு இலக்கான அவனைச் சேர மான் கணைக்காலிரும்பொறை என்னும் சேரன் போரில் வென்று, அவனது பல்லைப் பிடுங்கித் தனது ராஜதானியாகிய தொண்டி நகரத்துக் கோட்டை வாயிற்கதவில் அழுத்தினான்.

'பெரியாரைப் பேணாதொழுகின் பெரியாரால்
பேரா விடும்பை தரும்.'

என்பது பொய்யா மொழியன்றோ? பெருந்தலைச் சாத்த னார் இங்ஙனம் தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவரா லும், படைத்தலைவர் சிற்றரசர் வள்ளல்கள் பல்லோரா லும் பெருமதிப்பும் பெருஞ்செல்வமும் பெற்றுத் தமிழ கத்தில் அளப்பரும்புகழெய்தி, மனைவிமக்களுடன் பன் னெடுநாள் இன்புற்று வாழ்ந்திருந்து, பின்னர் ஒரு நாள் இம்மண்ணக வாழ்வை ஒருவி, விண்ணக வாழ்வை மருவினார்.

## ஆராய்ச்சி:

பெயர்: தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் மக் கள் பெயராகப் பெருவழக்காய் வழங்கிவந்த சாத்தனார்

என்னும் இப்பெயர், தெய்வப் பெயரை மக்கட்கு இட்டு வழங்கும் முறையில் இவர்க்கு வந்ததாகும். சாத்தனார் என்னும் பெயர் வாய்ந்த புலவர் பலராகலின், அவர்களினின்றும் வேறு பிரித்தறிதற்குச் சினைப்பெயரொடு புணர்த்துப் பெருந்தலைச் சாத்தனார் என இவர் வழங்கப்பட்டார். 'பெருந்தலை' என்னும் அடைமொழியை இவர் பெயர்க்கு முன் சார்த்திக் கூறியது, குமணனது தலையைப் பாதுகாத்த இவரது அருட்குணத்தைப் புலப்படுத்தவோ!' என ஊகிக்கவும் படுகிறது.

**தந்தையார்:** இவர் தந்தையார் பெரும்புலவராய் விளங்கிய ஆவூர் மூலங்கிழார் என்பது, இவர் பாடிய அகநானூற்று 224-ஆம் செய்யுளின் கொளுவில், "ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்," எனக் குறித்துள்ளமையின் தெளியப்படும்.

**குலம்:** இவர் தந்தையாரின் பெயரோடு கிழார் என்னும் வேளாளர்க்குரிய சிறப்புப்பெயர் சேர்த்து வழங்கப்படுதலால், இப்பெருந்தலைச் சாத்தனார் வேளாண் மரபினரென்பது ஒருதலை 'கிழார்' என்னும் பெயர் வேளாளர்க்குரியதென்பது, "ஊரும் பேரும்" (தொல். மர. சூ-74) என்ற சூத்திர உரையில் பேராசிரியர், "அம்பர்கிழான் நாகன்; வல்லங்கிழான் மாறன் என்பன வேளாளர்க்குரிய," என எடுத்துக் காட்டுதலால் அறியப்படும்.

**சமயம்:** இவர் பாடல்களால் இவர் இன்ன கொள்கையினரென்பது அறியக் கூடவில்லையாயினும், இவர் தந்தையார் மூலங்கிழார் சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனைப் பாடிய 166-ஆம் புறப்பாட்டில்,

'நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுதுநூல்

எனச் சிவபெருமானையும், நான்கு வேதங்களையும் ஆறங் கங்களையும் சிறப்பித்துக் கூறுவதன்றியும், அப்பாட்டில் வேள்வியின் வகைகளையும், அவற்றைச் செய்யும் முறை களையும் விரித்துக் கூறிப் பௌத்த முதலாய வேதவழக் குக்கு மாறான கொள்கைகளை இழித்துக் கூறுதலானும், அவர் மறைநெறிப்பட்ட சமயத்தவரென்பதும், சிவ பெருமான்மீது பத்தி மிக்கவரென்பதும் புலனும்; புலனாகவே, அவர் மகனாராகிய இச்சாத்தனாரும் அக் கொள்கையினரெனக் கொள்கை பொருந்தும்.

**பிறப்பிடம்:** இவரது பிறப்பிடம் ஆலூரென்பது, இவர் தந்தையார் 'ஆலூர் மூலங்கிழார்'[1] எனக் கூறப்படு தலால் அறியப்படும். இவ்வூர் சோணாட்டில் காவிரிக்கரை யில் உள்ளதென்பது, இவர் தந்தையார் மூலங்கிழார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனிடம் முதன்முதற்சென்றிருந்தபோது அவன் அவரை நோக்கி, "எம்முள்ளீர், எந்நாட்டீர்?" என்று வினவ, அவர், "நின்னிழற்பிறந்து நின்னிழல் வளர்ந்த எம்மளவெவ வனோ," என (38-ஆம் புறப்பாட்டில்) கூறுதலானும், கௌணியன் விண்ணந்தாயனைப் பாடிய 166-ஆம் புறப் பாட்டில் தமது ஊரைப் "பூவிரி புதுநீர்க் காவிரி புரக் கும், தண்புனற் படப்பை யெம்மூ ராங்கண்," எனக் காவிரி பாயும் ஊராகக் குறித்திருத்தலானும் ஆய்ந்தறி யப்படும். இக்காலத்துச் சோழ நாட்டில் காவிரியின் தென்கரையில் ஆலூரென்னும் பெயரோடு ஓரூர் உளது. இது பாடல் பெற்ற சிவ ஸ்தலங்களுள் ஒன்று. இதுவே இவரது ஊராய் இருக்கலாமென்று ஊகிக்கப் படுகிறது. "நித்த விநோத வளநாட்டின் உட்பிரிவான

---

1. 'மூலம்' என்பது ஊர்ப்பெயருமாம்.

ஆலூர்க் கூற்றம், தஞ்சாவூர்க் கல்வெட்டுக்களில் அடிக்கடி கூறப்பட்டுள்ளது; விளத்தூர், இரும்புதல் என்ற ஊர்கள் இக்கூற்றத்தைச் சேர்ந்தவை," என்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கூறியிருத்தலும் கண்டறியத் தக்கது.

பெருமை: இவர் பொய்யில் கேள்விப் புலமை படைத்துச் சங்கத்துச் சான்றோருள் ஒருவராய்ச் சிறந்து விளங்கினவரென்பது இவரியற்றிய பொருணலங்கனிந்த தீஞ்சுவைப் பாட்டுக்களாலும், அவை சங்கத்துத் தொகை நூல்களுள் இடம் பெற்றிருத்தலாலும் நன்கறியலாம். இவர் வறுமையால் வருந்திய காலத்தும் தம் அறிவிற்குரிய செம்மையினின்றும் திறம்பாத நன்னிலையுடையவரென்பது, கடிய நெடுவேட்டுவன் பரிசில் நீட்டித்த போது, "முற்றிய திருவின் மூவராயினும் பெட்பின்றீதல் யாம் வேண்டலமே," எனக் கூறுதலால் தெளியப்படும்.

தம்மால் வெறுத்துப் பாடப்படுதலால் பாடப்பட்டோர்க்குத் துன்பமுறுமே என்று இவரே சிலவிடங்களில் இரங்கிக் கூறுதலானும், யாப்பருங்கல விருத்தியுடையார் ஆரிடச் செய்யுளை விளக்குமிடத்து, "இவைகளெல்லாம் இருடிகளல்லா ஏனையோராகி மனத்தது பாடவும், ஆகவும், கெடவும் பாடல் தரும் கபிலர், பரணர், கல்லாடர், மாமூலர், பெருந்தலைச் சாத்தர் தொடக்கத்தாராலும் ஆரிடச் செய்யுள் போல மிகவும் குறையவும் பாடப்படுவ எனக் கொள்க,"[1] என நிறைமொழி மாந்தர் வரிசையில் இவரை வைத்துக் கூறியிருத்தலானும், இவர் தொல்லாணை நல்லாசிரியராம் அளப்பரும்பெருமை உடையாரென்பது போதருகின்றது. இவர் அரசரேயெனினும், அவரிடத்துப் பழி பயக்குஞ்

1. யா. வி. சூ. 93. உரை.

செயல் காணப்படின், அவரைப் பாடுதலும் மதித்தலும் செய்யாது வெறுத்துரைக்கும் பெருங்குணமுடையவ ரென்பது, இவர், இளங்கண்டீரக் கோவைத் தழுவி, இளவிச்சிக்கோவைத் தழுவாது ஒழிந்தமையானும், இளவிச்சிக்கோ தன்னைத் தழுவாமைக்குக் காரணம் கேட்டபோது அவன் முன்னோர் தீச்செயலை எடுத்துக் காட்டி மொழிந்த விடையானும் நன்கு புலனாகும். இவர், புலவரை மதியாத புன்மைக்குணமுடையாரைக் கண்டவிடத்து, அவர் அரசரே எனினும் அஞ்சாது, அவர் முன்னிலையிலேயே அவர் குற்றங்களை எடுத்துக் காட்டி, அறிவுகொளுத்தும் பெருமிதம் வாய்ந்தவரென் பது கடிய நெடுவேட்டுவன், மூவன் இவர்களைப் பாடிய புறப்பாட்டுக்களான் அறியலாகும். இவர் வையகமெல் லாங் கைவரினும் இழிவந்த பழி பயப்பன செய்யச் சிறி தும் ஒருப்படாத உளப்பான்மை உடையவரென்பது, குமணன், "என் தலையைக் கொய்துகொண்டு போய்க் காட்டி எம்பியிடம் செம்பொன் கோடி கொள்க," என்ற போது அவனது அருங்குணத்துக்கும் எளிவந்த நிலை மைக்கும் இரங்கி, அதுதகாதெனத் தகைந்து,வாளைமாத் திரம் பெற்றமையான் நன்கு தேறப்படும். செல்வத்திலே பற்றுளங்கொண்டு, உடற்பிறப்பின் அருமையைச் சிறி தும் ஓராது, தன் தமயனும் குமணவள்ளலைக் காட்டிற் கோட்டி, அவ்வளவில் அமையாது அவன் தலைகொணா ரவும் பறையறைவித்த கொடுஞ்செயலுடைய இளங்கு மணன் அவைக்களம் புகுந்து, குமணன் தலை துணிக்கக் கொடுத்த வாளைக் காட்டி, அவனது உயிர்க்கொடைத் திறலை அறிவுறுத்திப் பல நீதிகளை நயம்பட உரைத்து, இளங்குமணனது கல்லினும் இரும்பினும் கடிய நெஞ் சத்தை வெண்ணெய்போலக் குழைத்துச் சகோதரவாஞ்

சையை உண்டாக்கிக் காடு பற்றியிருந்த குமணனைப் பழைய அரசியலில் நிறுவும் தொழிற்கண் முனைந்து நின்று, வறுமைத் துன்பத்தால் தாம் பரிசில் பெற வந்த காரியத்தையும் அறவே மறந்து நின்றனரென்றால், இவரது அன்பு, அருள், வாய்மை, தூய்மை முதலான அருங்குணங்களையும், மேற்கொண்ட காரியத்தைக் கடைத்தேறக் கொண்டுய்க்கும் வினைச்செயல் வகையின் திட்ப ஒட்பங்களையும் நம் வாய்ச்சொற்கொண்டு அளந்துரைத்தலாமோ?

காலம்: இவர் பாடிய குமணனைப் பெருஞ்சித்திரனார் என்னும் புலவரும் பாடியிருத்தலான், இருவரும் ஒரு காலத்தவர் என்பது வெளிப்படை. இப் பெருஞ்சித்திரனார் கடையெழு வள்ளல்களுள் பிற்பட்டிருந்தவனாகிய அதிகமான் நெடுமானஞ்சியைப் பாடியிருத்தலால், இப்புலவர் கடையெழு வள்ளல்களின் இறுதிக் காலத்திருந்தவரென்பது பெறப்படும்.

இவர் தந்தையார் மூலங்கிழார், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனையும், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனையும் பாடியிருத்தலால், இப்புலவர் அவ்வரசர் காலத்தின் பிற்பகுதியினும்; அவ்வரசர்களுள் கிள்ளிவளவனைப் பாடிய ஆலத்தூர் கிழார், கோவூர் கிழார், இடைக்காடனார், ஐயூர் முடவனார், நல்லிறையனார், ஆடுதுறை மாசாத்தனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், மாறோக்கத்து நப்பசலையார், நன்மாறனைப் பாடிய மதுரை மருதனிளநாகனார், நக்கீரனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் என்ற புலவர் காலத்திலும் இவர்களுள் சிலருக்குப் பின்னரும் இருந்தோராவர்.

இவர் நன்னனையும், இளவிச்சிக்கோவையும், கண்டீரக்கோ நள்ளியையும் தம் பாடலுள் குறித்திருத்தலால், அவர்களுள் நன்னனையும் நள்ளியையும் பாடிய வன்பரணரும், இளவிச்சிக்கோவின் தமையன் விச்சிக்கோவைப் பாடிய கபிலரும் முதியராய் விளங்கியபோது இவர் இளைஞராயிருந்தோராவர். இவரது காலத்தை முடிவாக உரைக்குமிடத்து இரண்டாம் நூற்றுண்டின் இடைப் பகுதி என்னலாம். இது பின்னர் வரும் பல செய்திகளானும் வலியுறும்.

இவரால் பாடப்பட்டோர்: குமணன், கடிய நெடு வேட்டுவன், மூவன் என்பாரை இவர் பாடியுள்ளார். இவரால் அகத்தில் பாடப்பட்ட பண்ணி என்பவனும், இவரால் புறத்தில் பாடப்பட்ட கடியநெடுவேட்டுவன் என்பவனும் ஒருவனே என்பது, இவரே 'வேட்டுவன்' எனவும், 'மறவன்' எனவும் மரபானும்; 'கோடைப் பொருநன்,' என ஊரானும் ஒற்றுமை பெற அப்பாட்டுக்களில் கூறுதலால் அறியலாகும். நெடுவேட்டுவனென்பது மரபின் தலைமைப் பெயரன்றி இயற்பெயர் ஆகாமையையும், பண்ணி என்பதே இயற்பெயர் ஆதலையும் நோக்கிக்கொள்க. மூவன் என்பானைக் கணைக்காலிரும்பொறை வென்று, அவனது பல்லைப் பிடுங்கித் தொண்டி நகரத்துக் கோட்டை வாயிற் கதவில் அழுத்தினுன் என்பது, நற்றிணை 18-ஆம் பாட்டில் பொய்கையார் கூறியது கொண்டு அறியப்பட்டது. இவனே, நம் புலவரது முனிவிற்கு இலக்கானவன் என வரலாற்றுள் கூறியது, சாத்தனுர் ஆகவும் கெடவும் பாடல் தரும் நிறைமொழியுடைய பெரியாராகலானும்

'குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.'

என்ற மறைமொழியின்படி வெகுண்டு கூறிய புலவர்

மொழி அதன் பயனைத் தவறாது பயந்திருக்குமாகலா னும், இங்ஙனமே நல்லிசைப் புலவர்களான நக்கீர ராலும், கழாத்தலையாராலும் முறையே வெகுளப் பட்ட கொண்டான் என்பவனும், வேளிருள் ஒருவனது அரையம் என்னும் நகரமும் அழிவுபாடுற்ற செய்தி தொன்னூல்களிற் கேட்கப்படுதலானும், மூவன்[1] அழி வைக் கூறிய பொய்கையாரும் நம் புலவர் காலமாகிய சங்க ககலத்தவராகலானும் ஊகித்துக்கொண்டது என்க.

## பாட்டுக்கள்

இவர் பாடிய பாட்டுக்கள், தொகை நூல்களுள்[2] அகத்திலும், புறத்திலும், நற்றிணையிலும் காணப்படு கின்றன.

புறத்தில் 151, 164, 165, 205, 209, 294-ஆம் எண் கள் அமைந்த ஆறு பாட்டுக்களும் இவர் பாடியனவாம். இப்பாட்டுக்களுள் முதல் ஐந்தும் புறத்திணையில் பாடாண்டிணைக்கும், அத்திணைக்குரிய துறைகளுள் முறையே இயன்மொழி, பரிசிற்கடாநிலை, பரிசில் விடை, பரிசிற்றுறை, பரிசில் கடாநிலைத் துறைகளுக் கும் இலக்கியமாய் அமைந்தவை. ஏனையது ஒன்றும் தும் பைத் திணைக்குரிய தானை மறத்துக்கு இலக்கியமானது.

குமணனைப் புலவர் காட்டில் கண்டு பாடிய 164-ஆம் புறப்பாட்டு, அவலச் சுவை நிரம்பி, வறுமைத் துன் பத்தைமிகப் புலப்படுத்திப் படிப்போருள்ளத்தை இரங்

1. புறம். 202. தொல்-செய்-சூ. 490 நச். பேரா. உரை பார்க்க.

2. 'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறு நா
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை.'

கச் செய்கின்றது. தமது வீடு வறுமையால் சமைத்தல் தொழில் ஒழிந்திருப்பதை, "ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பில் ஆம்பி பூப்ப," என்று கூறியது குறிக்கொள்ளத் தக்கது. அடுதல் என்னும் தொழிற்பெயர், 'ஆடு' என முதனிலை திரிந்து பயின்றமை நோக்கற்பாலது. இவர் துன்ப நிலையிலிருந்த குமணனை நோக்கி, 'உன்னை வளைத்தாயினும் பரிசில் கொள்ளாது விடேன்,' என்னுங் கருத்துடன், "என்நிலை அறிந்தனையாயின், இந்நிலை தொடுத்துங் கொள்ளாதமையலென்," எனக்கூறியிருப்பது, வறிஞரது இயற்கையைத் தெரிவிக்கின்றது. 165-ஆம் புறப்பாட்டில் இளங்குமணனது உள்ளக்கறையைப்போக்குதற்குக்கூறிய, 'மன்னா உலகத்துமன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே," என்றித்தொடக்கத்து அடியில் அமைந்திருக்கும் நீதிப் பகுதிகள் மறவாது உளங்கொளற்பாலன. இப்பாட்டையே இளம்பூரண அடிகள் தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணை இயல் உரையில் கொடுத்தற்கரிய கொடுக்கும் வாகைக்கு உதாரணமாகக் காட்டினர்.

205-ஆம் புறப்பாட்டில் நெடுவேட்டுவன் தன் நாய்களைக்கொண்டு செய்யும் மான் வேட்டம் கூறியிருப்பது, சுவை பயப்பது. இப்பாட்டில் குறித்துள்ள கோடைமலை இக்காலத்து மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கோடைக்கானல் (Kodaikanal) மலையே எனக் கருதப்படுகின்றது. இளவிச்சிக்கோ புலவர் தன்னைத் தழுவாமைக்குக் காரணம் கேட்டமைக்கு விடையாகக் கூறிய 'பண்டும் பண்டும்,' என்ற 151-ஆம் புறப்பாட்டுப் பெருமிதச் சுவை மிகுந்து விளங்குகின்றது. 209-ஆம் புறப்பாட்டில் "உழவர் மதுவை ஆம்பல் இலையில் பெய்து உண்டு, அக்களியால் அருகில் உள்ள கடலின் அலையொலி

யையே தாளமாகக் கொண்டு ஆடுகின்றனர்,” என்று கூறியிருப்பது, நகைச்சுவையூட்டுகின்றது. இதனால், மருத நெய்தற்றிணை மயக்கம் கூறியிருக்கும் அழகு குறிக்கொள்ளத் தக்கது.

கொடை மிக்காரென்று கேள்வியுற்று, அவரிடத்து வந்த புலவர்கள் பரிசில் பெறாது வறிதே திரும்பிச் செல்லுந் தன்மைக்குப் பல பழத்தை விரும்பி உண்ணுதற்கு வந்த பறவைகள் மரம் பழுத்து ஓய்ந்ததாகத் தெரிந்து வருந்தி மீள்வதையும், தம்மால் பாடப்பட்ட அரசரிடமிருந்து புலவர் பரிசில் பெறாது மீளுதல் இல்லை என்பதற்குத் தலைப் பெயலைக் கருதிய மேகம் கடலில் நீர் முகவாது திரும்புதலில்லை என்பதையும் உவமையாக முறையே 205-209-ஆம் புறப்பாட்டுக்களில் கூறியிருப்பவை யாவரும் போற்றுந் திறத்தன. 294-ஆம் புறப்பாட்டு மறக்குடி மகள் ஒருத்தியை நோக்கி ஒருவர் அவள் தலைவன் போர்த் திறத்தைப் புகழ்ந்து கூறுவதாக அமைந்துள்ளது.

அகத்தில் 13, 224-ஆம் எண்ணமைந்த இரண்டு பாட்டுக்களும் இவர் பாடியனவாம். 13-ஆம் பாட்டு, பாலைத்திணைக்குரிய பொருள்வயிற்பிரியலுற்ற தலைமகனைத் தோழி செலவழுங்குவித்த துறையாக அமைந்துள்ளது. தோழிகூற்றாயுள்ள இப்பாடலில், “பண்ணி என்பான் செய்த வேள்வி போல அறம் முதலாயின நடக்குமேனும், தலைவி பனிக்காலத்துத் துணையின்றி வருந்தப் பிரியும் பொருள்வயிற்பிரிவு உண்டாகாது போக,” எனப் பண்ணியின் வேள்விச்சிறப்பை உவமை முகத்தான் வைத்துப் புகழ்ந்துள்ளார். அவன் தென்னவன் மறவனாதலால், மலையாரமாகிய சந்தனத்தையும், கடல் ஆரமாகிய முத்தையும் அணிபவன் என்று கூறி

யுள்ளார். இப்பாட்டில், யானைகளைக் குழியில் வீழ்த்திப் பிடிப்பதும், யானைப் பேச்சுக்களால் அவற்றைப் பழக்குவதுமாகிய வழக்குகள் குறிக்கப்பட்டுள்ளன. 'வயல்களில் கவைத்த நெற்கதிர், வரம்பணையில் புடைபெயர்ந்து புரளும்படி வந்த வாடைக்காற்று, கரும்பின் கழைகளிலிருந்த குருகு என்னும் பறவைகள் கதற வீசும் நுண்ணிய பல துளிகளையுடைய பனி நாள்,' எனப் பனிக்காலத்தியல்பு புலப்படுத்தப்பட்டுளது. கடை கூர்த்துச் சிவந்த நெல்லின் தோகை, அழல் நுதி போலிருக்கிறதென்று உவமங் கூறப்பெற்றுளது.

224-ஆம் பாட்டு முல்லைத்திணைக்குரிய துறையாகிய வினை முற்றிய தலைவன், கார் காலத் தொடக்கத்தில் தலைவி முல்லை நிலத்தில் தனது வரவு நோக்கி இருக்கும் இருப்பின் நிலை கூறிப் பாகனை விரைந்து தேர் கடாவச் சொல்லுந்துறையாய் அமைந்துள்ளது. இப்பாட்டில் குதிரை மூச்சு விடுவதற்குக் கொல்லனது துருத்திக் காற்றையும், குதிரையின் வாய்நுரைக்குப் பால்கடை நுரையையும், அந்நுரை வாயிலிருந்து தொங்குவதற்குச் சிலம்பி நூல் தொங்குவதையும், அந்நுரை குதிரையின் மார்பில் செறிந்து காய்ந்திருப்பதற்குச் சந்தனம் பூசிக் காய்ந்த மார்பையும் உவமமாகக் கூறியுள்ளார். 'தலைவி பிரிவின் நலிவால் மெலிந்தமையின் கழலுகின்ற வளையைக் கையால் செறித்து வருந்தும்,' எனத்தலைவியின் நிலைமை கூறப்பெற்றுள்ளது.

நற்றிணையில் இவர் பாடிய 262-ஆம் பாட்டு, பாலைத் திணைக்குரிய 'தலைமகள் ஆற்றாக் குறிப்பறிந்து, பிரிவிடைவிலக்கிய துறை'யாய் அமைந்துள்ளது. தலைமகன் பொருள்வயிற்பிரிதலை அறிந்த தலைமகள் வருந்துதலும், அதனை அறிந்த தலைமகன், "பொருள் காரணமாக

இத்தகையாளை விட்டுப் பிரிவேனென்று என்னெஞ்சு கருதுமாயின், வறுமையின் இளிவு மிகக்கொடிது!" என வருந்திக் கூறுவதான பொருள் இதிற்பொருந்தியுளது. இப்பாட்டில், தலைவியின் தன்மை கூறப்பட்டிருப்பது சுவை பயக்கும் தன்மையது. 'கருங்காக்கணம்பூ, வாடைக் காற்று வீசுதலால் கூத்தாடுகின்ற மயிலின் பீலி போல ஆடாநிற்கும்,' எனக் கூறப்பெற்றுளது. 'கண்போல் மலர்' என்று எதிர்நிலை உவமம் வந்துளது. இவர் பாடிய அகப்பொருட்பாட்டுக்கள் மூன்றில் இரண்டு பாலைத் திணைக்குரியனவாகக் காணப்படுகின்றமையின், இவர் அகத்திணையில் ஏனைத்திணைகளினும் பாலைத்திணையைப் புனைந்து பாடுதலில் வல்லுநர் என்று கருதலாகும். இவரது இயற்கை நலங்கனிந்த பாட்டுக்களின் அருமை பெருமைகள் அளத்தற்கரியன; அறிஞர் ஆய்ந்துணர்க.

இவர் வாக்கில் பயின்றவை, ஆம்பல், கருவிளை, குவளை, முல்லை, அடுப்பு, துருத்தி, வாள், வில், சந்தனம், முத்தாரம், தூமடிச்சேக்கை, யானை, குதிரை, நாய், குருகு, நாரை, மயில், அரவு, தேர், வேள்வி, கடவுள், அணங்கு என்பவையும் பிறவுமாம்.

## 2. உறையூர்
## ஏணிச்சேரி முடமோசியார்

நல்லிசைப் புலவர்கள் தொடுத்தணிந்த 'பரிபாடல்' என்னும் அரிய நறுந்தொடையை அணிந்த பெருமிதத்தாற் பெருக்குற்றுப் பரிந்துசெல்லும் வையை என்னும் பொய்யாக் குலக்கொடி வளமுறப் படராநின்ற செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரை மாநகரின் தென்கீழ்த்திசையில் விளங்குவது, ஆசில் புகழ்மிகு மோசி குடி என்னும் மூதூர். இது கல்விச் செல்வத்தாற்சிறந்து, மோசி கீரனார், மோசி சாத்தனார், மோசி கண்ணத்தனார் முதலிய நல்லிசைப் புலவர்கள் பிறந்த பெரும்பேற்றால் தமிழகம் முழுவதும் சொல்லிசை வாய்ந்து திகழ்ந்தது. இச்சீரிய ஊரின்கண் இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முன்னர், அந்தணர் குலத்திலே, முடமோசியாரென்னும் புலவர் தோன்றினார். இவர் பிறக்கும் போழ்தே ஊழ்வினைப்பயனால் முடத்தோடே பிறந்தாராகலின், பின்னர்ச் சினைப்பெயரையும் ஊர்ப்பெயரையும் புணர்த்தி, முடமோசியார் என வழங்கப்பட்டார். இவர் உறுப்பில் முடவரேனும், அறிவில் முடம்படாது, கலை பல பயின்று, ஒப்பற்ற புலவர் திலகராய் விளங்கினர். பெரும்பாலும் உலகில் ஒருவர்க்கு ஓருறுப்புக் குறைவு படின், அதன் ஆற்றலை ஏனைய பொறியில் மிகுத்து வைத்து, அக்குறையை நிரப்புவது இறைவனது அருட்பெருஞ்செயல்களுள் ஒன்றென்பது கண்கூடன்றோ?

இப்புலவர் பெருமான், தமது அளப்பருப்புலமைத் திறத்தால், தாம் பிறந்த நாடாகிய செந்தமிழ்ப் பாண்டிநாட்டிற் பெரும்புகழ் விளைத்து விளங்கியிருந்து,

தமது புலமை மாட்சியின் பயனைப் பல்லோர்க்கும் பயன் படுத்துவான் கருதித் தம்மூரினின்றும் நீங்கிச் சோழ நாடு செல்லுதற்குப் புறப்பட்டு வழிக்கொண்டு, அந்நாட்டின் இராசதானியும், 'அறந்துஞ்சும் உறந்தை' என ஆன்றோராற் சிறப்பிக்கப் பெற்றதுமான உறையூரை அடைந்து, அந்நகர்க்கண்ணிருந்து அரசு செய்யும் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி என்னும் சோழராசனைக் கண்டு, அவனை நன்கு புகழ்ந்து பாடினார். சோழன் புலவரது புலமையின் அருமையை உணர்ந்து, போற்றி உபசரித்து, அளவளாவி மகிழ்ந்தான். பின்னர் அரசன் புலவரது ஒட்பமிகுந்த நட்பின் பத்தை நுகரக் கருதி, அவரை அவ்வுறையூரில் சின்னாள் உறையுமாறு விழைந்து வேண்டினன். புலவரும் அரசனது விருப்பிற்கிசைந்து, அந்த நகரின் ஒரு பகுதியான ஏணிச்சேரி என்னும் இடத்தில் வதிந்திருந்து, நாடோறும் அரசனது அவைக்களத்துக்கு வந்து, செந்தமிழ்ப் பாட்டுக்களின் சுவையையளித்து வந்தார். அரசனும் புலவர்க்கு வரிசைகள் வழங்கி, அவரிடத்து மிக்க அன்பும் நன்மதிப்புங் கொண்டு ஒழுகி வந்தான்.

இங்ஙனம் உறையூரில் பன்னாள் வாழ்ந்திருந்த புலவர், பின்பொருநாள் சேரநாட்டுக்குச் சென்று சேரமானைக் காணுதற்கு விரும்பித் தம் கருத்தைச் சோழனுக்கு வெளிப்படுத்தி, அவனிடம் விடை பெற்றுக்கொண்டு, உறையூரை நீங்கிச் சேரநாட்டை நோக்கிச்சென்று, அந்நாட்டின் திருமாவியனகரான கருவூரை அடைந்து, ஆண்டுச் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்த சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை என்னும் அரசனைக் கண்டார். சேரல் புலவரது புலமையை நன்கறிந்தவனாதலின், அவரைக் கண்டவளவிலே எதிர் சென்

றழைத்து, இன்னுரை வழங்கி உபசரித்து, வரிசைகள் பல அளித்து, அவரது நட்பை நாடி நின்றான். அங்ஙனமே புலவரது உள்ளத்தை அச்சேரன் அருங்குணங்கள் இறுகப் பிணித்தமையான், இருவரகத்திலும் நண்பென்னும் பண்பு வளர்ந்தது. புலவரைச் சேரமான் தன் அவைக்களத்துச் சின்னாள் வீற்றிருந்து தனக்குச் செந்தமிழ்க் கவியமுதருத்த வேண்டும் என்று அருத்தியுடன் தன் கருத்தை வெளிப்படுத்தி வேண்டினான். புலவரும் அதற்கிணங்கி, அவனோடு அவைக்களத்தில் அமர்ந்து, நாட்கவி பாடியும், அரிய பொருளுரைகளை எடுத்துரைத்தும் அவனை மகிழ்வித்துவருவாராயினர். இங்ஙனம் புலவர் அரசனோடு மருவியுறைந்து வருங்கால், ஒரு நாள் புலவரும் அரசனும் அந்நகரின் மதிற்புறத்துச் சிறந்து விளங்கும் வேண்மாடம் என்னும் மாளிகையின் உப்பரிகையில் அமர்ந்து, தன்னேரில்லாத் தனித் தமிழின் சிறப்பியல்புகளை எடுத்துப் பாராட்டி, உரையாடி மகிழ்ந்து, இனிதாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தனர்.

இவர்கள் இங்ஙனம் இருக்குங்கால், புலவர்க்குப் பழைய நண்பனாகிய உறையூர்ச் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி தனது உறையூர்ப்புறத்தெல்லையில் களிறூர்ந்து வர, அது திடீரென மதம்பட்டுச் சோழனுக்குத் துணையாய் வந்த வாள் மறவரும் பாகரும் தம் வலியால் வேண்டுவன செய்து தடுக்கவும் அவற்றையெல்லாம் மதியாது கையிகந்து, வாள் மறவர் புறத்தில் சூழ்ந்து ஓடி வர விரைவாய் வந்து கருவூர் எல்லையை அணுகிச் சேரனும் புலவரும் இருந்த வேண்மாடத்துக்குச் சிறிது தூரத்தில் நெருங்கிற்று. இங்ஙனம் வாளுங் கையுமாய் ஓடி வரும் மறவர்களையும், யானையையும், அதன்மீதிருக்கும் அரசனையும் வேண்மாடத்திருந்தபடியே

சேரன்கண்ணுற்ருன். உடனே அவன், 'இவன்யாரோ ஒரு வேற்று வேந்தன் நம்மோடு பொருதற்கு இங்ஙனம் வருகின்ருனே !' என ஐயமுற்று, வெகுளி பொங்கி, முகம் வேறுபட்டுத் தன்னுடனிருக்கும் மோசியாரை வினவி உண்மையறியக் கருதி, அவரை நோக்கி, "புலவீர், இக் களிறூர்ந்து வருவோன் யாவன் ?" என வினவினன். அதற்குப் புலவர் தம் நுண்ணறிவாலும், களிறூர்ந்து வரும் சோழனை முன்னமே நன்கறிந்திருந்த தன்மையாலும், சேரனை நோக்கி, "அணிந்த புலித்தோற்கவசம் மூட்டு வாய் சிதையும்படி பகைவர்கள் எய்த அம்புகள் பிளந்தமையால் விழுப்புண் பட்டு விளங்கும் மார்பையுடையோனுய்க் கூற்றம் போன்ற இக்களிறூர்ந்து வருவோனுகிய இவன் யார் என்குவையாயின், வயலின்கண் மயில்கள் உதிர்த்த பீலியை அங்குள்ள உழவர்கள் நெல்லரிகளோடு திரட்டும் நீர் வளமிக்க சோணுட்டுக்குரியவன் ; இங்ஙனம் வருகின்ற இவன் உன்னேடு போர் செய்தற்கு வருகின்ருனல்லன்; இவனை நீ அங்ஙனம் கருதற்க. இவன் தன்னுட்டெல்லையில் களிறூர்ந்து வரும்போது அது மதம்பட்டுக் கடலின்கண்ணே விரைந்து செல்லும் மரக்கலம் போலவும், விண் மீனுக்கு நாப்பண் செல்லும் மதியம் போலவும், வாள் மறவர் புடை சூழப் பாகர்க்கும் அடங்காது கைமிகந்து இங்ஙனம் வாராநின்றது. இது கருதி நீ இவனைச் சினவாதருள்க ; மதம்பட்ட யானையில் பகையகத்து வந்துவிட்ட சோழனும் துன்பமொன்றுமின்றி இனிதாய்த் திரும்பிச் செல்வானுக," என்று தம் பெரும்புலமைக்கும் பெருமைக்கும் ஏற்ப உண்மையை எடுத்துக் கூறக் கருதி, அதனை,

'இவனியார் என்குவை யாயின், இவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய

எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே;
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே;
நோயில னாகிப் பெயர்கதில் அம்ம!
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே.'

என்னும் விழுமிய பாட்டால் விளங்க வைத்துத் தம் நட்பினராகிய இருவர்க்கும் பெரும்போர் நிகழ்ந்துவிடாது காக்க முற்பட்டனர். சேரனும், புலவர் உரையைப் பொன்போலப் போற்றுபவனாதலின்; ஐயமும் சினமும் நீங்கி அமைந்தான். சோழனும், நிறைமொழியுடைய புலவர் வாழ்த்திய வாழ்த்துரையால் களிறு மதம் அடங்க, ஊறு ஒன்றுமின்றித் தன்னூர் போய்ப் புகுந்தான்.

இங்ஙனம் அந்துவஞ்சேரலிரும்பொறையோடு பன்னாள் உறைந்து, அவ்வப்போது அவனுக்கு உறுதி பயப்பன கூறி, அவனது அவைக்களத்துக்கு நடு நாயக மணி போல விளங்கிய புலவர், பின்னர்த் தாம் தம் ஊரினின்றும் வந்து பன்னாள் ஆகிவிட்டமையின், ஆண்டுச் செல்லக்கருத்துக்கொண்டு, அதனை அரசனுக்கு அறிவித்தார். அவன், புலவர் நீக்கத்துக்கு வருந்தினானாயினும், புலவர் எண்ணத்தைத் தடுப்பதற்கு அஞ்சி, அதற்குடன்பட்டு, அவர் தகுதிக்கேற்ற பரிசில்கள் பல வழங்கி, விடையளித்தான். புலவர் அவற்றையெல்லாம் மகிழ்ந்தேற்றுக்

கொண்டு, ஊர்தியூர்ந்து, சேரநாட்டை விட்டு நீங்கிப் பாண்டிநாடு சேர்ந்து, தம்பதிக்கு வந்தணைந்து, அரசர்பால் பெற்ற பெருஞ்செல்வங்களால் தமது வாழ்க்கையை முட்டின்றி இனிது நடாத்தியிருந்தனர்.

இவ்வாறு புலவர் சோழ சேர மண்டலங்களில் தம் புகழ் ஒளியைப் பரப்பிவிட்டுத் தம் ஊர்க்கண் வந்து உறையும் நாளிலே, தமது நாடாகிய பாண்டி நாட்டில் வாஞேரேத்தும் ஆனுப் புலமை அகத்திய முனிவர்க்கு உறைவிடமாய், மந்தமாருதத்தோடு சந்தனமும் செந்தமிழுங் கலந்து சந்ததமும் கமழாநின்ற பொதியமா மலையைச் சூழ்ந்த நாட்டின் பகுதியை, 'ஆய் குடி' என்னும் நகர்க்கண்ணிருந்து ஆய் என்னும் வேளிர் குலத்தோன்றல் ஒருவன் ஆண்டுகொண்டிருந்தான். அவன் அக்காலத்தில் விளக்கமுற்றிருந்த கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; சிறந்த வீரன்; புலவர்க்கும் பாணர்க்கும் பொன்னும், தேரும், களிறும், பரியுமாகிய பெருஞ்செல்வங்களை வரையாதளிக்கும் வள்ளியோன்; கைம்மாறு கருதாது இரவலர்க்குக் கொடுத்து மகிழ்வித்தலையே பெருங்கடப்பாடாகக் கொண்டோன்; இன்மொழியையே தன் மொழியாகவுடையவன். அவன் புகழ் தமிழ்வரைப்பெல்லாம் வரம்பின்றிப் பரந்தது. இத்தகைய வள்ளலின் அருங்குணத்தையும் கொடைத் திறத்தையும் மோசியார் கேள்வியுற்ருர். அவனை விரைவிற்கண்டு களிக்க வேண்டுமென்ற அவா அவருள்ளத்திற் பெருகிற்று. அதனுல், புலவர் தம் ஊரினின்றும் நீங்கிப் பல ஊர்களையுங் கடந்து, பொதியமலைச் சாரலிலுள்ள ஆய் குடியை அடைந்து, ஆயை அவனது நாளோலக்கத்திற் கண்டார்; தாம் கேள்வியுற்றவாறே அவனது கொடைத் திறலை அறிந்து, இறும்பூது கொண்டார். ஆய்,புலவரைக்

காணலும் விரைந்து வந்து, வரவேற்று, இன்முகத் துடன் அன்புரை வழங்கி, அருகிலுள்ள ஆசனத்தில் அமரச் செய்து, அவரது வரிசைக்குத் தக்க பரிசில் நல்க முற்பட்டனன். அது கண்டு புலவர் ஆயை நோக்கிச் சில கூறக் கருதி, "எந்நாளும் உனது கொடை மன்றத்தின் கண் வருகின்ற பரிசிலரைக் காணின், அவர்க்குக் கன்று களுடன் யானைகளை அணியணியாகச் சாய்த்துக் கொடுக் கும் மலையையுடைய நாடனே, மாவேளாகிய ஆயே, புலி இயங்கும் சிகரமுயர்ந்த நெடிய மலையின்கண் ஏறுதற் கரிய பிளப்புக்களிலுள்ள வழியில் ஏறுதலான் வருத்த முற்று, உடல் வளைந்து, பைய அடியிட்டு நடக்கின்ற மெல்லிய நடையினையுடைய வளைகள் அணிந்த கையை யுடைய விறலி என் பின்னே வர, பொன்னைக் கம்பியா கச் செய்தாற்போன்ற முறுக்கடங்கிய நரம்பினையுடைய வரிப் பொருண்மையோடு பயிலும் பாட்டு, நிலத்துக்குத் தக்கவாறு மாறிமாறியொலிக்கும் படுமலைப்பாலை என்ற பண் நிறைந்த சிறிய யாழைத் தளர்ந்த நெஞ்சத்துடனே ஒரு மருங்கிலே அணைத்துக்கொண்டு, புகழ்தற்கமைந்த தலைமையையுடைய நினது புகழை நினைந்து வந்தேன் யான் ; இறைவா, யான் வேண்டியது யானையுமன்று : குதிரையுமன்று; குதிரையிற் பூட்டப்பட்ட தேருமன்று: யான் வந்த காரணம் நின்னைக் கண்டு மகிழ்வதே. பகை வரது மிக்க மாறுபாட்டை வென்ற வலியையும் யாவ ரும் ஒப்பப் புகழும் நாட்டையும் உடையாய், பாண ரும், புலவரும், கூத்தர் முதலாயினோரும், உன் செல்வங் களை உரிமையால் தம்முடைய பொருளென வளைத்துக் கொள்வாராயின், அவற்றை 'எம்முடையன' என்று அவரிடத்தினின்றும் மீண்டுங் கைக்கொள்ளுதலைக் கரு தாமல், பயன் பொருந்திய அன்புரிமையோடு கூடும்

தன்மையவாக நின் வாழ்நாட்கள்,'' என்று தாம் வந்ததற்குக் காரணம் கூறி, அவனது நாகரிகக் கொடையைப் புகழ்ந்து வாழ்த்தினார்.

இதனைக் கேட்ட வள்ளல் பெருமானாகிய ஆய், புலவரது திருந்திய புலமைத் திறத்தையும், பொருந்திய பெருங்குணத்தையும் தனது கூரிய மதியால் மதித்து உவந்து, புலவர் மறுத்தனரேனும், வலிந்து அவர்க்குப் புரவியும் களிறும் தேருமாகிய பெருஞ்செல்வங்களைப் பரிசிலாக வழங்கி, பாரி கபிலர் பெருமானையும், அதியமான் ஔவைப் பிராட்டியாரையும் தம் உரிமை நட்பினராய்க் கொண்டது போல மோசியாரைத் தன் ஆருயிர் நண்பராய்க் கொண்டொழுகித் தன் அவைக்களத்துப் புலவர்க்குத் தலைவராக்கிக்கொண்டான். புலவர் ஆயுடன் இடையறாது பழகி, அவனது அன்பு, அருள், பொறை, தேற்றம், சால்பு முதலான பெருங்குணக் கடலுள் மூழ்கித் திளைத்துத் தாம் கொடைமடத் தண்ணளியோனாகிய ஆயை முன்னரே வந்து கண்டு அவனது நண்பின் பயனை நுகராது வாளா கழிந்தமைக்கு இரங்கியும், அவனைக் காணாத முன்னரெல்லாம் ஏனையோரது சிறிய புகழைக் கண்டும் கேட்டும் நினைந்தும் பாடிப்போந்தமைக்கு வருந்தியும்,

'முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளி னேனே !
ஆழ்கென் னுள்ளம் ! போழ்கென் னாவே !
பாழூர்க் கிணற்றின் தூர்கவென் செவியே!'

.... ... ... .... ... ....

எனப் பாடிப் பிறரைக் கருதிய தம் உள்ளத்தையும், பிறர் புகழைப் பாடிய தம் நாவையும், பிறர் இசையைக் கேட்ட தம் செவியையும் இழித்துக் கூறுவதன் மூலம் ஆயின் ஒப்பற்ற புகழ்க்குணத் திறனைப் புகழ்ந்து,

அதனேடமையாது,

.... .... .... .... ... ...

'வடதிசை யதுவே வான்ரேய் இமயம்;
தென்றிசை ஆஅய் குடியின் ருயின்
பிறழ்வது மன்ேேறவிம் மலர்தலை யுலகே.',

என்று ஆயின் ஆய் குடியை இமயத்தோடு ஒப்பித்து. அதன் மூலம் உலகத்துக்காதாரமான அவனது பேருபகார குணத்தை வியந்துரைத்தார். பின்பொருகால், "ஊர்ப் பொதுமன்றத்திலுள்ள பலா மரத்தின் கிளைகளில் வாழும் மந்திகள், அக்கிளைகளில் பரிசிலரால் தூக்கி வைக்கப்பட்ட மத்தளத்தினது கண் புறத்தைப் பலாப் பழமென்று கருதித் தட்டியவிடத்து, அதன்கண் வாழும் அன்னச் சேவல்கள் அஞ்சி, அவ்வோசைக்கு மாருக எழுந்தொலிக்கும் ஆயது பொதியின்மலை, ஆடச் செல்லும் மகள் அணுகின் அல்லது பெருமை பொருந்திய அரசரணுகுதல் அரிது," என்ற கருத்தமைத்து,

'மன்றப் பலவின் மாச்சினை மந்தி
இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடின் தெண்கண் கனிசெத் தடிப்பின்
அன்னச் சேவல் மாறெழுந் தாலும்
கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
ஆடுமகள் குறுகி னல்லது
பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே!'

என்று கூறி, ஆயின் கொடைச் சிறப்பையும், இரவலர்க் கெளியனுய்ப் புரவலர்க்கரியனுய் இருக்குந் தன்மையையும் வெளிப்படுத்தார். மற்றும் புலவர், ஆயின் அருகுணங்கள் தம் போன்ற புலவர் பெருமக்களது உள்ளத்தை நன்கு பிணித்துவிட்டமைபற்றி, ஆயை நோக்கி "புலவர் புகலிடமாகிய நீ இல்லாத உலகத்துப் புலவர்

வாழாதிருக்கக் கடவர்," எனவும், "பெரிதும் புகழ்ந்தாலும் சிறிதும் அதனை உணரமாட்டாத பெருமையில்லாது போகிய செல்வத்தையுடைய அரசரை எம்மவர் பாடார்," எனவும் கொண்டு,

.... .... .... ...

'நின்இன்று வறுவி தாகிய உலகத்து
நிலவன் மாரோ புரவலர்; துன்னிப்
பெரிய வோதினும் சிறிய உணராப்
பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே.'

என்ற பாடலைக் கூறி ஆய், புலவரது புகழ்ச்சிக்குரிமை பூண்டு அவர்க்குக் களைகணாய் நின்று நிலவுந் தன்மையைப் பாராட்டினர்.

பின்பொரு முறை, "இவ்வுலகில் இப்பிறப்பில் அறங்கள் செய்யின், அவைகள் மறு பிறப்பிற்கு உதவுமென்று கருதிப் பொருளை விலையாகக் கொடுத்து அதற்கீடாக அறத்தைக் கொள்ளும் தரும வியாபாரி அல்லன் ஆய்; அவனது கொடை, 'சான்றோர் சென்ற வழி,' என்று உலகத்தோர் கருதும்படி அந்த நற்செய்கையளவிற் பொருந்தியது," எனக் கொண்டு, அவனது பயன் கருதாத கொடைத் தூய்மையை,

'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன்; 'பிறரும்
சான்றோர் சென்ற நெறி'என
ஆங்குப் பட்டன்(று) அவன்கை வண்மையே.

என்ற அழகிய சிறு யாப்பில் பொதிந்து வைத்துப் புகழ்ந்தார். பின்னரும்,

... .... .... ... ... ....

'சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை

விடர்முகை யடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்
புகர்முக வேழத்து மருப்பொடு மூன்றும்
இருங்கேழ் வயப்புலி வரியதள் குவைஇ
விருந்திறை நல்கு நாடன் எங்கோன்
கழல்தொடி ஆஅய் அண்டிரன் போல
வண்மையும் உடையையோ ஞாயிறு!
கொன்விளங் குதியால் விசும்பி னானே."

என்று, ஆய் புலித்தோலை விரித்து அதில் வேட்டையாற் பெற்ற முள்ளம்பன்றியின் தசை, சந்தனக் குறடு, யானை மருப்பு ஆகிய இவற்றைக்குவித்துப் பரிசிலர்க்குக்கொடுக்கும் கொடைச் சிறப்பையும் வெளிப்படுத்தி, அதனால் அவன் ஞாயிற்று மண்டிலத்தினும் சிறப்புற்று விளங்குந் தன்மையைப் பாராட்டிப் பூவை நிலை பாடினார்.

இங்ஙனம் ஆயின் அருங்குணத்தில் ஈடுபட்டிருந்த மோசியார், ஒருநாள் பொதியமாமலைக் காட்டின் வழியாய்ச் சென்று, ஆண்டுக் காணப்படுகின்ற இயற்கை வனப்புக்களில் தமது உள்ளத்தைப் பதித்து வருகின்றவர், ஆங்கு எண்ணிறந்த யானைகள் கூட்டங்கூட்டமாய்க் களித்துத் தம்மினங்களோடு வாழ்வதைக் கண்டார். காணலும், மோசியாருக்கு ஆய் புலவர்க்களிக்கும் வரம்பற்ற யானைக் கொடை நினைவிற்கு வந்தது; வரலும், "யானைகளை மிகுதியாகவுடைய இக்காடு இவ் யானைகளையெல்லாம் ஆய் அண்டிரனது மலையைப்பாடிப் பரிசிலாகப் பெற்றனவோ!" என்னுங் கருத்துப்பெற,

'மழைக்கணஞ் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையஇக் கவின்பெறு காடே!'

என்று தமதுள்ளத்தில் தானே சுரந்தெழுந்த கொழுவிய பாடலைக் கூறி, ஆய் நாட்டினது யானைச் செல்வ மிகுதி

யையும் அவனது கொடையின் தகுதியையும் புகழ்ந்து மகிழ்ந்தார்.

பின்பொரு நாள் புலவர், "குறுகிய இறப்புக்களை யுடைய சிறிய வீடுகளில் வாழும் குறவர்கள், மூங்கிற் குழாய்களில் வார்த்து வைத்து முதிர்ந்த மதுவை உண்டு, வேங்கை மரத்தையுடைய முற்றங்களில் குரவைக் கூத்தாடும் பெரிய மலையையுடையோனாகிய ஆய் அண்டிரன் இரப்போர்க்குக் கொடுக்கும் யானைத் தொகைக்கு, ஆகாயம் மேகம் மறைத்தலின்றிப் பல நட்சத்திரங்களை யும் பூக்குமாயினும் சமமாகாது; அது கரிய இடம் சிறிது மில்லாது எல்லா இடமும் வெண்மையாய் நட்சத்திரங் களைப் பூத்து வெண்மை செய்யுமாயின், அதற்கு ஈடாகும்," எனவும்; "ஆயே, உன்னையும் உன் மலையையும் பாடி வரும் பரிசிலர்க்கு நீ இன்முகத்தோடு விரும்பிக் கொடுக்கும் சிறந்த யானைகளை எண்ணின், நீ கொங்கரை மேற்கடற்கண்ணே ஓட்டிய நாளில் அவர் புறங் கொடுத்து ஓடும்போது போட்டுவிட்டுப் போன வேலினும் பலவாயிருக்கின்றனவே! ஆகையால், நீ இங்ஙனம் வழங்குதற்கு உன் நாட்டில் ஒரு பெண் யானை ஒரு கர்ப் பத்தில் பத்துக் கன்றுகளைப் பெறுமோதான்!" எனவும் கூறி, அவனது வரம்பற்ற யானைக் கொடையையும், வென்றி மேம்பாட்டையும் வியந்தார்.

மற்றுமொருகால் மோசியார், ஆடல் பாடல்களிற் சிறந்த ஒரு விறலியைக் கண்டு, "மெல்லியல் விறலி, நீ ஆயின் நல்ல புகழைச் செவியாற்கேட்டலன்றி, அவன் வடிவை நேரிற்கண்டறியாய்; காணுதற்கு விரும்புவை யாயின், உனது நறுமணமிக்க கொண்டைமேல் காற்றடிக்க இனிதாய்ப் பீலி மயில் போல நடந்து, மாரியன்ன வண்மையையுடைய ஆயைக்காணற்குச் செல்வாயாக,"

என ஆற்றுப்படுக்கு முகத்தான் ஆயின் கைம்மாறு கருதாத மாரியனைய வரையா வள்ளன்மையை வியந்து கூறினார்.

இங்ஙனமாகப் புலவரது உள்ளத்தை ஆயின் நற்குண நற்செயல்கள் இறுகப் பிணித்துவிட்டமையான், அவனை விட்டகலாமல், அவனது படை மடம் படாத வீரத்தையும், கொடை மடம் பட்ட தண்ணளியையும், ஏனைய இன்குணங்களையும் தமது வாய்மை மிக்க தூய்மை மொழியாற் பல படப் புகழ்ந்து போற்றி, ஆய் குடிக்கண் பன்னாள் வாழ்ந்திருந்தனர்.

ஆய், தன்னகத்து வரும் புலவர், பாணர், கூத்தர் முதலியோர்க்கு யானை, குதிரை, தேர் முதலியவற்றையும், ஏனைய வாரியனைய செல்வங்களையும் ஓயாது வாரி வாரி அளித்து வந்தான். கொடை மடம் பூண்டு அவன் இங்ஙனம் கொடுத்து வந்தமையால், அவனது குன்றனைய செல்வங்கள் சிறிது சிறிதாய்க் குன்றத் தலைப்பட்டன. வறுமைக் கடல் அவனை வளைப்பதற்கு அற்றம் நோக்கி நின்றது. அக்காலத்தும் அவன் கொடைக் கடம் பூண்ட தன் நிலையிற்றளராது, தன்னகத்து எஞ்சியிருந்தவற்றையும் விஞ்சிய உவகையோடு அளித்து வந்தான். இவ்வாறு எல்லாவற்றையும் இரப்போர்க்கீந்து செல்வம் ஒன்றுமில்லாதொழியவே, தன் மனைவியருடைய அணிகலன்களுள் மங்கிலிய சூத்திரம் ஒழிய, ஏனைய அணிகலன்கள் அனைத்தையும் பரிசிலர்க்கு வழங்கிவிட்டுப் பொருட்செல்வம் நீங்கிப் புகழ்ச் செல்வமோங்கித் தன் நிலையிற்றுழாது நின்றான். ஆய் நிழலில்லாத நீண்ட அருஞ்சுரத்து நிழல்மிக்க தனிமரம்போல நின்று, தன்னை அடைந்த அறிஞர், மடவர், வலியர், மெலியர் யாவர்க்கும் இன்னருள் சுரந்து ஈந்து, முடியுடையவேந்தர் மூவரி

னும் பன்மடங்கு புகழ்வினைத்துப் பின்னர் வறுமையுற்ற காலத்தும், மோசியார், செல்வக் காலை சேர்ந்து அல்லற் காலை அகன்றுவிடும் புல்லியர் போலாது, அவனை விட்டக லாமல் உடன் உறைந்து, அவனது இன்பினும் துன்பி னும் பங்கு பெற்றிருந்தவர், முன்னர்ப் பெருஞ்செல்வத் தோடு பொலிந்து விளங்கிய ஆய் அரண்மனை பின்னர் அவையின்றித் தோன்றுவதைக் கண்ட பிறர் பலவாறு கருதுவதை அறிந்து, அவர்கட்கு, "ஆயது அரண்மனை பொருள் ஒன்றுமின்றி வறுமையை அடைந்ததேனும், ஒப்புரவால் வந்த அஃது, ஒப்பரிய செல்வமேயன்றி வறு மையன்று," என்ற உண்மையை அறிவிக்கக் கருதி, "களாப்பழம் போலும் கோட்டையுடைய யாழைக் கொண்டு பாடும் பாட்டை வல்ல பாணர் பரிசில் பெற் றுக்கொண்டு போனாராக, களிறுகள் இல்லையாகிப் பொலிவழிந்த கட்டுத்தறியின்கண்ணே காட்டு மயில் கள் தத்தம் இனத்தோடுதங்க, கொடுத்தற்கரியமங்கிலிய சூத்திரமன்றிப் பிறிதோரணிகலமுமில்லாத மகளிரு டனே பொலிவழிந்து சாய்ந்ததென்று சொல்லுவார்கள், ஆயுடைய கோயிலை; இனிய தாளிப்பையுடைய அடி சிலைப் பிறர்க்கு உதவலின்றித் தம்முடைய வயிற்றையே நிறைத்துச் சிறந்த புகழை நீங்கிய பெருஞ்செல்வத்தை யுடைய அரசர் கோயில் இந்த ஆய்கோயிலைக் சிறிதும் ஒவ்வாது," என்னும் பொருளமைய,

'களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளில்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப
ஈகை யரிய இழையணி மகளிரொடு
சாயின் றென்ப ஆஅய் கோயில்

சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசா லோங்குபுகழ் ஒரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே.'

என்ற பாடலைத் தம் செந்நாவினின்றும் வெளிப்படுத்தினர். இவ்வமயத்து ஆய், தனது வறுமையாகிய அளவுகோலால் புலவரது நண்பு முதிர்ந்த அகத்தின் அகற்சியை நீட்டி அளந்து, வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே கொண்டான். இங்ஙனம் புலவரும் வள்ளலும் பன்னாள் கெழுதகைமை மிக்க உள்ளத்தராய் ஒழுகி வந்தனர்.

இவ்வாறு இவர்கள் ஒழுகி வரும் நாளில், தனது மேருவனைய செல்வங்களையெல்லாம் கற்பகத்தாருபோல வழங்கிப் பின்னர்ப் பிறர்க்கு நல்கத் தனது புண்ணியம் பழுத்தொளிரும் பொன்னுடம்பன்றிவேறொன்றுமின்றி நின்ற வள்ளியோனது வாழ்நாள் உலந்தமையால், ஒரு நாள் காலன் என்னும் கண்ணிலி வந்து அவனைக் கவர்ந்து கொண்டான். மண்ணினர் கண் மாரி பொழிந்து மயங்கினர்; இரவலர் இரங்கிக் கலுழ்ந்தனர். இவர்கள் இங்ஙனம் ஆயின், ஆயின் உழுவலன்புக்குரிய மோசியாரடைந்த மன மறுக்கத்தை அளந்துரைப்பதெங்ஙனம்! புலவர் பலவாறு புலம்பி, அலமந்தார். ஆயை முறைப்படி கொணர்ந்து, ஈமத்தேற்றி, எரி கொளுவினர். அவன் மனைவியர், கொழுநனுடன் துறக்கம் புகுதற்குத் தீப்பாய்ந்து உயிர் நீத்தனர். அவ்வளவில் ஆகாயத்தில் பெருமுழக்கமொன்று கேட்டது. அதன் உண்மையை அறிந்த புலவர், "திண்ணிய தேர்கள் பலவற்றை இரப்போர்க்கீந்த குளிர்ந்த பூ மாலையையுடைய ஆய் வருகின்றானென்று கருதி, தொடியினையும் வச்சிராயுதத்தையுமுடைய கையையுடைய இந்திரனது கோயிலி

னுள்ள முரசம் முழங்க வானத்தில் ஓர் ஆரவாரம் எழுந்தது! இப்பெற்றிப்பட்ட வள்ளியோனைத் தேவர்கள் எதிர் கோடல் தப்பாது!" என்று பொருள்படும்,

'திண்டேர் இரவலர்க் கீத்த தண்டார்
அண்டிரன் வருஉ மென்ன ஒண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்
போர்ப்புறு முரசங் கறங்க
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே!"

என்ற கையறுநிலை பாடிக் கையாறெய்தினர். எய்திய புலவர், ஆயின் பூத உடம்பு மறையினும் புகழுடம்பு பார்க்குமிடந்தோறும் விளங்கித் தோன்றுதலால், ஒருவாறு தேறி, ஆய் குடிக்கண் சில நாள் வதிந்திருந்து, தம் ஆருயிர் நண்பனாகிய ஆயின் உத்தமகுணங்கள் வேறொருவர்பாலும் காணப்படாமையின், ஏனை அரசரைக் கண்டு பாட மனங்கொள்ளாது, ஆயுடைய அன்பும், அருளும், நிறையும் முதலான குணங்களை நினைந்து நினைந்து இனைந்தும், "பசைந்தாரிற் றீர்தலில் தீப்புகுதல் நன்று," என்றபடி, ஆய் இறந்த பின்னரும் தாம் உயிர்ப்பொறை கொண்டிருப்பதற்கு நாணியும், அவண் விட்டகன்று, தம்மூர் சென்று, ஆயை நினையாமல் நினைந்திருந்து, பின்பொரு நாள் நாமகள் தலை விரித்திரங்கப் பூமகள் அலமந்து புலம்ப, தம் நண்பன் ஆய் சென்ற பொன்னுலகம் போய்ப் புகுந்தார்.

## ஆராய்ச்சி :

பெயர் : இவரது பெயராகிய முடமோசியார் என்பது இவர்க்கு வடிவு பற்றியும், பிறந்த ஊர் பற்றியும் வழங்கியதாகும். 'உறையூர் ஏணிச்சேரி' என்ற அடை இவர் அங்குப் பன்னாள் வதிந்தமையைப் புலப்படுத்த வந்தது. எனவே, இவரது இயற்பெயர் வேறு தல்

வேண்டும். இவர் பெயர் 'மோசியார்' எனவும் 'மோசி' எனவும் குறைந்தும் வழங்கப்பெறும். 'உறையூர் ஏணிச் சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டு, மோசியார் என் பதை இவரது இயற்பெயரென்னலாமோ?' எனின், மோசி கொற்றனார், மோசி சாத்தனார், மோசி கீரனார், மோசி கண்ணத்தனார் என்ற பழைய புலவர் பெயர் வழக்கில் இப்பெயர் இயற்பெயரின் வேறாகக் கொண்டு வழங்கப்பெறுதலால், இதனை இயற்பெயரென்னாது இடப்பெயரென்பதே பொருந்துவதாகும். 'மோசி' என் பது 'மோசி குடி' என்ற பெயரின் சுருக்கம்.

குலம் : இவர் பிறந்த குலம் அந்தணர் குலமென் பது, தொல்காப்பிய மரபியல் 74-ஆம் சூத்திரவுரையில், "உறையூர் ஏணிச்சேரி முடமோசி அந்தணர்க்குரியது," எனப் பேராசிரியர் உரைத்திருப்பதால் அறியப்படுகின் றது. அங்ஙனம் அப்பெரியார் கூறுதற்கு அவர் காலத் துச் சிறந்த சான்று இருந்ததாதல் வேண்டுமென்பது துணிபு. 'மோசியார் ஆயைப் பாடிய 135-ஆம் புறப் பாட்டில் தம்மைப் பாணர் மரபினராகக் கருதும் வண் ணம் கூறியிருத்தலால், இவர் பாணர் மரபினர் ஆகாரோ?' எனின், புலவர் முதலியோர் தம்மை அரசர் களால் பெரிதும் விரும்பப்படும் பாணர் கூத்தர் போல வைத்துக்கூறிச் செய்யுள் செய்தல் அக்காலத்து மரபாக லின், ஆகாரென்க. அங்ஙனமே சோழன் குளமுற்றத் துத் துஞ்சிய கிள்ளி வளவன், பண்ணனைப் பாடிய 176-ஆம் புறப்பாட்டில் தன்னைப் பாணனாகக் கூறிக் கொள்வதையும், கபிலர் முதலிய புலவர் பெருமக்களும் தத்தம் புறப்பாடலுள் இங்ஙனமே கூறியிருத்தலையும் சண்டைக்கு நோக்கிக்கொள்க.

கொள்கை : இவருடைய பாடல்களிலிருந்தேனும்

ஏனைய சான்று கொண்டேனும், இவர் இன்ன கொள்கையினரென முடிவாகக் கூறுதற்கு இடமொன்று மில்லை. இவர், இம்மை அறத்தால் மறுமைப்பயன் நுகர்தலையும், மறுபிறப்பு உண்டென்பதையும் நம்பியவரென்பதை இவர் பாடல் உணர்த்துவதால், பொதுவாக மறை நெறிப்பட்ட கொள்கையினர் என்பது மாத்திரம் அறியப்படும். இந்திரன் என்னும் தெய்வப் பெயர் இவர் வாக்கில் பயின்றுள்ளது (புறம்-241). இவர் நண்பனாகிய ஆய், சிவபெருமான்மீது பத்தி மிக்கவன் என்பது, 'சிறுபாணாற்றுப்படை'யால்[1] அறியப்படுகின்றது.

ஊர் : மோசிகுடி எனும் பெயரிய ஊர் ஒன்றும் மோசிப்பட்டி எனும் பெயரிய ஊர் ஒன்றும் பாண்டி மண்டலத்தில் சேதுநாட்டின் பகுதியில் மதுரை நகர்க்குக் கிழக்குத் திசையில் 5 காத தூரத்தில் அடுத்தடுத்துள்ளன. பாண்டி நாட்டின் தென்பகுதியில் வாழ்ந்திருந்த ஆயுடன் நட்புப் பூண்டு நெடுநாள் அவனுடன் உறைந்திருந்த புலவரது ஊர் பாண்டி நாட்டகத்ததென்பதே பொருத்தமாகத் தோற்றுகின்றபடியால், பாண்டி நாட்டிலுள்ள இவ்வூரே இவரது பிறப்பிடமாக ஊகித்துக்கொள்ளப்பட்டது. இவ்வூர் பல நல்லிசைப் புலவர்கள் தோன்றுதற்கு நிலைக்களனாய் இருந்ததென்பது முன்னரே காட்டப்பட்டது. பழைய புலவர்களுள் சிலர் ஊர்களாக அறியப்படும் படுமாற்றூர், ஒக்கூர், மாங்குடி முதலிய ஊர்களும் இவ்வூர்க்குச் சிறிது சிறிது தூரத்துள் அமைந்துள்ளமை ஈண்டு அறியத் தக்கது. "ஊரும் பேரும்" என்ற தொல்காப்பிய மரபியற்

1. சிறுபாண். அடி, 95–99.

சூத்திரத்தில், பேராசிரியர் 'ஊரும்' என்பதற்குப் 'பிறந்த ஊரும்' எனப் பொருள் கண்டு, உறையூர் ஏணிச்சேரியை மோசியார் பிறந்த ஊராகக் கொள்ளும் வண்ணம் காட்டியுள்ளார்; அங்ஙனமாயின், பல புலவர் களுக்கு அவர்தம் இயற்பெயருடன் புணர்த்துக் கூறப் படும் 'மோசி'[1] என்பது ஒரு குடியின் பெயராகவேனும் மற்றெதுபற்றியேனும் வழங்கியதாகல் வேண்டும். இதன் உண்மை காணும் வரை மேற்காட்டிய கொள் கையை மேற்கொள்வது தவறுடையதாகாது. இவர் பழகிய இடங்கள் உறையூர், கருவூர், ஆய் குடி, பொதிய மலை முதலியனவாம்.

பெருமை: புறநானூற்றில் காணப்படும் இவ ருடைய பாடல்களே இவரது பெருமை இனைத்தெனப் புலப்படுத்தற்குப் போதுமானவை. இவர் முடவரே எனினும், சேர சோழ பாண்டிநாடு எனும் தமிழ் நாடு முழுதுஞ் சஞ்சரித்த உலையா முயற்சித் திறம் பெற்ற உரனுடையாளர்: அம்மூன்று நாட்டினும் தம் பெயர் நிறுவிய தகைமையாளர். சோழன் கோப்பெருநற்கிள்ளி, கருவூர்ப் புறத்துக் களிறூர்ந்து வரச் சேரமான் அவன் வரும் காரணம் அறியாது அதனையறியப் புலவரை வினு விய காலத்து, இவர் அவ்வுண்மையை உடனே அறிந்து, அரசனுக்கறிவித்து, அவனது மாறுபாட்டையும் ஐயத் தையும் மாற்றினர் என்பதறிய, இவரது காலதேசவியல் புகள் கடந்த பொருள்களையெல்லாம் அறியும் கூரிய மதி வன்மை அளத்தற்கரியதென்பது உணரப்படும். இவ்வா லாற்றுலே இவர் செந்தமிழ்ப் புலமை செய்விதின் வாய்க் கப் பெற்றவரேயன்றி, அரசர்க்கு அமைச்சுரிமை பூண்

1. இதனை, அகநானூறு, நற்றிணை இவற்றின் பதிப் பாசிரியர்கள், ஊரெனவே கொண்டார்கள்.

டொழுகுதற்கேற்ற உலகியலறிவும், அரசியலறிவும் சாலப்படைத்தவரென்பதும் விளங்கும். சேரல், புலவர் கூறியதை உண்மையெனத் தேறி, வெகுளி நீங்கினனென்றால், இவர்பால் அரசர்கட்கிருந்த பெருமதிப்பு இனைத்தென மதிக்குந்தரத்ததோ! சோழனுக்கு அவன் பகைவனாகிய அந்துவஞ்சேரலாலும், ஊர்ந்து வந்த மத யானையாலும் இடையூறு ஒன்றும் நிகழ்ந்துவிடாது இனிது செல்வானாக எனத் தம் பழைய நண்பனும், சேரனுக்குப் பகைவனுமாகிய சோழனைச் சேரனிடத் திருந்துகொண்டே வாழ்த்திய வாழ்த்துரையினால், புலவர், பேரருள், நடுவு நிலைமை, நன்றியறிதல், உண்மை நெறியில் அரசர்க்கு அஞ்சாமை முதலிய குணப் பெருமைகளைத் தமக்கே உரிமையாக்கிக்கொண்ட சான்றோர் என்பது நன்கு தேறப்படுகின்றது. தாம் பழகிய அரசர் யாவரினும் விழுமிய குணமுடையவன் ஆய் என்பதனை அவனைக் கண்டு அறிந்த பின்னர், தாம் முன்பு சிறிய புகழையும் குணத்தையுமுடைய அரசரைப்பாடியதற்கு வருந்தித் தம்மையே வெறுத்துக் கூறி, ஆய் என்னும், வள்ளலுடைய குணங்களில் ஈடுபட்டுத் தமது அரிய பாடல்களையெல்லாம் அவனுக்கே உரிமை செய்ததி லிருந்து புலவர் பரிசில் கருதி எவரையும் இல்லது புனைந்து தம் நாக்கொண்டு பாடத் துணியாத தூய்மை மிக்க வாய்மையாளர் என்பதும், உத்தமர் கூட்டுறவில் விருப்பும் உவப்புமுடையவர் என்பதும் பெறப்படும்.

ஆயுடன் நட்புப் பூண்டு அவனது வரம்பற்ற செல்வத்தின் பயனை நன்கு நுகர்ந்திருந்த புலவர், அவன் வறுமை மிக்க காலத்தும் அகலாது, அத்துன்பத்தை அவன் இறக்கும் வரை உடனிருந்தனுபவித்து, ஆயின் வள்ளன்மையை உள்ளன்பு கனியப் புகழ்ந்து பாடிய

திறங்களால் இவர் நட்பின் கெழுதகைமைக்கே ஒரு பேரி லக்காய்த் திகழ்ந்தவரென்னலாம். ஆயின் அறஞ்செய் கருத்தை விரித்துரைத்திருப்பது கொண்டு, இவரது தரும குண இயல்புகள் இத்தன்மையவாமென அறியப் படும். இவர் உலக இயற்கை வனப்பின் திறங்களை ஊன்றி நோக்கி இன்புறும் பெற்றியுடையாரென்பது, காடுகளையும், மலைகளையும், ஏனையவற்றையும் இவர் வருணித்துச் செல்வதிலிருந்து தெளியப்படுகின்றது. நம் புலவர் சிகாமணியாகிய மோசியாருக்குச் சிறிது பிற்கா லத்திருந்த பெருஞ்சித்திரனார் என்னும் நல்லிசைப் புல வர் குமணனைப் பாடிய 158-ஆம் புறப்பாட்டில் ஆயைப் புகழுமிடத்து, 'மோசி பாடிய ஆயும்' என, ஆயின் புகழ் மேன்மைக்கு மோசியாற்பாடப்பெற்றதே பெருஞ் சான்றும் என்பது படக் கிளந்து கூறி, இவரது வாய் கொண்டு பாடப்பெறுதலிலுள்ள அருமை பெருமை களை வியந்தனரென்றால், மன்னரும் புலவரும் போற்றும் இவரது அறிவு குணம் முதலியவற்றின் பெருமைகளை நாம் விரித்துரைப்பது எங்ஙனம்!

காலம்: இவர் சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி, சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை, வேள் ஆய் எனும் மூவரையும் பாடியிருத்தலான், இவ் வரசர்களது காலமே இப்புலவரது காலமுமாகும். இவர் களுள் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையென் பான், பதிற்றுப் பத்து 7-ஆம் பத்துக்குரிய செல்வக் கடுங்கோ வாழியாதனுக்குத் தந்தையென்பது, அப்பத் தின் பதிகத்தால் அறியப்படுகின்றது. அச்செல்வக் கடுங்கோவை அவ் வேழாம் பத்தாலும் எட்டாம் புறப் பாட்டாலும் பாடியவர் கபிலர். கபிலர் இவனைப் பாடிய காலத்தில் மிக முதியவராய் இருந்தவரா

தல் வேண்டுமென்பது வேறு காரணங்களால்[1] அறியப் படுகிறது. அங்ஙனமாகவே, மோசியாரும், கபிலரும், கபிலர் தோழரும் ஆயைப்[2] பாடியவருமாகிய பரண ரும் ஒரு காலத்தவராதல் பெறப்படும். கபில பரணரது காலம் கி-பி. 60 முதல், கி-பி. 150 வரை என்று சிலப் பதிகாரம்,[3] பதிற்றுப் பத்து முதலிய தொன்னூல் களின் தக்க சான்று கொண்டு நிறுவப்படுமாகலான், நம் மோசியாரது காலமும் அஃதேயாதல் அமையும்.

இவர் காலம் இதுவாகக் கொள்ளுதற்கு மற்றொரு சான்றும் உளது: கிறிஸ்து பிறந்த நூற்று முப்பத் தொன்பதாம் ஆண்டிலிருந்த தாலமி (Ptolemy) என் னும் மேற்றிசையவனுசிரியர் நம் பரத கண்டம் முழு தும் யாத்திரை செய்து, அக்காலத்துப் பூமியினியல்பு களையும், அரசியல் நிலைகளையும் பற்றித் தாமெழுதியுள்ள பூகோள நூலில் தென்னாட்டு வரலாறுகளையும், தமிழ் நாடு கிரேக்க தேசத்தோடு செய்த வாணிகச் செய்தி களையும், அவ்வாணிகங்கள் நடப்பதற்குச் சாதனமான தொண்டி, முசிறி, கொற்கை முதலிய துறைமுகப் பட் டினங்களையும் குறித்துள்ளார்; அப்பகுதியில் நம்மோசி யாரின் ஆருயிர் நண்பனாகிய ஆய்வேளது[4] நாட்டையும்,

---

1. கபிலர் தோழர் பரணர், கபிலரால் பாடப்பெற்ற செல்வக்கடுங்கோவுக்கு 40-50 ஆண்டுகட்கு முன்னிருந்த கரிகாலன் தந்தை முதலியோரைப் பாடியிருத்தல் முதலி யன.

2. அகம். 198.

3. சிலப்பதிகார காலத்தைக் கோவூர் கிழார் கால ஆராய்ச்சியிற்காண்க.

4. ஆய் ஆண்ட நாட்டின் எல்லையை இக்காலத்து மலையாளத்திலுள்ள கோட்டயத்திலிருந்து கோட்டாறு, பொதியமலை வரையிலுங் கொண்டு முடிப்பர் சரித்திர அறிஞர்.

அதனுள் ஐந்து துறைமுகங்களையும் குறித்துள்ளார். இதனால், ஆய், இந்த யவனுசிரியர் தமிழ்நாடு வந்த காலத்தில் விளங்கியிருந்தவனுதல் பெறப்படும்; பெறப்படவே, நம் புலவர் காலம் கி. பி. 150க்கு முன்னென்று கொண்ட கொள்கை வலியுறுதல் காண்க.

இவர் காலத்து வேறு புலவர்கள்: ஆயைப் புறத்திற்பாடிய ஓடை கிழார், குட்டுவன் கீரனுர், அவனைக்குறுந்தொகையிற் பாடிய மோசிகீரனுர், அகத்திற் பாடிய உமட்டூர் கிழார் மகனுர் பரங்கொற்றனுர், பாணர் முதலியோர் இவர் காலத்திருந்தவராவர்.

இவராற்பாடப்பட்டோர், சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை, ஆய் அண்டிரன் என்போர். 'ஆய் எயினன்' எனச் சேரன் படைத்தலைவன் ஒருவனுளனுகலின், அவனின் இந்த ஆயை வேருக விளங்க வைத்தற்குப் பல்லிடத்தும் புலவர் இவனை ஆய் அண்டிரன் எனவே கூறுவர். அண்டிரன் என்னும் பெயர் ஆந்திரன் என்னும் தெலுங்கச் சொல்லின் திரிபு என்பர் சிலர். வேறு சிலர் பிறவாறுங் கூறுப.

## பாட்டுக்களின் ஆராய்ச்சி:

புறநானூற்றில் 13, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 135, 141, 374, 375 எண்ணமைந்த பதின்மூன்று பாட்டுக்களும் இவரால் பாடப்பெற்றவை. ஏனைத் தொகை நூல்களுள் இவரது பாடல் காணப்படவில்லை. இவருடைய பாடல்களிற்பல, அடி அளவிற் குறைந்து, பொருளின் பெருமையில் நிறைந்து, அறிவாழம் மிகுந்து, ஆடிபோலச் சுருங்கிய சொற்களில் அகன்ற பொருள்களை அடக்கிக் காட்டி, அவ்வவ்வமயத்

திற்கேற்ற ஓசையொழுக்குத் தழுவிப் படிப்போர்க்கு உணர்வினை எழுப்பி மெய்ப்பாடு தோற்றுவிக்கும் நயப்பாடமைந்து திகழ்கின்றன. இந்தச் செவ்வியெல்லாம் ஒருங்கே கண்டு மகிழ இவர் பாடிய 13-ஆம் புறப்பாட்டாகிய 'இவனியா ரென்குவை யாயின்' என்னும் அரிய பாடல் ஒன்றுமே போதும். அறமே ஒருருவெடுத்து வந்தாலனைய ஆயைப் பாடுதற்குத் தொடங்கிய புலவர், தம் பாடல்களையெல்லாம் உபகார நெறியாகவே கொண்டுய்த்து முடித்துள்ள திறப்பாடு மிகவும் போற்றுந்தரத்தது.

'விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய்! நின்னூ
இளம்பிடி ஒருசூல் பத்தீ னும்மோ? [ட்(டு)
நின்னும்நின் மலையும் பாடி வருநர்க்(கு)
இன்முகங் கரவா துவந்துநீ அளித்த
அண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகடல் ஓட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே,'

என்ற பாட்டில் கொடைச் சிறப்பொடு வென்றிச் சிறப்பும் தோன்ற வைத்திருக்குஞ் 'சுருங்கச் சொல்லல்' என்னும் அழகும், யானைக் கொடை மிகுதியைப் புலப்படுத்த 'இளம்பிடி ஒருசூல் பத்தீ னும்மோ?' என்ற வடித்த சொல்லடியும் படிப்போர்க்கு உலையாவின்பம் பயப்பன.

'மழைக்கணஞ் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே!'

என்னுமிச்செய்யுள் இழுமென்னும் விழுமிய ஓசை தழுவிப் பெருங்கருத்தை ஒருங்கடக்கி விளங்குகின்றது.

இவர் பாடல்களுள் பதினைந்துக்கு உட்பட்ட உவ

மைகளே காணப்படுகின்றன. 13-ஆம் புறப்பாட்டில் வாளேந்திய மறவர்கள் புடை சூழ நடுவில் தலைமை தோன்ற விரைந்துவரும் மதயானைக்குச் சுறா மீன் பக்கத்தில் சூழ்ந்து வரக் கடல் நடுவிற் செல்லும் மரக்கலத்தையும் பல விண் மீனுக்கு நடுவே செல்லும் மதியத்தையும் உவமையாகக் கூறியிருப்பது புலவரின் ஆற்றலைப் புலப்படுத்தி, மனக்கருத்துக்கு மிகவும் பொருந்துவதாய்ச் சிறந்து விளங்குகின்றது. இஃதன்றியும், வண்மைக்கு மழையையும், யாழின் கரிய கோட்டுக்குக் களாப்பழத்தையும், பணையின் அரைக்கு மத்தளத்தையும், பணையின் மடலுக்கு அரத்தையும், விறலிக்குக் கலாப மயிலையும், பரிசிலர் கொடையுடையாரிடத்துச் செல்லுதற்கு மேகம் கடலை நோக்கிச் செல்வதையும், பயன் உவமை, உரு உவமை, தொழில் உவமைகளாக அமைத்துள்ளார். இங்ஙனம் கூறும் உவமையன்றி, ஏனைய வடநூல் அணிகள் இவருடைய பாடல்களில் காணப்பெறா. இதனால், எத்திற மாந்தருளத்தும் இயல்பாகவே சுரந்தெழுவது உவமம் ஒன்றுமே என்பது கொண்டும், பிற்காலத்துப் பெருக்கிக்கொண்ட ஏனைய அணிகளெல்லாம் இதனடியாகக் கிளைப்பனவென்பதறிந்தும், தமது 'தொல்காப்பியப் பெரும்பனுவலுள் உவம இலக்கணம் ஒன்றுமே கூறிப்போந்த ஆசிரியர் ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனாரின் ஆணை நெறி கடவாது நின்று பாடல் தரும் புலவரது உயரிய ஒழுகலாறு உய்த்துணரப்படும். இத்திறன், நல்லிசைப் புலவர் பாடலுக்கெல்லாம் ஒத்ததேயாம். 142-ஆம் புறப்பாட்டில், "நரந்தை முதலிய புல்லை மேய்ந்த கவரிமா, குவளைப்பைஞ்சுனையின் நீரை அருந்தி, அருகிலுள்ள தகர மரத்தினது நிழலில் தனது பெடையோடும் தங்குதற்கிடமான வானைத் தொடும்

இமயம்,'' என இமய வரையின் இயற்கையைப் புலப் படுத்தியிருப்பது இயற்கைக்சுவை பயக்கின்றது. 128-ஆம் புறப்பாட்டில் ஊர் நடுமன்றத்திலுள்ள பலா மரத்தின் கிளைகளில் (ஆயிடம் பரிசில் பெற வந்த) கூத்தர் முதலிய பரிசிலர் தூக்கி வைத்திருக்கும் மத்த ளங்களை அம்மரத்தில் வாழுங் குரங்குகள் பலாப் பழ மெனத் தட்டிப் பார்க்குமென்றும், அம்மரத்திலுறை யும் அன்னங்கள், தட்டுதலால் எழுந்த அவ்வோசைக்கு அஞ்சி, எழுந்து அதற்கு மாறுபட ஒலிக்குமென்றும் கூறியிருப்பவை முறையே நகைச் சுவை பயப்பதாயும் இயற்கை நவிற்சியாயுமுள்ளன. 134-ஆம் புறப்பாட் டடிகளான, "இம்மைச் செய்தது மறுமைக்காமெனும், அறவிலை வணிகன் ஆயலன்,'' என்ற இத்தொடக்கத்துப் பகுதி மறவாது உளங்கொளற்குரியது. இதனை உளங் கொளவே, "ஆற்றுநர்க்களிப்போர் அறவிலைபகர்வோர்'' என்ற மணிமேகலை அடி நினைவிற்கு வரும். புலவர் ஆயி டம் ஆற்றுப்படுக்கும் ஒரு விறலியை, 'வழியில் வருத்த மின்றி இனிதாய் விரைந்து செல்வாய்' என்பது தோன்ற, "நின், விரைவளர் கூந்தல் வரைவளி யுளரக் கலவ மஞ்ஞையிற் காண்வர வியலி,'' எனக் கூறியிருப்பது பொருட்சுவை முதிர்ந்து நகைச் சுவையும் ஊட்டுகின் றது. இதில், 'கொண்டைமேற் காற்றடிக்க' என்னும் உலக வழக்கு அமைந்துள்ளது நோக்கத் தக்கது. இப் பகுதியோடு, "அணிகிளர் கலாவம் ஐதுவிரித் தியலும், மணிபுரை யெருத்தின் மஞ்ஞை போல நின், வீபெய் கூந்தல் வீசுவளி யுளர, ஏகுதி மடந்தை,'' என்ற நற் றிணை 264-ஆம் பாட்டின் பகுதி சொல்லாலும் பொரு ளாலும் ஒற்றுமையுற்று விளங்குவது ஈண்டு அறிந்து இன்புறற்பாலது. ஒப்புரவு ஆற்றியதால் வந்த வறுமை

யினால் வெறுவிதாகிய ஆய் கோயிலை,

'சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசா லோங்குபுகழ் ஒரீஇய
முறைசு கெழு செல்வர் நகர்போ லாதே.'

எனச்சிறப்பித்த பகுதியானது,

'நறியன அயலவர் நாவி னீர்வர,
உறுபத நுங்கிய வொருவ னுகயான்!'

எனக் கம்பரும்,

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.'
'ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொரு
விற்றுக்கோட் டக்க துடைத்து.' [வன்

எனத் திருவள்ளுவரும்,

'செல்வரும் நல்கூர்ந்தார் ஈயா ரெனின்.'

என நாலடியுடையாரும் ஆண்டாண்டுக் கூறிப்போந்த அரிய நீதிகளையெல்லாம் தன்னகத்து ஒருங்கியுணரு மாறு ஒருங்கே கொண்டு விளங்கும் மாட்சியை என் னென்பேம்! இன்னும் இவர் பாடலுள் சிறுவர் புலிப் பல் தாலியை அணிதல், குறவர் குரவைக் கூத்தாடுதல், ஊர் நடு மன்றத்தில் பலா மரங்களை வைத்து வளர்த் தல், கள்ளை மூங்கிற் குழாய்களிற் பெய்து புளிப்பேற வைத்தல், புலித் தோலால் கவசம் செய்தல் முதலிய வழக்குக்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

# 3. கோவூர் கிழார்

'மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவரும் தழைத்தினி திருந்த
மையறு சோழ வளநாட் டின்கண்'

அதன் கண்போல விளங்கிய கோவூர் என்னும் ஊரிலே, இற்றைக்கு ஆரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் வேளாள குல திலகராய் விளங்கிய சான்றோர் ஒருவர்க்கு, அவரும் தமிழகமும் செய்த தவப் பெரும்பயனாய்க் கோவூர் கிழார் என்னும் இப்புலவர் பெருமான் தோன்றினார். இவரை மகவாகப் பெறும் தகவுடையரான தந்தையார், உரிய பருவத்தில் இவரைப் பள்ளிக்கு வைத்துக் கல்வி பயில்வித்தார். இவரும் நாடோறும் காலத்தே பள்ளிக்குச் சென்று, ஆசிரியரை அணுகி வழிபாடு செய்து, அவரது குறிப்பின் வழி ஒழுகி, மடி, தடுமாற்றம், மானம், மறதி இல்லாது, ஆசிரியர் 'இரு' என இருந்து, 'சொல்' எனச் சொல்லி, அவர் உரைப்பனவற்றையெல்லாம் விடாது உள்ளத்தில் அமைத்து, விடாய்த்தவர்க்கு நீரிலுள்ள வேட்கைபோலக் கல்வியில் வேட்கை மிகவுடையவராய்ப் பழம்பாடம் போற்றியும், தம்மொடு கற்கும்பிறரொடு வினவியும், அவர் வினவியதற்கு விடையிறுத்தும், தாம் கற்றவற்றைப் பிறர்க்கு எடுத்து அறிவுறுத்தியும், உத்தம மாணக்கர்க்குரிய குணங்கள் அத்தனையும் வாய்ந்து, இலக்கிய இலக்கணத் துறைகள் அனைத்திலும் சென்று, ஐயம் திரிபறக் கற்றார். இங்ஙு

னம் கற்க வேண்டிய நூல்களையெல்லாம் கற்றுப் புலத் துறை முற்றிய புலவர், சொற்சுவை பொருட்சுவை முதிர்ந்த கவிகள் இயற்றும் வன்மையுற்று, நல்லிசைப் புலவர் வரிசையில் வைத்துச் சொல்லுறும் பெருமை பெற்று, விரிந்த சிந்தையும், பரிந்துருகும் தயாளமும், அற்புதமான செல்வாக்கும், அரசர்க்குச் செவி கைப்ப இடித்துரைக்கும் ஆற்றலும் பொருந்தி, இலகு நூலறி வோடு உலகியல் அறிவும் அரசியல் அறிவும் சாலப் படைத்துத் தோலா நாவின் மேலோராய் விளங்கினர். இவரால் இவர் பிறந்த கோவூர், தேவரும் விரும்பும் மேவருஞ்சிறப்புற்றுத் திகழ்ந்தது. அது பற்றி யாவ ரும் இவரை இவரது இயற்பெயரால் வழங்காது, கோவூர் கிழார் எனவே வழங்குவாராயினர்.

அக்காலத்துச் சோழ நாட்டிற் சோழ பரம்பரை யில் தோன்றி, அரசர்க்குரிய அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கங்களில் எஞ்சாது, பல நற்குணங்களும், நல்லொ ழுக்கமும், புலவர் பாடும் புகழும் உடையவனுய்ச் சோழன் நலங்கிள்ளி என்பான் விளக்கமுற்றிருந்தான். அவன் கோவூர் கிழாரது புலமையின் திறத்தையும், உலகியல் ஞானப் பரப்பையும் கேள்வியுற்று, " 'மனந் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும், இனந்தூய் மை தூவா வரும்,' என்பர் ஆன்றோர். அருட்பெருங் குணமே ஒருருவெடுத்தாலனையார் கோவூர் கிழார். அப்பெரியாரை என்று தலைக்கூடுவேன்! என்று பீடு பெறுவேன்!" என்று இங்ஙனமெல்லாம் எண்ணி, அவர்பால் அன்பு மீதூரப் பெற்றவனுய், அவரைத் தன் அவைக்களத்துக்கு அழைத்தான். புலவரும், தம் போன்ற புலவர்களின் அருமை பெருமைகளை அறியும் அறிவு மிகுந்த அவன்பாற்செல்லுதற்கு

விரைந்து, அவனது அவைக்களத்தை அடைந்தார். அன்று முதல் இருவரும் கலந்த அன்பும் நண்பும் உடையவராயினர். புலவர் அரசனது மாட்சியெல்லாந் தெரிந்து, அவனது வீரம், நியாயம், தியாகம் முதலியன விளங்குமாறு எடுத்துக்காட்டான பாட்டுக்கள் பல தொடுத்து, அவனை மகிழ்ச்சியுட்படுத்துவாராயினர்.

இங்ஙனம் இவர்கள் உழுவலன்பு பூண்டு ஒழுகும் நாளில், சோழர் குடியிலே பிறந்தவனாகிய நெடுங்கிள்ளி என்பவனுக்கும், இந்நலங்கிள்ளிக்கும் சோழ நாட்டு அரசுரிமை பற்றிப் பெரிய வழக்குக்கள் பல நடந்து, அவை தீராது பகை மூண்டு, இருவர்க்கும் பல இடங்களிற் பெரும்போர் பல நிகழ்ந்தன. அங்ஙனம் நிகழ்ந்த போது ஒரு முறை நெடுங்கிள்ளி, நலங்கிள்ளியோடு எதிர் நின்று பொருதற்கு ஆற்றானாய்ப் போய்ச் சோணாட்டு ஆவூர்க் கோட்டையைத் தனக்கு அரணாகக் கொண்டான். அதனை அறிந்த நலங்கிள்ளி, அக்கோட்டையைத் தன்னகப்படுத்தக் கருதிப் பெருத்த சேனையோடு வஞ்சி சூடி மேற்சென்று, உழிஞை சூடி மதிற்புறத்தை வளைத்துப் பெருஞ்சமர் புரிந்தான். நெடுங்கிள்ளியோ, நொச்சி சூடி மலைந்து மதிலைக்காவாது மதிலினை அடைத்துக்கொண்டு மனமொடுங்கி வாளா ஒரு புறத்தொதுங்கி இருந்தனன். முற்றுகையோ, பன்னாள் நீட்டித்தது. மதிலகத்து நீரும் உணவும் முதலான ஏமப்பொருள்கள் சுருங்கினமையால், உள்ளிருந்த படை வீரர்களும் மக்களும், கூறவொண்ணாத் துயர் மீக்கூர்ந்தார்கள்.

இத்தகைய கொடுமையான நிகழ்ச்சியை அறிந்தார் நம் புலவர். அருள் வெள்ளம் பெருகும் இவரது உள்ளம் இதனைப் பொறுக்குமோ? உடனே புலவர் விரைந்து வந்து, அடைத்துக்கொண்டிருக்கும் நெடுங்

கிள்ளிக்குத் தமது வருகையை உணர்த்தி உட்சென்று, அவனைக் கண்டார்; கண்டு, சோழனை நோக்கி, "அரசே, யானைகளெல்லாம் குளத்திற்படிந்து குளியாமலும், நெற்கவளம் முதலியவற்றைப் பெறாமலும், கம்பங்களைச் சாய்த்து நிலத்தின்மேற் புரளும் கைகளையுடையன வாய்ப் பெருமூச்சு விட்டுச் சுழன்று இடி போல முழங்கவும், பால் இல்லாமல் குழந்தைகள் அழவும், மகளிர் பூக்களால் தங்கள் கூந்தலை அலங்கரியாமலிருக்கவும், குடிகள் எல்லாம் தண்ணீரும் இல்லாத தங்கள் வீடுகளிலிருந்து வருந்திக் கூப்பிடும் கூப்பீட்டைக் கேட்கவும் இவற்றிற்கெல்லாம் நாணாமலும் இரங்காமலும் இவ்விடத்து நீ இனிதாக இருத்தல் சாலக் கொடியதாகும்! வலி மிக்க குதிரைப் படைகளையுடைய தோன்றலே, நீ உண்மையாக அறத்தையுடையையாயின், உன் குலத்தவனும் இப்போது பகைவனுமாயிருக்கிற இவன் முன்னிலையில், 'இக்கோட்டை உன்னுடையதன்றோ?' என்று சொல்லித் திறத்தல் செய்வாயாக! அன்றி, வீரமுடையையாயின், போர் செய்து வென்று, விரைவில் திறப்பாயாக! நீ இவை இரண்டுமின்றித் திறவாமல் அடைக்கப்பட்ட திண்ணிய கதவினையுடைய பெரிய மதிலுள் ஒரு பக்கத்தே ஒதுங்கியிருத்தல் மிகவும் நாணுந் தன்மையுடையது!" என்னுங் கருத்துப்பட,

'இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறா அ(து)
இருந்தரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்(து)
அலமரல் யானை உருமென முழங்கவும்
பாலில் குழவி அலறவும், மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும், நீரில்

வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்,
இன்று தம்ம ஈங்கினி திருத்தல்!
துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்!
அறவை யாயின், நினதெனத் திறத்தல்!
மறவை யாயின், போரொடு திறத்தல்!
அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே!'

என்னும் அருள் வெள்ளம் ததும்பும் பொருள் பொதிந்த பாடலைக் கூறினர். கூறலும், இஃது அவனது உள்ளத்திற்சென்று பெருகிற்று. உடனே அரசன் அடைமதிலைத் திறந்து விட்டு, உறையூர் போய் அரண் செய்து, உள்ளிருந்தான். நலங்கிள்ளி, ஆவூரைக் கைப்பற்றிக்கொண்டான்.

இங்ஙனம் ஆவூர்க் கோட்டையை முற்றுகை செய்து கைப்பற்றியிருந்த சோழன் நலங்கிள்ளிபால், இளந்தத்தன் என்னும் பெயர் வாய்ந்த புலவரொருவர் வந்து, பரிசில் வேண்டிப் பெற்றுக்கொண்டு, பின்னர் உறையூர் போய் நெடுங்கிள்ளியை அடைந்து, பரிசில் வேண்டினர். அப்புலவரை நெடுங்கிள்ளி, "இவன் உண்மைப் பரிசிலாளன் அல்லன்; நம் பகைவனாகிய நலங்கிள்ளியிடமிருந்து இவ்விடத்து இரகசியங்களை அறிந்து போதற்கு வந்த ஒற்றனேயாவன்," என்று பிழைபடக் கருதிப் புலவரைக் கொல்லுதற்குத் துணிந்தனன். இக்கொடுஞ்செயலைக் கேள்வியுற்ற புலவர் பெருந்தகையாம் கோவூர் கிழார், விரைந்து சென்று, புலவரை உயிர் இறுதியினின்றும் உய்விக்கக் கருதி, உறையூர் புகுந்து, அரசனையணுகி, "அரசே, இப்புல

வரைப் பற்றி நீ கொண்ட கருத்துப் பிழைபட்டதும் அநியாயமானதும் ஆகும். இப்புலவர் பகை வேந்தரிடமிருந்து ஒற்று வந்தவரென்று கருதற்க. புலவரது வாழ்க்கை வஞ்சகலவாப் புனிதமுடையது என்பதனை நீ அறிந்திலேயோ ?

"வள்ளல்களாயுள்ளவர்களை நினைத்துப் பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகள் போலச் சென்று கடந்து செல்லுதற்கரிய வழிகளைத் தூரமென்று கருதாமற்கடந்து, தம் நாவால் இயன்ற அளவு பாடி, அங்கே பெற்ற பரிசிலால் மகிழ்ந்து, தம் சுற்றத்தாரை அவற்றைக்கொண்டு உண்பித்துத் தாமும் உண்டு, பொருளில் பற்றின்றி உள்ள மலர்ச்சியோடு பிறர்க்கும் கொடுத்துத் தம்மைப் பாதுகாக்கும் செல்வராற் பெறும் சிறப்பு ஏதுவாக வருந்தும் இப்பரிசிலால் வாழும் வாழ்க்கை, தம்மோடு கல்வி முகத்தால் போர் நிகழ்த்த வருவாரோடு சொற்போர் நிகழ்த்தி, அவர் நாணத் தம் கல்வியால் வென்று, அதனால் வரும் பெருமிதத்தோடு தலையெடுத்து நடந்து, இனிதாக ஒழுகும் அவ்வளவன்றிப் பிறர்க்கு ஏதேனும் கொடுமை செய்தலை அறிந்ததோ? இல்லை. இஃதன்றியும், அரசாளும் செல்வமுடைய உங்களைப்போன்ற பெருமையும் உடையதாகும்," என்று புலவர்கள் வாழ்க்கை நலத்தை அரசனது உள்ளத்திற் பதியுமாறு சாதுரியமாய்க் கூறி, அவனது தீய எண்ணத்தை மாற்றி, இளந்தத்தனென்னும் அப்புலவரை உய்வித்தார்.

புலவர் உறையூரிலே இப்பேருபகாரச் செயலைப் புரிந்து அமர்ந்திருக்குங்கால், ஆவூரைக் கைப்பற்றியிருந்த சோழன் நலங்கிள்ளி நால்வகைப் படையுடன் போந்து, உறையூரையும் முற்றுகை செய்து, பெரும் போர் தொடங்கினான். இதனை அறிந்த அருள் வடிவின

ரான புலவர் சிகாமணி, ஒரு குடியிற்பிறந்தும் அன்புரிமையின்றிச் செற்றம் பூண்டிருக்கும் அவர்கள் தன்மைக்கிரங்கி, மனம் பொருமல், 'எவ்வாற்றலேனும் இவருடைய பகைமையை ஒழித்து, ஒற்றுமைப்படுத்துவேன்!' எனத் தம்முட்கருதி, அடைத்தும் முற்றியும் நிற்கும் அவ்விரு வேந்தரிடமுஞ்சென்று, அவர்களை நோக்கி, "அரசர்களே, பகைத்து நிற்கும் உம்மிருவருள் ஒருவனும் பெரிய வெண்மையான இதழையுடைய பனம்பூ மாலையை அணிந்தவன் (சேரன்) அல்லன்; அல்லது கரிய கிளைகளையுடைய வேம்பு மாலையையுடையவன் (பாண்டியன்) அல்லன்; உன்னுடைய மாலையும் ஆத்தியால் தொடுக்கப்பட்டது; உன்னுடன் பொருவோனது மாலையும் ஆத்தியால் தொடுக்கப்பட்டது. (நீவிர் இருவீரும் சோழரே). ஆதலால், உங்களுள் எவர் தோற்றாலும், தோற்பது உங்களது குடியேயன்றி வேறன்று; இருவீரும் வெல்லுதல் என்பதோ, உலகத்திற்கையன்று; இவற்றால் உங்கள் செய்கை குடியின் பெருமைக்குச் சிறிதுந் தக்கதேயன்று; அன்றியும், இந்தப் போர் உங்களைப் போன்ற பெருவேந்தர்களாயுள்ள ஏனையோர்க்கு உடம்பு பூரிக்கும் உவகையைச் செய்யும்; ஆதலால், இனி இப்போரை அறவே விட்டொழியுங்கள். இதுவே உமக்குத் தக்கதாகும்," என்னும் பொருள்பட,

'இரும்பனை வெண்டோடு மிலைந்தோன் அல்லன்;
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்; [டு
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே; நின்னொ
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே:
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே;
இருவீர் வேறல் இயற்கையு மன்றே? அதனாற்
குடிப்பொரு ளன்றுநும் செய்தி; கொடித்தேர்

நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே.'

என்று தமது விரிந்த சிந்தையிற் சுரந்தெழுந்த பாட்டி ஞல் உண்மையைப் பசுமரத்தாணி போல இருவருள் ளத்தும் பதியக் கூறி, அவருள் நெடுக நிகழ்ந்து வந்த செற்றத்தை நீக்க முற்பட்டனர். அதனைக் கேட்ட அர சர் இருவரும் இத்தகைய புலவர் பொருளுரை போற்றி, அதன் வழி நின்று, பகைமை நீங்கி, அன்பு கலந்த உள் ளத்தராகாது, மறுத்துரைக்கவும் ஒருப்படுவரோ? புல வர் கூறியவாறே இருவரும் போரொழிந்தனர்.

பின்பு நலங்கிள்ளி புலவரது அருட்பெருங்குணத் தினையும், பிறர்க்கெனவே முயலும் பெற்றியையும், வெள்வேலேந்தும் வேந்தராயினும் அவரிடம் உண்மை யை அஞ்சாது கூறும் ஆற்றலையுங்கண்டு வியந்து, "பெறு தற்கரிய இத்தகைய பெரியோர் நட்பைப் பெறுதற்கு யான் செய்த புண்ணியம் என்னையோ!" எனப் புகழ்ந்து கூறிப் புலவர்பால் முன்னையினும் பன்மடங்கதிகமான நண்புரிமை கொண்டான். அது முதல் அரசன் புலவரு டன் இடையருது பழகிப் புலவரது திட்பமிகுந்த நட் பென்னும் புணையால் தமிழென்னும் அளப்பருஞ்சலதி யைக் கரை கண்டவனுய், அமிழ்தென்னும்படியான கவிகள் பல பாடும் வன்மையுற்று, புவியரசாதலோடு கவியரசாயும் விளங்கினுன். புலவரும் வள்ளியோனு கிய நள்ளியினது தமிழ் மொழிப்பற்றையும், பெருங் குணத்திறனையும் கண்டு அன்பு மிகப்பெற்று, அவ்வப் போது அவன் பெருந்தகைமைகள் பொருந்தத் திருந் திய பாக்கள் பல பாடுவாராயினர்.

ஒருகால் புலவர், "சிறப்புடைய முறைமையால் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே தோன்றுங்

காட்சி போல, நின்னால் வெல்லப்பட்ட சேர பாண்டியருடைய இரண்டு குடையும் பின்னே வர, முன்னே ஓங்கிய உன்னுடைய ஒப்பற்ற வெண்கொற்றக் குடை, பூரண சந்திரன் போல உயர்ந்து தூரத்தினும் விளங்கப் புகழை விரும்பிப் போரைச் செய்யும் பாடி வீட்டின்கண்ணே இருத்தலல்லது உன் நகரின்கண் இருப்பதற்கு உடம்படாய் நீ; கோட்டின் நுனி தேயும்படி பகைவர் மதிலைக் குத்தும் உன்னுடைய யானைப் படைகள் அடங்காத செருக்கையுடையனவாயிருக்கின்றன ; போரென்று கேட்டால் மிக விரும்பும் உன் படை வீரர்கள், 'பகைவர் தேயம் நெடுந்தூரத்தது; ஆதலால், ஆண்டுப் போவோம் அல்லோம்,' என்று கருதாது, செல்லுதற்கு முனைந்த உள்ளமுடையவர்களாயிருக்கின்றார்கள். ஆதலால், ஓசை மிகுந்த பல விழாவினையுடைய பகைவர் நாட்டில் தங்கிவிட்டுக் கீழ்க்கடல் பின்னதாக மேற்கடலினது திரை உன் குதிரைகளின் குளம்பை நனைக்கும்படி வலமாகப் படைகளை விட்டுத் தங்கள் நாட்டுக்கும் நீ வருதல் கூடுமென்று மனஞ்சுழன்று நடுங்கித் துன்பமிகுந்து நித்திரையின்றி இருக்கின்றார்கள் வடநாட்டு வேந்தர்கள்,'' என்று நலங்கிள்ளியினது போர் விருப்பத்தையும், அவனது படையெடுப்பில் வடநாட்டாருக்குள்ள அச்சத்தையும் வியந்து கூறினர்.

பின்பொருகால் இவர், "நம் சுற்றத்தினது உணவிற்கு விலையாகச் சேரனது வஞ்சிமா நகரத்தை அளிப்பன் ; அழகிய நம் விறலியர் சூடும் பூவிற்கு விலையாகப் பாண்டியனது மாட மதுரையையும் தருகுவன்; இந்நிலவுலகத்தின் உரிமையை ஆராய்ந்து கூறினால், இந்நாடு துயக்குலத்து இளைஞர் கலம் வனைதற்குச் சக்கரத்தில்

வைத்த பச்சை மண் திரள் போல, அவனது கருத்தின் முடியையுடையதாயிருக்கின்றது ; ஆகையால், நாமெல்லாம் அவனையே பாடுவோமாக ; வாரீர் பரிசின்மாக்காள் !" என்று கூறுமுகத்தால், அவனது வரையா வள்ளன்மையையும் தலைமையையும் பாராட்டிக் கூறினர்.

மற்றுமொரு முறை, அவ்வரசன் சேர பாண்டியரது நாட்டைத் தன்னடிப்படுத்திய ஆற்றலையும் பாண்டியனது ஏழ் அரண்[1] கதவுகளை அழித்து அங்குத் தனது புலிக்கொடியைப் பொறித்த மிகுதிப்பாட்டையும், போர்க்களத்தில் பாணர்க்கு உணவருத்துஞ் சிறப்பினையும், அவனது அறக்கள வேள்வி மறக்கள வேள்விகளையும் சிறக்கக் கூறினர் (புறம்-33). இங்ஙனம் புலவரும் நலங்கிள்ளியும் விள்ளா நட்புப் பூண்டு விளங்குகையில், இந்நலங்கிள்ளியின் தமையனும் காவிரிப்பூம்பட்டினத்தை அரசாண்டுகொண்டிருந்தவனுமான சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்பான், கடையெழு வள்ளல்களுள் ஒருவனும், திருக்கோவலூர் அரசனும், புலவர்க்குப்பரமோபகாரியும், கபிலர் முதலிய நல்லிசைப் புலவர்களால் நாவார மனமாரப் புகழ்ந்து பாடப்பட்டவனுமான மலையமான் திருமுடிக்காரியின் மீது தான் கொண்டிருந்த பகைமை காரணமாக அவனது இளமைமிக்க மக்களிருவரைக் கைப்பற்றிக் கொணர்ந்து, யானையால் இடறும்படி செய்து கொல்லக் கருதினன். இதனைக்கேள்வியுற்ற கோவூர் கிழார், பரிபவமிகுந்து, அருமந்த குழந்தைகளைக் காப்பதற்கு ஆங்குக் காற்றினும் கடுகிச் சென்று, அரசனைக் கண்டு, "அரசே,

---

1. இஃது ஓரிடத்தில் ஏழாகச் சூழ்ந்திருந்த கோட்டை. இராமநாதபுரம் ஜில்லாவில் 'ஏழுவன் கோட்டை' என ஓர் ஊர் உளது.

நீ, ஒரு புறவுக்காகத் துலாக்கோல் புகுந்து அதன் துன்பத்தைத் தீர்த்ததன்றியும் பிற உயிர்களுக்கு உற்ற துன்பம் பலவற்றையும் தீர்த்தருளிய சிபி என்னும் அரசர் பெருந்தகையின் மரபிலே உதித்தவன். இச் சிறுவர்களோ, அறிவால் உழுதுண்ணும் புலவரது வறுமையைக் கண்டால் வருந்தி, அதைத் தீர்ப்பதற்குத் தம் செல்வங்களைப் பகுத்துக் கொடுத்துண்ணும் தண்ணளியுடையவராய் வாழ்வாரது மரபிற்பிறந்தவர்கள். இவர்கள் இந்த யானையைக்கண்டு இயற்கையில் அஞ்சி அழுகின்ற அழுகையையும் மறந்து நிற்கும் பச்சிளங் குழந்தைகளாய் இருக்கின்றார்கள்; அஃதன்றியும், இக் கூட்டத்தை அச்சத்துடன் பார்த்து, முன்பு தாங்கள் அறிந்திராததான புதிய வருத்தத்தையுடையவர்களாயுமிருக்கிறார்கள்; நான் கூறிய இச்சொற்களை நீ உள்ளபடி கேட்டறிந்தனையாயின், இனி விரும்பியதைச் செய்வாயாக!" என்று இங்ஙனம் கல்லும் மரனும் கரைந்துருகக் கூறினார். கூறவே, அரசன் புலவரது அருளுரையைக் கேட்டுத் தன் கொடுஞ்செயலுக்கு நாணி, குழந்தைகளைக் கொல்லாது விடுத்தனன்.

பின்னர்ப் புலவர், இங்ஙனம் தம் பொருளுரையால் தெருண்டு அருள் நிரம்பியவனான அவ்வரசன் திறத்தை வியந்து, "கூற்றுவனும் தன்னால் உயிர் கொள்ளுதற்கேற்ற காலம் வருமளவும் எதிர்பார்த்திருப்பான்; அவ்வாறு காலம் பாராது பகையரசர் மாளும்படி வேண்டிய இடத்தே கொல்லும் வெல்லும் போரையுடைய வேந்தே, எட்டுத் திக்கிலும் எரிகொள்ளி எரிந்து விழவும், மரங்களின் கிளைகள் இலைகள் உதிர்ந்து வாடவும், சூரியன் பல இடங்களில் தோன்றவும், அஞ்சத் தக்க பறவைகள் குரலிசைப்பவும் இவற்றை நனவிற் கண்

டும் பல் நிலத்தில் விழவும், எண்ணெயைத் தலையில் வார்க்கவும், ஆண் பன்றியில் ஏறவும் ஆடையைக் களையவும், படைக்கலம் இருந்த கட்டிலுடன் கவிழவும் இவற்றைக் கனவிற்கண்டும்; இவை பற்றித் தவிராது போர்க்குச் சென்று தவருது வெல்லும் வலியுடையையாதலால், உனது படையெடுப்பைக் கருதிப் பாது காவலின்மையால் அஞ்சி, வருத்தமுற்றுத் தம் பிள்ளைகளுடைய பூப்போலுங் கண்களை முத்தஞ் செய்து தம் மனைவியர்க்குத் தம் வருத்தந் தோன்ருமல் மறைக்கும் ஆடவரோடு கலக்கமடைந்தது, உன்னைக் கோபிக்கச் செய்த பகைவர் நாடு," எனவும்; "'தேன் போன்ற இனிய நரம்புத் தொடை பொருந்திய சிறிய யாழையுடைய பாணரே, குளத்தின்கண் வாழும் ஆமையை இருப்புச் சலாகையிற் கோத்தாற்போன்ற நுண்ணிய கோலால் பிணிக்கப்பட்ட தெளிந்த கண்ணையுடைய உடுக்கையோசை இனிதாகவிருக்கும்; அதனைக் கேட்டு இவ்விடத்துச் சிறிது தங்கி இளைப்பாறிப் போவீராக,' என்று சொல்லிப் பல பல விடயங்களைப்பற்றி என்னை வினவுகின்ற இரவலனே, யான் சொல்வதனைக் கேட்பாயாக: தைத் திங்களில் குளிர்ந்த பொய்கை போலக் கொள்ளக் கொள்ளக் குறையாத சோற்றையுடைய பெரிய நகரத்தையும், அடுநெருப்பையல்லது சுடு நெருப்பை அறியாது இரு மருந்தாகிய சோற்றையும் நீரையும் மிகுதியாக உண்டாக்கும் நாட்டையுமுடையவனுகிய கிள்ளி வளவனது நல்ல புகழை நினைத்து, வண்டுகள் சிறு வெள்ளாம்பற்பூக்களில் ஊதிக்கொண்டிருக்கப் பெற்றதும் வள்ளியோனுகிய பண்ணனதுமாகிய சிறு குடி வழியாக நின் விறலியோடு மெல்ல மெல்ல நடந்து செல்வையாயின், பெருஞ்செல்வத்தைப்

பெறுகுவை. அவனது வண்மையாற் செல்வம் பெறுதல் விறகு வெட்டிகள் விழுப்பொருள் எடுப்பது போன்ற அருமைப்பாடுடையதன்று; அது பெறுவோமோ என ஐயுற வேண்டா," என்றும் கிள்ளிவளவனது திண்மை, வண்மை, தண்மை, உண்மை முதலாய பெருங்குணங்களைப் புலப்படுத்திப் பாடினர். பின்னரும் பாணர் பசிக்குப் பகையாயிருக்கும் அவனது தன்மையையும், மருதம் முல்லை நெய்தல் நில வளங்களையும் வருணித்துப் பாடி உவப்பித்து, அரசன் அவையில் தங்கியிருந்தார். சின்னுட்கழிந்ததும் புலவர், தம் நண்பனுகிய நலங்கிள்ளியைக் காணவேண்டுமென்றும் அவா ஈர்க்க, அரசனிடை விடை பெற்று உறையூர் வந்து, நலங்கிள்ளியை இரு விழிகளும் குளிரக்கண்டு, உவகைகொளத் தழுவி, அளவளாவி, அவனது பகை வெல்லுந் திறன், பாணர்ப் புரக்கும் வண்மை, செங்கோல் மாண்பு முதலாயவெல்லாம் புலப்படும்படி வழுவறத் தேர்ந்து வடித்து மதுரந் தழுவிய நவரசத் தண்டமிழ்ப் பாக்கள் பலபல பாடி, அரசனேடு இன்புற்று வாழ்ந்திருந்தனர்.

ஆராய்ச்சி :

பெயர் : பண்டைக் காலத்தில் நம் தமிழகத்தில் மக்கள் பெயரெல்லாம் பெரும்பாலும் அவரது சினை, குணம், தொழில், ஊர் முதலியவற்றுல் வழங்கப்பட்டு வந்தது போலவே, இப்புலவரின் பெயரும் கோவூர் கிழார் எனப் பிறந்த ஊர் பற்றி வழங்கப்பட்டதாகும். இதனுல், இயற்பெயர் கிளக்க வேண்டாது 'கோவூர் கிழார்' எனவே இவரை உலகம் அறிந்திருந்த பெருமை புலப்படும். ஒருவர்க்கு அவர் பிறந்த ஊராலும் பெயர் எய்துதல் மரபென்பது,

"ஊரும் பெயரு முடைத்தொழிற் கருவியும்
யாரும் சார்த்தி யவையவை பெறுமே."

என்ற தொல்காப்பிய மரபியற்சூத்திரத்தால் அறியப் படுவது. சில பிரதிகளில் இவரது பெயராகக் 'கோவூர் அழகனார்' எனவும் காணப்படுதலால், 'அழகனார்' என்பது இவரது இயற்பெயராதலுங் கூடும்.

குலம்: இவர் தோன்றிய குலம் தமிழ்ப் பழங் குடிகளுள் ஒன்றாய வேளாண் குலம் என்பது, இவரது கிழார் என்ற சிறப்புப் பெயரால் அறியப்படுவது. கிழார் என்ற பெயர் வேளாளர்க்குரியதென்பது மேற் காட்டப்பட்டது.

கொள்கை: இவர் தம் பாடல்களில் கூறியிருக் கும் நீதிகளையும் ஒழுகலாறுகளையும் ஊன்றி நோக்கு மிடத்து இவர் தமிழ் நாட்டுத் தொன்றுதொட்டே வழங்கி வந்த மறைநெறிப்பட்ட கொள்கையுடையா ரென்பது புலனாகின்றது.

ஊர்: இப்புலவர் சோழபரம்பரையிலுதித்த நான்கு அரசர்களால் அபிமானிக்கப்பட்டு, அவர்கள் அவைக்களங்களில் அமர்ந்து, அவ்வப்போது அவர்க்கு உறுதி பயப்பன கூறி, அவர்களைப் புகழ்ந்து பாடித் தம் வாழ்நாட்களையெல்லாம் சோழ நாட்டிலேயே கழித்தவ ரென்று இவர் பாடிய பாடல்கள் கொண்டு அறியப்படு தலானும், சோழ நாட்டையும் காவிரி நதியையும் புனைந் துரைத்திருத்தலானும், இவரது பிறப்பிடமாகிய கோவூர் சோழ நாட்டைச் சேர்ந்ததென்பது துணிபு. இப்பெயருடைய ஊர் இக்காலத்துச் சோழநாட்டில் யாண்டுள்ளது என்பதனைக் கேட்டறிக.

பெருமை: இப்புலவரது ஆழ்ந்த கல்விப் பெரு மையினையும், சான்ற குணப் பெருமையினையும் இவர் இயற்றியனவாயுள்ள சீரிய பாட்டுக்களானே நன்கறிய லாகும். இவர் தமது பொருவிறந்த புலமைத் திறத்திற்

கேற்ப, அருளும், அன்பும், நன்றியும் முதலான தலையாய குணங்களெல்லாம் தம்மிடம் ஒருங்கமையப் பெற்ற வராய்ப் பிறர்க்கு இன்னல் நேர்ந்துழியெல்லாம் அவற் றைக் களைவதே தமது பெருங்கடப்பாடாகக்கொண்டு விளங்கியவர். உலகத்துத் தோன்றிய மக்கட்கு இவர்,

'உளநாள் சிலவால் உயிர்க்கேம மின்றால்
பலர்மன்னுந் தூற்றும் பழியால் — பலருள்ளும்
கண்டாரொ டெல்லாம் நகாஅ தெவனொருவன்
தண்டித் தனிப்பகை கோள்?'

என்பது போன்ற நீதிகளை எடுத்துக் கூறித் தெருட்டி, யாவரும் சீற்றந் தணிந்து ஒற்றுமையுடன் வாழவேண்டு மென்ற கொள்கையுடையவராய்த் தம் வாழ்நாள் முழு தும் உழைத்த உபகாரி. இவரது இத்தகைய பொய் யில் கேள்விப் புலமையையும், மனத்தூய்மையையும், வாய்மையையும், அருளுடைமையையும் நன்கறிந்ததனு லன்றோ முடியுடை வேந்தரெல்லாம் இவர், "போரினை நிறுத்துமின்," என்றால் நிறுத்தியும், "இச்செய்கையி னின்றும் ஒழிமின்," என்றால் ஒழிந்தும் நின்றார்கள்? பெருவேந்தரெல்லாம் தம் உரையைப் பொன் போல உளத்திற்பொதிந்து தம் நெறிச் செல்ல அவர்களை வய மாக்கி அரசியற்கருமங்களுள் தலைப்பட்டு நின்ற புலவ ரது ஆற்றலையும் செல்வாக்கையும் என்னென்று வியப் பது! ஈதன்றோ அறிவு பெற்றதன் பெரும்பயன்!

ஒரு குடியிற்பிறந்தும் கலகமிட்டுக்கொண்டிருந்த சோழர் இருவரையும் ஒற்றுமைப்படுத்துதற்கும், பிற உயிர்கட்கு நேர்ந்த துன்பங்களைக் களைவதற்கும், அஞ் சத் தக்க போர்க்களத்திலும் புகுந்து, அரசர் செவி வெதும்ப இடித்துரைத்து அவர்கட்கும் பிறர்க்கும் நலம் விளைக்கப் பாடு பட்டனரென்றால், இவருடைய அஞ்

சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், ஒப்புரவு ஆகிய அறப் பெருங்குணங்களை எஞ்சாது எடுத்துரைப்பது எங்ஙனம்? இத்தகைய பெரியாரை ஒரு நாடு பெறுமாயின், அதற்கு அதனினும் சிறந்த பேறு வேறு யாதுளது?

அரசர்க்கு ஒற்றுமை நயத்தினை உறவெடுத்தோதிய நல்லிசைப் புலவர் பல்லோருள்ளும் இவர் தலை சிறந்தவரென்பது மலை விளக்காம். குடிப்பிறந்தோர் ஒவ்வொருவரும் தத்தம் குடிக்குப் பழுது வாராது அதனைக் காத்துத் தாங்குதலைக் கடனாகக் கொள்ள வேண்டுமென்னும் கருத்துப் பெரிதுமுடையவர்; அரசர்கள், அறனும், மறனும், நெறியும் உடையவர்களாயிருக்க வேண்டுமென்னும் கோட்பாடுடையவர்; இலக்கிய இலக்கணக் கடலின் நிலை கண்டுணர்ந்ததன்றி, இசை நூல், வான நூல், சோதிட நூல், கணு நூல் என்பவற்றையும் கரை கண்டறிந்தவர். இவரது பெருமை விரிப்பிற்பெருகும்.

**காலம்:** இவராற்பாடப்பட்டவருள் ஒருவனாகிய கிள்ளி வளவன், மணிமேகலைக் காப்பிய காலத்தினன்; மணிமேகலை, சிலப்பதிகாரக்கதையின் தொடர்ச்சியாய், அந்நூலாசிரியர் அவைத்தலைமையிலும், சிலப்பதிகாரம் மணிமேகலை ஆசிரியர் அவைத்தலைமையிலும் அரங்கேறியவை; ஆகவே, சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒரு காலத்தெழுந்த பொருட்டொடர் நிலைச் செய்யுட்களாகும். சிலப்பதிகாரம், கி. பி. 135லிருந்து இலங்கையை ஆண்ட அரசனென்று 'இலங்கை மகாவமிசம்' கொண்டு தெளியப்பட்ட முதலாங்கஜபாகுவை 'வரந்தருகாதைக்'கண்ணும், 'உரை பெறு கட்டுரைக்'கண்ணும் குறித்துள்ளமையால்,[1] அவ்வரசனுக்குரிய கி-பி.

1. சிலப்-பதிகம். அடி, 89, 90. மணி. பதிகம். அடி, 95.

135க்குமேல் 160க்குட்பட்ட காலமே சிலப்பதிகார காலமாகும்.[1] இம்முறையே நோக்க இப்புலவர் காலம் கி-பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பது தெளியப்படும்.

**இவர் காலத்துப்புலவர்கள் :** ஆலத்தூர் கிழார், வெள்ளைக்குடி நாகனார், மாறோக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார், ஆடுதுறைமாசாத்தனார், கூலவாணிகஞ்சாத்தனார், ஐயூர் முடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், தாமப்பல் கண்ணனார், உறையூர் முதுகண்ணஞ்சாத்தனார், மன்னனார், இளந்தத்தர் முதலியோராவர். இவர் இளம்பருவத்தினராயிருந்த போது முதியராய் விளங்கியவராவர் கபிலரும் பரணரும். இப்புலவராற்பாடப்பட்ட கிள்ளி வளவனை அகத்தில் நக்கீரரும் பாடுதலால், அவரும் இவரது காலத்தில் இருந்தவராவர்.

**இவராற்பாடப்பட்டோர்,** சோழன் நலங்கிள்ளி, சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவன், காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளி வளவன், சிறுகுடிக் கிழான் பண்ணன் என்பவர். இவருள் பண்ணன், சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனுக்கு நண்பனும், சிறந்த கொடையாளியாயும், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனும் விளங்கியபடியால், புலவர் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைக் குறித்துப்பாடிய 70-ஆம் புறப்பாட்டில் இவனது கைவண்மையையும், இவனது சிறு குடியூரின் வளத்தையும் சார்த்து வகையால் புகழ்ந்துரைத்துள்ளார். கிள்ளி வளவனுக்குப் பண்ணன் நண்பன் என்பது, "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய"

1. இக்காலம் சோதிடக் குறிப்புக் கொண்டும் துணியப்பட்டுளது. செந்தமிழ். தொ-15 பக். 585-645.

எனக்கிள்ளி வளவன் 173-ஆம் புறப்பாட்டில் இவனை வாழ்த்திப் புகழ்வது கொண்டறியலாம். இப்பண்ணன்[1] தென்னவன் மறவன் என்பது, 388-ஆம் புறப்பாட்டால் அறியப்படுகின்றது. இப்புலவர், மலையமான் வண்மையைப் பாராட்டி, அவன் மக்களைப் பாடுதலால், அவனையும் நன்கறிந்தவராவர்.

### பாட்டுக்களின் ஆராய்ச்சி :

இப்புலவர் பாடியனவாகச் சங்கத்தார் தொகுத்த எட்டுத் தொகையுள் புறநானூற்றில் பதினைந்தும், நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றும், திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாகப் பதினெட்டுப் பாட்டுக்கள் கிடைத்திருக்கின்றன.

புறநானூற்றில் 31, 32, 33, 41, 44, 45, 46, 48, 68, 70, 308, 373, 382, 386, 400 என்ற எண்ணமைந்த பாடல்கள் இவர் பாடியனவாகும். இவர் பாட்டுக்களின் சுவை நயம் அளத்தற்கரிது; ஏனைச் சுவைகளினும் கருணைச் சுவையும் வீரச் சுவையும் ததும்பி மிளிர்கின்றன. சோழர் இருவரும் போரொழிந்து ஒற்றுமை உறுதற்குக் கூறிய 44, 45-ஆம் பாட்டுக்கள், கேட்போருள்ளத்தைப் பிணிக்குந் திட்பநுட்பஞ்செறிந்து விளங்குகின்றன. மலையமான் மக்களை உய்விக்கப் பாடிய 46-ஆம் பாட்டு, இளஞ்சிறுரது இயற்கையைப் புலப்படுத்திப் படிப்போருள்ளத்தைக்கரையச் செய்கின்றது. இளந்தத்தனை உய்விக்கப் பாடிய 47-ஆம் பாட்டில் புலவர்கள் வாழ்க்கை நலத்தையும், அவர்களுடைய இயற்கைக் குணங்களையும் பெருமையையும் வெளிப்படுத்தற்

---

1. இவன் அகம். 54, 117, 177-ஆம் பாட்டிலும் பாராட்டப்பட்டுளான்.

குப் புலவர் மேற்கொண்ட சாதுரியமொழித் திறன் வியக்கற்பாற்று.

இவர் கூறும் உவமைகள் பொருத்தமும் திருத்தமும் உற்று, இவரது கவி வன்மையைக் காட்டுகின்றன. சேர பாண்டியர் குடைகள் பின்னே வரச் சோழனது குடை முன்னே தலைமை தோன்றப் போகும் தோற்றத்திற்கு அறத்தையும் அதன் வழித்தோன்றும் பொருளையும் இன்பத்தையும் உவமையாகக் குறித்துள்ளார். பாணர் சுற்றங்களின் பசியால் மெலிந்து எலும்பு தோன்றும் விலாப்புடைக்குத் தோலுரித்த உடும்பையும், நுண்ணிய கோலாற்றெருடுத்த உடுக்கை வாத்தியத்துக்கு நாராசத்தால் கோத்த ஆமையையும் ஒப்பிட்டுள்ளார்; 'குழவிக்குச் சுரக்கும் தாயின் பால் போலக் காவிரியின் வெள்ளம் உயிர்த்தொகுதியைக் காக்கும்,' என்று காவிரிச் சிறப்புக் கூறியுள்ளார். இக்கருத்தையே, 'சரயு என்பது தாய்முலை அன்னதிவ் வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்,' எனக் கம்பர் தமது இராமாவதாரத்துள் ஆற்றுப் படலத்தில் அமைத்திருத்தல் காண்க. வறுமைக்கு நாகத்தின் நஞ்சை ஒப்பிட்டுள்ளார். தசையோடு கூடிய சோற்றுத் திரளைக்கு, இலையை இடையிட்டுக் கட்டிய மலராத முகையிணையுடைய மாலையின் பந்தை ஒப்பிட்டுள்ளார். "வேட்டுவன், மானின் தசையைச் சொரிந்து கொணர்ந்த கடகமும், ஆயர் மகள் தயிர் கொண்டு வந்த மிடாவும் நிறைய, உழவர் மகளிர் குளத்துக் கீழ் விளைந்து களத்தின்கண் கொள்ளப்பட்ட வெண்ணெல்லை முகந்து கொடுப்ப, உவந்து மீளும் பாண்டி நாடு," எனப் பாண்டிநாட்டுச் சிறப்பும் பண்டமாற்றும் கூறியுள்ளார். "பகை நாட்டில் கிள்ளி வளவனது

படையெடுப்பைக் கேட்டு அஞ்சி வருத்தமுற்ற ஆடவர், தம் வருத்தம் தம் மனைவியர்க்குத் தோன்றா வண்ணம் தம் மக்களை முத்தமிட்டு, அவ்வருத்தத்தை மறைக்கின்றார்கள்,'' என்று புலவர் கூறியிருப்பது இவரது மனோ தத்துவ ஆராய்ச்சியைக் காட்டிப் படிப்போருக்கு இன்சுவையையூட்டி வியப்புறச் செய்கின்றது. வண்மை மிக்க மலையமான் மக்களை உய்விக்கச் சோழன் முன்னோனாகிய சிபியின் செயலாகிய குறுநடைப் புறவுக்குத் துலாக்கோல் புகுந்த வரலாறு கூறி, அதனால் அவன் முன்னோரின் உயிர்க் கொடையை நினைப்பூட்டிய திறப்பாடு சாலப் போற்றற்பாலது.

அல்லிப் பாவைக்கூத்து, களவேள்வி, சிறுசோற்று விழா இவைகளைக் குறித்துள்ளார்; அரசர்கள் வெற்றி வேண்டிப் பகை நாட்டின்மேற் சென்றால், தம் படைகளை வலமாகச் செல்ல விடும் வழக்கைக் கூறியுள்ளார்; சோற்றையும் நீரையும், 'இரு மருந்து' என்கிறார்; வண்டினை, 'நாற்ற நாட்டத்து அறுகாற் பறவை' என்று விசேடித்துள்ளார்; 'தைத்திங்களில் பொய்கைநீர் குளிர்ந்து தெளிந்து குறையாதிருக்கும்,' என்று கூறியுள்ளார். இங்ஙனமே, "பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர் தைத்திங்கட் டண்ணிய தரினும்'' எனக் குறுந்தொகையிலும் (196), "நீதக்காய் தைந்நீர் நிறந் தெளிந்தாய்,'' எனப்பரிபாடலிலும் (11) இக்கருத்து வந்துள்ளது. புறநானூற்றில் பாடப்பட்டோர் பெயரின்றிக் காணப்படும் பாட்டுக்கள் இரண்டுள்ளன. புறநானூற்றுக் கோவையைக் கடைமணியாய் நின்று அலங்கரிப்பதும் இவரது பாடலேயாம்.

நற்றிணையில் இவர் பாட்டாகக் காணப்படும் 393-ஆம் செய்யுள், 'வரைவு மலிதல்' என்னும் துறையமைந்

தது. தோழி கூற்றாயுள்ள இச்செய்யுளில், "நீண்ட மூங்கில் மிக்க மலையில் சூலையுடைய பிடி யானை, கன்றை யீன்று வருந்தி நிற்க, அதன் பசி நோய் தீர்க்க வேண்டிக் களிற்று யானை, அயலிலுள்ள புனத்தில் தினைக் கதிரைக் கொய்துகொண்டு போதலாலே, கானவன் அதனைக் கண்டு எறிந்த விசை மிக்க எரிகொள்ளி, மலைப் பக்கமெங்கும் மின்னித் தோன்றி மறையும் மின்னலைப்போலத் தோன்றுநிற்கும் மலை நாட்டினன்" எனத் தலைவனை விசேடித்து, அதனடியாக உள்ளுறை அமைத்திருக்கும் மாட்சி பாராட்டத்தக்கது. இதில் களிற்று யானை, 'வாலா வேழம்' எனக் கூறப்பெற்றுள்ளது. (வாலா வேழம்-வெண்மையில்லாத கரிய யானை)

குறுந்தொகையிலுள்ள இவரது 65-ஆம் பாட்டு முல்லைத் திணைக்குரிய 'பருவங் கண்டு அழிந்த தலைமகள் தோழிக் குரைத்த துறையாயுள்ளது. அதில், கார் காலத்தில் ஆண் மான் தன் துணையோடு தாவித் திரிதல் கூறப்பட்டுளது. மானினது ஆண் பெயராக இரலை என்னும் மரபுப் பெயர் வந்துளது. திருவள்ளுவ மாலையில்,

> 'அறமுதல் நான்கும் அகலிடத்தோ ரெல்லாம்
> திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
> பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்—
> முன்னை முதுவோர் மொழி.' [வா தே

என்ற 38-ஆம் பாட்டு இவர் பாடியதாம். "அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கையும் மண்ணுலகத்தோரெல்லோரும் வகைபட ஆராய்ந்து தெளியும்பொருட்டுக் குறள் வெண்பாக் களாலே சொல்லப்பட்ட திருவள்ளுவ நாயனாரது முப் பால்களையுடைய நூலகத்திற் சேர்க்கப்படுவதற்கு முனிவரும் புலவரும் வடமொழி தென்மொழிகளில்

செய்த நூல்களில் ஒன்றும் தகுதியுடையதன்று," என்பது இதன் பொருளாகும். இவர் பாடல்களின் அருமை பெருமைகளை விரிப்பின் வரம்பிகந்து செல்லும்; ஆய்ந்துணர்க.

இனி இவருடைய புறப்பாட்டுக்களால் அக்காலத்துச் சோணாட்டு அரசாட்சி வரலாறும் ஒருவாறு அறியக் கிடக்கின்றது. இவர் காலத்தில் சோணாடு உறையூரைத் தலைமையாகக் கொண்ட பகுதியொன்றும் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைமையாகக் கொண்ட பகுதியொன்றுமாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, உறையூர்ச் சோழர், புகார்ச் சோழர் என இரு பிரிவினரான சோழ மன்னரால் ஆளப்பட்டு வந்தது. இங்ஙனம் இந்நாடு பிரிவுண்டது இவர் காலத்துக்குச் சிறிது முன்பிருந்த சோழன் கரிகாலன் காலம் முதலாகும்; இது பட்டினப் பாலை முதலான சங்க நூல்கள் கொண்டு தெளியப்படுவது. இங்ஙனம் இந்நாட்டு அரசுரிமை இரண்டாகப் பிரிந்தமையானே இரு திறத்தார்க்கும் பகைமை மிகுந்து, அடிக்கடி பல போர்கள் நிகழ்வனவாயின.

இப்புலவர் காலத்து உறையூரை ஆண்ட சோழன் நெடுங்கிள்ளி; 'காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி' என்று கூறப்படுபவனும் இவனே. இவன் சோழன் மணக்கிள்ளியின் மகனும் சேரன் செங்குட்டுவன் அம்மானும் ஆவன். புகாரை ஆண்டவன் சோழன் குளமுற்றத்துத்[1] துஞ்சிய கிள்ளிவளவன்; இவன் நெடுமுடிக் கிள்ளியெனவும், மாவண் கிள்ளியெனவும், கிள்ளி

1. குளமுற்றம் சேர நாட்டிலுள்ளது. அங்குச் சேரனோடு செய்த போரில் இவன் இறந்தான். (துஞ்சுதல் - இறத்தல்.)

வளவன் எனவும் கூறப்படுவான். இப்புலவரால் பாடப்பட்டவருள் ஒருவனும், இவரை நன்கு அபிமானித்தவனுமாகிய நலங்கிள்ளி என்பவன், இக்கிள்ளி வளவனுக்குத் தம்பி ஆவன். இவனுக்கு இளையோன் மாவளத்தான்;[1] இம்மூவரும்[2] சோழன் கரிகாலனுக்கு மைந்தராகக் கருதப்படுகின்றனர். இது கரிகாலனது ஆட்சிக் காலத்திறுதியில் செய்யப்பட்ட மணிமேகலையில் புகார்ச் சோழனாகக் கிள்ளி வளவன் கூறப்பட்டிருத்தலானும், பிற காரணங்களானும் அறியப்படும்.

இக்கிள்ளி வளவன் உறையூர்ச் சோழனான நெடுங்கிள்ளியின்மீது தன் தம்பியை ஏவி நடத்திய போரே யாகும் இப்புலவரால் புறம் 44–45-ஆம் பாடல்களிற் குறிக்கப்பட்டபோர். இப்போரின் தொடர்ச்சியே போலும் "ஆர்புனை தெரியல் இளங்கோன் றன்னால், காரியாற்றுக்கொண்ட காவல் வெண்குடை, வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி," எனச் சாத்தனரால் மணிமேகலையுள் குறிக்கப்பட்டதும்! நெடுங்கிள்ளி, 'காரியாற்றுத் துஞ்சிய' என்ற அடையுடன் கூறப்படுதலால், இவ்விடத்து நடந்த இப்போரில் இவன் இறந்திருத்தல் வேண்டும். பின்னர் உறையூர், புகார்ச் சோழனான கிள்ளி வளவனது வசமாய், அஃது அவன் தம்பியான நலங்கிள்ளியால் ஆளப்பட்டது. இவ்வுரிமையாற்றான் புகாரிலிருந்த இக்கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் என்ற புலவர், "பிறங்குநிலை மாடத் துறந்தை யோனே" என 69-ஆம் புறப்பாட்டில் உறையூர்க்குரியவனாகக் குறித்ததூஉமென்க. அன்றி, இங்ஙனம் கூறியது காவிரிப் பூம்பட்டினத்தைக் கடல் கொண்ட பின்னர் வளவன்

---

1. புறம்—432. 2. இவர் மூவரையும் இம்முறையினராகக் கொள்ளுதலின்றி, வேறுபடக் கொள்வாருமுளர்.

உறையூர் போய்ப் புகுந்தானென்று அறியப்படுதலான், அங்ஙனம் அவன் உறையூரை அடைந்த பின்னைய வரலாறு பற்றியுமாம்.

இங்ஙனம் உறையூர்ச் சோழர்க்கும், புகார்ச் சோழர்க்கும் அடிக்கடி நிகழ்ந்து வந்த யுத்தங்களில் மலையமான் திருமுடிக்காரி, உறையூர்ச் சோழர்க்குப் பேருதவியாயும் தனக்குப் பகைமையாயும் இருந்தமை பற்றியே கிள்ளி வளவன் அவன் மக்களைப் பிடித்து யானைக்கிட்டுக் கொல்லக் கருதினன். இம்மலையமானுக்குப் பின் இவன்போலவே இவன் மகன் சோழிய வேனாதி திருக்கண்ணன் என்பானும் தனது முள்ளூர் மலையில் ஓடி வந்து ஒளித்த சோழன் ஒருவனுக்குப் பெருந்துணைவனயிருந்து காத்த செய்தி, 174-ஆம் புறப்பாட்டில் குறிக்கப்பட்டிருத்தல் காண்க. இப்புலவரால் பாடப்பெற்ற குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவனுக்கும், மேற்குறித்த சோழர்க்குமுள்ள தொடர்பு விளங்கிற்றிலது.

இனி இப்புலவர், சோழன் நலங்கிள்ளியின்மீதும் கிள்ளி வளவன்மீதும் பாடிய பாடல்களை ஆராய்ந்தால், புலவர் காலத்தில் புகார்ச் சோழர்கள் உறையூர்ச் சோழர்களை வலி தொலைத்ததன்றி, ஏனைய சேர பாண்டியர்களையும் வென்று தம்மடிப்படுத்தி மிகவும் உன்னத நிலையில் இருந்தார்களென்பது அறியப்படும்.

# 4. பெருஞ்சித்திரனார்

இற்றைக்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னர்ச் சங்க காலத்தில், பல்வகைச் செல்வமுங் கொழித்து விளங்கிய நம் தமிழகத்தில், தமிழ்ப்பழங்குடியிலே தோன்றிய பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் பெருந்தகை, இளம்பருவத்திலேயே சொல்லருஞ்சிறப்பின் நல்லாசிரியரை அடைந்து, அமிழ்தினுமினிய தமிழ் மொழியில் மிகப் பொலிந்திலங்கும் அகப்பொருள் புறப் பொருள்களின் இலக்கிய இலக்கணங்களையும், ஏனைய நூல்களையும் குற்றமறக்கற்று, நாவீறு படைத்த தொல் லாணை நல்லாசிரியராய்ச் சிறந்து விளங்கினர். இவர்தம் ஒப்புயர்வற்ற திப்பியப் புலமையைக் கண்ட பெரியோ ரெல்லாம், "இப்புலவர் பெருமானை ஈன்றுவப்பதற்கு இவர்தம் இருமுது குரவரும் முன்னம் நோற்ற நோன்பு தான் எப்பெற்றியதோ!" எனப் புகழ்ந்து வியந்தனர். புலவரின் வயதும் அறிவும் முதிர்ந்த தாயரும்,

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.'

என்ற பொய்யா மொழியின்படி, அத்தகவுரைகளைக் கேட்டு, அகங்கொளாத மகிழ்வு பூத்தனர்.

புலவரது புகழ்மணம் தமிழகம் முழுவதும் பரவத் தலைப்பட்டது. புகழ் மணமிக்க புலவர்க்கு மணப் பருவம் அண்மியதை அறிந்த அவர்தம் பெற்றோர், திரு மணம் புணர்த்தக் கருதி, அறிவானும் உருவானும் திருவானும் நிகர்த்த ஒரு குல மங்கையை நல்லோரவையில் திருமணம் புரிந்தனர். புலவரும் மனைக் கிழத்தி

யுடன் நெகிழ்ந்த நேயமுடையவராய், ஈருடல் ஓருயி ராய்க் கலந்து, அறவோர்க்களித்தலும், அந்தணரோம் பலும், துறவோர்க்கெதிர்தலும் முதலாகிய இல்லறப் பணியாற்றலில் தலை சிறந்து நின்று விளங்கினர். கற்பு மிக்க மணைவியுங் கற்றுத் துறை போய காதலர்க்குப் பொற்பு மிக்க மைந்தர் பலரை ஈன்றளித்தாள். இங் ஙனம் மக்கட்செல்வம் பெருகி வரப்பெற்ற புலவர், இளம்பருவமுதல் தமிழ்ச்சுவை மடுத்து, அதன் கண்ணே ஆழ்ந்து தோய்ந்து கிடந்த உள்ளம் அவிழ்ப் பதம் பெறுதற்குரிய தொழிற்றுறைகளிற் புகுதலை மறந் திருந்தனராதலின், நாளடைவில் பொருள் வருவாய் குன்ற, அதனால் வறுமைக் கடல் இவரைச் சூழத்தலைப் பட்டது. என் செய்வது!

‘இருவே றுலகத் தியற்கை; திருவேறு;
தெள்ளிய ராதலும் வேறு.’

என்பது தமிழ் மறையின் உண்மையன்றே? பூரியரெல் லாம் செல்வத்தாற் பூரித்து வாழ, நம் புலவர் பெருமக்க ளுள் சிலர் நல்குரவால் நலிவுற்று வருந்துதற்கிருந்த உலகவியற்கையை என்னென்பேம்!

‘பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேல்—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலால் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.’

என்று ஒரு புலவர் கூறியதே இதற்கு உண்மைக் காரணமெனக் கொண்டு அமைவதே பொருந்தும் போலும்!

இலக்கிய இலக்கணக் கடல் கடந்தும், புலவர் அலக் கணுறுத்தும் வறுமைக் கடல் கடக்கும் வகை காணுது அதனுள் ஆழ்ந்தனர். ஆழவே, ஊழ் வினையாம் சுழி

சுழித்தலைத்தது; அவாவென்னும் அலை எடுத்தெடுத் தெறிந்தது; பசியென்னும் மகரமீன் விழுங்கத் தொடங் கிற்று; துன்பமென்னும் சுறு எதிர் பாய்ந்தது: கவலை யென்னும் முதலை பற்றியீர்த்தது. இவற்றால் புலவர் மேனி துவண்டார்; உள்ளம் சோர்ந்தார்; நடுக்குற்றார். மனத்தூன் மிக்க மாண்பினரேனும், ஊழ் வினையால் வந்துருத்த வறுமையை வெல்லுதல் அருமையன்றோ? இதுபற்றியன்றே,

> 'குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
> பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
> நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
> பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
> பசிப்பிணி யென்னும் பாவி.'

எனத் தண்டமிழாசிரியர் சாத்தனாரும் கூறினர்?

செந்தமிழ் மணம் சந்ததமும் வீசப் பெற்ற புலவரது இல்லம், இலம்பாட்டிற்கு இருப்பிடமாய்ப் பொங் காத அடுப்பையும், புகையாத அட்டிலையும், கழுநீர் கழியாத தொட்டியையும் உடையதாயிற்று. புலவரின் மனைவியோ, பூவுஞ்சூடாள், நீரும் ஆடாளாய், ஒப் பனையொன்றுமின்றி, வேற்றிழை நுழைந்த பீற்ற லாடையன்றி மாற்றுடையறியா இடையும், ஆம்பல் தண்டு போல உணவின்றி உணங்கிய உதரமும், நகை யிழந்த முகமும், புகையிழந்த கூந்தலும், பாலின்றி மிகவும் வறண்டு பொலிவிழந்த மார்புமுடையவளாய்க் கலனொன்றுமில்லாது, இடும்பைக்கொரு கொள்கலனாய், வாடியிருந்தனள். பச்சிளங்குழவியோ, பசியால் தாயின் பாலில்லாத மார்பைப் பன்முறை சுவைத்தும் அதில் பால் சுரவாமையால், தாயின் முகத்தை நோக்கி அழும். அப்பொழுது அவள் புலவரின் முகத்தை நோக்கி இனைந் திடுவள்: புலவர் அதனைக் கண்டு அகம் நைந்திடுவர்.

ஒரு மகன், பசி வெதுப்பப் பொறாது அட்டில் புகுந்து உணவில்லாத வறுங்கலங்களைத் திறந்து திறந்து பார்த்து, அவற்றுள் ஒன்றுமில்லையாக, விம்மி விம்மி ஏங்கிக் கண்பிசைந்தழுது நிற்பன். அக்காலை தாய் அவனுக்குப் 'புலி! புலி!' என்று பலி வரவு சொல்லியும், அப்புலி காட்டியும், சோற்று நினைவை மாற்ற முயன்றிடுவாள். ஒரு சிறான், 'அன்னே, சிறிது கூழ் வார்,' என அவள் தன் சிதராடைபற்றி ஈர்த்து நிற்பன்; ஒரு சிறான், 'அடுத்த அகத்துச் சிறுவன், 'உங்களகத்தில் இன்று என்ன கறி அட்டார்கள்?' என்று கேட்டான், கறி என்பது என்ன?' என்று வினாவி நிற்பன். அதனை இன்னதெனச் சொன்னால் அது கொடுவென்றால் என் செய்வதெனக் கருதி, வேறொன்று சொல்லி, அன்னை அதனை மறக்கச் செய்திடுவாள். புலவர் தாயாரோ, வெள்ளிய நூலை விரித்து வைத்தாற்போன்ற நரையையுடையவராய்க் கோலையே கண்ணாகக் கொண்டு வீட்டு முன்றிலுக்கும் கடக்கவியலாது தளர்ந்து, பசியால் உலர்ந்து வாடினர். இவற்றையெல்லாங் கண்ட புலவர், எத்தனை நாட்கள்தான் பொறுத்திருப்பார்! மனம் அலமந்து கவன்று, "இவ்வறுமைக் கடலை எவ்வாற்றாற் கடப்பது!" எனத் தமது ஆழ்ந்த சிந்தையில் கூர்ந்து சூழ்பவராய், "அருளையும் அன்பையும் ஈருருளாய்க் கொண்டு தலைவன் தலைவியர் என்னும் எருதுகளீர்ப்ப இயங்கும் இவ்வில்லறச் சகடம், பொருளென்னும் அச்சாணி இறுமேல், எங்ஙனம் இயங்கும்? பொருளில்லெனில், இல்லறம் இல்லறமேயாகும்;

'அருளில்லார்க் கவ்வுலக மில்லை; பொருளில்-
கிவ்வுலக மில்லாகி யாங்கு.' [லார்க்

'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.'

என்று தெய்வப் புலவர் மெய் வாக்குக்களும் முழங்குகின்

றனவே! ஆதலான், பொருட்கலம் பெற்ருலன்றிப் பொருவற்ற இன்மையின் இன்னற்கடலைக் கடத்தல் இயலாததாகும்; அதனைத் தாண்டுதற்கு இரவென்னும் தோணியைக் கைப்பற்றின், உலோபர் கரவென்னும் பார் தாக்கி உடைந்தாழ்ந்துவிடும்; அஃதன்றியும், இரவினை உள்ளத்தால் உள்ளும்போதே உள்ளம் உருகுகின்றது. அங்ஙனமாக, அதனைக் கைக்கொள்ளுங்கால் என்னுகும்! இதனாலன்றோ, 'கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும், இரவாது வாழ்வதாம் வாழ்க்கை,' என்று ஆன்ரோர் கூறுவாராயினர்? எவ்வாற்ருனும் இரத்தலை மேற்கொள்வது இறப்ப இழிதகவையாகும். ஆகையால், அது நீங்கிப் புலவரது செந்நாவினின்றும் சுரந்தெழுந்து அழியாது நிலவுதலுறும் செந்தமிழ்ப் பாட்டுக்களாம் புகழ்ச் செல்வத்தைப் பொருட்செல்வர்க்குக் கொடுத்து, அவரிடம் பெறும் பரிசில் பண்டமாற்ருகுமேயன்றி, இரத்தல் எனப்படாது; ஆகையால், அங்ஙனம் பெறும் பரிசில் நன்கலமாம் மரக் கலத்தாலேயே இவ்வறுமைக் கடலைக் கடப்பது தக்க செயலாகும், என்று அறுதியிட்டு, அந்நெறிச் செல்ல மனம் குவிந்து நின்ருர்.

அங்ஙனம் துணிந்து நின்ற புலவர், "உலகத்தில் செல்வராயினுர் எல்லாரிடத்தும் சென்று பரிசில் பெறுவது தகவுடையதாகாது. செல்வரெல்லாம் செல்வரல்லரே! எட்டி, பழுத்துமென்? கிடை, நீருட்பன்னுள் கிடப்பினுமென்? அவற்றில் இன்சுவையும் ஈரமுமுளவாமோ? செந்தமிழால் தோட்கப்படாத உலோபரது மரச்செவியில் திப்பியக் கவியமுதைச் சொரிதல் அமிழ்தத்தைக் கமரிடை உகுத்ததாகும்; தமிழருமையும் புலவர் பெருமையும் நன்கு தெரிந்த உண்மைச் செல்வராம்

கொடைமடத் தன்னளியோரையே அடைதல் வேண்டும்; அத்தன்மையோராகிய முல்லைக்கொடிக்குத் தானேறிச் சென்ற பொற்றேரைக் கொழுகொம்பாய் நிறுத்தித் தன் கழலடி சிவப்ப நடந்து வந்தவனும், தன் முந்நூறு ஊர்களையும் புலவர்க்கு நல்கியவனுமான பாரியும்; மயிலுக்குப் போர்வை யீந்த பேகனும்; இரப்போர் குறிப்பறிந்து வேண்டுவன கொடுத்துப் புரப்போராகிய நள்ளி, ஓரி, காரி, ஆய் ஆகியவர்களும் இறந்துபட்டனரே! என் செய்வது! எனினும், இனி அவர் வரிசையில் வைத்துச் சொல்லத் தகும் வள்ளியோருள், அதிகமான் நெடுமானஞ்சி என்பவன் ஒருவனேயுளன்; அவனுழைச் சென்றால், நம் வறுமை களையலாகும்," என்று தம் மனத்தில் நீடு நினைந்து, அவனைக் காணுதற்குப் புறப்பட்டுப் பல அருஞ்சுரங்களையும் குன்றுகளையும் மலைகளையுங்கடந்து, அவனது தகடூரை அடைந்தார். அடைந்தவர், அதிகமானைக் காணுதற்குச் சில நாள் காத்திருந்தனர். அவன் கொடையிற்சிறந்த கோமானாயிருந்தும், யாது காரணத்தாலோ, அங்ஙனம் பரிசில் வேண்டிக் காத்திருக்கும் புலவரை நேரில் வந்து கண்டு அவருடன் அளவளாவிப் பரிசில் வழங்காது, தன் ஏவலாளர் மூலம் சில பரிசிலைக் கொடுத்துப் புலவர்க்களிக்கும்படி செய்தான். இதனை அறிந்த புலவர், அவற்றைப் பெற்றுக்கொள்ளாது, கோபங்கொண்டு பரிசில் கொணர்ந்தாரை நோக்கி, "பரிசில் பெறும் பொருட்டுக் குன்றும் மலையுங் கடந்து வந்தேன் என்று சொல்லி அனுப்பிய என்னிடம் அன்பு கொண்டு, 'இப் பொருளைக் கொண்டு இவ்வாறு போக,' என்று விடுப்பதற்கு என்னை எத்தன்மையனாக அறிந்தான் அரசன்? என்னை அழைத்துவரச் சொல்லிப் பாராமலே தந்த இங்

தப் பொருளைப் பெறுதற்கு யான், இலாபத்தையே கருதும் வெற்று யாசகனல்லேன்; எனது கல்வி முதலிய பெருமையின் அளவை அறிந்து கொடுத்துவிடின், அப் பரிசிற்பொருள் தினையளவு சிறிதே எனினும், நல்லதாகும்," என்னுங் கருத்துப்பட,

'குன்றும் மலையும் பலபின் னொழிய [கென
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கு
நின்ற வென்னயந் தருளி, 'ஈது கொண்(டு)
ஈங்கனஞ் செல்க தான்,' என வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்?
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன்: பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே.'

என்ற பாடலைத் தமது பெருமிதந் தோன்றக் கூறிவிட்டு, அவ்விடம் விட்டகன்று வழிகொள்வாராயினர்.

அவ்விடம் வழிக்கொண்டு வந்த புலவர், 'வெளிமான் என்னும் ஒரு சிற்றரசன், புலவர் விதைத்த ஞான வித்து விளைந்த செவிப்புலன் உடையவனாய்ப் புலவரைக்காணின் வருகவென்று உபசரித்தழைத்து உவந்து அவர்தம் வரிசையறிந்து தேருங் களிறும் ஓம்பாது வீசும் வண்மை மிகுந்தவனாய் வாழ்கின்றான் என்பதனைக் கேள்வியுற்று, அவனைக்காணுதற்கு விரும்பி, வெளிமானூர் போய்ச் சேர்ந்தார். சேர்ந்த புலவர், வெளிமானைக் காணுதற்கு அவனுழைச் சென்ற போது, அவன் பிணி வாய்ப்பட்டு உயிர் துறக்கும் இறுதியுடையவனாயிருந்தான்; அங்ஙனமிருந்தும், புலவரைக் கண்டவுடன் அகங்குழைந்து,

'ஆவியோ நிலையிற் கலங்கிய தாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்!

பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால் !'

என்று கர்ணன் தனது இறுதிக் காலத்தில் தன்னகத்துத் தானம் வேண்டி வந்த கண்ணனும் மறையோனுக்குக் கூறியது போல இரங்கிப் பலபல கூறித் தன் தம்பி யாகிய இளவெளிமானை நோக்கிப் புலவரது கல்விப் பெருமையை நன்குணர்த்தி, "இவர் தகுதிக்கேற்ப வேண்டுவன நல்குதி," என்று கூறிவிட்டு, அந்தத் தியாக வாரிதியாகிய வெளிமான் இம்மண்ணுலகை நீத்து, இறைவன் திருவடி நிழலை அடைந்தான்.

இதனைக் கண்ட புலவரது உள்ளப் பான்மை இருந்தபடி சொல்லவும்படுமோ! உள்ளங் கரைந்து என்பு நெக்குருகத் தன்புற்று, "வீர பானத்தை விரும்பும் வெளிமான், பிணங்களைக் கவிழ்த்து வைத்திருக்கும் முதுமக்கட்டாழிகளின் குவிந்த புறத்திலிருக்கும் கழுகுகளும், பொகுவற்பறவையும், காக்கையும், கோட்டானும் பேயினத்துடன் கூடிச் சஞ்சரிக்கும் சுடுகாட்டை அடைந்தானே! அவனது வளையல் களைந்த மகளிர் போலப் புலவர் சுற்றங்களும் ஒளி மழுங்கினவே! அவனது வீர முரசம் முதலான முரச வாத்தியங்களும் கண் கிழிந்தனவே! யானைகளும் கொம்பிழந்தனவே! இவ்விதமாக அவனை யமன் கொல்ல, நான் அதனை யறியேனாய் வந்தேனே! அந்தோ! இஃதறியின், என்னை துயராழுறுவரோ என் சுற்றத்தார்! மழை பெய்யும் நள்ளிரவிலே கடல் நடுவே மரக்கலங் கவிழ, அக்கடலுள் கண்ணில்லாத ஓர் ஊமன் வீழ்ந்தாழ்ந்தாற்போல, எல்லையில்லாத துன்ப வெள்ளச் சுழியிற்பட்டுச் சுழலுவதிலும் இறந்துபடுதலே தக்கதும் நல்லதுமான செய்கையாகும். நான் அது செய்யப்பெற்றிலேனே!"

என்று பலவாறு கையற்றுப் புலம்பி னொந்தார்.

இங்ஙனம் மனமறுக்கமுற்று நைந்த புலவர், திருவருளை உன்னி ஒருவாறு தேறி, ஆண்டுச் சின்னாள் தங்கியிருந்து, பின்னர் வெளிமான் தம்பியாகிய இளவெளிமானுழைச் சென்று, தமது வறுமைத் துன்பமெல்லாந் தோன்றக் கூறி, அதனை நீக்க வேண்டினார். ஒரே வயிற்றில் பிறந்த பல்லோருள்ளும் ஒவ்வொருவர் குணமும் செயலும் ஒருபடியாயிராமல், வெவ்வேறு வகைப்பட்டிருத்தல் உலகினியற்கையன்றோ? அதன்படியே நம் வெளிமான் சிறந்த வள்ளியோனாயிருந்தும், அவனுடன் தோன்றியவனாகிய இளவெளிமான் புலவரருமையறியாத புன்மைக் குணமும், உலோபமும் மிகுந்தவனாயிருந்தான். ஆகையால், அவன் புலவரது உள்ளம் வேறொருவரை உள்ளாதிருக்கும்படி கொடுக்கும் வகையறியாதவனாய், ஏதோ சிறிது கொடுத்தான். விழுமியோராகிய புலவர், மானமழுங்க வரும் அப்பொருளைப் பொருட்படுத்துவரோ? புலவர் அதனை ஏற்றுக்கொள்ளாது, "வெளிமான் வறுமையால் துன்பமுற்றோர்க்குக் கோடை காலத்து அருஞ்சுரத்து நிழல் மரம் போல உபகரிக்கும் குணமுடையவனென்றும், கேள்வி வித்து நன்கு நிரம்பிய செவிப்புலன் உடையவனென்றும் விரும்பி வந்து அவனது வாயிலையணுகிப் பாடி நின்ற காலத்தில், சோறு சமைக்கும் கலத்தில் சோறின்றித் தீப்புறப்பட்டது போல, எனது எண்ணம் எல்லாம் பாழாக, வெளிமானது உரிமை மகளிர் இரங்க, பரிசிலர் வருந்த, அறமில்லாத கூற்றம் உயிரைக் கொள்ள, அவன் போய்ச் சுடுகாடு சேர்ந்தான். அவனைக் கொன்ற கூற்றம் நோயின்றி வாழ்வதாக! புலியானது தனக்கு இரையாக அடித்த

யானை தப்பிவிடுமானால், அது பற்றித் தனக்கு இரையாவதற்குப் போதாத எலியைப் பார்த்து வீழ்த்தாது; அதுபோலத் தகுதியில்லாத இப்பரிசிலைக் கொள்ளாது, கடலின்கண் மண்டும் ஆற்று நீர் போல விரைந்து சென்று, மிகுதியையுடையதாகிய பரிசிலைக் கொண்டு வருவேமாக; கலங்காது எழுந்திராய் நெஞ்சே!" என்றும், "கன்றுற்பருகுவதுபோல விருப்பமிலாதவிடத்துத் தம்மருகே கண்டு வைத்தும் காணுதார்போல உள்ள மகிழ்ச்சியின்றி முகம் மாறித் தரப்பட்ட பரிசிலைப் பிறிதோரிடத்துச் செல்ல முயலும் முயற்சியில்லாதோரே விரும்புவர்; 'இங்ஙனம் வருவீராக,' என்று எதிர் கோடல் வேண்டும் தரமுடையோர்க்குப் பெரிது உலகம். அவரை விரும்புவோரும் பலர். நன்றாகக் கனியாத பழத்தின்பொருட்டுச் சுழல்வோர் யாவர்? அது போல, நம்மைக் கண்டு இரங்காதவனிடத்தே நின்று வருந்தி, நெஞ்சு நெகிழ்ந்து கொடாத பரிசிலை விரும்புவதோ! நெஞ்சமே, முயற்சி குன்றாது யாளி போல எழுந்திருப்பாயாக!" என்றும் இளவெளிமான் முன்னர்த் தம் நெஞ்சோடு கிளப்பவராய்த் தம் பெருமிதந்தோன்றக் கிளந்தும், வெளிமான் பிரிவாற்றாது தளர்ந்துங் கூறி, முனைந்தெழுந்தார்.

எழுந்த புலவர், உள்ளந் துரப்புதலான் ஓரிடத்துந் தங்காது வழிக்கொண்டு, காடிடையிட்ட ஊர்கள் பலவற்றைக் கடந்து வருங்கால், "முதிர மலைக்குத் தலைவனாகிய குமணன் என்பவன் தன்பெயருக்கேற்பத் தனது புகழ் மணம் உலகெலாம் சென்று பரவக் கடையெழு வள்ளல்களுக்குப்பின் புலவர்களுக்குக்களைகணாய் நின்று விளங்குகின்றான்," என்று, அவன்பாற்சென்று, பெருஞ்செல்வ வளம் பெற்று வரும் புலவர், பாணர், கூத்தர்

முதலாயினுர் வழியிடைக் கண்டு கூறிப் புலவரை ஆற்றுப்படுக்கப் புலவரும் அவனிடத்துச் சென்ருல் தமது மிடியெல்லாம் அடியோடு தொலைந்தோடுமென்று உளங்கொண்டு, விரைந்து போய், அவனது முதிரமலையை அடுத்துள்ள நகரத்தைக் குறுகிக் குமண வள்ளலைக் கண்டு, மகிழ்வு பூத்தார். குமணனும், புலவர் வருகையை அறிந்து, எதிர்சென்றழைத்துவந்து, பூந்தவிசில் அமர்த்திப் பருகுவான்போல அருகாநோக்கமொடு முடிமுதல் அடிகாறும் நோக்கி, அன்பு கனிந்த முகமனுரைகளைத் தகவுடன் மொழிந்திட்டான்; புலவருக்கு வழிவந்த வருத்தமெல்லாம் ஒழிந்திட்டது. பின்னர் அரசன் புலவரை உண்பிக்கக் கருதிப் பொற்கலங்களில் குய்யோடும் கொழுந்துவையோடும் கூடிய நெய்யடிசிலை மகளிர் கொண்டு வந்து இட, 'உண்மின்! உண்மின்!' எனப் பன்முறை வேண்டியூட்டப் புலவருண்டு, தமது வாடிய குடலும் உடலும் தண்ணெனக் குளிரப்பெற்ருர். பின்பு குமணன் புலவருடன் வைகித் தமிழ்மொழியின் இழுமென்னும் ஓசை அமைதியையும் அதன் எழுத்து, சொல், பொருள் எனும் இலக்கண அமைதியின் அழகுகளையும், சொன்னயம் பொருணயம் முதலிய பன்னயங்களையும் பற்றி நெடுநேரம் உரையாடிப் புலவரது புலமை மாட்சி உணர்ந்து வியந்து மகிழ்ந்து, "நாம் உடனே பரிசிலளிப்போமாஞல், புலவர் இவண் விட்டகலக் கருதுவர்," எனக்கருதி, அவர்தம் பிரிவுக்கஞ்சிப் பரிசில் தாராது தாழ்த்திருந்தனன். புலவர், தம் மனைவியும் மக்களும் தாயாரும் நாடோறும் படும் பசித்துன்பம் உள்ளத்தில் நின்று உறுத்துதலான், அவர்களது துன்பங்களைய விரைந்து செல்லக் கருதித் தமது உட்கிடையை அரசனிடம் உணர்த்தலாம் செவ்வி தெரிந்து,

'முரசுகடிப் பிடிப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும், பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வில் ஓரியும்,
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையனும்,
ஊரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்,
ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும், திருந்துமொழி
மோசி பாடிய ஆயும், ஆர்வமுற்
றுள்ளி வருநர் உலைவுநனி தீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளியும், எனவாங்(கு)
எழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கென விரைந்திவண்
உள்ளி வந்தனென் யானே; விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்
அதிரா யாணர் முதிரத்துக் கிழவ!
இவண்விளங்கு சிறப்பின் இயல்தேர்க் குமண!
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ ஏந்திய வேலே.'

*என முதற்கண் அவனது வேலை வாழ்த்திக் கொடைத்*

திறனைப் புகழ்ந்து, தாம் வந்த காரியம் இன்னதெனக் குறிப்பித்துப் பின்னரும், "கூர்வேலேந்திய குமணனே, வசையில்லாத குடியிற்பிறந்து இசை மிகுந்தவனே, நின்னைப் பாடிய யான், ஏந்திய கொம்புகளையுடைய யானையைக் கொடுப்பினும் உண்மகிழ்ச்சியின்றி முக மாறித் தரும் பரிசிலை ஏற்றுக்கொள்ளேன். தமக்குக் கழிந்த ஆண்டுகள் பலவாகலின் வயது முதிர்ந்து, அத னால், 'இன்னும் போகின்றதில்லையே எனதுயிர்!' என்று சொல்லிக்கொண்டு வாழும் நாளோடு பலவாறு வெறுத்துத் தாம் கையிற்பிடித்த கோலையே காலாகக் கொண்டு, ஒன்றற்கொன்று அணுகப் பல அடியிட்டு நடந்து, வெள்ளிய நூலை விரித்தாற்போலும் நரை மயிரையுடையவராய்க் கண்ணொளி மழுங்கி, முற்றத் திடத்துங்கூடப் புறப்பட முடியாத மூப்புத் துன் பத்தையுடைய என் தாயாரும்; பசந்த மேனியுடனே வருத்தமுற்று, மருங்கிலே எடுத்த பல சிறு பிள்ளைகள் பிசைந்து மெல்லுதலால் உலர்ந்த மார்பை யுடையவளாய்ப் பசியால் வருந்திக் குப்பையின்கண் தானே முளைத்த கீரையின் இளந்தளிரைப் பறித்துக் கொண்டு போய் உப்பில்லாமல் நீரையே உலையாக வைத்து அடுப்பேற்றி, அவித்து, மோரில்லாமலும் சோறில்லாமலும் அக்கீரை உணவையே உண்டு, மாசுண்ட இரண்டாகத் துண்டுபட்ட ஆடையையுடை யவளாய், அறக் கடவுளைப் பழித்து நொந்து உண்ணு திருக்கிற என்னைக் காதலித்த மனைவியும், உனது பாரி யன்ன வரையா வண்மையை வாழ்த்தும் என் சுற்றங் களும் மனமகிழும்படி, நீ உவந்து ஏதாவது தந்தனுப்பு வையாயின், அது குன்றியளவினதேனும், குன்றினள வினதாக மகிழ்ந்து கொள்வேன். ஆகையால், இங்ஙு

னம் மனமகிழக் கொடுக்கும் கொடையையே நான் நின்னிடம் வேண்டுகின்றேன்,'' எனவும்; ''விண் மீனைப் போன்ற பொன் வட்டில்களில் தாளிப்போடு கூடிய துவையலோடு நெய்ச்சோற்றை இட்டு, வெயிலால் உலர்ந்த காடு தளிர்க்கும்படி மழை துளியைச் சொரிந்தாற்போலப் புலவர் சுற்றங்களது பசியால் உலர்ந்த உடம்பும் குடலும் குளிரும்படி ஊட்டிக் 'கேடில்லாத தாக பாடுவாரது சுற்றம்!' என்று வாழ்த்திப் பொன்னணிகளை ஓம்பாது கொடுத்துத் தன் நாட்டோரிடத்துச் செய்யும் அன்பினும் பன்மடங்கதிகமான அன்பை என்மீது செலுத்திய குமண வள்ளல், மது நிரம்பிய தெருவினையுடைய முதிரத்தின்கண்ணுள்ளான்; நீ அவன்பால் செல்லுவையாயின், நினக்கு நீ வேண்டிய வேண்டியாங்குத் தருவன்,' என்று நினது பல புகழையும் சொல்லுவோர் சொல்ல, அதைக் கேட்டுக் கடிதாக விரைந்து எனது உள்ளந் தள்ளுதலான் வந்தேன்; உண்ணப்படும் உணவு சிறிதுமில்லாத என் வீட்டின்கண் புல்லிய குடுமியையுடைய புதல்வன், தாயின் பாலில்லாத வெறுமார்பைப் பன்முறை சுவைத்தும், ஒரு துளிப் பாலும் பெறுனாய், அதனை விட்டுக் கூழையும் சோற்றையும் விரும்பி விரைந்து போய், உள்ளேயொன்றுமில்லாத வெறும்பானைகளைத் திறந்து திறந்து பார்த்து, அங்கு ஒன்றுங் காணாமையாலே, கண் பிசைந்து அழ, அவனைப் புலி வருகிறதென்று புலி வரவு சொல்லி அச்சமுறுத்தியும் அப்புலி காட்டியும் அழுகையைத் தணிக்க முயல, முடியாது வருந்தினவளாய், 'நின் பிதாவை நினைந்து வெறுத்த நின் செவ்வியைக் காட்டு,' எனச் சொல்லக் கேட்டு, மிகத் துன்புறும் என் மனைவி, நீ கொடுக்கும் செல்வத்தால் மகிழும்

படி, விரைவாய்ப் பரிசில் தந்து விடுத்தலை விரும்புகின்றேன்,'' எனவும், தாமும் தம் மனைவி, மக்கள், தாயார் முதலியோரும் வறுமையால் உழக்கும் இன்னல்களையெல்லாம் ஓர் ஓவியன் உலகத்து இயற்கைப் பொருளுருவின் திறங்களை அழகு பெறக் கிழியில் தீட்டிக் காட்டுதல் போலத் தம் பாட்டுக்களிற் கனிந்து தோன்ற எடுத்துக் காட்டி, உண்மையில் பெருஞ்சித்திரனாராகவே விளங்கினார்; இங்ஙனம் எடுத்துக்காட்டி இதனுடைமையாது, பின்னரும் கூறத் தொடங்கி, "வென்றி மிக்கோய், கடல் குறையுமாறு நீரை முகந்து சூற்கொண்டு வேண்டுமிடங்களிற்பெய்யும் மழை வறங்கூர்ந்த கோடைகாலத்தில், உலகத்து உயிர்களெல்லாம் சென்றுண்ணுதற்குக் கங்கையாற்றின் வெள்ளம் பெருக்கெடுத்துத் தோன்றினாற்போல, நீ எங்கட்கும் பிறர்க்கும் உபகாரத் தலைவனாய்த் தோன்றி விளங்குகின்றாயாதலின், ஆறலை கள்வர் வழிப்போவாரை அடித்துக் கொன்று பொருளைக் கவர்தலால் செல்லுதற்கு முடியாததாயிருக்கும் அருஞ்சுரத்தின் வழியாகத் தன்னை அன்பின்றிப் பிரிந்து பரிசில் பெற வந்தமைக்கு ஆற்றாது பலவாறு துன்பமுறும் என் மனைவி, உன்னால் கொடுக்கப்படும் முயற்சியால் உண்டாகிய செல்வத்தைக் காணுந்தோறும் வியப்பதற்குப் பனை போன்ற கையையும் முத்து விளைந்து முதிர்ந்த தந்தங்களையுடைய பெரிய யானையின் மீது அதன் நெற்றிப் பட்டம் விளங்கவும், பக்க மணிகள் மாறி மாறி ஒலிக்கவும் ஏறித் தலைமை தோன்ற இருந்து, மனையார்க்குப் போதலை விரும்பினேன். குமண வள்ளலே, எனது வறுமை பின்னே நின்று துரத்த, உனது புகழ் முன்னே நின்று ஈர்த்துக்கொண்டு வர

வந்து, உனது கை வண்மைகளிற் சிலவற்றைப் புகழ்ந்து பாடிய என்னுரைகளை விரும்பிக் கேட்பாயாக: சிலவற்றைச் சொல்ல அறிவேனாயினும், அறியேனாயினும், விரைவாய் என் கல்வியளவை ஆராய்ந்தறிந்தனையாய்ச் சிறந்த உனது தகுதியையும் அளந்து, அதற்குத் தக அளிப்பாயாக. பெருமானே, எந்நாளும் எனது மிகுதியைக் கண்டு அரசர் நாணும்படி இவ்விடம் விட்டுப் பெயர்ந்து போவேன்; உனது வாட்போரின் முயற்சியையும் சீர் மிக்க செல்வத்தையும் படையையும் பலபடப் புகழ்வேனாக." என்று குமண வள்ளலின் பெருங் கொடைத் திறம் முதலியவற்றை அருங்கவியாற் புகழ்ந்து வாழ்த்திக் களிறு பெறும் தமது கருத்தைக் குறிப்பித்தார்.

குமணன் இவற்றையெல்லாம் கேட்டு, அகங் கரைந்து, அருள் சுரந்து, பொருக்கென்றெழுந்து, சரக்கறை திறந்து, கொட்டைக் கரைகளையுடைய பட்டுடைகள் பலவும், பாம்பின் உரிபோல் காம்பு சொலிக்கும் மெல்லிய தூய தூசுகளும், பொற்குவியலும் புலவர்க்கு எடுத்தெடுத்தளித்துப் புலவர் விருப்பப்படி அவர் ஊர்ந்து செல்லுதற்குத் தந்தம் படைத்த களிறொன்றும் தந்தனன். புலவர் அச்செல்வங்களையெல்லாம் விருப்புடன் ஏற்றுக் குமணனது ஈகை மாரியை வியந்து, உவந்து, உள்ளம் மலிந்து, உடம்பு பூரித்துத் தமதூர்க்குச் செல்ல அவன்பால் விடை வேண்டினர். அவனும் புலவர் பிரிவுக்கு வருந்திப் புலவர் கரங்களைப் பற்றியும், இறுகத் தழுவியும், அகங்குழைந்தும், கனியினுமினிய முகமன் கூறியும், ஏழடி பின் நடந்து வந்து, விடையீந்தான்.

புலவர் மதமாவின் எருத்தம் இலங்க ஏறி வீற்றிருந்தார். நால்வாயும் வறுமைக் கடல் கடக்கும் நாவா

யென விரைந்து சென்றது. இங்ஙனம் தம்மூர் நோக்கி வரும் புலவரேறு, புலவர்களின் அருமை பெருமை அறியாதும், தமது புலமையின் வீறு உணராதும் வரிசையின்றிச் சிறிது கொடுத்தவனாகிய இளவெளிமானுக்குப் புலவரது மிகுதிப்பாட்டையும், அவரது தரமறிந்து கொடுப்போரது தகுதிப்பாட்டையும் நன்கு அறிவுறுத்தக் கருதி, இளவெளிமானது ஊர் முகமாகத் தாம் ஊர்ந்து செல்லும் களிற்றைச் செலுத்தி, அதனை அவனது காவன்மரத்தில் பிணித்துவிட்டு, இளவெளிமானுழைச் சென்று,

'இரவலர் புரவலை நீயு மல்லை;
புரவலர் இரவலர்க் கில்லையு மல்லர் ;
இரவல ருண்மையுங் காணினி: இரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல்! செல்வல் யானே."

என்ற செய்யுளால், "இரப்போர்க்குக் கொடுத்துப் பாதுகாப்பவன் நீ ஒருவனே யல்லன் ; பாதுகாப்போர் யாசிப்பவர்களுக்கு இல்லாமற் போகவுமில்லை; இனிப் புலவர்க்குள்ள பெருந்தன்மையை என்னளவிலே காண்பாயாக; அவர் தகுதியறிந்து கொடுப்போரிருப்பதையும் பார்ப்பாயாக. உன் ஊரில் உள்ள காவலையுடைய மரம் வருந்தும்படியான் கொண்டு வந்து கட்டிய உயர்ந்த நல்லிலக்கணமமைந்த யானை, எனது பரிசில்; விரைவான கதி பொருந்திய குதிரைகளையுடைய தலைவனே, இனி யான் செல்வேன்," என்னும் தமது கருத்தைப் பெருமிதத்துடன் கூறிவிட்டுத் தமது பகட்டின் மீதிவர்ந்து சென்றார்.

காவல் மரமென்பது, பண்டைக் காலத்துத் தமிழ்

கத்தரசர் ஒவ்வொருவராலும் தத்தம் வென்றிக்கறிகுறியாக அமைய ஒவ்வொரு வகையில் தமதூர்ப்புறச் சோலைகளில் வைத்து வளர்த்துக் குறிக்கொண்டு காக்கப்பட்டது படையெடுத்துவரும் பகைவேந்தர்கள் அக்கடி மரத்தையே முதற்கண் தடிய முற்படுவார்கள்; அங்ஙனம் அவர்கள் அதனைத் தடிந்துவிடுவார்களாயின், அம்மரத்துக்குரிய அரசர்க்குப் பெருந்தோல்வியும் பேரவமானமும் எய்தியதாகக் கருதப்படும். பகை வேந்தர்கள் அம்மரத்தில் தங்கள் யானைகளைக் கட்டுதலும், அதனை வெட்டிக் கொண்டுபோய்த் தங்கள் யானைகட்குக் கட்டுத் தறியாக நட்டு வைத்தலும், அம்மரத்தால் தங்களுக்கு வீர முரசம் செய்வித்தலும் மரபு. இத்தகைய சிறப்பியல்பு வாய்ந்த காவல் மரத்தில் புலவர் வேறோரரசன் கொடுத்தகளிற்றைக் கொணர்ந்து கட்டி, அரசனாகிய இளவெளிமானுக்குச் சிறிதும் அஞ்சாது இங்ஙனம் கூறுவாரெனின், இவரது அஞ்சாத நெஞ்சத்தை என்னென்று வியப்பது!

இங்ஙனம் மிடுக்குடன் கூறிச் சென்ற நாவீறுடைய நல்லிசைப்புலவர், களி ததும்பிய உள்ளத்துடன் தமதூரை அண்மினர். ஊரவர் அனைவரும் புலவரது ஆடம்பரமான வருகையைக் கண்டு, "இஃதோர் அரசிளங்குமரனது வருகையோ!" என்று ஐயுற்றுப் பின்னர்ப் புலவரென்பதையறிந்து, விம்மிதமுற்றனர். புலவர் கைம்மாவினின்றும் இழிந்து, அகம் புகுந்து தம் அன்னையாரையும் மனைவி மக்களையுங்கண்டு, மகிழ்ந்துரையாடிச் சென்றவிடங்களின் நிகழ்ச்சி பலவுஞ் சொல்லி, தாளாண்மையான் வந்த பொருளையெல்லாம் வேளாண்மை செய்யும் குமண வள்ளல் உவந்தளித்த பரிசில்களையும், மாதங்கத்தையும் இன்பமுறக் காட்டினர். மனைக்

கிழத்தியும் கரை காண அரிதான களிப்புக் கடலுள் மூழ்கினாள்.

பின்பு புலவர் மனையாளை நோக்கி, "குமணவள்ளல் நல்கிய இப்பெரும்பொருட்குவியலை நாம் மாத்திரம் உண்டின்புறுவது தகவுடையதன்று; ஆகையால், இவைகளைப் பொருளற்றோர்க்கும் மற்றோர்க்கும் உபகாரமாய் நானும் வழங்குகின்றேன்; நீயும் உன்னைக் காதலித்துறையும் உன்னைச்சார்ந்த மகளிர்க்கும், உன்னால் அன்பு செய்தொழுகப்பட்ட மகளிர்க்கும், உனது சுற்றத்து வயது முதிர்ந்த மகளிர்க்கும், நமது மிக்கபசி நீங்க நெடுநாளாக நமக்குக் கடன் கொடுத்துதவி வந்தோர்க்கும், இன்ன தன்மையரென்று கருதாது, என்னோடு உசாவவுஞ் செய்யாது, 'இப்பொருளைச் சேமித்து வைத்தால் கால முழுதும் சதுரப்படக் குடிவாழ்க்கை வாழக்கடவேம்,' என்றும் கருதாது, யாவர்க்கும் வழங்குவாயாக," என்ற கருத்தை அறிவுறுத்தக் கருதி, அதனை,

'நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.'

என்ற பாடலால் அவளுக்கு வெளிப்படுத்தினர். மனையாளும் அங்ஙனமே வழங்கி மனையறத்தைச் செவ்வனே நடாத்தினள்; புலவரும் கவலை ஒன்றுமின்றிச் செந்தமிழாராய்ச்சி செய்தும், தேனினுமினிய பாக்கள் பல யாத்

தும், தமிழ் மொழியை மாணவர் பலர்க்குச் செவியுறுத்தியும் அருங்கலை விநோதராய்த் திகழ்ந்திருந்தனர்.

ஆராய்ச்சி :

பெயர் : கண்ணுக்குப் புலனாகும் தூலமான உலக இயற்கைப் பொருள்களைத் தன் கண் முதலிய புலன் அறிவு கொண்டு, பல்வேறு வகையான வண்ணங்கள் கலந்து தூரிகையால் படாத்தில் பன்னாளும் நுனித்து நுனித்து ஆராய்ந்து விரையாது ஓர் ஓவியத்தைத் தீட்டிக் காட்டும் சித்திரகாரியைப்போல, உலகத்தில் மலை கடல் முதல் அணுவரையுமுள்ள பொருள்களின் தூல சூக்குமத்தோற்றத் தன்மைகளையெல்லாம் மன அறிவைக் கருவியாகக் கொண்டு, நுணுகி ஆராய்ந்து, உள்ளமெனும் படாத்தில் தீட்டி வைத்துச் சமயம் வாய்த்தவிடத்து அக்காட்சியில் தோய்ந்து கிடந்த உணர்ச்சியே வடிவமாகத் தமது நாவினால் விரைந்து வெளிப்படுத்திக் காட்டும் பாட்டுக்களாகிய ஓவியத்தால் ஒரு சித்திரகாரியாலும் உண்டாக்கவியலாத பேரற்புத உணர்ச்சியை நம் மனத்தில் எழுப்பும் ஆற்றல் படைத்து விளங்கியவராகலின், இவருக்குப் பெருஞ்சித்திரனார் என்னும் பெயர் வந்தது. இனிச்சித்திரம் என்பதற்கு ஆச்சரியம் எனப் பொருள் கொண்டு இவர் செய்யுளிலுள்ள ஆச்சரியம் விளைக்கும் பொருளமைதி பற்றி இவர்க்கு இப்பெயர் வந்ததெனவும் கருதலாகும். இப்பெயர் இவர்க்குப் பின்னைப் பெயராமாயின், இவர் தமது பெயர்க்கேற்பப் பிற்காலத்துப் பெரும்புலமை பெற்றார் என்று நினைக்கத் தகும்.

ஊர் : இப்பெரும்புலவர் பிறப்பதற்கு அருந்தவம் இயற்றிய ஊர் யாதாமென அறிதற்கேற்ற சான்று தெளிவாகக் கிடைத்திலது; எனினும், யாப்பருங்கல

விருத்தியுரையில் இவர் பாடியதாகக் கொள்ளும் வண்ணம் வைத்துக் காட்டியிருக்கிற "ஏரி யிரண்டுஞ் சிறகா" என்ற பாட்டில், காஞ்சி நகரத்தின் மதில் முதலானவற்றை மயிலின் வயிறு முதலிய உறுப்புக்களாக உருவகித்து, அந்நகரை மயிலோடு உவமித்துக் கூறியிருத்தலின், அந்நகரமே இவர் பிறந்த நகரமாகவேனும் அன்றி இவர் பன்னாள் வாழ்ந்திருந்த நகரமாகவேனும் இருக்கக் கூடுமென்று ஊகிக்கலாகும்.

குலம்: இவர் பிறந்த குலம், நம் தமிழ் நாட்டுப் பழங்குடியினுள் இதுவாமென அறிதற்குரிய சான்றுகள் இல்லை.

சமயம்: இவரது சமயம் இன்னதெனத் துணிந்துரைத்தற்கு இடமில்லையாயினும் "முரசுகடிப் பிகுப்பவும்" என்ற இவரது புறப்பாட்டில், கடையெழு வள்ளல்களின் வரலாறுரைத்த பகுதியில், ஆவியர் குடியிற் பிறந்தவனும், வேளாவிக் கோமான் பதுமனது வழித்தோன்றலும், முருகக் கடவுள் வரைப்பாகிய பொதினி மலை (பழனி மலை) நாட்டுக்குரியவனுமான பேகன் என்னும் வள்ளலை, 'அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப் பெருங்கல் நாடன்,' என்று பாடி அவனது மலை நாட்டை முருகக்கடவுளால் காக்கப்படுதலைக் கொண்டு விசேடித்திருக்கின்றமையின், இவர் முருகப்பிரான்மீது அன்பு பூண்டவர் என்று கருதலாகும். குறிஞ்சிக்குத் தெய்வம் முருகனேயாதலின், இவ்வடியிற் குறித்த கடவுள் முருகனேயாமென்பது தேற்றம். அருந்திறல் என்ற அடைமொழியும் இதனை வலியுறுத்தும். ஈண்டுக் கூறிய பேகனது மலையும் ஊரும் இக்காலத்துப் 'பழனி' என வழங்கும் மலையும் ஊருமேயாமென்பது, வழங்கும் பெயர்களானும், வேறு சான்று

களானும் துணியப்படுகின்றது. 'ஏரி யிரண்டும்,' என்ற பாட்டல் இவர் பாடியதே எனத் துணியப்படுகின்றமை யின், அப்பாட்டில், காஞ்சி நகரத்துள் பல தலங்களிருப் பவும், திருமால் கோயில் கொண்டிருக்கும் அத்தி ஊரையே அந்நகரத்தின் வாயாக உருவகித்துச் சிறப்பித் திருக்கின்றமையின், இவர் திருமால் மீதும் பத்தி மிக்க வர் என்றும் கொள்ளலாகும். இவற்றை ஆராய இவர் மதக் கோட்பாட்டில் பாரதம் பாடிய பெருந்தேவ னார் போலப் பொது நோக்குடையவராயிருந்திருத்தல் கூடுமென்பது தெளியப்படும்.

பெருமை: இந்நல்லிசைப் புலவர் எஞ்ஞான்றும் தம் நிலையிற்றிரியாது நிற்றலும், ஊழ் வயத்தான் தாழ்வு வந்தவிடத்து உயிர் வாழாமையுமாகிய மானமென்னும் அருங்குணத்தைப் பெருங்கலனாகப் பூண்டவர். இஃதா லன்றே, தாமும் தம் மனைவி மக்களும் உடுக்கையின்றி உடம்பழியும் வறுமை மேலிட்டிருந்த காலத்தும் அதிய மான் நெடுமானஞ்சியும் இளவெளிமானும் வரிசை அறி யாது கொடுத்த பொருளைக் கிடைத்தது போதுமெனக் கருதாது, 'புலியானது இரையாக அடித்த யானை தப்பு மாயின், பசியினால் அஃது எலியைப் பார்த்துப் பிடி யாது,' என இகழ்ந்து போயினர்? இதனால் இவர்,

'கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார், விழுமியோர்
மானம் அழுங்க வரின்.'

என்ற அழகிய செய்யுளுக்கு இலக்கியமாய்த் திகழ்தல் காண்க.

பண்டைக்காலத்துப் புலவர் பெருமக்களுள் பரிசில் வாழ்க்கையைக் கொண்டோரெல்லாம், அரசர்கள் தங்

கள் புலமையைக் கண்டு உவந்து கொடுக்கும் பரிசில் எவ்வளவு சிறிதெனினும், அதனையே பெற்று மகிழ்வாரன்றி, அங்ஙனமின்றிக் கொடுக்கும் பரிசில் எத்துணைப் பெரிதெனினும், அதனை யாசகப் பொருளெனக் கருதிப் பெரிதும் வெறுத்து, அவர்கள் கொற்றக்குடை நிழற்றும் வெற்றி வேந்தர்களெனினும், அவர்களை ஒரு சிறிதும் மதியாது, புலவரருமை அறிவோரையே பெரிதும் மதித்திடுவர். இப்பெருங்குணங்களெல்லாம் இப்புலவரிடத்துச் சாலப் பொருந்தியிருந்தன என்பதற்கு இவர் பாட்டுக்களே சான்று பகரும் (புறம். 162, 207-8). அரசரும் அணுக முடியாதகாவன் மரத்தில் தந்தியை யாத்து, 'யாம் கொணர்ந்த பரிசில் இது; வந்து காண்,' என இளவெளிமான் என்னும் அரசனை அழைத்தனரென்றால், இவரது பெருமிதத்தையும் செல்வாக்கையும் என்னென்று கணித்துரைப்பது! (புறம். 162) இவர் தம்மை மதியாதார்க்குத் தம் ஆற்றலை வெளிப்படுத்தி அவரைச் சினவுதலும், தம்மை மதித்தோரைப் பெரிதும் மதித்துப் பணிதலுமான இயற்கை பெரிதுமுடையவர். இன்னும் இப்புலவர் பிறர் ஆக்கம் கல்வி முதலியன கண்டு பொறாத அழுக்காறென்னும் தீய குணம் தீண்டப் பெறாத தூய உள்ளமுடையவர். இதனை ஆய் என்னும் வள்ளலைப் புகழுமிடத்துத் "திருந்துமொழி மோசி பாடிய ஆயும்" என உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவர் பெருமான்றம் கவி நயத்தையும், அவர் வாயாற் பாடப்பெறுதலின் அருமையையும் ஒருங்கே புகழ்ந்து கூறியிருத்தலால் நன்கு தெளியலாம். இங்ஙனமே முற்காலத்துத் தண்டமிழ்ப் புலவரெல்லாம் பிற்காலத்துப் புலவருள் சிலரைப்போலப் புலமையில்

அழுக்காறு கொள்ளாது ஒருவர் மற்றொருவரது அருமை பெருமைகளை உள்ளவாறே அறிந்து போற்றிப் புகழும் பெருங்குணம் வாய்ந்தவர்கள். இவ்வுண்மையை ஔவையார், அதிகமான் நெடுமானஞ்சியைப் பாடும்போது, "இன்றும் பரணன் பாடினன்," எனப் பரணரையும்; மாறோக்கத்து நப்பசலையாரும் பொருந்தில் இளங்கீரனாரும் முறையே மலையமானையும் மாந்தரஞ்சேரலிரும்பொறையையும் பாடும்போது, 'நிலமிசைப் பரந்த மக்கட்கெல்லாம், புலனழுக்கற்ற அந்தணாளன், இரந்துசெல் மாக்கட்கினியிடனின்றிப் பரந்திசை நிற்கப் பாடினன்,' எனவும்; 'செறுத்த செய்யுட் செய்செஞ் நாவின், வெறுத்தகேள்வி விளங்குபுகழ்க் கபிலன்,' எனவும் கபிலரையும் பாராட்டிக் கூறியிருத்தல் கொண்டு உணரலாம். இதற்கு உதாரணம் இன்னும் தொன்னூல்களுள் பலவுள.

புலவர் வறுமைத் துன்பத்திற்பட்டு, அதன் கொடுமையை நன்கறிந்தவராதலால், வறுமையால் வருந்துபவரைக் கண்டாற் பொறாது, அவர்கள் துன்பந் துடைக்க முற்படும் அருட்குணம் பெரிதுமுடையவராயிருந்தனர். இஃதாலன்றோ குமணனிடம் பெற்ற பெருவளத்தை, 'எல்லார்க்கும் கொடுமதி மனைகிழவோயே!' என்று மனைவிக்குக் கூறினர்? இவர் வெயிலென்றும் மழையென்றும் பனியென்றும் உள்ளம் பனியாமல், பரிசில் பெறுதற்கும், அரசர்க்கு நீதிகளை அறிவுறுத்துதற்கும், காடு, மேடு, மலை, குன்றுகளிலெல்லாம் தம் காலடி தேயத் திரிந்த உழைப்பும் முயற்சியும் மிக்கவர் என்பதும் தெரிகின்றது. இவர் தம் குணநலங்களைச் சுருங்கக் கூறின்,

"இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்

துஞ்சலு மிலர்;பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின், உயிருங் கொடுக்குவர்; பழியெனின்,
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்."

எனக் கூறுவதே சாலப் பொருந்தும்.

இனி இப்பெருஞ்சித்திரனாரென்னும் ஆசிரியரது கல்விப் பெருமையினை இவரது மாட்டுச் செறிந்த பாட்டுக்களும், அவை சங்கத்துச் சான்றோர் கோத்த தொகை நூல்களுள் ஒன்றாய்ப் புறநானூற்றில் இடம்பெற்றிருத்தலும், அப்பாட்டுக்களை உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் அருகிய விதிகட்குக் காட்டாகக் காட்டியிருத்தலும் அகங்கை நெல்லி எனக் காட்டும்.

இப்புலவர் சீரிய புலவராய்த் திகழ்ந்ததன்றியும், கபிலர், பரணர், மாமூலர் முதலிய தொல்லாணை நல்லாசிரியர் வரிசையில் அணுக வைத்து, மனத்தது பாடும் மாண்பினராகவும், சினைத்திற் கெடப் பாடும் செவ்வியோராகவும் மதிக்கப்படும் பெருமையுடையராகவும் விளங்கினாரென்பதும் அறியக் கிடக்கின்றது.

'மிக்குங் குறைந்தும் வரினு மொருபுடை
ஒப்புமை நோக்கி யொழிந்தவுங் கொளலே.'

என்ற யாப்பருங்கலச் சூத்திரவுரையில் ஆரிடச் செய்யுளை விளக்குழி,

'எரி யிரண்டுஞ் சிறகா எயில்வயிருக்
காருடைய பீலி கடிகாவாச்—சீரிய
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்கோறான் கச்சிப் பொலிவு'

'உடையராய்ச் சென்றக்கா லூரெல்லாம் சுற்றம்
முடவராய்க் கோலூன்றிச் சென்றக்காற் சுற்ற
முடையானும் வேறு படும்.'

'கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க [டிக்
ஒண்செங் குருதியி னொழு கிடப்பதே—கெண்
கெழுதகைமையில் லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுதகண் ணீர்துடைத்த கை.'

என்ற இம்மூன்று செய்யுளையும் எடுத்துக் காட்டி, "என்றித் தொடக்கத்துப் பெருஞ்சித்திரனார் செய்யுளும், ஔவையார் செய்யுளும், பத்தினிச் செய்யுளும் முதலாக வுடையனவெல்லாம் எப்பாற்படுமெனின், ஆரிடப் போலி என்றும் ஆரிட வாசகமென்றும் வழங்கப்படுமென்க; இவைகளெல்லாம் இருடிகளல்லா ஏனையோராகி மனத்தது பாடவும், ஆகவும் கெடவும் பாடல் தரும் கபிலர், பரணர், கல்லாடர், மாமூலர், பெருந்தலைச் சாத்தர் இத்தொடக்கத்தோராலும் பெருஞ்சித்திரர் தொடக்கத்தோராலும் ஆரிடச் செய்யுட்போல மிகவும் குறையவும் பாடப்படுவன எனக் கொள்க. என்னை?

'மனத்தது பாடு மாண்பி னோருஞ்
சினத்திற் கெடப்பாடுஞ் செவ்வி யோரு
முனிக்கணச் செய்யுள் மொழியவும் பெறுப"

என்பது பாட்டியன் மரபாகலின்," என உரையாசிரியர் விரித்திருப்பன கொண்டு நன்கு தேறலாம்.

பாடப்பட்டோர்: இப்புலவராற் பாடப்பட்டோர் அதியமான் நெடுமான் அஞ்சி, வெளிமான், இளவெளிமான், குமணன் என்போர்.

இவர் காலத்துப் புலவர்கள்: இவராற்பாடப்பட்ட குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியிருத்தலான், அவரும்; இவராற்பாடப்பட்ட அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார், பரணர், பொன்முடி

யார், அரிசில் கிழார் என்ற புலவர்களும் பாடியிருத்தலான் அவர்களும் இவர் காலத்தவர்கள். பரணர் அதியமானைப் பாடினரென்பது, அவன் கோவலூரை வென்றபோது புகழ்ந்து பாடிய ஒளவையார், "இன்றும் பரணன் பாடினன் மற்கொல்,"[1] எனக் கூறுதலால் அறியப்படும். பொன்முடியார் பாடினரென்பது, தகடூர் யாத்திரைச் செய்யுட்களால் தெளியப்படும். அரிசில் கிழார் பாடியது, அதியமான், தகடூர் பொருது வீழ்ந்தமைக்கு அவர் இரங்கிப் பாடுதலாலும்,[2] தகடூர் பொருதுவென்ற பெருஞ்சேரலிரும்பொறையைப் பின்னர்ப் பதிற்றுப்பத்து எட்டாம் பத்தால் புகழ்ந்துரைத்தலாலும் அறியப்படும். பரணர், குமணனுக்குப் பல ஆண்டுகட்கு முன்னிருந்தவர்களான உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி முதலிய பழைய அரசர்களையும் பாடியிருத்தலான், அவருக்கும் அவரது சமகாலத்தவரான கபிலர் ஒளவையாருக்கும் இவர் வயதில் இளைஞராய், அவர்கள் முதியராயிருந்த காலத்தில் விளங்கி, அவர்களுக்குப் பின்னரும் பல ஆண்டுகள் இருந்து வாழ்ந்திருந்தவராவர்.

காலம்: கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய அதியமான் அஞ்சியைப் பாடிய பெருஞ்சித்திரனார், பின் குமணனைப் பாடும்போது 158 ஆம் புறப்பாட்டில், "எழுவர் மாய்ந்த பின்றை" என்று குறித்திருத்தலான், குமணனிடம் புலவர் பரிசில் பெற வந்த காலத்துக்குச் சிறிது முற்பட்டே 'அஞ்சி' இறந்தொழிந்தானென்பதும், அவனே வள்ளல்களுள் பிற்பட்டு இருந்தவனென்பதும் அறியக் கிடக்கின்றன. ஆகவே, பெருஞ்சித்திரனார் கடையெழுவள்ளல்களுள் சிலரது காலத்திலிருந்து,

1. புறம். 99. 2. புறம். 230.

அவர்களுக்குப் பின்னரும் பல வருடங்கள் வாழ்ந்திருந்தவராவர். கி. பி. 130—140க்கு மேல் இவர் பெரும்புலவராய்த் திகழ்ந்திருக்கலாம்.

பாட்டுக்கள் :

இவர் பாடல்களாகத் தொகை நூல்களுள் புறநானூற்றில் பத்துப் பாட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. யாப்பருங்கல விருத்தியில் ஆசிரியப்போலிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ள 'ஏரி யிரண்டும்' என்ற செய்யுளும் இவர் பாடியதென அவ்வுரை கொண்டு அறியப்படுதலின், அஃதொன்றும் சேர, இவர் பாட்டுக்களாக இப்போது காணப்படுவன பதினொன்றாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் காணும் மக்கட்பாடாண்டிணைக்குரிய துறைகளுள், 'இன்னோர் போல எமக்கீ' என்ற இயன்மொழி வாழ்த்துக்கு இவர் தம் செய்யுட்களில், 'முரசுகடிப் பிகுப்பவும்' என்ற செய்யுளையும்; 'பரிசினிலை' கூறுவதற்குக் 'குன்றும் மலையும்' என்ற செய்யுளையும்; 'பரிசில் விடை'க்கு 'இரவலர் புரவலை நீயு மல்லை' என்ற செய்யுளையும்; 'பரிசிலை மனையாளுக்குக் கூறுந் துறை'க்கு 'நின்னயந் துறைநர்க்கும்' என்ற செய்யுளையும் நச்சினார்க்கினியர் உதாரணமாகக் காட்டியுள்ளார்.

இவருடைய பாட்டுக்கள் மாட்டு முதலிய பாட்டுறுப்புக்கள் கொண்டு, இனிய மெல்லிய சிறு சிறு சொற்களால் தீஞ்சுவை செறிந்து ஆழ்ந்து, இயற்கை நெறி பிறழாது உணர்வினை எழுப்பி, வறுமைத் துன்பத்தை நன்கு புலப்படுத்திப் படிப்போருள்ளத்தை உருக்குகின்றன.

'வாழு நாளொ(டு) யாண்டுபல வுண்மையிற்
றீர்தல்செல் லாதென் னுயிரெனப் பலபுலந்து

கோல்கா லாகக் குறும்பல வொதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்துயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும் ;
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய (மார்பள்) பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்(று)
அவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடுகுறைந்த உடுக்கையள் அறம்பழியாத்
துவ்வா ளாகிய வென்வெய் யோளும்'

(புறம். 159)

இல்லுணைத் துறத்தலின் இன்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறு(மார்பு) சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழின்
உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்தும் மதியங் காட்டியும்
நொந்தன ளாகி, 'நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்'டெனப் பலவும்
வினவ லானா ளாகி நனவின்
அல்ல லுழப்போள்' (புறம். 160)

என்ற பகுதிகளுள் பெருஞ்சித்திரனார் என்னும் இப் புலவர், தம் தாயார் மனைவி மக்களது வறுமையால் வேறுபட்ட தோற்றத்தையும், துன்ப நிலையையும், செயல்களையும் சித்திரித்துக் காட்டியிருக்கும் சித்திரிப்பால், அவர்கள் பன்னூறாண்டுகட்கு முன்னர் இருந்தொழிந்தவர்களே எனினும், இப்போதும் நம் கண்

முன்னர் உருப்பெற்று நிற்கின்றார்கள். இதுவன்றோ நல்லிசைப் புலவர் இறப்பாடு!

'முதிர மலையில் ஆண் குரங்கு தனக்குக் கிடைத்த பலாப் பழத்தைத் தன்னுடன் கூடி உண்ணுதற்குத் தனது பெண் குரங்கை அன்புடன் கையாற் குறி செய்தழைக்கும்,' என்று குமணனது மலை வாழ் விலங்கின் இயற்கை கூறி, அதனடியாகத் தன்னை விரும்பி வரும் பல்லோரையும் அழைத்துத் தனது செல்வத்தின் பயனை அருத்தும் அவனது வேளாண்மைக் குணத்தைப் புலப் படுத்தியிருப்பதும், மற்றோரிடத்துப் 'பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்' என்று மலையின் பயப்பாடுணர்த்தி அதனால் அதற்குரிய குமணனது பயப்பாடும் உணர்த்தியிருப்பதும் எத்துணைச் சுவையூட்டும் நயப்பாடுடையனவாயிருக்கின்றன! குமணன் கொடுத்த களிற்றைக் கொணர்ந்து, கடிமரத்துப் பிணித்து, இளவெளிமானை நோக்கிக் கூறிய பாட்டு, பெருமிதச் சுவை மிகுந்து மிளிர்கின்றது. புலவர் குமணனைப் பாடிப் பரிசில் கொணர்ந்து மனையாட்குச் சொல்லிய பாடல் கருணைச் சுவை கனிந்து ஒளிர்கின்றது. இப்புலவரது பத்துப் பாடல்களிலும் பத்தொன்பது உவமைகள் காணப்படுகின்றன; உருவகம் ஒன்றுள்ளது. இவற்றின்கண் கூறப் பட்டுள்ள உவமைகள் எல்லாம் மிகப் பொருத்தமும் சுவையுமுடையனவாயிருக்கின்றன. முதியவளின் நரை மயிருக்கு நூலையும், குரங்கின் தலை மயிருக்குப் பஞ்சினையும், யானையின் பெரிய கைக்குப் பனையையும், பொன் வட்டில்களுக்கு நாண்மீன்களையும் உவமையாகக் கூறியுள்ளார். மற்றும் கணவனையிழந்த மகளிர் மார்பிற் புடைத்தலால் கைகளினின்றும் உடைந்து உதிரும் வளை முறிகளுக்கு வாழைப் பூக்கள் உதிர்தலையும், பசி

யால் வாடிய புலவர் சுற்றங்களை வள்ளியோர் உணவை உண்பித்து வருத்தப் நீங்குதற்குக் கோடையால் வாடிய புலத்தை, மழை துளியைச் சொரிந்து குளிர்ப்பித்தலை யும், வறுமைத் துன்பத்தோடு வெளிமான் இறந்த பிரிவுத் துன்பமும் சேர்ந்து தம்மைவருத்துதற்கு மழை பெய்யும் நள்ளிரவில் கப்பல் கவிழக் கடல் நடுவிற் கண் ணில்லாத ஊமன் விழுந்து வருந்துவதையும், இரவலரும் புலவரும் கொடைப் பொருள் பெற்று இன்புறக் குமணன் தோன்றி விளங்குந் தன்மைக்குக் கோடை காலத்தில் உயிர்த் தொகுதிகள் நீருண்டு இன்புறக் கங்கையின் வெள்ளம் பெருகித் தோன்றுவதையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

இவரது பத்துப் பாட்டுக்களிலும் இன்றியமையாத எட்டு அளபெடைகள் வந்துள்ளன. அவைகளும், ஏற்ற பெற்றி அமைந்துள்ளன. துன்புறுவாள் என் பது துன்புறுவி என்று பயின்றுள்ளது. 'அலம்வருதல்' என்ற உரிச்சொற்போன்ற 'உலம் வருதல்' என்ற சொல் லும் வந்துளது. இப்புலவர் பாடல்களில் குமணனது முதிர மலையும், பாரியின் பறம்பு மலையும், ஓரியின் கொல்லிமலையும், அதியமான் நெடுமானஞ்சியின் குதிரை மலையும், கங்கையாறும் பாராட்டப் பெற்றுள்ளன. புலவர், 158, 160, 163-ஆம் புறப் பாடல்களிற் குறித்த குமணனது முதிர மலை இக்காலத்துக் கொங்கு நாட்டி லுள்ள (கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப் பேட்டைத் தாலூக்கா) குதிரை மலையே என்றும், அதுவே இங் ஙனம் மருவி வழங்குகின்றதென்றும், குமணனிருந் தாண்ட அம்மலையை அடுத்த நகர், இக்காலத்தில் அக் கொங்கு நாட்டில் ஆம்பிராவதிக் கரையிலுள்ள குழு மம் என்று வழங்கப்படும் ஊரே என்றும் சரித்திர அறி

னார் கருதுகின்றனர். குமணம் என்பது மிகப் பழைய ஊரென்பதும், அது பாரதப் போரில் பாண்டவ கௌரவ சேனைக்குப் பெருஞ்சோறளித்த உதியஞ் சேரலாதனுக்குரியதென்பதும், அதில் பெருஞ்சோற்று அற நிலையம் இருந்ததென்பதும், அது மலையை அடுத்து வளத்தாற் சிறந்ததென்பதும்,

'பல்லான் குன்றிற் படுநிழற் சேர்ந்த
நல்லான் பரப்பிற் குழூஉர் ஆங்கண்
கொடைக்கடன் என்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல'

என்ற அகநானூற்றுப் பாடற்பகுதியால் தெளியப் படும். இதனால், 'அற நிலையமாகிய குழூஉரில் (குழு மம்) கொடைக் கடன் பூண்ட சேரலரது வழியிற் றோன்றி உயிர்க்கொடை நேர்ந்த குமணனிருந்து அரசு செய்தான்,' என்று கொள்ள, அது பல்லாற்றானும் பொருந்துவதாகவே தெரிகின்றது. இதனை,

'நாட்டினைத் தம்பி கொளக்காடு சென்று நலிவுறுநாள்
பாட்டிசைத் தோர்புல வன்வேண்ட, 'என்தலை பற்றியறுத்
தீட்டியென் தம்பி யிடத்தீயிற் கோடிபொ னெய்து'மென்று
வாட்டடங் கைத்தரு மக்கும ணன்கொங்கு மண்டலமே'

என்று கொங்கு மண்டல சதகமும் ஓராற்றான் வலி யுறுத்துதல் காண்க.

இவ்வாசிரியரது 'முரசுகடிப் பிகுப்பவும்' என்று குமணனைப் பாடிய 158-ஆம் புறப்பாட்டில் கடை யெழு வள்ளல்களான பாரி, ஓரி, காரி, எழினி, பேகன், ஆய், நள்ளி என்னும் எழுவரது வென்றி மேம்பாட்டை யும் கொடைச் சிறப்பையும் விரித்துப் பாராட்டத் தொடங்கிப் பார் மகள் மறுத்த காரணம் பற்றியும், அவனது கொடைப் புகழில் உண்டான அழுக்காறு

பற்றியும்; சேர சோழ பாண்டியர் என்ற முடியுடை வேந்தர் மூவரும்[1] பகைத்துப் பாரியின் பறம்பு மலையை முற்றிய காலத்து, அவன் அவர்களை வெந்நிட வென்றோட்டிய வரலாற்றையும்; மலையமான் திருமுடிக்காரி, தன்னாட்டைக் கைப்பற்றிய அதியமான் நெடுமானஞ்சியை வெல்வதற்குப் பெருஞ்சேரலிரும்பொறை என்னும் சேர அரசனோடு சேர்ந்து, அஞ்சியின் தகடூரைப் பொருது, அவனைக் கொன்ற வரலாற்றையும்; அவன் பெருஞ்சேரல் விருப்பப்படி கொல்லி மலையையாண்ட வல்வில் ஓரியைப் போரிலே கொன்று, அவனது அம்மலையைச் சேரனுக்குக் கொடுத்த வரலாற்றையும்; காரி தன்னோடு எதிர்த்து வந்த ஆரிய மன்னர் பலரை வென்ற செய்தியையும் வெளிப்படையாயும் குறிப்பாயும் குறித்துள்ளார். அப்பாடலில் அதியமான் நெடுமானஞ்சி, கூவிளங்கண்ணியுடையானென்றும்; மலையமான், காரி என்னும் பெயரையுடைய குதிரையை உடையானென்றும் கூறப்பெற்றுளார்.[2] குதிரை என்னும் பெயரையுடைய மலை, 'ஊராக் குதிரை'[3] என்று குறிக்கப் பெற்றுள்ளது; இது வெளிப்படையின்பாற்படும்.

இவரது செய்யுட்களில் மந்தி கடுவன் என்ற குரங்குகளின் வகையும்; கலை, யானை, குதிரை, புலி, எலி, ஆளி என்ற மிருக வகைகளும்; கழுகு, காக்கை. கூகை, பொகு

---

1. இவர் மூவேந்தரல்லர்; அவர்கள் வமிசத்தைச் சேர்ந்த ஒரு சிலர் எனக் கருதுவாரும் உளர்.

2. இங்ஙனமே வள்ளல் எழுவரது வரலாறு சிறுபாணாற்றுப் படையிலும் விரித்துரைக்கப் பெற்றுள்ளது (வரி 84 - 113.)

3. "நெடுநெறிக் குதிரை கூர்வே லஞ்சி" (அகம். 372) என்பதை இதனோடு ஒப்பிடுக.

வல் என்ற பறவை வகைகளும்; பலா, பனை, ஆசினி, மூங்கில், சுரபுன்னை, வாழை, கள்ளி, கூவிளம் என்ற மர வகைகளும்; ஐவனம், தினை என்ற தானிய வகைகளும் குறிக்கப்பட்டுள்ளன. நெய்யடிசில், குய்த்துவையல், மோர் என்ற தூய உணவு வகைகளும் வந்துள்ளன. பலாப்பழம், 'முட்புறக்கனி' எனவும், கழுகு, 'செவி செஞ்சேவல்' எனவும் கூறப் பெற்றுள்ளன. இவர் மூதியவராய் இறந்தோர்களைக் கவிழ்த்துப் புதைக்கும் முதுமக்கட்டாழியைக் குறித்துள்ளார். சுடுகாடு, 'களரியம்பறந்தலை' எனக் கூறப்பட்டுள்ளது. அருஞ்சுரத்தில் வேடர் ஆறலைத்தல் குறிக்கப்பெற்றுள்ளது. இன்னும் இவர் பாட்டுக்களில் பேய், ஞாயிறு, அழல், மதி, விண்மீன், கடல், ஆறு, கடவுள், முகில், இடி, மரக்கலம், முத்து, பொன் வட்டில், அடுகலம், அட்டில், தொடி, அணி, மது என்பவையும் குறிக்கப்பட்டுள்ளன. கணவனை இழந்த மகளிர் வளை கழித்தல் வழக்குக் கூறப் பெற்றுள்ளது. யானை, மணியிரட்டப் போதல் சொல்லப்பட்டுள்ளது.

# 5. பிசிராந்தையார்

‘சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநாட்டில்’

பிசிர் என்னும் ஊரிலே, இற்றைக்குப் பன்னூருண்டுகட்கு முன்னர், சங்க காலத்தில், ஆந்தையார் என்னும் புலவர் தோன்றினுர். இவர் இளம்பருவ முதலே கல்வி பயிலத் தொடங்கித் தொல்காப்பியமுதற் பல் காப்பியங்களையும் பல்காற்பயின்று, உண்மை ஞானமும் உயரிய ஒழுக்கமும் உடையவராய், நல்லிசைப் புலவர் குழாத்துள் பல்லிசை நிறுத்தும் பண்பு மிகுந்து விளங்கினுர்.

பின்னர் இவர் நல்லறமாகிய இல்லற நெறியிற் செல்லக் கருதி, அதற்கு நற்றுணையாக ஒரு கற்பு மிக்க பொற்புறு மங்கையரை மணந்தார். இருவரும், காகத்தின் இரு கண்ணிலும் ஒரு மணி கலந்தது போல, உடல் இரண்டும் உயிர் ஒன்றுமாகக் கலந்த உள்ளமுடையவராய், எல்லா உயிர்களிடத்தும் அன்பும் அருளும் மிகுந்து, அறநெறியைக் கடைப்பிடித்தொழுகி வந்தனர். புலவர் மனைவியாரும் இயற்கையாகவே பெற்றிருந்த அறிவின் மாட்சியோடு புலவரது கூட்டுறவால் கல்வியறிவும் நிரம்பி, நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியராய் விளங்கினுர். இவர்தம் திருவுதரத்தினின்றும் நாளடைவில் நன்மக்கள் பலர் தோன்றினர். அவர்களும் ஆண்டுகள் செல்லச் செல்ல, ‘மகனறிவு தந்தையறிவு,’ என்பதற்கேற்ப, ஒள்ளிய அறிவால் தெள்ளியராயினர். இத்தகைய

மனைவி மக்களைப் பெற்ற புலவர், தம் கருத்தைக் குறிப்பாலுணர்ந்து தாம் விரும்பியதையே செய்யும் ஏவலாளரையும், பெருஞ்செல்வத்தையும், தம் நாட்டு அரசனது செங்கோல் நலத்தையும், அவனது பேரபிமானத்தையும் பெற்றுத் தமது ஊரில் வாழும் கல்வி அறிவு ஒழுக்கம் மிக்க சான்றோருடன் இடையறாது பழகுதலையே தமக்குப் பெரும்பேறாகக் கொண்டு, யாதொரு கவற்சியும் அக்கவற்சியாலுளதாகும் நரை திரை மூப்புப் பிணிகளுள் ஒன்றுமின்றி, என்றும் மாறாத இளமையோடே வாழ்ந்து வருவாராயினர்.

இங்ஙனம் இவர் வாழும் நாளிலே சோழ நாட்டின் தலை நகரமாகிய உறையூரிலே கோப்பெருஞ்சோழன் என்னும் அரசர் பெருந்தகை செங்கோல் செலுத்திக் கொண்டிருந்தான்; அவன் அரசனாயினும், சிறந்த ஞானி; செந்தமிழ்ப் பாக்கள் சிறப்புறச் செய்யும் திறமை மிக்கவன் ; புலவர்களோடு பழகுதலிலும், அவர் தம் பாடல்களைக் கேட்டலிலும் பெருவிருப்புடையோன் ; அரசர்க்குரிய அருங்குணங்களும், பெருங்கொடைத் திறனும் ஒருங்கமையப் பெற்றவன். இத்தகைய வேந்தனைப் பிசிராந்தையார் நேரிற்காணாராயினும், அவனுடைய பெருங்குணங்களையெல்லாம் தமதூரிலிருந்தே அறிந்து, அவனைக் கொண்டாடி, அவன்பால் விள்ளா நட்புப் பூண்டனர். சோழனும் புலவருடைய புனித உள்ளத்தையும் சீரிய கூரிய புலமைத் திறத்தையும் கேள்வி வாயிலான் உணர்ந்து, புலவரது மனத்தோடு யாத்த தொடர்புடையவனானான்.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.'

என்று தெய்வப் புலவர் கூறியபடி, இருவரும் ஓரிடத்த

ரல்லராயினும், அடிக்கடி பழகுதல் இலராயினும், இரு வருடைய உள்ள உணர்ச்சியும் ஒத்தபடியான், இவர் கள் நட்புப் பிறை மதி போல நாளும் நாளும் வளர்ந் தோங்குவதாயிற்று. பல்லாண்டுகள் கழிந்தும், ஒரு வரையொருவர் கண்டறியாதிருந்தனர்; எனினும், ஒரு வர் ஒருவரது உள்ளத்தை விட்டு ஒரு கணமேனும் பிரிந்திலர். புலவர், அரசன்பாற்கொண்ட நட்பின் திறத் தால், அவன் இனிய குணங்களை நினைந்து நினைந்து, தம்முள் மகிழ்ந்து, அவற்றைப் பாராட்டுதலையே பொழுது போக்காகவும், பேரின்பமாகவும் கொண்டு ஒழுகி வந்தார்; ஒரு நாள் மாலைப் பொழுதில் தென் திசையினின்றும் வட திசைக்குப் பறந்து போய்க்கொண் டிருக்கும் அன்னச்சேவலொன்றைக் கண்டார். காண லும், அதனை நோக்கி, "அன்னச் சேவலே, அன்னச் சேவலே, தன்னாட்டைத் தண்ணளி செய்து காக்கும் போர் வென்று மிக்க அரசனது முகம் போல் கலை நிரம் பிய மதியத்தின் நிலா விளங்குவதும், தனித்தோரை வருத்துவதுமான இந்த மாலைப் பொழுதிலே யாம் செய லற்று வருந்த நீ குமரி ஆற்றின் துறையில் அயிரை மீனை மேய்ந்து, வடதிசைக்கண்ணுள்ள இமய மலைக்குப் போகின்றாயாயின், இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள சோழ நாட்டில் தங்க நேரிடுமாயின், அந்நாட்டின் தலை நகராகிய உறையூரின் கண்ணே விளங்கும் உயர்ந்த மாடத்தினிடத்து உனது பெடையோடு தங்கி, உனது வருகையை வாயில் காப்போருக்கு அறிவிக்காமலே, யாதொரு தடையுமின்றி அரண்மனையுட்புகுந்து, எம் முடைய பெருங்கோவாகிய கிள்ளி கேட்ப, 'யான் பெரிய பிசிரென்னும் ஊரின்கண்ணுள்ள ஆந்தை யுடைய அடியின்கீழ் வாழ்வேன்,' என்று சொல்லுவாயா

யின், அழகிய உனது பெடையன்னம் பூணத்தக்க தனைது நல்ல அணிகலத்தை அளிப்பன்,” என்னும் கருத்து விளங்க,

‘அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடுதலை யளிக்கும் ஒண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்
மையன் மாலையாங் கையறு பினையக்
குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின் இடையது
சோழநன் னாட்டுப் படினே கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை அசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க, ‘இரும்பிசிர்
ஆந்தை அடியுறை’ எனினே மாண்டநின்
இன்புறு பேடை அணியத்தன்
அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே.’

என்று கூறிச் சோழன்மீது தமக்குள்ள அன்பின் பெருக்கையும், சோழன் தமது பெயர் கூறக் கேட்ட மாத்திரத்திலேயே தம்மைக் கண்ணுற் கண்டாற்போல மகிழ்ந்து பெயர் கூறினவர்கட்கு வரிசை பல அளிக்கும் அவனது நட்பின் மாட்சியையும், அவனது காண்டற் கெளியனாம் தன்மையையும், வண்மையையும் வெளியிட்டு வியந்தார்.

மற்றுமொருகால் அவர், “உம்முடைய இறைவன் யார்தானென்று கேட்பீராயின், எம்முடைய இறைவன் கோப்பெருஞ்சோழன்; அவன் பாணருடைய பசிப் பகையை ஓட்டுதற்கு வளமிக்க சோழ நாட்டில் உறையூரென்னும் பாடி வீட்டில் குற்றமற்ற நட்பினையுடைய

பொத்தியார் என்னும் புலவரோடு இடைவிடாது பழகி மகிழ்ந்து வாழ்கின்றான்," என்னும் கருத்துத் தோன்றப் பாடி, பாணர்களைப் புரக்கும் அவனது வண்மையையும், புலவர் பெருமக்களிடத்துக் கொண்டுள்ள நட்பின் தன்மையையும் பாராட்டி மகிழ்வாராயினர் (புறம்-212).

இப்புலவர் காலத்தில் பாண்டி நாட்டில், பாண்டியர் மரபில் தோன்றிய **பாண்டியன் அறிவுடை நம்பி** என்பான் ஒருவன் அரசாண்டுகொண்டிருந்தான். இவன் கல்வி அறிவும், நற்குணச் செறிவும், கவி பாடும் வன்மையும் மிக்கவன்; புலவர் புகழ்ச்சிக்குத் தக்கவன். இவனது அவைக்களத்தை நம் ஆந்தையார் அடிக்கடி சென்று அலங்கரிப்பதுண்டு. அங்ஙனமே ஒரு முறை இவனது அவைக்குச் சென்றிருந்தவர், அரசர்கள் குடிகளிடத்து இறை கொள்ளும் முறையை இவ்வரசனுக்கு உளத்திற் பதியப் போதிக்க எண்ணி, வேந்தனை நோக்கி, "அரசரே, ஒருமா என்னும் அளவினுங் குறைந்த நிலமேயாயினும், அதனுள் விளைந்த நெல்லைக் கொணர்ந்து கவளமாக்கிக் கொடுக்கப் பெறின், அது யானைக்குப் பல நாளைக்காகும்; நூறு செய் அளவுடைய பெரிய நிலமாயினும், அதனுள் விளைந்திருக்கும் நெல்லை, யானை தானே புகுந்து உண்ணத் தொடங்குமாயின், அதன் வாயால் உட்கொள்ளும் நெல்லைக்காட்டிலும் பன்மடங்கதிகமான நெல்லை அதன்கால் மிதித்தழுக்கிப் பயன் படாது கெடுத்துவிடும். அவ்விதமே அறிவுடைய அரசன், இறை வாங்கும் நெறியை அறிந்து வாங்குவானாயின், அவன் நாட்டில் வாழ்வார் அவனுக்குக் கோடிக்கணக்கான பொருளை ஈட்டிக் கொடுத்துத் தாங்களும் மிகத் தழைப்பார்கள்; அரசன் இந்நெறியை அறியும் அறிவின்றித் தரமறியாதவர்களும், உறுதி

கூறுதவர்களும், அரசன் விரும்பியதையே கூறி இச்சகம் பேசும் இயல்புடையவர்களுமான அமைச்சர்களுடன் கூடி, அன்பு கெடும்படி வாங்கும் வரியை விரும்புவானாயின், அந்த யானை புகுந்த நிலம் போலத் தானும் உண்ணப் பெருன்ய், உலகமும் கெடும்," என்று அதனை உவமைமுகத்தால் விளக்கி, இனிமையாய் எடுத்துரைத்தார். அரசன் அறிவுடை நம்பியாதலால், புலவரது விரிந்த சிந்தையிலிருந்து வெளிப் போந்த இப்பொருளுரை, அவனது உள்ளத்தை முழுமணிப் பீடிகையாய்க் கொண்டு வீற்றிருந்தது. பின்னர் அரசன் புலவரது உளப் பான்மையை வியந்து நன்கு பரிசிலளித்தனுப்பப் புலவரும் தம்மூர் வந்து வதிவாராயினர்.

இஃதிங்ஙனமாக, உறையூரில் அரசுரிமை காரணமாகக் கோப்பெருஞ்சோழனுக்கும் அவன் மக்கட்கும் பகைமை மூண்டது. அதனால், சோழன் அவருடன் பொருதற்கு வஞ்சி சூடிப் போர்க்கோலம் பூண்டான். இதனை அறிந்த அந்நாட்டுப் புலவராகிய புல்லாற்றூர் எயிற்றியனார் என்பவர், அதற்கு இரங்கி, அவர் தம் பகைமையை நீக்கக் கருதிச் சோழனிடம் வந்து, அவனை நோக்கி, "வெற்றி வேந்தனே, இப்போது உன்னுடன் பகைத்துப் போர் செய்ய வந்த இருவரையும் ஆராய்ந்தால், அவர்கள் நின் பகை வேந்தராகிய சேர பாண்டியருமல்லர்; நீயும் அவர்களுக்கு அத்தன்மையான பகைவனுமல்லை; நீ இவ்வுலகத்தில் புகழை நிறுத்திச் சுவர்க்கத்தை அடைவாயானால், நீ கைவிட்ட அவ்வரசாட்சி உரிமை அவர்க்கே உரியதாகும்; இதனை நீயும் நன்கறிவாய். இன்னுங் கேள்: உன்னோடு போர் செய்தற்கு எழுந்த அறிவில்லாத நின் புதல்வர் தோற்ருலும், உனது பெருஞ்செல்வத்தை அவர்க்கொழிய வேறு யாவர்க்குக்

கொடுப்பாய்? நீ அவருக்குத் தோற்றால், உன் பகைவர்க்கு மகிழ்ச்சி பெருகும்; உனக்குப் பழி நிலைநிற்கும்; ஆதலால், உன் பகைமைக் குணம் நீங்க வேண்டும். தேவர் தம்முலகத்தில் உன்னை விருந்தாக ஏற்றுக் கொள்ளுதற்குரிய நல்வினையைச் செய்தற்கு விரைந்தெழுவாயாக," என்று மக்கள்மீது அவனுக்குண்டான பகைமையும் கோபமும் நீங்குமாறு மிக அழகாக அவன் உளங்கொளும் வகை இவ்வறிவுரைகளை[1] எடுத்துக் கூறினர். கூறவே, இயற்கையாகப் பக்குவம் பெற்று நின்ற அரசனது உள்ளம், புலவர் போதனையாலும், தன் மக்கள் செயலாலும் அரச செல்வம் அனைத்திலுமுள்ள பற்றை அறவே விட்டு, செல்லுமுலகத்திற்கு வழித் துணையாகிய நல்வினையைக் கைக்கொள்வதில் உறைத்து நின்றது. உடனே அரசன் அரசுவேடமனைத்தையுங் களைந்தெறிந்துவிட்டு ஓர் ஆற்றிடைக் குறையிலுள்ள ஒரு மர நிழலில் உண்ணா நோன்பு பூண்டு உயிர் விடத் துணிந்து போய் வடக்கிருந்தான். நற்குண சீலனாகிய அவ்வரசனை விட்டுப் பிரியமுடியாது, முதிர்ந்த அறிவுடைய அந்நாட்டுச் சான்றோர்களும் பல புலவர்களும் ஆங்குச் சென்று, அரசனைச் சூழ்ந்து அமர்ந்தார்கள். அரசன் இவர்களை நோக்கி, "என் ஆருயிர் நண்பரான பிசிராந்தையாரும் இன்னே வருகுவர்," என்று சொல்லி, அவரது வருகையை எதிர்பார்த்திருந்தான். அதனை அறிந்த சான்றோர்கள், "அரசே, உன்னை அவர் பெயர் கேட்டிருக்கும் அளவேயன்றி ஒரு பொழுதும்

1. இவ்வறிவுரைகளினால், சோழனுக்கும் மக்கட்கும் பகை வந்ததற்கேது, நீண்ட நாளினனாய்த் தந்தை கொண்டுள்ள அரசுரிமையை மக்கள் பெறக் கருதியதே எனக் கொள்ளல் பொருந்தும்.

நேரில் வந்து கண்டறியாரே! பல காலம் நன்கு பழகிய நட்புரிமையுடையவர்களும் இங்ஙனம் வருதல் அருமையாயிற்றே!" என்று கூறினார்கள். அதனைக் கேட்ட அரசன் அவர்களை நோக்கி, "பெரியீர், அங்ஙனம் சிறிதும் நீவிர் ஐயுறல் வேண்டா; பிசிராந்தையார் என்னை என்றும் இகழ்ந்தறியார்; அவர் இனிய குணக் குன்று; புகழை அழிக்கும் பொய்க்குப் பகை; மெய்க்கு அணி; புகழின் வாழ்வு; உறுதியான நட்பிற்கு இலக்கு. தமது பெயரைப் பிறர்க்குச் சொல்லும் பொழுது, 'எனது பெயர் சோழன்,' என்று பேதையாகிய எனது பெயரையே தமது பெயராகச் சொல்லும் பேதமற்ற அன்புரிமையுடையவர். என்பால் செல்வமுள்ள காலத்து வாராது நிற்பினும், துன்பமுறுங்காலத்து வாராதிரார். இஃது உண்மை நட்பாளரது இயற்கையன்றோ? அவர், பலகாத தூரமுள்ள பாண்டி நாட்டுப் பிசிர் என்னும் ஊரில் வசிப்பவரேனும், இன்னே வருவது ஒருதலை; அவருக்கும் என்னோடு வடக்கிருக்க இடம் ஒழித்து வையுங்கள்," என்று கூறினன். இதனைக் கேட்ட சான்றோர் அனைவரும், "ஈதென்னே புதுமை!" என வியந்து, அங்ஙனமே இடமொழித்து வைத்தார்கள்.

அவ்வளவிலே பிசிராந்தையார் தம் உயிர் நண்பனை சோழனுக்கு நேர்ந்தவற்றையும், அவன் துறவு பூண்டு வடக்கிருத்தலையும் ஒத்த உணர்ச்சி விசேடத்தால் அறிந்து, புறப்பட்டு வந்தவர், அரசன் சொல்லியவாறே குறித்த நேரத்தில் அவனெதிர் வந்து நின்றார். யாவரும் வியந்தனர். அவர்களுள் சோழனுக்கு ஆந்தையார் போலச் சிறந்த நண்பரான பொத்தியார் என்ற புலவர் ஆங்கிருந்தவர், இதனைக்கண்டு வியப்புற்று, "நினைத்தால் வியக்குந் தன்மையுடையது, இவ்வரசன் அரசசெல்

வத்தை அறவே துறந்துவிட்டு, இங்கிலக்கு வரத் துணிந்தது! இவன் இவ்வாறு துறக்கத்துணிந்த அதனினும் வியக்குந் தன்மையுடையது, வேற்று வேந்தன் நாட்டிலுள்ள இச்சான்றோர், நட்பையே சிறந்த பற்றுக்கோடாகக் கொண்டு, இப்படிப்பட்ட துன்ப காலத்தில் இவ்விடத்தில் வந்தது! இவ்வாறு இப்புலவர் வருவாரென்று துணிந்து சொல்லிய இவ்வேந்தனது ஒப்பற்ற ஆன்மசூக்கும உணர்வும், இவன் சொல்லிய சொல்பழுதுபடாமல் வந்தவரது ஒத்த உணர்ச்சியின் திறமும் வியக்குந்தோறும் வியப்பு வரம்பின்றி ஓடுகின்றது. ஆதலால், தன்னாட்டில் வாழும் இந்தச் சான்றோர்களது உள்ளத்தையேயன்றி, அயல் நாட்டில் வாழும் இச்சான்றோரது உள்ளத்தையும் தனக்கு உரித்தாகப் பெற்ற இப்பெருவேந்தனை இழந்த தேசம் இனி என்ன துன்பத்தை அடையுமோ, தெரியாது! இதுதான் இரங்கத் தக்கது!" என்று இக்கருத்தைத் தம்முள்ளத்தில் ஊறிச் சுரந்த ஒரு பாட்டு மூலம் (புறம். 217) வெளிப்படுத்தி, இரங்கி அகங்குழைந்தார்.

பின்பு, பிசிராந்தையாரைக் கண்ட சோழன், வெங்கதிர் கண்டதாமரை போலவும், வெண்கதிர் கண்ட ஆம்பல் போலவும், மேகங் கண்ட தோகை போலவும், தாய்முகங் கண்ட சேயை போலவும் உள்ளங் தளிர்த்து, உவகை மீக்கூர்ந்து, அவரை நோக்கிப் பலபல கூறுவானெருடங்கி, "சான்ற குணத்தீர், நும்மைச் சந்ததமும் நினைந்திருப்பேன்; உமது நட்பிற்சிறந்த பெட்புறும் பொருள் வேறு யாதுளது?" என்றும்;

"ஆயின்மறை முதற்கலைக ளனைத்துமுணர்ந் தறம்மறம்பாத்
தேயினிது நன்றிதுதீ தென்றுணர்த்தும் அவர்நட்பை
வீயினுந்தான் மறப்பர்களோ மேதையார்? மறப்பரேல்
நாயினுங்கீழ்ப் பட்டவர்கள் அவர்காணிந் நானிலத்தே."

என்று கண்ணன் கூறியாங்கு மனங்கசிந்து கூறியும், இன்னும் புகழ்ந்து கூறின், அவர் வேறு தான் வேறு என்னும் பேதந் தோன்றுமென்று கருதி, அவ்வளவில் அமைந்து மகிழ்வானாயினான். புலவரும் பன்னாளாகத் தம்முள்ளத்தே குடிகொண்டிருந்த அரசனது திருவுருவினைக் கண்ணாரக் கண்டும், அவனது ஞான வாசனையை நுகர்ந்தும், அன்பு கனிந்தொழுகும் இன்சொற்களைக் கேட்டும், வாடிய மேனியைத் தழுவியும், அவன் நற்குணங்களை ஓயாது வாயாரப்புகழ்ந்தும் ஏக காலத்தே ஐம்புல இன்பத்தையும் ஆரத்துய்த்துக் கடதீபம்போல அசைவற்று அவசமானார்.

பின்னர் அவ்விடத்துக் குழுமியிருந்த முதுமைமிக்க சான்றோர், புலவரை நோக்கி, "புலவீர், உம்மை யாம் இளஞ்சிறுராயிருந்த நாள் முதலே கேள்வியுற்றிருக்கின்றோமே! யாங்கள் இப்போது முதுமையுடையராயிருக்கின்றோமே! நீர் இன்னும் மாறாத இளமையோடே காணப்படுகின்றீரே! இதற்குக் காரணம் யாதோ?" என வினவினார்கள். அதற்குப் புலவர், "உமக்குக் கழிந்த ஆண்டுகள் பலவாகியும், நரையில்லாதிருப்பது எப்படியாயிற்று?" என்று கேட்பீராயின், சொல்லுகிறேன்; கேளுங்கள்; என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியும், புதல்வர்களும் என்னைப்போல அறிவு நிரம்பியுள்ளார்கள். யான் எதனைக் கருதுகிறேனோ, அதனையே கருதிச் செய்வர் என்னுடைய ஏவலாளரும்; அரசனோ, அநீதியின்றிச் செங்கோலாற் காக்கின்றான்; இதற்கு மேலே, யானிருக்கின்ற ஊரில் நற்குணங்களால் நிரம்பிப் பணிய வேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து, ஐம்

புலனும் அடங்கிய கொள்கையை உடைய சான்றோர் பலரிருக்கின்றனர்; அவருடன் இடையறாது பழகு கிறேன்; இந்நலங்களால் கவலை என்பது கனவிலும் இலதாயிற்று; இலதாகவே, அக்கவலையாலுளதாகும் நரைப்பிணி என்னை எட்டிப்பாராமலிருக்கின்றது." என்னும் இக்கருத்தோடு தம்முள்ளத்தில் சுரந்தெழுந்த,

'யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையரென் னிளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.'

என்னும் அரும்பொருள் செறிந்த இப்பாட்டால் விடை யிறுத்தார் புலவர்; பின்னர்த் தமது ஆருயிர் நண்பனை அரசன் மேற்கொண்ட வடக்கிருத்தலைத் தாமும் மேற் கொள்ளக் கருதித் தருப்பைப் புல்லை ஆசனமாகப் பரப்பி, வடக்கு முகமாய் இருந்து உண்ணா நோன்பு பூண்டு, ஐம்பொறிகளை ஒடுக்கி, அரசன் உயிர் துறக்குங் கால் தாமும் உயிர் துறந்தார்.

இவ்வற்புதத்தைக் கண்ணுற்ற கண்ணகனார் என்ற புலவர், "பொன்னும், பவளமும், முத்தும், மணி யும் ஒன்றற்கொன்று சேய்மையவாய வெவ்வேறிடத்து உண்டாவனவெனினும், நல்ல அணிகலன்களைச் செய் யுங் காலத்தில் கோவையாய் ஓரிடத்திற்றோன்றினாற் போல, எத்துணைத் தூரப்பட்ட இடத்திலிருப்பினும், ஒன்று சேர வேண்டிய அமயத்துள் தவறாது சான்றோர் சான்றோரையே சார்வார்," என்னும் கருத்தமைந்த

'பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும், தொடைபுணர்ந்
தருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப;
சாலார் சாலார் பாலரா குபவே.'

என்னும் பெறலரும்பொருள் மணிகள் நிறைந்த பாட்டைக் கூறி வியந்து, உண்மையில் கண்ணகனாரே ஆயினார். புலவரும், அரசனும் வடக்கிருந்து உயிர் துறந்த இடத்தில் அக்கால வழக்கப்படி அவர்களது உருவினைக் கல்லில் வகுத்து, அதில் அவரது பீடும் பெயரும் எழுதி, நன்னீர்ப்படுத்துத் தூய்மை செய்து கல் நட்டார்கள்.

அரசர் உயிர் துறக்குங்கால் பொத்தியாரென்னும் புலவரும் உடன் துறக்கத் துணிய, அரசன், "உமக்கு இன்னும் மகப்பெறு இல்லையே! 'மகப்பெறா மானிடர்கள் வானவர்தம் ஊர்க்குப் புகப்பெறார்.' ஆகையால், மகன் பிறந்த பிறகு வருவீராக," என்று சொல்லி விடுக்க, மனங்கவன்று சென்ற அப்புலவர், உறையூர் சென்று, அரசனை அங்குக் காணப் பெறாது அழுது பாடி, மகன் பிறந்த பிறகு வந்து, அரசனது நடு கல் இடங்கொடுக்க, வடக்கிருந்து உயிர் துறந்தார்.

## ஆராய்ச்சி :

**பெயர் :** இவர்க்கு வழங்கும் பிசிராந்தையார் என்பதில் 'ஆந்தையார்' என்பது இவரது பெயர். சிறைக்குடி ஆந்தையார், அஞ்சில் ஆந்தையார், ஓதலாந்தையார், எயிலாந்தை என்று முற்காலத்து இப்பெயருடையார் பலராகலின், அவர்களின் இவரை வேறு பிரித்தறிதற்கு இவருடைய ஊர்ப் பெயரைப் புணர்த்திப்

பிரோந்தையார் என்று வழங்கினர். (ஆர்-சிறப்பு விகுதி) புலவர்க்குரிய 'ஆந்தையார்' என்னும் இப்பெயரை, ஆசிரியர் தொல்காப்பியனார்,

'ஆதனும் பூதனும் கூறிய வியல்பொடு
பெயரொற் றகரந் துவரக் கெடுமே.'[1]

என்று கூறியுள்ள இச்சிறப்புவிதிச் சூத்திரத்தால், ஆதன் + தந்தை = ஆந்தை என வந்தது எனக் கூறுவாருமுளர். இச்சூத்திரத்தால், ஆதன் என்னும் இயற்பெயர் முன், தந்தை என்னும் முறைப் பெயர் வருமொழியாக வந்து முடியுமிடத்து, ஓரோவழி இங்ஙனம் புணருமென்பதே ஆசிரியர் கருத்தன்றி, இங்ஙனம் புணர்ந்தமையான் விகாரமடையும் இப்பெயர் ஒருவர்க்கு இயற்பெயராய் வழங்குமென்பது ஆசிரியர் கருத்தென்று பெறப்படாமையானும், அங்ஙனம் பெறப்படினும், அஃது ஏனையோர் பெயர்க்கு ஒக்குமேனும், இப்புலவர் போன்ற புலவர் பெருமக்களுக்குச் சிறிதும் ஒவ்வாதாகலானும், இப்புலவரின் இப்பெயர்க்கு இங்ஙனம் காரணம் கூறுதல் பொருந்தாததாகவே தோன்றுகின்றது. சாமானியர் குழுவினுள்ளும் தந்தையைக் கொண்டே மகன் விசேடிக்கப்படுதல் பெருவழக்காயிருப்பவும், இந்நல்லிசைப்புலவர். மகனைக்கொண்டு விசேடிக்கப்பட்டார் என்கை எங்ஙனம் பொருந்தும்? தந்தையினும் சதமடங்கு தனயன் புலமை படைத்தவனெனின், அவனது பெயர்கொண்டு தந்தை விசேடிக்கப்படுதல் ஒருவாறு பொருந்துவதாகும். நம் ஆந்தையார், நல்லிசைப் புலவர் குழாத்துள் பல்லிசை நிறுத்தும் புலமை மிக்குடையராயும், பிற்காலத்து நச்சி

---

2. தொல்-எழுத்-சூ. 348

ஞார்க்கினியர் முதலிய ஆசிரியன்மாரெல்லாம் உச்சிமேல் வைத்துக் காட்டாகக் காட்டும் பெருமையுடையராயும் விளங்குதல் கண்டு வைத்தே இவரினும் சிறந்த புலமை யுடைமை, நூல் வாயிலானும், வழக்கு வாயிலானும் அறியப்படாத இவர் மகனரை இவரினும் சிறந்தாராக வைத்து, எங்ஙனம் இவரது பெயர்க்காரணத்துக்கு நாம் இணங்குவது? சங்கத்துச் சான்றோர் பெயருட்பல, தந்தையின் பெயரால் விசேடிக்கப்பட்டிருத்தலும் ஈண்டுக் கருதத் தக்கது. அன்றியும், அவர்களது பெயர், சினை, குணம், தொழில் முதலியவற்றாலும், அவர்களது பாடலிற்பயின்ற சொன்னயம் பொருணய மிக்க அடிகளாலும், விசேடித்த பொருள்களாலும் வழங்குதல் காண்கின்றோமன்றே? ஆகையால், இவரது இப்பெயர்க் காரணத்தை இன்னும் ஆராய்வதே சால்புடைத்தாம். 'ஆதனைத் தந்தையாக வுடையார் ஆந்தையார்,' என்பது பொருந்தும் போலும்!

ஊர் : இப்பெரியார் தோன்றிய ஊர் 'பிசிர்' என்பதும், அது பாண்டி நாட்டிலுள்ளதென்பதும், 67-ஆம் புறப்பாட்டிலும் 215-ஆம் புறப்பாட்டிலும் புலவரும் கோப்பெருஞ்சோழனும் முறையே 'இரும்பிசிராந்தை யடியுறை யெனினே,' எனவும், 'தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும் பிசிரோன் என்பவென் னுயிரோம் புநனே,' எனவும் கூறியிருத்தலான், ஐயமறத் தெளியலாகும். இது பாண்டி நாட்டிலும் தென்றிசையில் சோழ நாட்டுக்கு நெடுந்தூரத்திலிருந்ததென்பது, 'தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும் பிசிரோன்' என்றதானும், இதற்கு உரையாசிரியர், 'பாண்டியனது நல்ல நாட்டிலுள்ளும் சேய்த்தாகிய பிசிரென்னும் ஊரிடத்தானென்று சொல்லுவர்,' என

எழுதியிருத்தலானும் அறியப்படும். இதனால், இவ்வூர் பாண்டி நாட்டிலே தென்கடற்கரையை அடுத்துப் பண்டைக் காலத்தில் விளக்கமுற்றிருந்ததாக அறியப் படும். இதனை நற்றிணையில் நெய்தற்றிணைக்குரிய, தோழி தலைமகட்கு வரைவு மலிந்துரைத்த துறையாக இவர் பாடல் காணப்படுவதும், அதில் நாரை பெடை யோடு போய்க் கடலில் வாயால் துழாவி, மீன்களைப் பிடித்து வந்து கடற்கரைச் சோலைமரக்கிளை மேலுள்ள கூடுகளில் குஞ்சுகளுக்கு வாயிற்சொரியுமென்று நெய் தனில இயற்கை வனப்புக் கூறியிருத்தலும், இவரை நெய்தனிலப் பழக்கமுடையராகப் புலப்படுத்தி ஒரு வாறு வலியுறுத்தும். அன்றியும், பிசிர் என்பது அலை யின் துளிக்கும்[1] பனையின் குருத்துக்கும்[2] பெயராகப் பண்டை நூல் வழக்கில் காணப்படுவதும், பிசிர் நெய்த னிலத்துக் கடலலைவாய் ஊரென்ற கொள்கைக்குத் துணையாதல் காண்க. பிசிரூர் என்பது பிசிர் என வழங் கப்பட்டது போலும்! இக்காலத்தில் இராமநாதபுரம் ஜமீனில் கடற்கரைக்கு ஏழுநாழிகைத் தூரத்தில் பிசிர்க் குடி என ஓரூர் உளது; இட்பிசிர்க்குடியே பிசிர் என மருவியது எனக்கொண்டு, இதனையே இவரது ஊர் என்றலும் பொருந்தும்.

குலம்: இவரது மனையறத்தின் மாட்சியையும், ஏனைய மேலான ஒழுகலாற்றினையும், கொள்கைகளை யும் ஊன்றி நோக்குமிடத்து, இவர் தமிழ் நாட்டின் நாக ரிகமிக்க நற்குடிப் பிறப்பினர் என்பது மட்டும் அறியப் படுகின்றதன்றி, 'இக்குலத்தினர்,' என ஒருதலையாய் அறியப்படுமாறில்லை.

1. அகம். 250:1. பதிற். 15:6. ஷை 50:8. 2. புறம். 235:3.

சமயம் : இப்புலவர், கோப்பெருஞ்சோழன் மேற்கொண்ட தென்னாட்டு வடக்கிருத்தலாகிய சநாதன தர்மத்தைத் தாமும் மேற்கொண்டதனாலும், ஐம்புலன் ஒடுக்கமுடைய ஆன்ற கொள்கைச் சான்றோர் கூட்டுறவைச் சாலப்பெற்றிருந்தமையானும், இவர் வைதிக சமயத்தை மேற்கொண்டொழுகிய பெரியாரென்று கொள்ளுதல் தகும்.

பெருமை : இப்புலவர் பெருமான் மாட்சி மிக்க மனைவியையும், அறிவு நிரம்பிய புதல்வர்களையும், தம் கருத்திற்கேற்பத் தொழில் புரியும் ஏவலாளரையும், பெருஞ்செல்வத்தையும், சான்றோரது நட்பையும், பரந்த கல்வியறிவையும், அரசரும் விரும்பும் அரசியலறிவாற்றலையும் பெற்று, இவற்றாலுளதாகும் களிப்பால் நெடுங்காலம் வரை நரை திரை மூப்பின்றியே வாழ்ந்தார் என்பதறிய இவ்வுலகத்தில் இவர் அடையப்பெறாததும், நுகரப் பெறாததுமான உறுதிப்பொருள் ஒன்றுமில்லை என்பதுபட்டு,[1] இவரது ஈடுமெடுப்புமற்ற பெருமை இத்தன்மைத்தாமென விளங்கும். நரை வாராமைக்குக் காரணம் வினவிய சான்றோர்க்கு, "நரைக்குக் காரணம் கவற்சியே," என்றும், "யான் பெற்ற தமிழ்க் கல்வியின் அறிவின்பத்தாற் கவலையொழிந்து மூப்பின்றி வாழ்கின்றேன்," என்றும் கூறியது கொண்டு, இவரது மனோ தத்துவ ஆராய்ச்சி வன்மை. 'மரணத்தை நீக்கும் அமிழ்தினும் இனியது தமிழ் மொழி.' எனக் கொண்ட தமிழாராய்ச்சித் திறன்,

---

1. 'இல்லதென் இல்லவள் மாண்பானால்?' 'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த மக்கட்பே றல்ல பிற.' 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்பவை ஈண்டுக் கருதத் தக்கன.

மொழிப் பற்று முதலியன அளவிடற்கரியனவாமென்ப தறியப்படும்.

புறம் 97-ஆம் பாடலில் அன்னச் சேவலின் இயற்கை புலப்படுத்தியிருப்பதும், நற்றிணை 91-ஆம் பாடலில் கடற்கரையின் தோற்றப், நாரை கடலிற் பெடையோடு போய் மீனைப் பிடித்து வந்து குஞ்சு களுக்கு இரை அருத்துதல் முதலியன வெளிப்படுத்தி யிருப்பதும், அகம் 308-ஆம் பாடலில் மலையைச் சூழ்ந்த மேகத்தின் தோற்றத்தை உவமித்திருக்குந் தன்மையும் இவரது இயற்கைப் பொருளாராய்ச்சி வன்மையைப் புலப்படுத்தும். இவரை நட்பிலக்கணத்துக்கே ஒரு பெருஞ்சான்றாய் வைத்து, 'புணர்ச்சி பழகுதல் வேண்டா,' என்ற திருக்குறளுரையில் பரிமேலழகர், "புணர்ச்சி, பழகுதல் என்னும் இவ்விரண்டுமின்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சியொப்பின், அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும்," என விதந்து கூறி யிருப்பதும், தொல்காப்பியக் கற்பியல் 52-ஆம் சூத்திர வுரையில் நச்சினார்க்கினியர், "கோப்பெருஞ்சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல் வார் துறந்தாரென்று[1] கூறும் புறச்செய்யுட்கள் உதார ணம்," எனக் கூறியிருப்பதும், கோப்பெருஞ்சோழன் தனது நாவார, 'பிசிரோன் என்பவென் உயிரோம்

1. சோழன் உயிர் துறந்த பின்னுட்பின்னர்ப் பிரிவாற் ருது உயிர் துறந்த இப்பொத்தியாரென்னும் புலவரும், பாரி பிரிவுக்காற்ருது சின்னுட்கழிந்து வடக்கிருந்து உயிர் துறந்த கபிலரும், சீனக்கனேடு உயிர் துறந்த பொய்யா மொழியாரும் நட்பிலக்கணத்துக்குப் பிசிராந்தையார் வரி சையில் வைத்துப் பாராட்டுதற்குரியர்.

புகனே,' எனப் புறப்பாட்டில் இவரது நட்பின் பான்மையைப் பாராட்டியிருப்பதும் இவர் அச்சோழனோடு உடனுயிர் நீத்த வரலாற்றை வலியுறுத்தி, இவரது நட்பிற்கு வீற்றிருக்கையான பெருமையைக் குன்றின்மேலிட்ட விளக்கமாக இன்றும் விளக்குகின்றன.

பாண்டியனுக்குரைத்த நீதியால், இவர்க்கு அரசியலிலிருந்த அறிவு மிகுதி அறியப்படும். உணர்ச்சியொத்த தோழன் வடக்கிருந்த செய்தியை நெடுந்தூரத்துள்ள தமதூர்க்கண்ணிருந்தே பிறர் உணர்த்த வேண்டாது தாமேயுணர்ந்து புறப்பட்டு வந்து சோழன் கருத்துப்படி அவன் குறித்த காலத்தில் அவன் முன்னிலையிற் றோன்றினரென்றால், காலமிடைப்பட்டவும், தேயம் இடைப்பட்டவுமான நிகழ்ச்சிகளையெல்லாம் அறியும் இவருடைய யோக ஞானங்களின் ஆற்றலை எங்ஙனம் வியந்துரைப்பது! இதனால் இவர் யோகிகளாய் உபாயங்களால் முக்காலமுணர்ந்த மாமூலர் முதலிய அறிவன்றேயத்து அனைநிலை வகையோர்[1] வரிசையில் வைத்துச் சொல்லுதற்குத் தக்கவராதல் காண்க.

## பாட்டுக்கள் :

இக்காலத்து, இப்புலவருடைய பாடல்களாகப் புறநானூற்றில் நான்கும், அகநானூற்றில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றுமாக ஆறு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. இவர் பாடல்களெல்லாம் இயற்கை வனப்பும் பொருட்பொலிவும் நிறுத்திட்ட பொருளைக் குறித்து வருகிளவியு முடையனவாய்ப் படிப்போர்க்கு இன்சுவையூட்டுகின்றன. புறம் 67-ஆம் பாட்டில், "எம் ஆருயிர் நண்பனாகிய சோழனை அடையப்பெறுத யான் வருந்

1. தொல் - பொ. சூ. 75 உரை பார்க்க.

தும் மாலைக் காலத்தில் நீ உன் பெடையோடு குமரித் துறையில் அயிரை மீனை மாந்தி, இனிதாய்ச் செல்கின்றனை," என்று அன்னத்தை நோக்கிக் கூறுவதாய்,

'மையன் மாலையாங் கையறு பினையக்
குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின்,'

எனக் கூறி, அதனால் தாம் சோழன்மீது கொண்டுள்ள நட்பின் பான்மை, சிறந்த தலைவன் தலைவிகளிடத்து நிகழும் அன்பின் பான்மைக்கொத்தது எனக் கொள்ள வைத்திருப்பது எத்துணை வியப்பும் மகிழ்ச்சியும் ஊட்டும் நுண்மையதாயிருக்கின்றது! இப்பாட்டில், மாலைக் காலத்தில் தண்மையாய் விளங்கும் மதியத்துக்கு, நாட்டைத் தலையளி செய்து காக்கும் ஓர் அரசனது முகத்தை உவமை கூறியிருப்பது, அரசர்க்கிருக்கவேண்டிய தண்ணளியைப் புலப்படுத்தி, இவரது உவமை கூறும் ஆற்றலைக் காட்டுகின்றது. இங்குக் கூறிய அரசன், கோப்பெருஞ்சோழனேயாமென்பது சந்தர்ப்பம் பற்றிக் குறிப்பாலறிய வைத்திருக்கும் மாட்சி குறிக்கொள்ளத் தக்கது. பாண்டியனுக்கு அரச நீதி கூறிய

'காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்;
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்

யானை புக்க புலம்போலத்
தானு முண்ணான் உலகமுங் கெடுமே.'

என்ற செய்யுளின் பொருணயமும், உவமை நயமும் பலரும் பன்முறை படித்தறிந்து இன்புறற்பாலன. இப்பாட்டின் உயரிய பொருட்பொலிவும் சொற்பொலிவும் பற்றியன்றே இதன் சொல்லையும் பொருளையும் எடுத்து,

'வாய்ப்படுங் கேடு மின்றும் வரிசையி னறிந்து நாளும்
காய்த்தநெற் கவளந் தீற்றிற் களிறுதான் கழனி மேயின்
வாய்ப்பட லின்றிப் பொன்றும்; வல்லனாய் மன்னன் கொள்ளின்
நீத்தநீர் ஞால மெல்லாம் நிதிநின்று சுரக்கு மன்றே.'[1]

எனத் திருத்தக்க தேவரும்,

"மாநி ரப்புருச் சிறுபுலப் பயன்களும் வயக்கரி நிலை காடித், தான ளித்திடி னடுபசி கெடுமது சார்ந்துபுக் குனின்வேலி, யானதென்னினும் வாலினுங் காலினும் அழிந்துவாய் புகலின்றிப், போனதாமது போன்றதவ் விறைமகன் புவியெலாம் பொலிவற்றே"[2] எனச் சீகாழித் தல புராணமுடையாரும் தம் பாடலுட்போற்றிப் பொதிந்து வைத்துக்கொண்டனர்?

தாங்கற்ற தமிழ் மொழியின் சொற்பொருள்களின் சுவை நுகர்வானும், அக்கல்வியாலுளதாகிய புகழ் பொருள் பூசை முதலியவற்றானும் யாண்டு பலவாகியும் நரையின்றி வாழ்ந்த புலவர் பாட்டாகிய "யாண்டு பலவாக" என்ற செய்யுளை ஆய்ந்து, அதில் மணற்கேணி தொடுவார்க்கு நீர் சுரந்தாற்போலச் சுரக்கும் பொருளமிர்தப் பெருக்கை நுகர்வார், "யாண்டு பலவாகியும் நரையின்றி வேண்டுவன பெற்று வாழ்வார்கள்," என்பதில் ஐயுறவில்லை 212-ஆம் புறப்பாட்டில், "உழவர்,

1. சீவக சிந். 2907. 2. பூத விமோசனமானது, 7.

மதுவை ஆமை இறைச்சியுடனே உண்டு, சுட்ட ஆரல் மீனைக் கதுப்பில் ஒதுக்கி, மதுவுண்ட மயக்கத்தால் செய்யுந் தொழிலை மறந்திருக்கின்றனர்," என்று கள்ளுண்டாரியல்பு கூறியுள்ளார். இப்பாட்டில் சோழனது நகரமாகிய உறையூருக்குக் 'கோழி'[1] எனப் பெயர் குறித்துள்ளார்.

இவரது அகம் 308-ஆம் பாடல், குறிஞ்சித் திணைக்குரியது. இதில் புலியோடு களிற்றியானை போர் செய்து புண்படுத்தல் கூறப்பட்டுள்ளது. 'இரவெல்லாம் மழை பொழிந்து விடியற்காலத்தில் மலையைச் சூழ்ந்து தோன்றும் வெண்மேகம், குயவன் சூளைமேற் சூழ்ந்துள்ள புகைபோலத்தோன்றும்,' என்று கூறிய உவமை நயம் படிப்போருள்ளத்தைப் பிணிக்கும். இதில், "களிறணங் தெய்தாக்கண் முகையிதணத்து," எனப் பரண் அமைப்புக் கூறியிருப்பது மிக அழகு பயப்பது. இப்பாட்டில் உரைத்திருக்கும் உரிப்பொருணயம் விரிப்பிற்பெருகும்.

நற்றிணையில் 91-ஆம் பாடல் இவர் பாடியதாகும். அது நெய்தற்றிணையில் தோழி தலைமகட்கு வரைவு மலிந்து உரைத்த துறையாயமைந்தது. அப்பாடலில் 'நாரை தன் பெடையோடு போய்க் கடலில் வாயால் துழாவி, மீனைப் பிடித்து வந்து, கடற்கரைச் சோலை மரங்களின் கிளைகளிலுள்ள கூடுகளில் விருப்பியழைக்கும் தன்னுடைய குஞ்சின் வாயில் சொரியும்,' என்று கூறி உள்ளுறை அமைத்திருக்கும் நலன் புலன் கொளற்குரியது. இவர் பாடலுள் 'தடந்தாள் நாரை' எனவும்,

1. "முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய, புறஞ்சிறை வாரணம் புக்கனர்," என்ற (சிலப். நாடுகாண்- 247-248 அடி) உரை பார்க்க.

'சிறுகட் செங்கடைச் சிறுமீன்' எனவும், 'கருங்கோற் குறிஞ்சி' எனவும் கூறியிருப்பவை, இவரது இயற்கைப் பொருளாராய்ச்சி நுண்மையைப் புலப்படுத்தும். குமரித் துறையையும், இமய மலையையும் கூறியுள்ளார். பூரண மதி, 'கோடு கூடு மதியம்,' எனப்பட்டுள்ளது.

## 6. ஔவையார்

வடவேங்கடம், தென்குமரி என்னும் இவ்வெல்லைக் குட்பட்ட தமிழ் வழங்கும் உலகத்தின் ஒரு பகுதியாய் விளங்கிய சேர நாட்டில் தமிழ்ப்பழங்குடியாகிய பாணர் குடியிலே ஔவையாரென்னும் இன்னிசைப் புலமை மெல்லியலார் பன்னூறாண்டுகட்கு முன்னர்த் தமிழகம் தழைக்கத் தோன்றினார்.

அந்நாளில் நம் தமிழ் மொழி மறுவற்ற மதிபோலத் தன்னொளி பரப்பி நன்னிலையுற்று விளங்க, நந்தமிழ் வரைப்பு,

'மாவு மாக்களும் ஐயறி வினவே.'

'மக்கள் தாமே ஆறறி வுயிரே.'

என ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார் பணித்த ஆணை நெறி நின்று ஒழுகியதாகலான், ஒரு நாட்டின் அறிவு, செல்வம், கல்வி, நாகரிகம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அந்நாட்டுப் பெண்டிரின் அறிவே கருவியா மென்ற நுண்மையை நன்கறிந்திருந்ததாகலான், 'ஆடவர் பெண்டிர் என்ற வடிவு வேற்றுமை பற்றி இருதிறத்தாருள்ளும் உயர்வு தாழ்வு என்பதில்லை; அறிவு வேற்றுமையே இருபாலாருள்ளும் கருதற்பாலதாம்,'

எனக்கொண்டு, ஆடவர் பெண்டிர் என்ற இரு பாலார்க்கும் வேற்றுமையின்றி ஒரே தன்மைத்தான அறிவைக் கொடுப்பதற்கு உடன்பட்டிருந்தது. அதனால்; அஃது, ஆண் பெண் என்ற பால் வேறுபாட்டை அறவே நீக்கி, விழுமிய கல்வியறிவை வேண்டுவோர்க்கெல்லாம் விழைந்து கொடுத்தது; பிறப்பில் இழிபு கருதாது கடை நிலத்தோராயினும் கற்றறிந்தவர்களைத் தலை நிலத்து வைத்து மகிழ்வு பூத்தது; குலத்தினும், பாலினும், குடியினும், தொழிலினும், கோட்பாட்டினும் பல்திறப் பட்ட நன்மக்களும் பகைமையின்றி ஒருங்கு குழீஇத் தழுவி மகிழ இருந்தது; நன்மக்கள் எங்குப் பிறந்தாலும் என்னென்று அறிவின் பெருமையும் அன்பின் அருமையுமே கருதிப் பெண்டிரும் குடியிலிழிந்தாரும் கூறிப் போந்த நன்மொழிகளையும் வேதமென ஓதிப் புகழ்ந்தது இத்தன்மையெல்லாம் நம் தண்டமிழ் நாடு கொண்டிருந்தமையாற் குறவர் குடியினுள்ளும், மறவர் குடியினுள்ளும், குறவர் குடியினுள்ளும், அரசர் மரபினுள்ளும், வேறு பல குடியினுள்ளும் குறமகள் இளவெயினி, காவற்பெண்டு, வெண்ணிக் குயத்தி, ஆதிமந்தியார், பாரி மகளிர், பூதப் பாண்டியன் தேவியார், வெள்ளி வீதியார், நப்பசலையார், நக்கண்ணையார், பொன் முடியார் முதலான பல நல்லிசைப் புலமை மெல்லியலார் பல்கி நம் தமிழ் நாட்டிற்கு என்றும் பொன்றாத புகழை நல்கினர். அக்காலத்து இவ்வியல்பால் நம் ஔவையார் இளமையிலேயே இயற்றமிழ்க் கல்வியினும், தம் குலத்துக்குரிய இசை நாடகங்களினும் நன்கு பயின்று, தேர்ச்சியுற்று, நல்லிசைப் புலமை மெல்லியர் தலைவியாராகவும், விறல்பட ஆடும் விறலியராகவும் விளக்கமுற்றிருந்தார்.

பின்னர் இவர், தம் குல வாழ்க்கையாகிய பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டு, நம் தமிழகத்தில் நியாயமும் தியாகமும் வீரமும்மிக்க திருவுடை மன்னர் அவைக்களந்தோறுஞ் சென்று, தம் புலமைத் திறலேயும், ஆடல் பாடல்களின் விறலேயும் வெளிப்படுத்தி, அவர்கள் மனமுவந்தளிக்கும் பெருஞ்செல்வங்களைப் பெற்று, வாழ்ந்து வருவாராயினர்.

இவர் காலத்தில் சேரநாட்டின் ஒரு பகுதிக்கண் விளங்கிய தகடூர் என்னும் ஊரில் அதியமான் நெடுமானஞ்சி என்னும் ஓர் அரசன் அரசு செய்திருந்தனன். அவன் சேரர் உறவினன்; கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; வீரமிகுந்தவன்; மழவர் என்னும் ஒரு வகை வீரர்கள் அடங்கிய படையையுடையவன்; சிற்றரசரும் பேரரசருமாகிய ஏழரசர்களை வென்று, அவர்களை வென்றமைக்கறிகுறியாக அவர்களது கொடி முதலாகிய ஏழிலாஞ்சனையுமுடையவன். அவன் இவ்விதச் சிறப்புக்களோடு வண்மை மிகுந்தவனாய் விளங்குவதையறிந்த ஔவையார், அவனிடத்துப் பரிசில் பெறக் கருதி, அவனது தகடூரை அடைந்து, அவனைப் புகழ்ந்து பாடினர். அவன் இவர்மீது பேரன்பு காட்டி உபசரித்துவிட்டுப் 'பரிசில் அளித்தால் இவர் இவணின்று அகன்றுவிடுவாராகையால், இவரைப் பிரிய நேரிடும்,' எனக் கருதிப் பரிசில் அளியாது, சின்னாள் தாழ்த்திருந்தனன். ஔவையாரும் சின்னாள் அவனது அரண்மனைக்கண் தங்கியிருந்தவர், அவன் பின்னரும் பரிசிலளியாது காலம் நீட்டிப்பது கண்டு பொறாது சினம் மிகுந்து, அவனை நேரிற்பார்ப்பதற்கும் இசையாது, அவனது வாயிற்காவலாளனிடத்துச் சில கூறிவிட்டுச் செல்லுதற்குக் கருதி, காவலாளனை நோக்கி,

"வாயில் காப்போய், வாயில் காப்போய், கொடையுடையாரது செவியிடத்துப் பொருள் விளங்கும் சொற்களாகிய விதையை விதைத்துத் தாம் நினைத்த பரிசிலாகிய தானியத்தை விளைவிக்கும் மன வலியுடையவர்களும், மேம்பாடு பெறுதற்கே வருந்துகின்றவர்களுமான இப்பரிசில் வாழ்க்கையுடைய பரிசிலர்க்கு அடையாத வாயிலைக் காப்போய், குரிசிலாகிய நெடுமானஞ்சி, தான் தன் தரம் இத்தன்மையது என்று அறியானோ? அதனை அறியாவிடினும், எம் தரத்தையேனும் அறியான்கொல்லோ? இவ்வுலகம், அறிவும் புகழுமுடையோர் அனைவரும் இறந்தொழிந்தாராக, வறிய இடத்தையுடையதாகிவிடவில்லையே! ஆகலான், இப்போதே புறப்படுகின்றோம்; எமது யாழ் முதலான கருவிகளை மூட்டையாகக் கட்டித் தூக்குகின்றோம்; இவனன்றி எங்கட்கு இல்லையோ இடம்? எத்திசைச் செல்லினும், அத்திசையில் எம்மை அன்போடு உபசரித்துச் சோறிடுவார் பலருளர். இதனை நும் அரசனுக்குக் கூறிவிடுவாயாக," என முனிவுடன் மொழிந்துவிட்டு, அறிவும் புகழுமுடையாரிடத்துப் பரிசில் பெறுதற்கு விரைந்தெழுந்தார்.

இங்ஙனம் இவர் சினவிக் கூறிச் செல்லுதலை வாயில் காப்போனால் அறிந்த அதியமான் அஞ்சி, இவர் முனிவுக்கு அஞ்சி, விரைந்து வந்து இவரைக் கண்டு, இவர் கொண்ட கோபந் தணிய வேண்டிநின்று, தனது கொடை மன்றத்துக்கு அழைத்துச் சென்று, வீற்றிருக்கச்செய்து, வரிசைமிக்க பரிசில் அளவு கடப்ப அளித்து, உணவிற்கு நெல்லும் சிறந்த ஆடைகள் பலவும் கொடுத்துபசரித்தான். உடனே ஔவையார் உவந்து, "இத்தகைய வண்மையாளனைப் பரிசில் நீட்டித்தானென்று முனிந்தோமே!" என்று இரங்கித் தம் மனத்

தோடு கூறுபவராய், "அதியமான் ஒரு நாளல்ல, இரு நாளல்ல, பல நாளும் பலரோடும் செல்லினும், முதல்நாள் கண்ட போது கொண்ட அன்பிற்சிறிதுங் குறையாத அன்பையே உடையான்; இவன் பரிசில் நீட்டிப்பினும், நீட்டியாதொழியினும், யானை கையில் எடுத்த கவளம் வாயினுட்செல்லுவது தப்பாவாறு போல, இவன் நமக்குப் பரிசில் தருவது தப்பாது," என்று, அவன் பழகியோரிடத்து என்றும் ஒரு தன்மையாகக் கொள்ளும் அன்பையும் அருமையையும் மிகுத்துக் கூறி, வண்மையை வாழ்த்திப் புகழ்ந்து, அவனுடன் வதிந்திருந்தனர்.

இங்ஙனம் இருக்குங்கால் ஒரு நாள் அதியமான் ஒரு மலைப் பக்கத்துக்குச் சென்றிருந்தவன், மலைப் பிளப்பிலிருந்த ஒரு கருநெல்லி மரத்திற்பழுத்து விளங்கிய கனியொன்றைக் கண்டு, அதனை அரிதின் முயன்று பெற்ருன்.[1] அவன், அதனை உண்டார் நெடுங்காலம் உயிர் வாழ்வார் என்றறிந்தும், அதனைத் தான் உண்டு உயிர் வாழ்வதினும், தமது நா வன்மையால் பெருநூல்களியற்றி உலகைத் திருத்தும் ஔவையார்க்கீதலே சாலப் பயனுடையதெனக் கருதி, அக்கனியின் ஆற்றலைக் கூருதே அவர்க்குக் கொடுத்து உண்ணும்படி செய்தான். உண்ட பிராட்டியார் பின்னர்க் கனியின்

1. இக்கனியை ஒரு முனிவர் கஞ்ச மலையிலிருந்து (ப்ரமன் மலை) பெற்று, அதியமானுக்குச் சாதல் நீங்கக் கொடுத்தாரெனச் சொல்லும், கரபுர நாதர் புராணம்.

'மால்வரைக் கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கீந்த, அதிகனும்''

(சிறுபாண், 99-103) என்பதும், 'சாதலை நீக்கும் அருநெல்லிதன்னைத் தமிழ்சொலௌவைக் காதரவோடு கொடுத்தவன்'' (கொங். ம. சதகம்) என்பதும், குறள் 100. பரி-உரையும் இவ்வரலாற்றை வலியுறுத்தும்.

விசேடத்தை உணர்ந்து, அதியமான் அஞ்சி, தன்னினும் தம்மை மேம்பட மதித்துத் தாம் சாவாதிருக்கக் கருதியதற்கு வியந்து, அவனை நோக்கி, "வீரச் செல்வ முடைய அதியர் கோமானே, பெரிய மலையுச்சியிற் பெற்ற அமிழ்த மயமான இனிய பழத்தைப் பெறுதற் கரியது என்று கருதாது, அதன் பயனை வெளிப்படக் கூறாது அடக்கிச் சாதல் நீங்க எமக்கு அளித்தாயாத லால், நீ சந்திர மவுலியும், நீல கண்டனுமாகிய சிவ பெருமான் நஞ்சையுண்டும் நிலைபெற்றிருப்பது போல, நெடுங்காலம் நிலை பெற்று வாழ்வாயாக!" என்று கொண்டு,

'வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்!
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா(து)
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே!'

எனப் பாடி வாழ்த்தி, அவனுக்கு உயிர்த் துணைவராய்ச் சிறந்து, அவனது காண்டற்கெளியனாந் தன்மை, அருள், அன்பு, வீரம், தியாகம், நியாயம் முதலியன விளங்கப் பல்வேறு அமயத்துப் பல கவிகள் பாடி, அவனை மகிழ் வித்திருந்தனர்.

ஔவையார் அதியமானுடன் இங்ஙனம் அமர்ந்து வரும் நாளில், காஞ்சி நகரத்தை ஆண்டுகொண்டிருந்த

வருகிய தொண்டைமான் என்னும் அரசன், தனக்குள்ள படைவலி காரணமாக அதியமானைத் தன்னினும் மெலியானெனக்கருதி, அவனோடு பொருதற்குச் சமயம் நோக்கியிருந்தான். இதனை உணர்ந்த அதியமான், தன் னாற்றலையும், சிறப்பினையும், அஞ்சாமையையும் எஞ்சாது தூது மூலம் அறிவித்தற்குக் கருதியவன், 'இவ் வரும்பெருங்கருமத்துக்குத் தக்கவர், நா வன்மையும், பாவன்மையும், அரசியலறிவும் மிக்க ஔவையாரே;' எனத் துணிந்து, அவரை அவனிடத்துத் தூது செல்ல வேண்டினன். ஔவையாரும் அவ்வரசியற்பெருங் காரியத்தைப் பின்னிடைவின்றி மேற்கொண்டு, புறப் பட்டுப் போய்க் காஞ்சி நகரடைந்து, தொண்டை மானைக் கண்டார். அவனும் புலவராயும் தூதராயும் வந்த அவரை மீப்பட மதித்து உபசரித்தான். ஔவை யார் அவனது அரண்மனைக்கண் அன்று உண்டியருந்தித் தங்கியிருந்தனர்.

பின்னர்த் தொண்டைமான் தனது அரண்மனைக் காட்சியை அதியமானிடத்திருந்து வந்த ஔவையாருக் குக் காண்பிப்பான் போலத் தன் படை மிகுதியையும் போராற்றலையும் உணர்த்த நினைந்து, அவரை அழைத் துச் சென்று பல்லிடங்களையும் காட்டி வந்தவன், தனது ஆயுதச் சாலைக்கு அழைத்து வந்து, அங்கு நெய் பூசி உறையிட்டு அலங்கரித்து அணி அணியாய் வைத்திருக் கும் ஆயுதவகைகளையெல்லாம் காட்டி நின்றான். மனத் தது பாடும் ஆற்றல் வாய்ந்த ஔவைப் பிராட்டி யாருக்கு அவனது உட்கிடை அறிதல் அரியதாமோ? இவர் அவற்றைப் பார்த்து, அவனுக்குச் செருக்கடங்க அறிவு கொளுத்த நினைந்து, சில கூறுபவராய், "இப் படைக் கருவிகளெல்லாம் (போரில் பயன் படாமை

யால்) மயிற்பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பட்டுத் திரண்ட காம்பு திருத்தி, நெய் பூசி, காவலையுடைய அரண்மனைக்கண் (வீணே) இருக்கின்றன; தான் பெற்ற செல்வத்தைப் பல்லோர்க்கும் பகுத்துண்ணும் வண்மையுடைய எம் அதியமான் ஆயுதங்கள், பன் முறை போரில் பகைவரைக் குத்துதலான் கங்கும் நுனி யும் முரிந்து, செப்பணிடக் கொல்லனது பணிக் களரி யாகிய சிறிய கொட்டிலை அடைந்திருக்கின்றன," என்ற கருத்தமைத்து,

'இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ; என்றும்
உண்டாயிற் பதங்கொடுத்(து)
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோ ரொக்கல் தலைவன்
அண்ணல்எங் கோமான் வைந்நுதி வேலே.'

எனத் தொண்டைமான் படைக்கலத்தைப் புகழ்பவர் போல இகழ்ந்தும், அதியமான் படைக்கலத்தைப் பழிப் பவர் போலப் புகழ்ந்தும், குறிப்பால் தொண்டைமான் வீரத்தினும் தம் அதியமான் வீரத்தையே மேம்படுத் துரைத்தார். அங்ஙனம் உரைத்தலும், தொண்டையர் கோன் ஔவையாரைநோக்கி'விறலியீர்,அப்படியாயின், நும் நாட்டுள் என்னோடு போர் செய்யும் வலியுடையாரு முளரோ?" என வினவினன். அதற்கு அவர், "வேந்தே. நீ போர் செய்யக் கருதுவையாயின், எமது நாட் டின்கண், அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டும் பாம்பு போன்ற இளைய வலிய வீரருமுளர்; அவரேயு

மன்றி, மன்றின்கண் தூங்கும் மத்தள வாத்தியத்தின் காற்றடித்தலால் எழுந்த ஓசையைக் கேட்டாலே அது போர்ப்பறை என்று கருதி மகிழும் போர் விருப்புடைய எம் தலைவனும் உளன்,'' என்று அதியமானது போர் விருப்பையும், அஞ்சாமையையும் எடுத்துக் கூறித் தொண்டைமானது தருக்கை அடக்கிவிட்டுத் தகடூர் வந்து சேர்ந்தார்.

இங்ஙனம் இவர் தூது போய் மீண்ட சின்னாட்களுக்குப் பின்னர், திருக்கோவலூர் அரசனாகிய மலையமான் திருமுடிக்காரி என்பான், பல வேற்றரசர்களைப் போரில் வென்று அடக்கி, வென்றி மிகுந்து, தனக்கு நிகராவார் ஒருவருமிலரென்று பெருமிதம் கொண்டிருந்தான். இதனை அறிந்த அதியமான், அவனதாற்றலை அடக்கித் தன் புகழை மேம்படுத்தக் கருதி, அவனோடு பகைமை கொண்டு, நால்வகைப் பெரும்படையோடும் போய், மலையமானது கோவலூர் மதிலை வளைத்தனன்; கோவலூர்க் காரியும் காரிக் குதிரை ஊர்ந்து படையுடன் வந்தெதிர்த்துக் கடும்போர் புரிந்தனன். அதியமான் தனது வேலாலும், வாளாலும், ஆளாலும், கரியாலும், பரியாலும் காரியின் படையை முறியடித்துப் பெருஞ்சமர் நிகழ்த்தினன். அவ்வமயம் அதியமானுடன் போர்க்களஞ் சென்றிருந்த ஔவையார், காரி அதியமானின் போர் வெல்லுந் திறத்தையறியானாய் வந்து பொருதலால், பல உயிர்கள் மடிவதற்கிரங்கி, அவனுக்கு அதியமானின் ஆற்றலை அறிவுறுத்திப் பணிந்து போகுமாறு கூறிப் போரை ஒழித்தற்குக் கருத்துக் கொண்டு, மலையமானையும் அவன் துணை வீரர்களையும் நோக்கிக் கூறத் தொடங்கி, "அதியமான் போர் செய்தற்கு நின்ற இடத்தினின்று

பெயர்ந்து, உலாவி, உறையினின்றும் உருவிய வாட்கள், பகைவரது உடம்பின் தசையின்கண்ணே முழுகிப் பதிந்து கதுவாய் போய் வடிவிழந்தன; அவன் வேல்கள் குறும்பரின் அரண்களை வென்று, அவர்களது நாட்டை அழித்தலால், காம்பும் ஆணியும் அசைந்து கெட்டன; அவன் களிறுகள் கணைய மரத்தால் தடுக்கப்பட்ட கதவைப் பொருது பகைவரது அரணை அழித்தலால், பெரிய தந்தங்களிற் கட்டிய பூண்கள் கழன்றன; அவன் குதிரைகள் போர்க்களத்திற் பொருத வீரர்களது மார்பு உருவழியும்படி ஓடி உழக்குதலால், இரத்தக் கறை பட்ட குளம்புகளையுடையவாயின; அதியமானோ, நிலவுலகம் அடங்காத படையையும், கழல் வடிவாகவும் கிண்ணி வடிவாகவுஞ் செய்து செறிந்த அம்புகள் துளைத்த கேடயத்தையுமுடையவன்; போர்க்களத்தில் அவனாற் கோபிக்கப்பட்டோர் பிழைத்தல் எங்கேயுளது? நெல் வளமிக்க உங்களுடைய ஊர்கள் உங்கட்கு உரியவாக விரும்புவீர்களாயின், அவனுக்குத் திறை கொடுத்தல் வேண்டும்; அங்ஙனம் நீங்கள் கொடுக்க மறுப்பீர்களாயின், அவ்வுரிமையை நீங்கள் அடைய அவன் உடன்படுவானல்லன்; அவனது போர்த்திறத்தை நான் உள்ளவாறு சொல்லியும் நீங்கள் அதனை அறியீர்களாயின், உங்களது கழற்கனியால் வகிர்ந்த கூந்தல் முடியை உடைய மனைவியரை நீங்கள் பிரிதல் வியப்பன்று. ஆகையால், அதனை ஆராய்ந்து போர் செய்மின்," என்றும்; "எங்கள் வீரன், நாளொன்றுக்கு எட்டுத் தேரைச் செய்யுந் தச்சன் ஒரு மாதங் கூடி ஆராய்ந்து செய்யப்பட்ட ஒரு தேரின் காலை ஒத்த விரைவும் திண்மையுமுடையவன்," என்றும் அதியமானது ஆற்றலையெல்லாம் எடுத்துரைத்

தார். இங்ஙனம் இவர் உரைத்தும், மலையமான் போர் வெற்றியில் மிக்க வேட்கையுடையவனாதலின், தன்னுயிர்க்கும் பிறவுயிர்க்கும் இரங்காது எதிர் நின்று பொருது, இறுதியில் அதியமான் அஞ்சிக்கு ஆற்றாது புறங்கொடுத்தோடினான். அவனுடைய படைகளும் நிலை கலங்கிக் கலைந்தன. கோவலூர், அதியமானது ஆட்சிக்குட்பட்டது. அவனது போர் வெற்றியைக் கண்ட பரணர் என்னும் புலவர் பெருந்தகை, அவ்வெற்றியை மீப்படக் கிளந்து புகழ்ந்தனர். ஔவையார் அதியமானை நோக்கி, "தேவர்களைப் போற்றி வழிபட்டும் அவர்களுக்கு வேள்வியில் ஆவுதியை அருத்தியும் பெறுதற்கரிய கரும்பை விண்ணுலகத்தினின்று இவ்வுலகத்தின்கண் கொண்டு வந்து தந்தவர்களும், கடல் சூழ்ந்த உலக முழுதும் தங்கள் ஆணையைச் செலுத்தியவர்களும், வீரக் கழலையும் பனந்தாரினையும் தேவர்கள் தங்கப்பெற்ற சோலையையும் நெடிய வேலையும் உடையவர்களுமான நின் முன்னோர் போலப் பிறர்க்குரிய எழிலாஞ்சனையும், நாடுதலையுடைய நீங்காத அரசவுரிமையுந்[1] தவறாது பெற்றும், அவ்வளவில் நில்லாது, போரை விரும்பி வெற்றி முரசையுடைய எழரசரோடு பகைத்து, மேற்சென்று போரின்கண் அவர்களை வென்று, நின் வலியை வெளிப்படுத்திய அற்றைநாளும் பாடும் புலவர்க்குப் பாட முடியாத அடங்காப் புகழையுடையவனானாய்; கோவலூரை அழித்து வென்ற நின் தோளை இற்றை நாளும் பரணன் தன் கல்விப் பெருமையாற் பாடினான்," என்று கூறி, அவனது புல

1. சேரன், சோழன், திதியன், எருமையூரன், இருங்கோவேண்மான், பாண்டியன், பொருநன் என்பவர்க்குரிய கொடி முதலிய அடையாளங்கள்.

வராலும் பாடுதற்கரிய புகழையும், பகை வென்ற திறத்தையும், பரணரது அளக்கலாகாத கல்விப் பெருமையினையும் ஒருங்கே வைத்துப் புகழ்ந்து பாடினர். அப்பாட்டு,

'அமரர்ப் பேணியும் ஆவுதி யருத்தியும்
அரும்பெறன் மரபிற் கரும்பிவண் தந்தும்
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல
ஈகையங் கழற்கா லிரும்பனம் புடையல்
பூவார் காவிற் புனிற்றுப்புலால் நெடுவேல்
எழுபொறி நாட்டத் தெழாஅத் தாயம்
வழுவின் றெய்தியும் அமையாய், செருவேட்
டிமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் னாற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை ; இன்றும்
பரணன் பாடினன் மற்கொன் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண் அடு திகிரி யேந்திய தோளே.'

என்பது. இங்ஙனம் அவ்வதியமான், கோவலூரை வென்று கைக்கொண்ட பின்னர், ஔவையாருடன் மீண்டு, தகடூர் புகுமளவில் அவ்வமயத்து நீண்டநாளாக மகப்பேறில்லாமலிருந்த தனக்குத் தவ மகன் பிறந்திருக்கின்றானென்று தெரிந்து, புதல்வன் பிறந்தவுடன் புதல்வன் முகத்தைத் தந்தை பார்த்து மகிழ வேண்டுமென்பது தரும நூல் விதியாகலின், தனது போர்க் கோலத்தைக் களையாமலே விரைந்து போய் மகன் முகத்தைக் கண்ணுற்றான். உடனிருந்த ஔவையார் அத்தன்மையை, "கையின்கண்ணது வேலே; காலின்கண்ணது வீரக் கழல்; உடம்பின்கண்ணது வேர்ப்பு; கழுத்

தின்கண்ணது அம்புகள் பாய்ந்த ஈரம் புலராத பசிய புண்; பனந்தோட்டையும் வெட்சி மலரையும் வேங்கைப் பூவுடனே கலந்து தொடுத்து உச்சியில் சூடிப் பகைவரை வெகுண்டு பார்த்த கண், தவ மகனைக் கண்டும் சிவப்பு நீங்கின தில்லை: ஆதலால், இவன் கோபத்துக் காளான பகைவர் பிழைத்தலுமுண்டோ!" என வியந்து, அவனது போர்த்திறத்தைப் புனைந்துரைத்தார்.

இவர்கள் செய்தி இங்ஙனமாக, அதியமானஞ்சியால் வெல்லப்பட்டுத் தனது கோவலூரை இழந்த மலையமான், இழந்த ஊரை எவ்வாற்றாலேனும் மீண்டும் பெறக் கருதி, அதற்குத் துணை தேடிப் பல முறையும் போரில் தன் துணை பெற்றவனும் சிறந்த வீரனுமாகிய சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையை அடைந்து, தனக்கு உதவி புரியுமாறு வேண்டினன். அவன் தன் நண்பனாகிய அவனுக்குத் துணை செய்ய ஒருப்பட்டுப் பெரும்படையோடு புறப்பட்டவன், வல்வில்லோரி என்னும் வள்ளலுக்குரிய வளமிக்க கொல்லி மலையை முதற்கண் பொருது பெறவேண்டுமென்ற தன் கருத்தை வெளியிட, மலையமான் அதற்கிசைய, இருவரும் கூடிக் கொல்லி மலையை முற்றுகையிட்டனர். இவ்வமயம் ஓரி, மலையமானுக்குப் பகைவனாகிய அதியமான் நெடுமானஞ்சியைத் தனக்குத் துணை செய்யுமாறு வேண்டினான். அதியமான் தன்மீது படையெடுக்கப் போகும் பெருஞ்சேரலிரும்பொறையையும், மலையமானையும் வலி தொலைப்பதற்கு அதுவே நல்ல தருணமெனக் கருதித் தன் நட்பரசராகிய சோழ பாண்டியரையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு, ஓரியின் கொல்லிக் கூற்றத்துக்கு வந்து, ஓரியுடன் சேர்ந்து, சேரலோடும் மலையமானோடும் பெரும்போர் நிகழ்த்தினான். அப்போரில்

பெருஞ்சேரல் அதியமானையும், சோழபாண்டியரையும் வென்றோட்டி, அவரது முரசுங் குடையுங் கவர்ந்து, ஓரியைக கொன்று, கொல்லி மலையைக் கைப்பற்றிக்கொண்டான். அதியமான் தகடூர் போய் மதிலினுள்ளிருந்தான்;[1] மலையமானும், பெருஞ்சேரலும் தகடூர்மேற் படையை நடாத்தி, மதிலை வளைத்தனர். அதியமான் தனது அரண் பகைவராற் கடத்தற்கரியதென்று கருதியதாலோ வேறெதனாலோ மதிலுள்ளிருந்துகொண்டு, வெளிவந்து எதிர்த்து நின்று போர் செய்யாதிருந்தனன்.[2] பகைவர் மதிலினை வளைத்தலையும் அதியமான் வாளா இருத்தலையும் கண்ட ஔவையார், அதியமானுக்கு அவனது ஆற்றலை எடுத்துக் காட்டிப் போரில் மனஞ்செல்ல ஊக்கமூட்டுதற்குக் கருதி, அவனை அணுகி, "மலர்ந்த வெண்காந்தட் பூவுடன் மலை மல்லிகை மணங்கமழும் மலைச்சாரலிலுள்ள புலியானது சீறுமிடத்து, அதற்கு எதிர் நிற்க வல்ல மான் கூட்டமும் உளவோ? சூரிய மண்டலம் கொதித்தெழுமாயின்,

---

1. 'கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேற் றானை யதிய மானொ(டு)
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
தகடூ ரெறிந்து நொச்சிதந் தெய்திய [பொறை.'
அருந்திற லொள்ளிசைப் பெருஞ்சேர லிரும்.
(பதிற். 8-ஆம்-பத். பதி.)

2. "ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர் செல்லாது தன் மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின், அஃது உழிஞையின் அடங்கும்; அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதியமான் இருந்ததாம்." (தொல்-பொரு. சூ-62 நச். உரை.)

ஆகாயத்தினும், திசையின்கண்ணும் இருளுமுளதோ? பாரத்தின் மிகுதியால் நிலத்தின்கண் பதிந்த சகடத்தின் ஆழ்ச்சியைப் போக்குதற்கு மணற்பரக்கவும் கற்பிளக்கவும் நடக்க வல்ல மனச் செருக்குடைய கடாவிற்குப் போதற்கரிய துறையுமுண்டோ? இல்லையன்றோ? அவை போல, நீ போர்க்களம் புகுந்தால், இவ்வுலகத்தில் உனது நாட்டைக் கவர்ந்து ஆரவாரிக்கும் வீரரும் உளரோ?" என்று கூறினர்.

இது கேட்ட அஞ்சி, போர் விருப்புற்று, அஞ்சாது பகைவரை ஓட்டுதற்கு மதிற்புறத்துப் போர்க்களம் புகுந்து, விழித்த கண் இமையாது வீர தீரமொடு போர் உடற்றினன். அப்போது பகைவர் விடுத்த படைகள் பல அதியமானது மார்பினும், கழுத்தினும், முகத்தினும் பட்டுப் புண்படுத்தின; அவ்வமயத்தும் ஔவையார் அதியமான் முன் சென்று, "பெருந்தகாய், பெருஞ்சமர் புரிந்து நீ விழுப்புண் பட்டபடியால், உன்னோடு எதிர்த்த அரசர் பலர், யுத்தத்தில் இறவாமையால் உளதாகும் குற்றம் நீங்கும்படி பிற்காலத்தில் நோயால் இறந்த தமதுடம்பைத் தருப்பையைப் பரப்பிக் கிடத்தி வாளாற்பிளந்து அடக்கம் செய்தலினின்றும் தப்பித்தவர்களாய், இப்போது உன் வாட்போரில் பலர் மாண்டனர். இனி நீ வருந்திப் போர் செய்து வெல்ல வேண்டுவது யாதுளது?" என்று பின்னரும் அவனை ஊக்கினர்.

அதியமான், அப்புண்பட்ட நிலையினும் தளராது போர் புரிந்தான்; இறுதியில் பெருஞ்சேரல் விடுத்த வேலொன்று காற்றினுங் கூற்றினுங் கடுகி வந்து, அதியமான் அஞ்சியின் நெஞ்சிற்பாய்ந்து, ஊடுருவிச் சென்றது. அதனால், அதியமான் சோர்ந்து தேரிற்சாய்ந்து உயிர் துறந்தான். அந்தோ! அவ்வமயத்து அவனது

இன்னுயிர் நண்பரான ஔவையார் எய்திய கௌவை யை எவ்விதம் கூறுவது! அவர் அவன் இன்குணங்களை யெல்லாம் நினைந்து நினைந்து வருந்திப் பிரிவாற்றாது புலம்புகின்றவராய், "அரிதாய்ச் சிறிய அளவினை உடைய மதுவைப் பெறும்போதெல்லாம் தானுண்ணாது எங்க ளுக்கே தருவன்; இனி அது கழிந்ததே! பெரிய அளவினை டைய மதுவைப் பெற்றானாயின், அதனை எங்களுக்குக் கொடுத்து யாங்கள் உண்டு களித்துப் பாட, எஞ்சிய மதுவைத் தான் விரும்பி நுகர்வன்; அது கழிந்ததே! சோறு எல்லார்க்கும் பொதுவாதலால், அது சிற்றள வினதாக உள்ள போதும், மிகப் பல கலத்தோடும் பல ரோடுங்கூட உண்பான்; அது கழிந்ததே! மிக்க அள வினையுடைய சோற்றின்கண்ணும் மிகப் பலரோடுங் கூட உண்பான்; அது கழிந்ததே! உணவிருக்கும் இட முழுதும் எங்களுக்கு (உண்டு களிக்க) அளிப்பன்; அது கழிந்ததே! அம்பும் வேலும் தைத்து உருவுமிடமாகிய போர்க்களம் முழுதும் தான் சென்று நிற்பன்; அது கழிந்ததே! தான் காதலிப்பார்க்கு மாலை சூட்டுதலால் நரந்தப்பூ நாறும் பரிசுத்தமான தன்னுடைய கையால் தனது அருட்குணத்தால் புலால் நாறும் எம்முடைய தலையைத் தடவி அன்பு செய்வான்; அது கழிந்ததே! அதியமான் இறக்கும்படி அவன் மார்பகத்துத் தைத்த வேல், அவ்வளவில் மாத்திரம் தைத்ததன்று; அது பாணரது மண்டைப் பாத்திரத்தின் துளையில் உருவி, இரப்போர் கையினுள்ளும் தைத்துருவித் தன்னாற் புரக்கப்படும் சுற்றத்தாரது கண்ணின் கருமணிப் பார்வை ஒளி மழுங்க, அழகிய நுண்ணிய சொல்லாராய்ச்சியு டைய புலவரது நாவின்கண்ணேயும் போய் வீழ்ந்தது. எமக்கு ஆதாரமாகிய எம்மிறைவன் எவ்விடத்துள்ளான்

கொல்லோ! இனி இவ்வுலகத்தில் பாடுவாருமில்லை பாடுவார்க்கொன்றீவாருமில்லை; குளிர்ந்த நீர்த் துறைக் கண்ணே பூக்கும் பகன்றைப்பூ, பிறரால் பறித்துக் சூடப்படாமல் வீணே கழிந்தாற்போல, பிறர்க்கு ஒரு பொருளைக் கொடாது மாய்ந்து போகும் உயிர்கள் மிகப் பல; அத்தன்மையதே எம்மரசன்!'' என்னும் பொருள்பட,

'சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே!
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே!
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே!
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே!
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயு மன்னே!
அம்பொடு வேல்நுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே!
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறும் என்றலை தைவரு மன்னே!
அருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே!
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ!
இனிப் பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே!'

என உருகிப் பாடி, பின்னரும், "அவனையின்றிக் கழி கின்ற காலையும் மாலையும் இனி இல்லையாகுக: யான் உயிர் வாழும் நாளும் எனக்கு ஒரு பயன்படாமையின்

அவை விரைவில் ஒழிந்து போவனவாக; தாயத்தார் நாடு முழுவதும் கொடுப்பவும் கொள்ளாதவன், நடுகல்லில் மயிற்பீலியைச் சூட்டி நாரால் வடித்த கள்ளைச் சிறிய கலத்தால் சொரியவும் அதனைக்கொள்வனோ, கொள்ளானோ!" எனக் கூறி, ஆற்றவொண்ணுத் துயருற்றனர். பின்னர், துஞ்சிய அஞ்சியை ஈமச்சிதையில் ஏற்றி எரியூட்டினர்; ஈமத்தீ அவனது உடலிற் பற்றியது. அப்போதும் ஔவையார், "ஈமத்தீ, இவனுடல் சிதையாமல் அவியினும் அவிக; அன்றிச் சிதையும்படி ஓங்கி எரியினும் எரிக; ஞாயிற்றை ஒப்போனது புகழ் (உடம்பு) ஒரு காலத்தும் அழியாது," என்று அவன் புகழ் உடம்பை வியந்து கூறி இரங்கினவராய்த் தகடூரின் கண்ணே தங்கி இருந்தனர்.

அதியமான் இறந்த பின்னர் அவன் மகன் பொகுட்டெழினி என்பான் முடி சூடினுன். அவன் இளைஞனுய் இருந்தமையின், அவனுடன் நம் ஔவையார் சூழ்ச்சித் துணையாய்ப் பன்னுள் தங்கி, அரசியற்பெருங்காரியங்களை இனிது நடத்தும்படி செய்திருந்தார்; அவனும், அருளும் அன்பும் அறிவும் நிறைபுமுடையவனுய் விளங்கினுன். ஔவையார் அவனது வென்றிச் சிறப்பு, இன்பச் சிறப்பு, கொடைச் சிறப்பு முதலியன தோன்றப் புகழ்ந்து பாடி, அவனைப் பல்லாற்ருனும் ஊக்கி வந்தார்.

இங்ஙனம் பொகுட்டெழினியுடன் வாழ்ந்திருந்த இவர், பின்னர்த் தமிழ்நாட்டரசர்களையெல்லாம் காணுதற்கு விரும்பிப் புறப்பட்டார். புறப்பட்டு வருகின்றவர், சேரன் படைத் துணைவனும், வள்ளுவர் குடியிற் பிறந்தவனும், நாஞ்சில் மலைக்கு உரியவனுமாகிய நாஞ்சில் வள்ளுவனைக் கண்டு, உணவுக்குச் சிறிது அரிசி வேண்டினுர். அவன், புலவர் வரிசையறிந்து கொடுக்கும்

வள்ளியோனாதலால், இவர் கேட்ட அரிசி அளியாது, யானைப் பரிசிலளித்தான். ஔவையார் அவன் கொடையை வியந்து, "நாஞ்சில் மலைக்கு வேந்தன் விச்சயமாக அறிவு மெல்லியனே; செந்நாப் புலவீர், இலைக்கறிமேல் தூவுதற்குச் சிறிது அரிசி வேண்டினேமாக, அவன் பரிசிலர்க்குதவும் வரிசையறிதலால், எமது வறுமையைப் பார்த்தலேயன்றித் தனது மேம்பாட்டையும் சீர் தூக்கிப் பெரிய மலை போல்வதொரு யானையை அளித்தான். ஆதலான், ஒருவனுக்கு ஒன்றனைக் கொடுக்குமிடத்து அப்பெற்றிப்பட்டதொரு தெளியாக் கொடையுமுளதோதான்? பெரியோர்கள் தாங்கள் செய்யக் கடவதாகிய முறையைத் தெரிந்து பாதுகாத்துச் செய்யார் கொல்?" என்று குறிப்பாகவும், வெளிப்படையாகவும் புகழ்ந்து கூறிவிட்டு, அவனின்றும் பெயர்ந்து, மேல் கடற்கரைக்கண்ணுள்ள கொண்கான நாட்டு ஏழிற் குன்றத்தை அடைந்து, அதனை ஆண்டுகொண்டிருந்த அரசனைக்கண்டு பாடினார். அவன் புலவர்களின் அருமை பெருமை அறியாத கயவனாகலின், தனது வாயிற் கதவை அடைத்தனன். அது கண்டு இவர் வெகுண்டு, அவனை,

'இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே!
குருடேயு மன்றுநின் குற்றம்;—மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்(டு)
ஓட்டைச் செவியு முள.'

என்று அங்கதம் பாடிப் பழித்துக் கூறிவிட்டு, அவ்விடம் விட்டகன்றார். பின்னர் ஔவையார் சோழ நாட்டிலே உறையூரிலே பெருநற்கிள்ளி என்னும் சோழ அரசன் இராச சூய வேள்வி இயற்றுகின்றானென்பது அறிந்து ஆங்குச் சென்றார். அவ்வேள்வி மண்டபத்தில்

சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும் வந்து, அச்சோழனோடு ஒருங்கமர்ந்திருந்தனர். ஔவையார், அடிக்கடி தம்முள் பகைமை கொண்டு பெரும்போர் நிகழ்த்தும் தமிழ்ப் பெருவேந்தர் மூவரும், அவ்வேள்வியின் முத்தீயைப்போல ஒத்த மனமுடையவராய் ஒருங்குகூடி இருப்பதைக் கண்டவுடன், இவர்தம் உள்ளத்தில் உவப்பும் வியப்பும் பொங்கி எழுந்தன. எழலும், "தேவ லோகத்தையொத்த பகுதிப்பட்ட நாடு தம்முடையதாயினும், அஃது எப்போதும் தம்மோடுரிமைப்பட்டே நடவாது; ஒருவர் அந்நாட்டுக்கு உரியரல்லராயினும், நற்றவம் செய்தோராயின், அஃது அவர்க்கே உரியதாகும். ஆகையால், நீவிர், யாசித்த அறவோரது கைந்நிறையப் பூவையும் பொன்னையும் தாரை நீரோடு சொரிந்து, இரப்போர்க்குச் செல்வங்களைக் குறையாது வழங்கி, உங்களுக்கு அறுதியிட்ட வாழ்நாள் முழுதும் வாழ வேண்டும்; நற்கருமமல்லது பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கேற்ற புணை வேறில்லை; ஐம்புலன் ஒடுங்கிய அந்தணர் வேள்வியில் வளர்க்கும் காருகபத்தியம், ஆகவநீயம், தென்றிசையங்கி என்னும் முத்தீயையும் போல ஒருங்கு சேர்ந்து அழகு மிகவிருந்த கொற்ற வெண்குடை நிழற்றும் கொடித்தேர் வேந்தர்களே, இங்ஙனம் நீங்கள் கூடியுறைதலால் உண்டான பெருமையும், பயனும், உலக நன்மையும் யான் அறிந்துரைக்கும் அளவினையுடையன வாமோ? உங்களது வாழ்நாள் விண் மீனினும், மழைத் துளியினும் மேம்பட்டுப் பெருகுவதாக!"[1] என வாழ்த்தினார். அம்மூவேந்தரும் நம் மூதாட்டியாரைப் பெரிதும் உபசரித்தனர். பிராட்டியாரும், இராசசூய வேள்வி

1. புறம். 367.

முற்றும் வரை அங்குத் தங்கியிருந்து, சோழன்பால் பெரும்பரிசில்கள் பெற்றுச் சோழ நாட்டு வெண்ணி, அம்பர் முதலான பலவூர்கட்கும் சென்று, வள்ளியோர் பலருடைய நன்மதிப்பினையும் நண்புரிமையினையும் பெற்றுச் சோணாடு விட்டுப் பாண்டி நாடு நோக்கிப் புறப்பட்டு வந்தார். வந்தவர், வேளாளக் கோமான் பதுமன் முதலான ஆவியர் குடியினர் நகரமாகிய 'ஆவிநன்குடி' என்னும் சித்தன் வாழ்வை அணுகி, அங்குக் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமானைத் தொழுதும், ஆண்டுறையும் அந்தணச் சான்றோருடன் பழகியும் சின்னாளங்குத் தங்கினார். பின்னர், செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலை நகரமாகிய பீடு மிக்க மாட மதுரையைக் குறுகி, ஆண்டு அரசு செய்திருந்த பாண்டியன் உக்கிரப் பெருவழுதியையும் அவனால் இனிது புரக்கப்படும் சங்கத்துட்குழுமியிருக்கும் பழுதில் கேள்வி முழுதுமுணர்ந்த நல்லிசைப் புலவர் பல்லோரையும் கண்டு மகிழ்ந்து, அவரோடு அளவளாவி இருந்தார். தாம் பழகிய தமிழ் நாட்டுள் எல்லாம் வழங்கப் பெறாத செந்தமிழ் மொழியின் அழகிய வழக்கை அங்குக் கண்டமையான் வியந்து, ஏனைய இடங்களிற்கண்ட நலன்களையும் இந்நலனேடு வைத்து, ஈண்டிய புகழ் சேர் பாண்டியர் கோவை நோக்கி,

'நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
இல்லந் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டிய! நின்
னாட்டுடைத்து நல்ல தமிழ்.'

என்னும் பாடலைக் கூறினர்.

இங்ஙனம் அரசனும் புலவரும் உவக்குமாறு செஞ்சொற்கவிகள் பல பாடி வேத்தவை ஏத்த விளங்கி

யிருந்த ஔவையார், பின்னர்த் தமிழ் நாட்டுள் பல விடங்கட்கும் செல்லுதற்கு விரும்பி, அரசனிடத்தும் புலவரிடத்தும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுச் செல்வாராயினர். இங்ஙனம் சென்றுகொண்டிருக்கும் போது சில புல்லியோர், ஔவையார் வாயாற் பாடல் பெற வேண்டுமென விருப்புற்று, இவரிடத்து வந்து, 'எங்களைப் பாட வேண்டும்,' எனக் கேட்டுக்கொண் டனர். அறிவும், செறிவும், புகழுமுடைய மூன்று பெருங்கோக்களையும், அவர் இளங்கோக்களையும், அன் பும், அருளும், அருமையும் மிகுந்த பெருவள்ளல்களை யுமே பாடிய தமது செந்நாவால் இவர் அவரைப் பாடு தற்கு இசைவரோ? மன வலியும் சொல் வலியும் மிக்கவ ராகையால், பிராட்டியார் அவர்களை நோக்கி,

'மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
'எம்மையும் பாடுக,' என்றனிர்;
நும்மையிங் கெங்ஙனம் பாடுகென் யானே!
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்;
வெளிறுபடு நல்லியாழ் விரும்பிக் கேளீர்;
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீர்;
அவிழ்ச்சுவை யல்லது தமிழ்ச்சுவை கொள்ளீர்;
உடீஇர்; உண்ணீர்; கொடீஇர்; கொள்ளீர்;
ஓவாக் கானத் துயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே.'

என்று இழித்துக் கூறிவிட்டுச் சோழுடு, தொண்டை நாடு, சேர நாடு முதலிய தமிழ் நாடெங்கும் சென்று, பெருவேந்தரையும் வள்ளல்களையும் அறவுரை செறிந்த பாடல்கள் பாடி மகிழ்வித்துப் பின் தம் நண்பருள் ஒருவனுய பாரி, மூவேந்தர் சூழ்ச்சியால் இறந்து பட்ட

பின்னர் அவன் உயிர்த் தோழராகிய கபிலரால் அழைத்துக்கொண்டு போகப்பட்டு வேளிருட்சிறந்த இருங்கோவேள் முதலியோர்பாற்சென்று மணம் புரிய வேண்ட அவர்கள் மறுத்தனராகப் பின்னர்த் திருக்கோவலூர் சென்று, தமக்கினிய பார்ப்பார் சிலரது பாதுகாவலில் வைத்திருந்த பாரியின் மகளிரைக் காணுதற்கு விரும்பி, ஆங்குச் சென்று, அவர்களைக் கண்டு, அவர்கள் நிலைமைக்குப் பெரிதும் வருந்திஞர். அவர்கள் நல்லிசைப் புலமை மெல்லியர் ஆகையானும், முல்லைக்குத் தேரீந்த வள்ளியோன் மக்களாதலானும், தங்களால் முன்னரே நன்கறியப்பட்ட இவர்க்கு அன்றிரவு இலைக்கறி உணவிட்டனர். அன்புடையாரிட்ட அவ்வுணவை உண்டு மகிழ்ந்து, ஔவையார்,

'வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறையிட்டுப்—பொய்யே
அடகென்று சொல்லி அமுதத்தை யிட்டாள்
கடகஞ் செறியாதோ கைக்கு.'

என்று புகழ்ந்து பாடி, அவர்கள் நன்னிலை பெறுவதற்குரிய முயற்சிகளை எல்லாம் செய்து, ஆங்குத் தங்கியிருந்தனர். இருக்குங்கால் தாம் சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம், தொண்டை மண்டலம் ஆகிய நான்கிலும், அவற்றின் தலை நகரங்களிலும் பன்முறை பல நாள் பழகியவராதலால், அவ்வந்நாடு நகரங்களின் சிறப்பியல்புகளையெல்லாம் தொகுத்து,

'வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து ;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயற்றொண்
டைநன்னாடு சான்றோர் உடைத்து.'

எனவும்;

'வஞ்சி வெளிய குருகெல்லாம்; பஞ்சவன்றன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது;
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது.'

எனவும் பாடி வியந்தார். இங்ஙனமே இந்நல்லிசைப் புலமையாளர் எளியார் வலியார் என்ற வேறுபாடின்றிப் பெருங்குணங்கள் உடையாரைக் கண்டுழியெல்லாம் தமது செந்நாவிற் சுரந்து வரும் பாக்கள் பலவற்றை அளித்துக் கருநெல்லிக் கனியுண்ட விசேடத்தால் மக்கட்குள்ள வயதெல்லையினும் காற்கூறோ அதற்கதிகமோ பெற்று, மிக முதியராய் இத்தமிழ் நாட்டில் விளங்கி, என்றும் நின்று நிலவும் புகழுடம்பை நிறுத்திப் பூத உடம்பை நீத்தனர்.

## ஆராய்ச்சி :

பெயர் : ஔவையென்னும் பெயர், திருக்கோவையார், நாலாயிரப் பிரபந்தம், கந்த புராணம், இராமாயணம் முதலிய சங்க காலத்துக்குப் பிற்பட்ட நூல்களுள் 'தாய்' என்ற பொருளிலேயே பல்லிடங்களிற் பயின்றுள்ளமையால், இந்நூல்களுக்கு முற்பட்டும் இச்சொல் இப்பொருளிற் பயின்று வந்திருத்தல் வேண்டும் என்பது துணியாகின்றது. ஆதலால், நம் ஔவையார் உலக மக்கட்கு நன்னெறி தெருட்டும் நற்பாக்கள் பல யாத்து, வயதில் மிக முதியவராய் விளங்கிய காலத்து, வயதில் முதிர்ந்து நற்போதனை செய்து மக்களைத் திருத்தும் தாய்போல இவரை மதித்துப் பெரியாரெல்லாம் இப்பெயரை இவர்க்கிட்டு வழங்கினராதல் வேண்டுமென்று கருதப்படுகின்றது. அங்ஙனமாயின்,

இவர்க்கிருந்த இயற்பெயர் நாளடைவில் வழக்கில் மறைந்து, இப்பெயரே இவர்க்குப் பெயராய் வழங்கியதாகல் வேண்டும். இங்ஙனமே இயற்பெயர் மறைந்து சிறப்புப் பெயர் சிறக்க விளங்கியவர் பண்டைக் காலத்துப் புலவருள் பலர் உளர் அன்றோ?

**ஊர்:** இவர் தோன்றிய நாடு சேர நாட்டின் ஒரு பகுதியான அதியமான் நாடாகும். இஃது இவர் "இழையணிப் பொலிந்த...விறலி, பொருநரு முளரோநும் அகன்றலை நாட்டென வினவ லாஅப் பொருபடை வேந்தே!...வளிபொரு தண்ணுமை கேட்பின் அது போரென்னு மென்னையுமுளன்," என வேற்று வேந்தன் வினவியதற்கு விடையாகக் கூறிய செய்தியமைந்த அதியமான்மீது பாடிய இச்செய்யுளில், அதியமான் நாடே தம்நாடெனவும், அதியமானே தம் அரசன் எனவும் தோன்றக் கூறியுள்ளதனால் அறியப்படும். அச்சேர நாட்டில் இவரது பிறப்பிடம் இதுவென அறிதற்குச் சங்க நூல்களிற் சான்று தெளிவாய்க் காணப்படவில்லையாயினும், புறநானூற்றில் (390),

'ஆர்வலர் குறுகி னல்லது காவலர்
கனவினுங் குறுகாக் கடியுடை வியனகர்
மலைக்கணத் தன்ன மாடஞ் சிலம்பவென்
அரிக்குரற் றடாரி யிரிய வொற்றிப்
பாடி நின்ற பன்னாள்'

என இவர் கூறியுள்ளமையான், இவர் அதியமானது தகடூரில் பன்னாள் இருந்து வாழ்ந்து புகழ் பெற்று அவனது ஆஸ்தானத்திற் பெரும்புலவராய் விளங்கியிருந்தவர் என்பது மறுக்கப்படாத உண்மையாகும். இச்செய்யுளேயன்றி, அதியமான்மீது இவர் பாடிய ஏனைய பாட்டுக்களை நோக்குவோமாயின், அவையும் இவர் அவ்

வதியமானூரில் பன்னெடுநாள் இருந்தவரென்பதை நன்கு காட்டத் தக்கவையாய் விளங்குகின்றன. இத் தகடூர், மைசூர் நாட்டில் இருந்ததென்று ஒரு சாரா ரும்;[1] கொல்லிக் கூற்றத்திலிருந்ததென்றும்,[2] இது தற காலத்துக் கொங்கு நாட்டுத் தருமபுரியே என்றும்[3] மற்றொரு சாராரும் துணிகின்றனர். மைசூரின் கண்ணே யிருந்ததென்பார், அங்கு இன்றும் தகடூர் என்னும்பெய ரோடு ஓர் ஊர் இருத்தலையும், வேறு சிலவற்றையும் ஆதாரமாகக் காட்டுவர். பின்னைய கொள்கையினர்,

> 'கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
> பல்வேற் றானை யதிக மானொடு(டு)
> இருபெரு வேந்தரையு முடனிலை வென்று.'

என அதியமானொடு பெருஞ்சேரல் கொல்லிக் கூற்றத் தில் போர் செய்ததாக வரும் பதிற்றுப் பத்துப் பதிக அடியையும், 'சாதலை நீக்கும்' என்ற 42-ஆம் கொங்கு மண்டல சதகச் செய்யுளையும் சான்றாகக் காட்டுவர். மேற்காட்டிய பதிற்றுப்பத்தடியிலும், கொங்கு மண் டல சதகச் செய்யுளிலும், அதியமான் பெயரன்றி, அவ னது ஊரின்பெயர் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. கொல்லிக் கூற்றம்சேரர் பரம்பரையினர்க்குரியதெனத் தொன்னூல்களால் அறியப்படினும், அதியமான் காலத் தில் இது வல்வில் ஓரிக்கு உரியதென்று புறநானூறு அகநானூறு முதலிய சங்க நூல்களின் செய்திகொண்டு அறியப்படுதலால், இக்கொல்லிக் கூற்றத்தில் அவனது தகடூர் இருந்ததென்ற கொள்கை நேரிதாகத் தெரிய

1. புறநானூற்றுப் பதிப்பில் வி. வெங்கையரவர்கள் குறிப்புப் பார்க்க.
2. நற்றிணை, பாடப்பட்டோர் வரலாறு (பக்-82.)
3. கொங்கு மண்டல சதகப் பதிப்பாசிரியர்.

வில்லை. இங்கு அதியமான் பெருஞ்சேரலோடு போர் செய்தது, ஓரிக்குத் துணை செய்தற்கும், பின்னர்த் தனது தகடூர்மீது சேரல் படையெடாது அவனது வலியைத் தொலைத்தற்குமாக இருத்தல் கூடும். அன்றி, அதியமான் ஆண்ட நாட்டின் எல்லை கொல்லிக் கூற்றம் வரையிலிருந்து அவ்வெல்லையில் சேரலோடு அவன் போர் புரிய அதனை இப்பதிற்றுப்பத்துப் பதிகம் இங்ஙனம் குறித்ததும் ஆதல் கூடும்.

இவற்றை நோக்குமிடத்துத் தகடூர் மைசூர் எல்லையில் இருந்ததென்று கொள்ளும் கொள்கையே பொருந்துவதாகும். இதனை, அம்மைசூர் நாட்டில் தகடூர் என்னும் பெயரிய ஊர் ஒன்று இன்றும் உளதாதலானும், அதியமானெடுமானஞ்சிக்குரியதாகச் சங்க நூல்கள் கூறும் குதிரை மலை என்னும் பெயரிய மலை ஆங்கு இப்பொழுதுமிருத்தலும், அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் 390-ஆம் புறப்பாட்டில், "மலையல ரணியுந் தலைநீர் நாடன்" எனக் குறித்தபடி மைசூர் நாடே காவிரியின் தலை நீர் நாடாக இப்பொழுதும் விளங்குதலும் வலியுறுத்துதல் காண்க. ஔவையார் இத்தகடூரிலன்றிக் கோவலூர், வெண்ணி, அம்பர், உறையூர், மதுரை, ஏழிற்குன்றம்,[1] காஞ்சிபுரம், சித்தன் வாழ்வென்னும் ஆவிநன்குடி முதலான தமிழ் நாட்டு நகரங்களிலும் சிற்சில நாள் வதிந்தவராவர்.

பெற்றோர்: சில நூற்றாண்டுகட்கு முற்பட்டதென்று கருதப்படும் 'ஞானாமிர்தம்' என்னும் நூலினுள், "அறப் பயன் றெரின்" என்னும் அகவலுள்,

---

1. இது மேல் கடற்கரையில் கன்னனூரிலிருந்து வடக்கே 18 மைலில் உள்ளது.

'யாளி கூவற் றூண்டு மாதப் புலைச்சி
காதற் சரணி யாகி மேதினி
இன்னிசை யெழுவர்ப் பயந்தா ளீண்டே.

என்பதனையும், இதனுரையுள், 'யாளி தத்தன் தனக்கு விகிர்தமாய்த் தன்னாலே வெட்டுண்டு கிணற்றில் வீழ்த்தப்பட்ட அறிவில்லாத சண்டாளப் பெண்ணை ஒரு பிராமணன் எடுத்துக்கொண்டு போய் உத்தர பூமியில் வளர்த்து, இவனுக்கே பின்னர்க் கொடுக்க, இவனுக்கு அவள், காதலித்த பார்ப்பனியாய் இந்நிலவுலகின் கண்ணே இனிய கீர்த்தி பெற்ற கபிலர் முதலிய பிள்ளைகள் எழுவரை ஈங்குப் பெற்றாள்,' என்று வருவதையும்,

'கபில ரதிகமான் காற்குறவர் பாவை
முகிலனைய கூந்தன் முறுவை—நிகரிலா
வள்ளுவ ரவ்வை வயலூற்றுக் காட்டிலுப்பை
எண்ணில் எழுவ ரிவர்,'

என்ற வெண்பாவினையும், கபிலரகவல்'[1] என வழங்கும் ஓர் அகவற்பாட்டையும், பிறவாறு வழங்கும் கதைகளையும் ஆதாரமாகக் கொண்டு, ஔவையாரின் தந்தை யாளி தத்தனென்னும் அந்தணன் எனவும்; தாய் ஆதப் புலைச்சி எனவும், கபிலர், அதியமான், வள்ளி, முறுவை, திருவள்ளுவர், இலுப்பை என்போர் உடன் பிறந்தோரெனவும் கூறுவர். இங்ஙனம் கூறும் இவர்தம் பெற்றோர் வரலாற்றிற்குச் சங்க நூல்களுள் ஆதாரம் யாண்டும் காணக்கிடையாது. உடன் பிறந்தோரென்று கூறப்படும் ஐவருள் வள்ளி, முறுவை, இலுப்பை என்ற பெயர்கள் சங்க நூலுட்கேட்கப்படாதவை. கபிலர் அதிகமான் என்னும் இருவருமே ஔவையாரது காலத்

1 இது பெற்றோர் பெயர் ஆதி பகவன் எனக் கூறும்.

தில் விளங்கியவராகச் சங்க நூல்களால் அறியப்படுபவர். வள்ளுவரும் இவர்களது இளமைக் காலத்தில் முதிய ராய் விளங்கியிருந்தவரே. இங்குக் குறித்த மூவரும் காலத்தால் ஔவையாருடன் ஒற்றுமையுற்றவர்களே னினும், பிறந்து வளர்ந்த இடத்தானும் குடியானும் வேற்றுமை பெரிதுமுடையவராவர். கபிலர், திருவாத வூரில் அந்தணர் குலத்திற் பிறந்தவர். இதனைக் "...காதல் கூர் பனுவல் பாடும் கபிலனார் பிறந்த மூதூர்...வேதநா யகனார் வாழும் வியன்றிரு வாத வூரால்" (திருவால 27-4) என்பதும்; "யானே பரிசிலன் மன்னும் அந்த ணன்," (புறம். 200) "அந்நணன் புலவன் கொண்டுவந் தனனே," (ஷை 201) எனக் கபிலரே கூறியதும்; "புல னழுக் கற்ற அந்த ணாளன்" (புறம் 126) என மாறோக் கத்து நப்பசலையார் கூறியதும் முறையே தெளிவுபடுத் தும். வள்ளுவர், வள்ளுவர் குடியிற்பிறந்து மயிலை யினும் மதுரையினும் இருந்தோராவர். (வள்ளுவ ரென்பார், அரசன் ஆணையை யானைப் பிடர்த்தலையில் முரசேற்றி அறைந்து அறிவிக்கும் தொழிலுடையார்.) இவ்விஷயத்தைக் கர்ண பரம்பரையும், "மறுவில் புலச் செந்நாப், போதார் புனற்கூடற் கச்சு." "வள்ளுவ னென்பானோர் பேதை"[1] என்ற திருவள்ளுவ மாலைச்

---

1. "உப்பக்க நோக்கி உபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப— இப்பக்கம்
மாதானு பங்கி மருவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு." —நல்கூர் வேள்வியார்
"அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை அவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்." — மாமூலர்

செய்யுளடிகளும் முறையே புலப்படுத்தும். அதியமான் தகடூரிலிருந்தவனென்பதும், சேரர் உறவினன் என்பதும், ஔவையார் பாணர் மரபினர் என்பதும் வரலாற்றுள் முன்னரே குறிக்கப்பட்டன. இவற்றை எல்லாம் ஆராய, இடத்தானும் குலத்தானும் வேற்றுமை மிகவுமுடையராகத் தொன்னூற்சான்றுகொண்டு அறியப்படும் கபிலர், அதியமான், வள்ளுவர் என்போரையும்; பண்டை நூல்களால் அறியப்படாத வள்ளி, உறுவை, இலுப்பை என்போரையும் ஔவையாருடன் பிறந்தோராகக் கொண்டு, பெற்றோர் 'யாளிதத்தன்' எனவும், 'ஆதிப்புலைச்சி' எனவும், 'ஆதி' எனவும், 'பகவன்' எனவும் ஒன்றற்கொன்று முரணுப் பலபடியாய்க் கூறும் கதையனைத்தையும் புனைந்துரை எனத் துணிந்து ஒதுக்குவதே தக்கதாகும். ஆகவே, இவர் பெற்றோர் இவரெனத் துணிதற்குச் சான்றில்லை எனக் கொள்வதே முடிபு.

குலம் : இவர் பிறந்த குலம் பண்டைக் காலத்தில் கல்வி கேள்விகளிற்சிறந்து, சுவை பயக்குஞ் செய்யுள் செய்தலிலும், ஆடுதலிலும், பண்ணொடு பாடுதலிலும், வேந்தர்க்குத் தூது செல்லுதலிலும் சிறந்து விளங்கிய பாணர் குலமென்பதற்கு, இவரே, "மடவர லுண்கண் வாணுதல் விறலி பொருநரு முளரோநும் மகன்றலை நாட்டு?" (புறம். 89) என வேற்று வேந்தன் தம்மை நோக்கிக் கூறுவதாகக் கூறிய பகுதியினுள் பாணர் குடியின் பெண்பாற் பெயர்களாகிய பாடினி, பாட்டி, விறலி என்பவற்றுள் விறலி[1] என்ற பெயரால் தம்மை விளித்ததாகக் குறித்திருப்பதும்; 390-ஆம் புறப்பாட்டில் இவரே, "மாடஞ் சிலம்பவென் அரிக்குரற் றடாரி

1. விறலியர்-விறல்பட ஆடலும் பாடலும் வல்லவர்.

யீரிய வொற்றிப் பாடி நின்ற பன்னாளன்றியும்,'' எனத் தம் தொழில் குறித்திருப்பதும்; 206-ஆம் புறப்பாட்டில் " காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை," என இவர் கூறியிருப்பதும்; "கலம், யாழுமாம்,'' என அதற்குரையாசிரியர் உரைத்ததும்; இவர் தொண்டைமானுழைத் தூது சென்றதும்; பாணர்களைத் தம் சுற்றங்களாகப் பல்லிடத்தும் கூறியிருப்பதும்; 'ஔவையார் பாணர் சேரியில் வளர்ந்தவர்,' என்னும் கர்ன பரம்பரையும்; ஔவைப் பாட்டி என்ற இவரது பெயரின் பெருவழக்கும் ஏற்ற சான்றுகளாகும். (பாட்டி-இசையோடு பாடுபவள்.)

'முற்காலத்துப் புலவர்கள், தங்களை அரசராற் பெரிதும் மதித்துப் போற்றப்பட்டுவந்த பாணர்போலவைத்துக் கூறிச் செய்யுள் செய்யும் முறைபோல இவரும் இங்ஙனம் தம்மைத் தம் செய்யுளால் கூறிக்கொண்டிருப்பின், இவர் பாணர் குலமென்பது எங்ஙனம் பொருந்தும்?' எனின், இங்ஙனம் இவர் கூறியது ஓரிடம் ஈரிடத்தன்றிப் பல்லிடத்தும் கூறியுள்ளமையானும், மேற்காட்டியபடி வேறு சான்றுகளும் பாணர் குலமென்பதற்குத் துணை செய்தலானும், இவரைத் தமிழ்ப் பெருவேந்தர்களாற் பெரிதும் பேணப்பட்டு வந்த பாணர் மரபினரென்பதாற் படும் இழுக்கொன்றில்லையாகலானும், இவர் பாணர் மரபினரென்பதே பொருந்துவதாகுமென்க. இவராற் சுட்டப்பட்டுள்ள கள்ளுண்டல், ஊனுண்டல் முதலிய வழக்குகள் இவர் காலத்துப் பெரிதுந் தீயவென ஒதுக்கப்பட்டவையல்லவெனினும், அவைகளைப் பேரருட்புலமை வாய்ந்த இவரது ஒழுக்கமெனக் கொள்ளற்க; இவரது குலத்தவரின் ஒழுக்கமெனக் கொள்க.

சமயம்: இவருக்கு அதியமான் நெடுமானஞ்சி நெல்லிக்கனி அளித்த போது அவனை இவர் வாழ்த்திய பாட்டில்,

'பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே!'

['நீ சிவ பெருமானைப்போல நிலை பெற்று வாழ்வாயாக.'] என்று கூறியிருத்தலால், இவர் சிவபெருமான் மீது பற்றுள்ளமுடையாரென்று கொள்ளலாகும். ஆவி நன்குடியைச் சித்தன் வாழ்வு எனக் கூறிப் புகழ்ந்திருத்தலால், இவர் முருகப்பிரானிடத்தும் பத்தி மிக்கவராவர்.

பெருமை: இந்நல்லிசைப் புலமை மெல்லியலாரின் அருமைத் திருப்பெயர், நம் நாட்டில் பெரும்புலவர் முதல் அரி வரி கற்கும் இளஞ்சிறார் வரை இன்றளவும் நன்கறியப்பட்டு வருவதும், பிறரும் தம் பேச்சுக்கிடையில் சில பாட்டுக்களையும் பழமொழிகளையும் எடுத்துக் காட்டி, "இவை ஔவைவாக்கு ஔவைவாக்குத் தெய்வ வாக்கு," எனக் கூறிவருவதும் இவரது இணையற்ற பெருமைமிகுதியைப் புலப்படுத்தும். சங்கத்தார் தொகுத்த எட்டுத்தொகையுள் நான்கு நூலுள் இவர் பாடல்கள் காணப்படுவதும், பாட்டுக்குரிமையாளர் இவரே எனக் கருதி, இவராற்பாடப்பெறாத பிற பாட்டுக்களையும் இவர் பாடியனவெனக்கொண்டு பிற்காலத்தார் பலர் இவர் மேலேற்றிக் கூறுவதும் இவரது பாட்டியற்றும் வன்மையை விளக்கும். இவர் சிறந்த நூலறிவு சான்றவராய்த் திகழ்ந்ததன்றியும், உலக அறிவும், ராச தந்திரப் பயிற்சியும் சாலப் படைத்து விளக்கமுற்றிருந்தவர். இசனாலன்றோ, அதியமான் நெடுமானஞ்சி தொண்டைமானிடத்துத் தூதனுப்பக் கருதியவன், இவரையே தக்

கவரெனத் தேர்ந்தனுப்பினன்? தொண்டைமான் தனது வலிமையை வெளிப்படுத்தக் கருதி இவர்க்குத் தன் படைக்கலச் சாலையைக் காட்டி நின்ற போது, அவனது தருக்கை அடக்கித் தாழ்த்துதற்கும், தம் அரசனாகிய அதியமானது கொற்றத்தை மேம்படுத்துதற்கும் கருதியவர், அதனை வெளிப்படையிற் காட்டாது குறிப்பு வகையாற்கூறியதை நோக்குமிடத்து, இவரது சொற்சாதுரியம் முதலிய திறப்பாடு அறியப்படுகின்றதன்றி, இவர்,

'இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாம் தூது.'

என்ற திருவள்ளுவர் வாய்மொழிக்கு இலக்காய் விளங்கியமையும் அறியப்படும். அதியமான் அரிதில் தான் பெற்ற சாதலை நீக்கும் கருநெல்லிக் கனியைத் தானுண்டு நெடிது நாள் உலகில் வாழ விழையாது, இவர்க்கு அதனை உதவி, இவரே நீண்ட காலம் உலகில் வாழ வேண்டுமெனக் கருதியதிலிருந்து இவர் அக்காலத்தில் உலகத்துக்கு உபகாரப்பட்டிருந்த மாட்சியும், தமிழ்ப் பெருவேந்தர்கள் இவரைத் தம் உயிரினும் மீப்பட மதித்திருந்த பெருமையும் புலனாம். நெல்லிக்கனியை யுண்டு, இவர், "சாதல் நீங்க எமக்கீத் தனையே!" என்று அதியமானை நோக்கிக் கூறியுள்ளமையான், 'மனிதர்க்குரிய வயதெல்லையைக் கடந்து பல வருடங்கள் உலகில் வாழ்ந்தவர் இவர்,' என்ற கொள்கை வலிவு பெற்றுப் பிறர் எவர்க்குமரிய பெரும்பேறு பெற்றவர் என்பதறியப்படும். இவர் தம் அரசனாகிய அதியமானது வீரத்தைச் சிறப்பித்திருக்கும் பாடல்களையும், மறக் குடி மகளிர் இயற்கையைப் புலப்படுத்தியிருக்கும் பாடல்களையும், ஏழிற்கோவைப் பழித்துக் கூறிய அங்கதப் பாட்

டினையும், தங்களைப் பாட வேண்டிய அற்பரை இழித்துக் கூறிய பாடலையும் ஆராயுமிடத்து, இவர் ஆண்டகையார்க்குமரிய மனவலியும் பேராண்மையுமிக்க வீரத்தாயர் என்பது தேறப்படும். இத்தகைய வீரத்தாயரை நமது நாடு தொன்றுதொட்டே பெற்றிருந்தமையா னன்றே, ஆசிரியர் தொல்காப்பியனார்,

'பிறப்பே குடிமை யாண்மை யாண்டொ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.'

என ஆண்பாற்கொத்த ஆண்மையும் பிறவும் பெண்பாற்கும் ஒக்குமென உடன்பட்டுக் கூறுவாராயினர்?

இவர், தமக்குச் சாதலை நீக்கும் கருநெல்லிக் கனி ஈந்த அதியமானைச் "சிவபெருமான் போல நிலை பெற்று வாழ்வாயாக!" என்று வாழ்த்திய வாழ்த்து வகையினாலும், அவனுடன் போர்க்களந்தோறுஞ் சென்று சூழ்ச்சித் துணையாய் நின்று ஊக்கி வந்த தன்மையானும், அவன் இறந்த போது கன்னெஞ்சும் கரைய உருகிப் பாடிய பாட்டுக்களாலும் இவரது நட்பின் மாட்சி, நன்றியறிதல் முதலான நற்குணப் பெருமையின் நலப்பாடு புலப்படும். சோழனது இராச சூய வேள்வியில் மூவரசரையும் வாழ்த்திய வாழ்த்துரையால், இவர் தமிழரசர் மூவரும் செற்றமின்றி ஒற்றுமையுற்று வாழ வேண்டுமென்று கருதிய பெருங்குணம் பொருந்தியவராவர். வெள்ளி வீதியார் என்னும் நல்லிசைப் புலமை மெல்லியலார், தம் கணவனைப் பிரிந்தமைக்காற்றாது பலவாறு இரங்கிப் பாடிக் கணவனைத் தேடிச் சென்ற வரலாற்றை இவர் ஓர் அகப்பாட்டில் பாராட்டிக் கூறியுள்ளமையான், இவர்,

கம் இனத்தவராய பெண் மக்களது கற்பின் பெருமையை உலகில் மேம்படுத்துங் கருத்துப் பெரிதும் உடையராயிருந்தவர் என்பது உணரப்படும். அதியமான் கோவலூர் எறிந்ததனைப் பரணர் பாடியதையும், மூவேந்தரும் பாரியை வெல்லக் கருதிச் சேனைகளுடன் அவனது பறம்பு மலையைச் சூழ்ந்து, புகல் போக்கின்றித் தடுத்து நின்ற காலத்து, வளர்த்த கிளிகளால் நெற்கதிரைப் புறத்திருந்து கொணரச் செய்து, குடி படைகளை உண்பித்துக் காத்த கபிலர் செய்தியையும், தேவருலகினின்றும் கரும்பைக் கொணர்ந்து தமிழ் நாட்டிற் களித்த அதியமானஞ்சியின் முன்னோர் செய்கையையும் இவர் தமது அகப்பாட்டிலும் புறப்பாட்டிலும் முறையே குறித்திருப்பதை நோக்குமிடத்து, இவர் புலவர்களிடத்துப் பேரன்பு வாய்ந்தவரென்பதும், வரலாற்றினை அழியாது போற்றி வைக்கும் இயல்புடையாரென்பதும் பெறப்படும்.

'ஈண்டிய பல்புகழ்ப் பாண்டியர் பலரும், திருத்தகு கேள்வி உருத்திர சன்மரும், வான்றோய் நல்லிசைச் சான்றோர் பிறரும், மேம்படுத்தேத்தும் தேம்படு கல்விக் கடலாய் விளங்கிய' இவ்வருந்தமிழ்ச் செல்வியாரின் திருந்திய புலமையின் பெருமையையும், ஏனையவற்றையும் யாமோ எடுத்துச் சொல்லுந் திறமையுடையேம்!

**பாடப்பட்டோர்:** இவராற் பாடப்பட்டோர் அதியமான் நெடுமானஞ்சி, தொண்டைமான், அதியமான் மகன் பொருட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாரி வெண்கோ, பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, எழிற்கோ[1] என்போர்.

---

1. இவனையே நன்னன் எனக் கருதுவர் ஒரு சாரார்.

காலம்: இவர் பாடிய அதியமான் அஞ்சியைப் பரணரும் பாடினரென இவரே கூறுதலால், பரணர் இவர் காலத்தினர். பரணர், கி. பி. 55-60க்கு முன் இருந்தவனென்று கருதப்படும் உருவப்பஃறேர் இளஞ் சேட்சென்னி முதலிய பல அரசர்களைப் பாடியுள்ளா ரென்பது முன்னரே காட்டப்பட்டது. ஔவையார் இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலிருந்த உக்கிரப் பெருவழுதியையும் பாடியுள்ளார். இவன் கடைச் சங்கத்திறுதியிலிருந்தவனென்பது இறைய னார் களவியலுரைப் பாயிரம் முதலியவற்றால் தெளியப் பட்டது. இவைகளை ஆராயின், ஔவையார் பரண ருக்குச் சிறிது இளைஞராய், கி. பி. 65-70 முதல் கி. பி. 190 வரை நீண்ட ஆயுளுடையவராய் வாழ்ந்திருந்தவ ரென்று கொள்வது பொருந்துவதாகும்.

இவரே, 9-10-ஆம் நூற்றாண்டுகட்கிடையிலிருந்த வர்களான கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய புலவர்கள் காலத்தும், சேரமான் பெருமாள் நாயனார் காலத்தும் வாழ்ந்திருந்தாரென்று கொண்டு, இவர் பெயரால் பல வரலாறுகளும் பாட்டுக்களும் வழங்கு வது உலகவியற்கைக்கு மாறானதாகையால், கொள்ளத் தக்கதாகத் தோன்றவில்லை.

பாட்டுக்கள்:

இவருடைய பாட்டுக்கள், எட்டுத் தொகையுள் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்னும் நான்கு நூலுள்ளும் காணப்படுகின்றன.

புறநானூற்றில், 87—104, 140, 187, 206, 231, 232, 235, 269, 286, 290, 295, 311, 315, 367, 390, 392 என்னும் எண்ணமைந்த முப்பத்து மூன்று பாடல் களும் ஔவையார் பாடியனவாகும். இவற்றிற் கூறப்

படும் பொருள் புறப்பொருள் என்பது சொல்ல வேண்டா. 87-ஆம் பாட்டு முதல் 95-ஆம் பாட்டு வரையுள்ள ஒன்பது பாட்டுக்களும், 97-ஆம் பாட்டு முதல் 101-ஆம் எட்டுவரையுள்ள ஐந்து பாட்டுக்களும். 103, 104, 206, 231, 232, 235, 315, 390 என்னும் எண்ணமைந்த எட்டுப் பாட்டுக்களும் இவர் அதியமான் நெடுமானஞ்சியைப் பாடியனவாகும். 96, 102, 392 எண்ணமைந்த மூன்று பாடல்களும் இவர் அதியமான் நெடுமானஞ்சியின் தவப் புதல்வன் பொகுட்டெழினியைப் பாடியனவாகும். நாஞ்சில் வள்ளுவனைப் பாடியது, 140-ஆம் பாட்டு. இராச சூய வேள்வியில் பெருநற்கிள்ளி, சேரமான் மாவெண்கோ, கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி இம்மூவரையும் வாழ்த்தியது, 367-ஆம் பாட்டு. ஏனைய பாட்டுக்கள் இன்னாரைப் பாடியன எனத் தெரிந்துகொள்ளுதற்கு ஆதாரமின்மையால், அறிய இயலவில்லை.

இவர் இப்பாடல்களுட்கூறும் உவமைகள் நயமிக்கவை; அதியமான், ஆர்வலர்க்கு இனியனாய் எளியனாய்ப் பகைவர்க்கு இன்னாய் அரியனாய் இருக்குந் தன்மைக்கு ஊர்ச் சிறுவர்கள் தன்னுடைய தந்தத்தைக் கழுவுதல் காரணமாக நீர்த்துறையில் படியும் களிற்றையும், அது மதம் பட்ட நிலையையும் முறையே உவமையாகக் கூறி வைத்துள்ளார். அதியமானது போர்த் தொழில் விரைவும் திண்மையும் விளங்குதற்கு, 'வைகல் எண்தேர் செய்யும் தச்சன் திங்கள் வலித்த காலன்னோன்,' எனக் கூறிய உவமை வியப்பை விளைக்கும். 'குன்றத் தன்ன யானை' எனவும்; 'பால்புரை பிறை' எனவும்; 'தேட் கடுப்பன்ன தேறல்' எனவும்; 'முழவுத்தோள்' எனவும்; 'அரவி னன்ன மள்ளர்' எனவும் உவமை கூறி

யுள்ளார். தொண்டைமான் படைக்கலக் கொட்டில் காட்ட, அதனைப் புகழ்வார்போல அதியமானது வென்றித் திறத்தை வெளிப்படுத்திய பகுதியும், அதியமான் குணங்களைப் பாராட்டியுள்ள பகுதியும் மிக்க வியப்பைத் தத்தை விளக்கும். அதியமான் இறந்தபோது பாடிய பாடல்கள் படிப்பாருள்ளத்தை இளகச் செய்கின்றன. 'எவ்வழி நல்லவ ராடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே!' என நிலத்தை இழித்துக் கூறுவார்போல உலகத் தியற்கையைப் புலப்படுத்தியிருப்பது போற்றற்பாலது.

இவருடைய புறப்பாட்டுக்களில், போரில் இறந்தோர்க்கு வீரக்கல் நட்டு அதற்கு மயிற்பீலி அணிந்து மதுப்படைத்தல், வேலுக்குப் பீலி அணிந்து வைத்தல், சுழற்கனியால் பெண்டிர் உச்சி வகிர்தல், போரில் இறவாது நோய் முதலியவற்றால் இறந்த அரசர்களின் உடம்பை வாளாற்பிளந்து அடக்குதல், உப்பு வாணிகர் வண்டிகளில் உப்பேற்றிச் செல்லுங்கால் சேம அச்சு உடன் கட்டிச் செல்லுதல் முதலிய வழக்குக்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

ஆயர் குலத்தினரைத் தரும குணம் நிறைந்த மனத்தினரெனக் கொண்டு, 'அறவை நெஞ்சத்தாயர்' எனப் புகழ்ந்து கூறியுள்ளார் (புறம். 390). இதனால் அக்காலத்தில் இக்குலத்தவரியற்கையிருந்தவாறும், இவர்களைப் பண்டையோர் எண்ணியிருந்தவாறும் விளங்கும். "அறவை யாயர் அகன்றெரு வடைந்தன", "ஆகாத் தோம்பி ஆப்பய னளிக்கும் கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை" என்ற சிலப்பதிகார அடிகளும், "தருமகதி ஆய்ப்பாடி" என்ற பின்னையோர் வாக்கும் இதனைச் செவ்விதின் விளக்கும்.

அகநானூற்றில், 11, 147, 273, 303 என்னும் எண்ணமைந்த நான்கு பாட்டுக்களும் இவர் பாடியன

வாம். இவை தலைவன் தலைவிகளின் அன்பின் திறத்தை வெளிப்படுத்தும் அகப்பொருட்கருத்துக்கள் அடங்கியவை. 147-ஆம் பாட்டில் புலமை மிக்க வெள்ளி வீதியார் தம் கணவனைத் தேடிக் காடும் மலையும் சுரமும் அலைந்து வருந்திய செய்தியும், 303-ஆம் பாட்டில் பாரி பறம்பை மூவேந்தர் முற்றுகையிட்ட வரலாறும் வந்துள்ளன. இவை முன்னரே விவரிக்கப்பட்டன.

நற்றிணையில், 129, 187, 295, 371, 381, 390, 394 என்ற எண்ணமைந்த ஏழு பாட்டுக்களும் இவர் பாடியன. இப்பாட்டுக்களும் அகப்பொருட்டுறைக்குரியனவே. இவற்றில் 381-ஆம் பாட்டில் அதியமானஞ்சிகளோலக்கத்தை,

'ஓங்குசெலற், கடும்பகட் டியானை நெடுமா
ஈர நெஞ்சமொ டிச்சேண் விளங்கத் [னஞ்சி
தேர்வீ சிருக்கை போல
மாரீ யிரீஇ மான்றன்றன் மழையே.'

என உவமை முகத்தாற் புகழ்ந்துரைத்துள்ளார். 390-ஆம் பாட்டில்,

'வாளை வாளிற் பிறழ நாளும்
பொய்கை நீர்நாய் வைகுதுயி லேற்கும்
கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த'

எனக் கிள்ளி வளவனது வளமிக்க கோயில் வெண்ணி என்னும் நகரத்தையும் சிறப்பித்துள்ளார்.

குறுந்தொகையில், 15, 23, 25, 28, 39, 43, 80, 99, 102, 158, 188, 200, 364, 338 என்னும் எண்ணமைந்த பதினைந்து பாடல்களும் இவர் பாடியனவாகும். தோழி கட்டுவிச்சியை நோக்கிக் கூறுவதாயுள்ள 23-ஆம் பாட்டு மிக்க சுவை பயப்பது. 15-ஆம் பாட்டில் "நல்லூர்க் கோசர் நன்மொழி போல" எனக் கோசர்

என்பாரது வாய்மையைச் சிறப்பித்துள்ளார். இங்ஙனமே இந்நூலுள் 73-ஆம் பாடலில் "ஒன்றுமொழிக் கோசர் போல" என வந்துள்ளமை காண்க. 80-ஆம் பாட்டில் அதியமானது படைப்பெருமையையும் 91-ஆம் பாட்டில் அவனது வள்ளன்மையையும், வெற்றித் திறத்தையும் பாராட்டிக் கூறியுள்ளார்.

இவைகளின்று உரையாசிரியர்களால் இவருடைய பாட்டுக்களென்று எடுத்துக் காட்டப்பட்டனவாகிய "இருமடர் மணிவிளக்கத்து" என்ற செய்யுளும், "நல்லம்பர் நல்ல குடியுடைத்து," என்ற செய்யுளும் "உடையராய்ச் சென்றக்கால்,"[1] என்ற செய்யுளும், தொண்டை மண்டல சதகம் குறித்த "வேழமுடைத்து மலைநாடு", "வஞ்சி வெளிய குருகெல்லாம்," என்ற செய்யுட்களும் இவர் பாடியனவே. 'மூவர் கோவையும்,' என்ற செய்யுளின் நடையும் சொற்களின் பிரயோகமும் பழைய பாட்டுக்களிற்போலவே காணப்படுகின்றமையின், அதனை இவர் பாட்டெனக் கொள்ளல் தகும்.

இவைகளன்றி இக்காலத்து இவர் பெயரால் வழங்கப்படும் தனிப்பாடல்களும், நல்வழி மூதுரை முதலிய நூல்களும் இவரால் இயற்றப்பட்டனவே எனத் துணிதற்கு அவைகளிற் காணப்படும் சொற்களின் பிரயோகங்களும் நடையின் போக்கும் தடையாயிருக்கின்றன. இன்னும் இவருடைய பாடல்களின் சொன்னயம் பொருணயங்களையும், உவமை நயங்களையும், ஏனைய அழகுகளையும் ஆராயப் புகின், அளவின்றிப் பெருகும்.

---

1. இப்புத்தகம் 110-ஆம் பக்கம் பார்க்க.

# அரும்பத விளக்கமும் செய்யுட்குறிப்புரையும்

# அரும்பத விளக்கம்

(எண்கள் பக்கத்தைக் குறிக்கும்)

எண்

1 வான் - மேகம்
வேலி - நில அளவை
விளையுள் - தானியம்
சேணெடு-தூரத்திலுள்ள காடு
கன்னல் - கரும்பு
உள்வீடு - (இங்கு) அரிசி
புரப்போர் - அரசர்

2 அதரி திரித்து - வைக்கோல் வேறு, நெல் வேறாகச் செய்து
தாளாண்மை - முயற்சி
அடிசில் - சோறு
இருமுதுகுரவர் - தாய் தந்தையர்

3 வீறி - சிறந்து
கணக்காயர் - உபாத்தியாயர்
நோக்கு அமைந்த பாக்கள் - இடத்துக்கு ஏற்ற ஓசையையுடைய பாட்டுக்கள்
நிறை மொழி - தவறாத மொழி
கிழத்தி - அன்பிற்குரியவள்; மனைவி

5 பாவாணர் - புலவர்
புகார் - காவிரிப்பூம்பட்டினம்

6 வரையா வள்ளன்மை இல்லையென்னாது கொடுக்கும் கொடை

7 எட்டி - கைப்புள்ள கனி தரும் விஷ விருக்ஷம்
அவல நீர் - துக்கத்தால் உண்டாகும் கண்ணீர்

8 மதுகை - வலி

10 சகடக்கால் - வண்டியின் ஆரக் கால்
இன்னாதது - துன்பந்தருவது
ஈத்து - கொடுத்து

13 செற்றம் - பகை
சூளுறவு - சபதம்

14 தாசரதி - தசரதர் புத்திரன் (இராமன்)

15 அரிமா - சிங்கம்
கழிவிரக்கம் - கழிந்ததற்கு வருந்துதல்
கடு - நஞ்சு

16 அரசு கட்டில் - சிம்மாசனம்

17 நாளோலக்கம் - சபா மண்டபம்
எற்கு - எனக்கு
சாலும் - போதும்
முற்றூட்டாக - சர்வ சுதந்தரமாக (இறையிலியாக)

17 வழுதியர் - பாண்டியர்
மூதூர் - பழைய ஊர்
18 துங்கன் - உயர்ந்தோன்
20 தெறல் - பகைவரை அழிக்கும் வலி
அளி - கிருபை
வண்மை - கொடை
23 ஒருவி - நீங்கி
24 கொளு - பாட்டின் கீழ்க் குறிப்பு
26 ஆரிடம் - இருடிகள் சம்பந்தம்
27 பற்றுள்ளம் - பேராசை
ஓராது - ஆராயாது
தகைந்து - தடுத்து
பரிசில்கடாநிலை - பரிசில் வேண்டுதல்
30 பரிசில் விடை - பரிசில் கொடுத்து அனுப்புதல்
பரிசிற்றுறை - பரிசில் வேண்டுவோர் தங்களுக்கு இது வேண்டுமெனல்
இயன்மொழி - ஓர் அரசன்மீது அவன் முன்னோர் புகழை ஏற்றிப் புகழ்தல்
தானை மறம் - ஒரு வீரனது போர்த் திறத்தைப் புனைவது
35 பரிந்து - விரைந்து
ஆசில் - குற்றமில்லாத
37 அருத்தி - விருப்பம்
38 விழுப்புண்-போரில் முகத்திலும் மார்பினும் பட்ட புண்
நாப்பண் - நடு
39 விழுமிய - சிறந்த
ஊறு - இடையூறு
40 ஆறா - குறையாத
வள்ளியோன் - கொடையாளி
இறும்பூது - ஆச்சரியம்
42 சால்பு - எல்லாம் நிறைந்த குணம்
கொடை மடம்-வறிஞர், செல்வர், இன்னார், இனியார் என்று கருதாமல் இரந்தோர்க்கெல்லாம் கொடுக்குங் குணம்
43 யாப்பு - பாட்டு
45 ஞாயிற்று மண்டிலம் - சூரிய மண்டிலம்
45 பூவை நிலை - அரசர்களைத் திருமால் முதலிய தேவரோடு ஒப்பிட்டுக் கூறும் புறத்துறை
47 அறம் - சமயம்
48 அல்லற்காலை - துன்பம் உற்ற காலம
49 உலந்தமையால் - கெட்டமையால்
மறுக்கம் - சுழற்சி
உழுவலன்பு - எழுபிறப்பும் தொடர்ந்த அன்பு
50 கையறுநிலை- இறந்தோர் பிரிவாற்றாது பாடும் சரம கவி
இனைந்தும் - வருந்தியும்
பனைந்தார் - நண்பினர்
நினையாமல் நினைந்து -

இடைவிடாது நினைத்து.
அலமந்து-மனஞ்சுழன்று
54 கூட்டுறவு - சேர்க்கை
57 ஆடி—கண்ணாடி
58 செவ்வி—அழகு
60 ஒப்புரவு உபகாரம்
61 குரவை-பெண்கள் எழுவர் கைகோத்து ஆடுங் கூத்து
63 பீடு பெருமை
எடுத்துக்காட்டு - உதாரணம்
வஞ்சி—போர்க்குச் செல்வோர் அணியும் மாலை
64 ஏமப் பொருள் - உயிர்க்குப் பாதுகாவலான உணவுமுதலிய பொருள்
71 விள்ளா நட்பு-பிரியாத நட்பு
77 மறன் - வீரம்
79 உய்விக்க - பிழைப்பிக்க
87 அவிழ்ப்பதம் - உணவு, சோறு
88 இலம்பாடு - வறுமை
அட்டில் - சமையலறை
90 இடை - நெட்டிச்செடி
96 அருகாநோக்கம்—அன்பு குறையாத பார்வை.
முகமன் - உபசாரம்
குய் - பொரியல் கறி
தண்டி - வலிந்து
உட்கிடை - கருத்து
98 குன்றி - குன்றிமணி
100 ஓவியன் - சித்திரகாரன்
கிழி - சீலை, திரை
ஆறலை கள்வர் - வழிபறிப்போர்
109 பணிபாமல்-நடுங்காமல்
125 பீடிகை - ஆசனம்
158 சிதை விறகு
161 வேத்தவை-இராசசபை
167 விகிர்தம் - வேறுபாடு
178 விம்மிதம் - ஆச்சரியம்
179 கட்டுவிச்சி - குறிகாரி

## (செய்யுட்குறிப்புரை)

(எண்கள் பக்கத்தைக் குறிக்கும்.)

8 ஆடு - அடுதல்; சமைத்தல்; தேம்பு பசி-(உடம்பு) மெலிதற்கேதுவாகிய பசி; உழந்து-வருந்தி; மகத்து முகம்-பிள்ளை முகம் (அத்து-சாரியை). எவ்வம்-வருத்தம்; நிற்படர்ந்திசின்-உன்னிடம் வந்தேன்; பச்சை யாழ் - தோல் போர்த்தயாழ்; வயிரியர்-கூத்தர்.

12 தொன்மை மாக்கள் — பழைய வண்மையாளர்கள்; தொடர்பு (தமது புகழ்) உலகத்தோடு தொடர்ந்து செல்லுதல்; தாள்-கால்; படுமணி - ஒலிக்கும் மணி; அருகா-குறையாது கொடுக்கும்; பூட்கை - மேற்கோள்.

19 பெட்பு-பேணுதல்; உறுவர்செல்சார்பு ஆகி—அஞ்சி வந்தடைந்த பகைவர்க்குச் செல்லும் புகலிடமாய்; செறுவர் - பகைவரது: தாள் உளம்-முயற்சி அமைந்த மனத்தை; தபுத்த - கெடுத்த; வீ-பூ; நோன் - வலி; செம்மல் - தலைமை; கடும்பு-சுற்றம்.

38 பொறி — மூட்டுவாய்; மறலி - யமன், முந்நீர் - கடல்; மீன்-விண் மீன்; சுறவு - சுறாமீன்; மாஇயோர் - பாகர்; மைந்து - மதம்; மஞ்ஞை - மயில்.

43 மன்றம் - பொது இடம்; நாற்றிய - தொங்கவிட்ட; விசி - கட்டு; பாடு இன்-ஓசை இனிய; கண் - முழவில் அடிக்கும் இடம்; கனி செத்து - பழமெனக் கருதி.

44 கொழுங்குறை-கொழுத்த தசை; விடர் முழை - வெடிப்பையுடைய குகை; அடுக்கம்-பக்கமலை; வரி அதள் - வரிகளையுடைய தோல்; இறைநல்கும்-வரி கொடுக்கும். சேக்கும்-தங்கும்; வழை - சுரபுன்னை மரம்.

48 உய்த்தென - கொண்டு போய் விட; வெளில் - யானை கட்டும் மரம்; ஈகை அரிய இழை - பிறர்க்குக்கொடுத்தற்கு அரிய திருமங்கிலியம்; சாயின்று - சாய்ந்தது; கெட்டது.

50 நெடியோன் - இந்திரன் ; கறங்க - ஒலிக்க ; எழுந்தன்று-எழுந்தது.

58 கொடும்பூண் - வளைந்த ஆரம்; ஞான்றை-நாளில்; தலைப்பெயர்த்திட்ட - தம்மிடத்தினின்றும் போக விட்ட.

65 பிடி - பெட்டை யானை ; தொழுதி - கூட்டம்; நெய்ம்மிதி - கவளம் ; உரும் - இடி ; இனைகூ - வருந்திக் கூப்பிடும் ஒலி ; சிறை - பக்கம்

68 கருஞ்சினை - கரிய கிளை ; பெரிய கிளையுமாம். தெரியலோன் - மாலையுடையவன்; மிடைந்தன்று-தொடுக்கப்பெற்றது; செய்தி-செய்கை ; இகல் - போர்.

92 தாங்க அருங்காவலன் - (பகைவர்) தடுத்தற்கு அரிய வேந்தன் ; வாணிகம் - ஊதியம் ; துணையளவு-கல்வி முதலியவற்றின் எல்லை.

97 கடிப்பு-குறுந்தடி; இகுப்பவும் - அறையவும் ; கல் அலைத்து - கற்களை உருட்டி; பறம்பு பாரியின்மலை; கொல்லி - ஒரு மலை; ஓரி - ஒரு வள்ளல்; காரி - ஒரு வள்ளல்; அவனது குதிரையும் அப்பெயர் பெறும் ; மலையன் - காரி. குதிரை - குதிரை மலை ; கூவிளம்-வில்வம்; சிமை - சிகரம் ; அளி வர - இரக்கம் வர; ஆசினி-பலாவின் வகை ; ஆர்வுற்று - விரும்பி ; கடுவன் - ஆண்குரங்கு ; துய் - பஞ்சு ; யாணர் - புது வருவாய்.

104 குறியெதிர்ப்பை- பயன் கருதிய கொடை ; கிழவன் - உரியோன்.

107 கடமா - காட்டுப் பசு.

111 கண்டகம்-உடைவாள் ; கெண்டி - வெட்டுண்டு ; கெழுதகைமை - அன்புரிமை.

114 கதுப்பு - கூந்தல்; பாசடகு - பசிய கீரை ; என்வெய்யோள் - என்னை விரும்பியவள்; இல் உணு துறத்தலின் - வீடு உணவுப் பண்டங்களை நீங்குதலின்.

117 உதியன் - சேரன். அட்டில் - அறக்கூழ்ச் சாலை.

123 கையறுபு இனைய-செயலற்று வருந்த ; கோடு - இரு பங்கு ; குறும்பறை-பெடை அன்னம் ; அடியுறை - அடிக்கீழ் வாழ்பவன்.

138 செறு-வயல்; கிழவன் - அரசன் ; நாட்டுக்குரியோன். மெல்லியன்-அறிவு குறைந்தோன்.

146 ஒன்னார்-பகைவர் ; பால்

புரை-பாலை ஒத்த; விடர்-வெடிப்பு.

148 இவ்வே — இவை; கண் திரள் — உடற்பாகம் திரண்ட; நோன் காழ் — வலிய காம்பு; அவ்வே - அவைகள்; (அதியமான் படைக்கலங்கள்); கொல் துறை—கொல்லன் பணிக்களரி; குற்றில - குறுகிய கொட்டிலிடத்தன; பதம் - உணவு.

152 மரபு - முறைமை; இவண் இவ்வுலகம்; நீர் அக இருக்கை — கடலுக்குட்பட்ட நிலம்; ஆழி சூட்டிய - ஆணைச் சக்கரத்தை நடத்திய; ஈகை அம் கழல் — பொன்னாற்செய்த அழகிய வீரக்கழல்; நூறி - அழித்து; இரும்பனம்புடையல்-பெரிய பனந்தோடாகிய மாலை; 'கழற்காலையும் புடையலையும் காவையும் வேலையுமுடைய நின் முன்னோர் போலத் தாயமெய்தியும் அமையாய்,' என மாறிக் கூட்டுக.

157 தடி—ஊன்; நரந்தம் — நரந்தப்பூ; மண்டை—பாணர் கையிலுள்ள பாத்திரம்; நிறம்—மார்பு; ஆஅ ஆகு—பற்றுகும்; வியும்—இறக்கும்; மூன்று எரி—காருகபத்தியம், ஆகவனீயம், தென்றிசை அங்கி; சோமன்—சந்திரன்.

163 பூழியர் கோன் — பாண்டியன்; வஞ்சி-கரூர்; பஞ்சவன்-பாண்டியன்; நான்மாடக் கூடல் — மதுரை; உறந்தை-உறையூர். (இப்பாட்டு ஒழிப்பணியின் பாற்படும்.)

165 ஆர்வலர்—அன்பினர் (பரிசிலர்); காவலர்-அரசர்; கடி-காவல்; சிலம்ப - எதிரொலி ஒலிக்க; அரிக்குரல் - ஒலி நரம்பால் ஓசையையுடைய; தடாரி-கிணைப்பறை.